# கோயிற் களஞ்சியம்

அறிமுகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

UG3713
R007A02
UG:3713

ISBN: 81-7090-179-0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 142-1

திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாசி - அக்டோபர் 1991

| | | |
|---|---|---|
| துறை | : | களஞ்சிய மையம் |
| நூல் | : | கோயிற் களஞ்சியம் - அறிமுகம் |
| சிறப்பாசிரியர் | : | கோ.மு. முத்துசாமி பிள்ளை |
| பதிப்பு | : | முதற் பதிப்பு - 1991 |
| விலை | : | உரு. 80-00 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம், தஞ்சாவூர் - 613 005. |



அருள்மிகு கணேசர் நின்ற திருக்கோலம்

முனைவர் சி. பாலசுப்பிரமணியன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005.

# அறிமுகவுரை

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந்
    தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
    யாவரவ ருளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
    இடமெனநான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்
    சிந்தைமிக விழைந்த தாலோ.

\- வள்ளலார்.

சென்றிடுவீர்! எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

என்னும் பைந்தமிழ்க் கவிஞர் பாரதியாரின் கட்டளையை நிறைவேற்றுவதில் முன்னணியில் நிற்பது தமிழ்ப் பல்கலைக்கழகம். பொன்மனச் செம்மலும் புரட்சித்தலைவரும் தமிழக முதல்வருமாக விளங்கித் தமிழ் மக்கள் உள்ளங்களிலெல்லாம் நிலையாக வீற்றிருக்கும் எம்.ஜி.ஆர். அவர்களால் பத்தாண்டுகளுக்கு முன்னர்த் தோற்றுவிக்கப்பெற்ற தமிழ்ப் பல்கலைக்கழகம் 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்னும் நிலைமையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இலக்கியமாகவும் இலக்கணமாகவும் கல்வெட்டுகளாகவும் செப்பேடுகளாகவும் புதைபொருள் ஆய்வில் கிடைக்கும் செல்வங்களாகவும் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கலைச் செல்வங்கள் தமிழகம் எங்கும் காணக் கிடைக்கின்றன.

நாளொரு வெளிப்பாடும் பொழுதொரு ஆய்வுமாக அறிவியல் துறை வளர்ந்து வருதலையும் நாம் அறிவோம்.

வாழ்வியல் மரபுகளும் வளர்சிறகடித்து வையகத்தே பல்வேறு மாற்றங்களைப் பெற்று வருகின்றன.

இந்த நிலையை நன்குணர்ந்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம், கலைச்

செல்வங்களைத் தொகுத்துக் களஞ்சியங்களாக வெளியிட்டு வருவதைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும்.

அறிவியல் கலைச் செல்வங்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபாடு கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகம், இதுவரை ஆறு அறிவியல் களஞ்சியங்களைத் தொகுத்து ஒவ்வொரு தொகுதியும் ஆயிரம் பக்கங்களில் அமையுமாறு வெளியிட்டுள்ளது.

மேலும் அறிவியல் களஞ்சியங்களைத் தொகுத்து அச்சிட்டு உருவாக்கும் நிலைமையையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

வாழ்வியல் கலைச் செல்வங்களைத் தொகுத்து, இது வரை பத்து வாழ்வியல் களஞ்சியங்களை வெளியிட்டுள்ளது. மேலும் நான்கு தொகுதிகளை அச்சிட்டு உருவாக்கும் நிலைமையையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பதினெண்கீழ்க்கணக்குமாக ஏற்றமுற விளங்கும் சங்க கால இலக்கியங்களின் சொற்பொருளைத் தொகுத்துச் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் ஒன்றைத் தமிழ்வழங்கும் நல்லுலகுக்கு ஈந்து மகிழ்கிறது தமிழ்ப் பல்கலைக்கழகம்.

அடுத்துவரும் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியப் பணியும் தொடர்ந்து நடைபெறுகிறது.

வாழ்வியல் களஞ்சியங்களையும் அறிவியல் களஞ்சியங்களையும் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியங்களையும் தொகுத்து வகுத்து அளிக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியப் பெருமக்கள் களஞ்சியங்களைத் தொகுக்கும் பணியில் பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

இப்பணியைச் செப்பமுறச் செய்தளிக்கும் பேராசிரியப் பெருமக்களைப் பாராட்டிப் போற்றும் கடமை எனக்குண்டு.

கூட்டி மெழுகிக் கோலமிட்டு விளக்கேற்றி நம் நாட்டு மகளிர் இறைவழிபாடாற்றும் இல்லங்களும் நம்நாட்டில் கோயில்களாகவே விளக்கமளிக்கின்றன.

வீதியின் முனையிலும் தாம்வழிபடும் சிறுகோயில் ஒன்றை அமைத்து வழிபடுபவர்கள் நம் தமிழ் மக்கள்.

தெய்வமணம் கமழும் இல்லங்களையும் இறைவன் தேரூர்ந்து வரும் வீதிகளையும் கோயில் இல்லாத ஊர் இல்லை என்னும் பெருமையையும் பெற்றது தமிழகம்.

நம்நாட்டில் கோயில்கள் இல்லாத வீதிகள் இல்லை; கோயில்கள் இல்லாத

ஊர்கள் இல்லை; கோயில்கள் இல்லாத மலைகள் இல்லை.

முடியுடை மூவேந்தராம் சேரரும் சோழரும் பாண்டியரும் கட்டி வழிபட்ட கோயில்கள்; கலைநலம் பொலிய நிலைபெறச் செய்த பல்லவர் காலக் கோயில்கள்; சிற்றரசரும் மற்றவரும் கட்டி வழிபட்ட சிறு சிறு தெய்வக் கோயில்கள் தமிழகத்தில் ஏராளம்! ஏராளம்!

வளர்ந்துவரும் அறிவியல் அடிப்படையில் அறிவியல் களஞ்சியங்களைத் தொகுத்தளிக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம்; வாழ்வியலின் தத்துவங்களை எடுத்துத் தொகுத்து வாழ்வியல் களஞ்சியமாகத் தொகுத்தளிக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம்; எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பதினெண்கீழ்க்கணக்குமாக ஏற்றமுற விளங்கும் சங்ககால இலக்கியங்களின் சொற்பொருளைத் தொகுத்துச் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியங்களைத்தரும் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழகக் கோயில்களைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கியதன் விளைவே கோயிற்களஞ்சியத்தின் தோற்றமாகும்.

தெய்வக்காட்சி நல்கும் திருத்தலமாக மட்டுமா நம் திருக்கோயில்கள் விளங்குகின்றன? தென்னாட்டுக் கலை நலம் காட்டும் கலைக்கூடங்களாகவும் அன்றோ அவை விளங்குகின்றன.

மன்னவரும் மற்றவரும் பொறித்து வைத்திருக்கும் கல்வெட்டுகளால் தமிழகத்தின் வரலாற்றுப் பெட்டகமாகக் கோயில்கள் விளங்குகின்றன. அங்கே கிடைக்கும் செப்பேடுகள் தமிழர்தம் வாழ்வியல் முறையின் வண்ண ஒளிவிளக்குகளாக ஒளிவீசுகின்றன.

கோயில்களிலே வடிக்கப்பட்ட சிற்பங்கள் எழுதப்பெற்ற ஓவியங்கள் தமிழர்தம் நுண்கலைத் தேர்ச்சிக்குச் சான்றாகவன்றோ விளங்குகின்றன.

கோயிலின் அமைப்பு; அது கட்டப்பட்டிருக்கும் முறை; தமிழர்தம் கட்டடக்கலையின் தேர்ச்சிக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனவே!

ஆடற்கலையும் பாடற்கலையும் வளர்ந்த அருமைப்பாட்டை விளக்குகின்றனவே நம் கோயில்கள்.

நம்பிக்கையே வாழ்வின் அடிப்படை; அந்த நம்பிக்கையை வளர்ப்பன கோயில்கள் அல்லவா? தமிழக மக்கள் எடுத்த காரியம் இனிதே முடிய இறைவனைத்தானே முதலில் வணங்குவர்; நன்னூல் இயற்றும் தொன்னூற்புலவரும் தெய்வ வணக்கம் கூறிய பின்னரன்றோ தம் நூலைத் தொடங்குவர்.

தமிழகத்தின் கலங்கரை விளக்கங்களாக ஊர்தோறும் ஒளிவீசித் திகழும் கோயில்களைப்பற்றிய செய்திகளைத் தொகுத்து வகுத்து முறைப்படுத்திக்

களஞ்சியமாக்கும் பணியைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர்த் தொடங்கியது.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம், இருபதுக்கும் மேற்பட்ட மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கோயில்கள் பற்றிய செய்திகள் ஏறத்தாழ இருநூற்று ஐம்பது பக்கங்கள் அமையும் வகையில் தனித்தனிக் களஞ்சியமாகத் தொகுக்கப்படுகின்றன.

கோயிற்களஞ்சியத்தின் முதல் இரண்டு தொகுதிகளாகும் பேறுபெற்றிருப்பது வட ஆர்க்காடு மாவட்டமாகும். இன்று வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் எனவும் வேலூர் அம்பேத்கர் மாவட்டம் எனவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருத்தலை நாம் அறிவோம்.

கோயிற்களஞ்சியங்களைத் தொகுக்கும் பணி தெய்வப்பணி; மக்கட்பணி; பொறுப்புமிக்க பணி; நல்லாரும் வல்லாரும் பாராட்டும் பணி.

இப்பணியைச் செம்மையாகவும் சீராகவும் செய்யும் பொறுப்பைத் தமிழகப் புலவர் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றவரும் செந்தமிழ் மொழியில் தேர்ந்து தெய்வபக்தியில் திளைப்பவருமாகிய திருவாளர் கோ.மு. முத்துசாமி பிள்ளை இ.ஆ.ப, (ஓய்வு) அவர்கள் ஏற்றுச் செயல்பட்டு வருகின்றார்கள். கோயிற்களஞ்சியங்களின் சிறப்பாசிரியர் பொறுப்பேற்றிருக்கும் திருவாளர் கோ.மு. முத்துசாமி பிள்ளை அவர்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் போற்றிப் பாராட்டுகிறது.

அவர்தம் இடையறா உழைப்பின் பயனாக வேலூர் அம்பேத்கர் மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் ஆகிய இரண்டும் இணைந்த வட ஆர்க்காடு மாவட்டக் கோயிற்களஞ்சியம் இருதொகுதிகளாக வெளிவருகின்றன. பிற மாவட்டக் கோயிற்களஞ்சியங்களின் தொகுப்புப் பணியும் அச்சிடும் பணியும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தே தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சிறிதளவு கற்றாரும் கோயிற்களஞ்சியங்களைப் பெற்றுக் கற்றுப் பயனடைதல் வேண்டும் என்னும் பெருநோக்கால், கோயிற்களஞ்சியங்களைக் கற்பார்க்கு ஒரு வழிகாட்டியாகவும் கோயில்களின் பொதுவான தத்துவங்களை விளக்கும் முகக் கண்ணாடியாகவும் எழுத்து வடிவம் பெற்று முதற்கண் வெளிவருவதே கோயிற்களஞ்சியத்தின் அறிமுகம்.

இதனைக் கற்பார், சில பெயர்களின் விளக்கங்களையும் ஆகமங்கள், கோயில்களின் தத்துவங்கள், தலபுராணங்கள், தலவிருட்சங்கள் பற்றிய மெய்ப்பொருளையும் சிவலிங்கம், சிவமூர்த்தம், அத்திரதேவர் போன்றவற்றின் பொதுவான விளக்கங்களையும் பூசை முறைகள், பூசை வகைகள் பற்றிய

தெளிவையும் விழாக்களின் தத்துவ மேம்பாடுகள் போன்றவற்றையும் அறியலாம்.

ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே.

என்னும் நன்னூலார் வாக்கிற்கேற்ப இவ்வறிமுகம் கோயிற்களஞ்சியங்களுக்குப் பாயிரமாக விளங்குகிறது எனக்கூறின் பொருத்தமுடைத்தேயாகும்.

கோயிற்களஞ்சியம் என்னும் பன்னீர்க் கடலில் மூழ்கித் தெய்வப் பேரருளாம் முத்துக்களைப் பொறுக்கி எடுத்துப் புகழ் மாலையாக்க வழித்துணையாவது இந்த அறிமுகம் ஆகும்.

கோயிற்களஞ்சிய அறிமுகத்தைத் தொடர்ந்து அறுபதுக்கும் மேலான எண்ணிக்கையில் கோயிற்களஞ்சியத் தொகுதிகள் வெளிவரவிருக்கின்றன.

கோயிற்களஞ்சியத் தொகுதிகள் அனைத்தையும் தமிழறிந்த தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் பெற்றுக் கற்றுப் பேரின்பம் பெற வேண்டுமென்பதே தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பெருவிருப்பமாகும்.

இன்றைய தமிழக முதல்வரும் புரட்சித்தலைவியுமாகிய மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களும் தமிழகக் கல்வியமைச்சர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும் அளிக்கும் ஆக்கமும் ஊக்கமுமே தெய்வத்திருப்பணியாம் இப்பெரும்பணியை ஏற்றுச் செய்யும் ஊக்கத்தை எங்களுக்கு அளித்திருக்கிறது.

தமிழக முதல்வர் அவர்கள் தெய்வ வழிபாட்டில் மிக்க ஈடுபாடு கொண்டவர்கள்; தெய்வம் வீற்றிருக்கும் திருத்தலங்களையும் திருக்கோயில்களையும் போற்றிக் காத்தல் வேண்டுமெனும் பெருவிருப்பம் கொண்டவர்கள். அவர்கள் தமிழக முதல்வர் பொறுப்பேற்றிருக்கும் இந்நாளில் கோயிற்களஞ்சியத்தின் முதலிரு தொகுதிகள் வெளியிடப் பெறுவதை எண்ணித் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமிதம் கொள்கிறது; பெரு மகிழ்ச்சி அடைகிறது.

ஆதீனத் தலைவர்களும் அருள் உள்ளம் வாய்ந்தவர்களும் நூலக மேலாளர்களும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவரும் இக்கோயிற்களஞ்சியங்களைப் பெற்று எல்லாரும் கற்க ஏற்ற வழிவகை காணவேண்டும் என்பது எங்கள் விருப்பமாகும்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

தஞ்சாவூர்,
5-10-91

டி-பாலசுப்பிரமணியன்

# முன்னுரை

தமிழகத்தின் பல்வேறு திருக்கோயில்களின் அமைப்புகள், மூர்த்தங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் முதலியவற்றை அறிந்து கொள்ளவும் கோயில்களைப் பற்றிய அடிப்படைத் தத்துவங்களை உணரவும் கோயிற்களஞ்சியம் ஒன்று தொகுக்க வேண்டியதாயிற்று. அந்தப் பணி இப்போது நடந்து வருகிறது. அக்களஞ்சியத்தை முதற்கண் அறிமுகப்படுத்தக் களஞ்சியத்தின் முற்பகுதியாக ஒரு முன்னுரைப்பகுதி தேவைப்பட்டது. அது 'கோயில் அறிமுகம்' என்ற தலைப்பில் இப்போது வெளிவந்துள்ளது.

சிவன் கோயில்களிலுள்ள விநாயகரைப் பற்றியும் முருகப்பெருமானைப் பற்றியும் மக்கள் ஓரளவு உணர்ந்து கொண்டுள்ளார்கள். ஆனால், இமயம் முதல் குமரி வரையிலுள்ள சிவன் கோயில்களில் காணப்படும் சிவலிங்கத் தத்துவம் பற்றித் தெளிவாக அறிந்து கொண்டவர்கள் சிலராகவே இருப்பர். சிவலிங்கத்தின் உண்மைகளைப் பலரும் திண்ணமாக அறிந்துகொள்ள இயலுமாறு கோயில் அறிமுகத்தில் சிவலிங்கத்தின் நன்மைகள், பல கோணங்களில் ஆய்வு செய்யப் பெற்றுள்ளன. மேலும், மகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்திற்கும் சுருக்கமான முறையில் விளக்கம் தரப்பெற்றுள்ளது. பூசைகள், திருவிழாக்கள் ஆகியவைபற்றி எழுதுவதற்குப் பெரிதும் உதவி செய்தவர் முன்னாள் மின்வாரியத் தலைமைப் பொறியாளர் திரு. ஆ. சுப்பிரமணியன் அவர்களாவர். அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன். அவர் சிவமூர்த்தங்கள் சிலவற்றின் அரிய படங்களைத் தந்தும் உதவியுள்ளார். அப்படங்கள் இந்நூலுக்கு அணிசெய்கின்றன.

இந்நூலில் எழுதப்பட்டவற்றின் சிறப்புநிலையை முன்னிட்டு இவற்றை ஆய்வு செய்து செம்மையாக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவுக்குத் தலைவராகத் திரு. ஆ. சுப்பிரமணியன் அவர்கள் செயலாற்றினார். மற்ற மூவர் தமிழ்வளர்ச்சித்துறை முன்னாள் இயக்குநர் திரு. கொண்டல் சு. மகாதேவன், எம்.ஏ., சென்னைத் தாம்பரம் கிறித்துவக் கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. வடிவேலாயுதம், எம்.ஏ., மயிலம் கல்லூரி முன்னாள் முதல்வர் திரு. தனக்கோடி, எம்.ஏ., ஆகியோராவர். இம்மூவர் தெரிவித்த சில திருத்தங்களும் பயனளித்தன.

இவ்வாறு அமைக்கப்பெற்ற கோயில் அறிமுகம் ஓரளவு நிறைவுபெற்றுள்ளது எனக் கருதினேன். ஆனால் இதனை ஒருமுறை படித்துப் பார்த்த அறிஞர் ஒருவர் (1) கோயில்களில் மூலத்திருவுருவங்களைக் கல்லாலும் உலாத்திருமேனிகளைப்

பஞ்சலோகங்களாலும் அமைப்பதின் காரணம் யாது. (2) கோயில்களில் நிறுவப் பெறும் திருவுருவங்கள் எவ்வாறு தெய்வ ஆற்றல் பெறுகின்றன என்பனவற்றையும் இந்நூலில் விளக்கவேண்டுமெனக் கூறினர். அப்போதுதான் இவ்விரண்டும் இந்நூலில் விடுபட்டதை உணர்ந்தேன். இப்பேரறிஞர் எழுப்பிய வினாக்களுக்கு ஓரளவு விடை அளிக்கும் வகையில் இங்கு விளக்கம் தருகிறேன்.

சிற்பிகள் அந்த அந்த மூர்த்தத்திற்குரிய தியான சுலோகங்களைச் சொல்லி உருவத்தைத் தியானித்து அம்மூர்த்தியின் வடிவங்களை மனத்தில் நன்றாகப் பதியச் செய்து பின்னர் அவற்றிற்கேற்பத் தெய்வத்திருவுருவங்களை அழகாக அமைக்கிறார்கள். இத்திருவுருவங்களின் கீழும் நிலத்தில் அந்தந்தத் தெய்வங்களுக்குரிய சக்கரங்கள் பதிக்கப்பெறுகின்றன. அதே சமயத்தில் பொருத்தமான மந்திரங்கள் ஓதப்பெறுகின்றன. மூர்த்தங்களை நிறுவிய பின் அம்மூர்த்திக்குரிய மந்திரங்கள் ஓதப்பெற்று அதில் மந்திரசக்தி பதிக்கப் பெறுகிறது. இம்மந்திர சக்தியே மூர்த்தியின் சக்தியாகி வெளிப்படுகின்றது. மூலத்தானத்தில் மந்திர ஆற்றல் ஏற்றப்படுவது போன்று உலோகத் திருமேனிகளிலும் ஆற்றல் ஏற்றப்படுகின்றது. விழாக் காலங்களில் செய்யப்படும் கிரியைகளாலும் கிரியைகளுக்குரிய மந்திரங்களாலும் உலோகத் திருமேனிகளில் ஆற்றல் ஏற்றப்பெறுகின்றது. இவ்வாறு ஆற்றல் பெற்ற உலாத்திருமேனிகள் திருவீதிகளில் உலா வரும்போது வழிபடும் அன்பர்களுக்கு அருள்புரிகின்றன.

கல், என்றும் அழியாதிருப்பதோடன்றி, அபிடேகங்களில் வழியப்பெறும் காரணத்தால் மூலத்திருமேனிகள் கல்லால் செய்யப்பெற்றன. மேலும் சிறந்த கற்கள் பல இடங்களில் எளிதாகக் கிடைப்பன. மேலும் உலாத்திருமேனிகள் பொன், வெள்ளி முதலிய விலையுயர்ந்த உலோகங்களால் ஆக்கப்பெறாது வெள்ளீயம், இரும்பு போன்ற விலை குறைந்த உலோகங்களும் சேர்த்து அமைக்கப்பெறுகின்றன. இவ்வாறு கல்லாலும் பஞ்சலோகங்களாலும் திருமேனிகள் அமைப்பது பல கோயில்கள் பல இடங்களில் குறைந்த செலவில் நிறுவப்பட ஏதுவாகிறது.

இக் 'கோயில் அறிமுகத்தில்' யான் விளக்க முற்பட்ட பொருளோ மிகப்பெரிது, என் சிற்றறிவு கொண்டும் யான் கற்றனவற்றையும் கேட்டனவற்றையும் கொண்டும் ஒருவாறு இந்நூலை எழுதியுள்ளேன். பேரறிஞர்களும் பேரருளாளர்களும் இந்நூலுக்கு உகந்த திருத்தங்களையோ புதிய கருத்துகளையோ தெரிவிப்பார்களெனில், அவற்றை நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்வேன். மாண்புமிகு துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் காலத்தில் கோயிற் களஞ்சியம் தொகுக்கும்பணி தொடங்கப்பெற்று மாண்புமிகு துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் காலத்தில் அப்பணி வளர்ந்து இன்று தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களின் பெருமுயற்சியால் நான் சிறப்பாசிரியராகப் பொறுப்பேற்று தொகுத்தளிக்கும் கோயிற் களஞ்சியம் குறுகிய காலத்தில் வெளிவரும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறது.

ஆகவே, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர்

சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்குப் பெரிதும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை மிக விரைவில் அச்சிடும் பணியை ஆர்வத்தோடு செய்து முடித்துக்கொடுத்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறைக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை, கோ. மு. முத்துசாமிபிள்ளை
18_09_91.

# பொருளடக்கம்


| | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 01 | பெயர் விளக்கம் | 3 |
| 02 | ஆகமங்கள் | 4 |
| 03 | வரலாற்றுக்கு முற்பட்ட கோயில்கள் | 8 |
| 04 | வரலாற்றுக் காலத்துத் தொன்மைக் கோயில்கள் | 9 |
| 05 | கோயிலின் தத்துவப் பொருள் | 10 |
| 06 | தலபுராணங்கள் | 12 |
| 07 | தல விருட்சம் | 13 |
| 08 | கோயில்களின் திருவுருவங்கள் | 15 |
| 09 | சிவலிங்கம் | 22 |
| 10 | சிவமூர்த்தங்கள் | 28 |
| 11 | அம்மையின் திருவுருவங்கள் | 47 |
| 12 | திருமாலின் தெய்வத் திருவுருவங்கள் | 48 |
| 13 | திருக்கோயில்களில் திருமாலின் திருவுருவங்கள் | 51 |
| 14 | திருமாலின் தேவியர் திருவுருவங்கள் | 55 |
| 15 | முருகப் பெருமான் | 58 |
| 16 | சூரியன் | 64 |
| 17 | சண்டேசுவரர் | 65 |
| 18 | வயிரவர் | 68 |
| 19 | நந்தி தேவர் | 69 |

| | | |
|---|---|---|
| 20 | கருடர் | 72 |
| 21 | ஆஞ்சநேயர் | 73 |
| 22 | அத்திர தேவர் | 74 |
| 23 | சக்கர வழிபாடு | 75 |
| 24 | துவார பாலகர் | 77 |
| 25 | இறைவனிடம் அன்பு செலுத்திய பெரியோர்கள் கடவுளாகப் போற்றப் பெறுதல் | 78 |
| 26 | அறுபத்து மூவர் | 81 |
| 27 | ஆழ்வாராதியர் | 87 |
| 28 | காளி | 91 |
| 29 | சிறு தெய்வங்கள் | 94 |
| 30 | தீர்த்தங்கள் | 96 |
| 31 | கட்டடக்கலை | 97 |
| 32 | சிற்பங்களும் ஓவியங்களும் | 108 |
| 33 | கல்வெட்டுகள் | 111 |
| 34 | மன்னர்களும் சாசன மாலையும் | 114 |
| 35 | நித்திய பூசைகள் | 129 |
| 36 | திருவிழாக்களின் தத்துவங்கள் | 135 |
| 37 | வாகனங்கள் | 143 |
| 38 | வைணவக் கோயில்களில் பூசைகளும் திருவிழாக்களும் | 144 |
| 39 | விழாக்களின் தத்துவங்களும் பலவகை விழாக்களும் | 146 |
| 40 | வேண்டுதல்கள் | 153 |

| | | |
|---|---|---|
| 41 | நிருவாகம் | 154 |
| 42 | கோயில்களால் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் ஏற்பட்ட நன்மைகள் | 156 |
| 43 | இணைப்பு - 1 | 158 |
| 44 | இணைப்பு - 2 | 159 |
| 45 | இசைக் கருவிகள் | 164 |

# கோயில் அறிமுகம்

# பெயர் விளக்கம்

கோவில், சேத்திரம், தேவகிருகம், தேவாகாரம், ஆலயம், தேவாயதனம், தேவசுதானம், தேவேசுமம், சைத்யம், விட்டுணுகிருகம் முதலிய பெயர்கள் கோயிலைக் குறிக்கின்றன. இவற்றுள் கோயில் என்னும் பெயரையே பெரும்பான்மைக் கோயில்கள் கொண்டுள்ளன. கோவில், கோயில், ஆலயம் என்னும் பெயர்கள், தற்போது வழங்கி வருகின்றன. இம்மூன்றனுள் ஆலயம் என்னும் சொல் ஆன்மாக்களை இலயித்தல் என்னும் வடசொல்லைக் கொண்டுள்ளது. ஆயினும் கோயில் என்னும் சொல்லே முதன்மைபெற்று விளங்கி வருகிறது.

"கோ" என்னும் சொல் இறைவனையும் "இல்" என்னும் சொல் அவன் குடிகொள்ளும் இருப்பிடத்தையும் குறிக்கின்றன. "கோ", "இல்" ஆகிய இவ்விரு சொற்களும் இணையும்போது, இவ்விரண்டிற்கும் இடையே 'வ்' என்னும் உடம்படுமெய், இலக்கண முறையில் தோன்றுகிறது. இவ்வகையில் 'கோவில்' என்னும் சொல் அமைகிறது. இவ்வாறு இறைவன் குடிகொள்ளும் 'இல்' என்னும் பொருள் தருவதோடு இது கோ+வில் எனப் பிரிக்கப்படுமிடத்து இறைவனது வில் என்னும் பொருளும் தெரிவிக்கக் கூடும். ஆதலினால், இத்தகையதொரு பொருள் தோன்றுவதைத் தவிர்ப்பதற்காகக் "கோயில்" என்னும் சொல் அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்படுவதில் கோவில் என்பதிலுள்ள வகர மெய்யெழுத்திற்குப் பதிலாகக் கோயில் என யகர மெய்யெழுத்து வந்தது.

சிலப்பதிகாரத்திலும் சைவத் திருமுறைகளிலும் வைணவத் திவ்வியப் பிரபந்தங்களிலும் கோயில் என்னும் சொல்லே இடம்பெற்றுள்ளது. சிவன் கோயில்களுள் முதன்மைக் கோயிலாகவுள்ள தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயில் "கோயில்" என்னும் பெயரில் சுட்டிக்காட்டப்பெறுகிறது. இதுபோன்றே, வைணவப் பெருங்கோயிலாகிய திருவரங்கநாதர் கோயிலும் "கோயில்" என்றே போற்றப்பெற்று வருகிறது. வேறொரு முறையிலும் கோயில் என்னும் சொல்லுக்குப் பொருள் காணப்படுகிறது. 'கோ' என்னும் சொல் கட்டுண்ட உயிராகிய பசுவைக் குறிக்க, அத்தகைய பசு எய்துவதற்குரிய இறைவன் குடிகொள்ளும் இடத்தை 'இல்' என்னும் சொல் தெரிவிக்கிறது. இவ்வாறு இறைவனை அடைவதற்காக, மக்கள் மேற்கொள்ள வேண்டிய வழிபாட்டு முறைகளையும் கோயில்களை அமைப்பதற்கான விதிகளையும் ஆகமங்கள் வகுத்துள்ளன. இவ்வாறு வகுத்த ஆகமங்களைப் பற்றி இங்கு ஆய்வு செய்வோம்.

# ஆகமங்கள்

## ஆகமங்கள் தோன்றிய இடம் மகேந்திர மலை

ஆகமங்களைச் சிவபெருமான் மகேந்திர மலையில் இருந்து அருளினார் என்பதை மாணிக்கவாசகர் தாம் இயற்றிய திருவாசகத்தில்,

"மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்" எனவும்

"கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்ற ஐம்முகங்களாற் பணித்தருளியும்"

எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆகமங்கள் இருபத்தெட்டு எனவும் இவற்றைச் சிவபெருமான் அருளினார் எனவும் திருமூலர் தாம் அருளிய திருமந்திரத்தில் தெரிவித்துள்ளார். தேவாரம் அருளிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரும் ஆகமங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மகேந்திரமலை எங்குள்ளது என்பதை வால்மீகி இராமாயணம் தெரிவிக்கின்றது. அங்கதன் தலைமையில் தென்னாடு நோக்கிச் சென்ற வானரர்களுக்குச் சுக்கிரீவன் வழங்கிய அறிவுரையில் மகேந்திரமலை எங்குள்ளது என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவுரை வால்மீகி இராமாயணம் கிட்கிந்தா காண்டத்தில், "தாமிரபரணி நதியைத் தாண்டுங்கள் --------- அதை விட்டு அப்பாற் சென்றால் ------ பாண்டி நாட்டின் கபாடத்தைக் காண்பீர்கள். அதன்பின் தென் சமுத்திரத்தையடைந்து ---- நிச்சயம் பண்ணுங்கள். அந்தச் சமுத்திரத்தின் கண்ணே, மலைகளுட் சிறந்ததும் சித்திரமான பலவிதக் குன்றுகளையுடையதும் பொன்மயமானதும் நானாவித மரங்களும் கொடிகளும் செறிந்ததும் தேவர்களும் ரிஷிகளும் யக்ஷர்களும் அப்சரப் பெண்களும் தங்குவதும் சித்தர்களும் சாரணர்களும் கூட்டங்கூட்டமாக இருப்பதுமாகிய அழகிய மகேந்திரமலை காணப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கபாடம்" வியாசர் பாரதத்தின் துரோணர் பருவத்திலும் காணப்படுகிறது.

இம்மகேந்திர மலையின் பெருமை "உன்னதத் தென்மகேந்திரமே" என்னும் சிவத் தருமோத்திரத்திலிருந்தும் "பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடு" என இளங்கோவடிகள் கூறுவதிலிருந்தும் விளங்குகிறது. இக்குமரிமலையிலிருந்து தோன்றியோடிய ஆறு குமரி ஆறு எனப்பட்டது. இக்குமரி மலையையும் குமரி ஆற்றையும் பற்றிய குறிப்புகளைப் புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் காணலாம். குமரிமலைக்குத் தெற்கில் பஃறுளி ஆறு இருந்ததையும் குமரி ஆற்றுக்கும் பஃறுளி ஆற்றுக்கும் இடையிலிருந்த அகன்ற நிலப்பரப்பு கடல்கோளால் அழிந்ததையும் பண்டைத்தமிழ் நூல்கள் தெரிவிக்கின்றன. குமரிமலையே மகேந்திரம் என்பது தெரியவருகிறது. குமரி ஆற்றைக் கடல்கொண்டபின், அப்பக்கத்து நிலக்கோடி தற்போது குமரிமுனை என்னும் பெயரில் இருந்து வருகிறது.

"பேரறிஞர் ஸ்காட்எலியட் எழுதியுள்ள நூல், ஒரு பெருமலை மேற்குக் கடலில் தொடங்கித் தென்வடலாகக் குமரிக்குத் தெற்கில், ஒரு மலைப்பகுதியாக நெடுந்தொலைவு தென்மேற்காகத் திரும்பி, 'மடகாசுகர்' என்னும் ஆப்பிரிக்கத் தீவு வரையில் சென்றதாகக் கூறுகிறது" என்பதை அறிஞர் கா.சுப்பிரமணியபிள்ளை எடுத்துக்காட்டியுள்ளார்[2]. குமரிநாட்டைப் பகுதிபகுதியாகக் கடல் கொண்டதால், அக்காலத்தில் தெற்கே இருந்த வீரமகேந்திரபுரத்தைத் தலைநகராகக் கொண்ட நிலப்பகுதி பல கடல்கோள்களுக்குத் தப்பி, இறுதியில் சூரபதுமன் காலத்திற்குப் பின்னர்க் கடலில் மூழ்கிவிட்டதாகக் கந்தபுராணம் தெரிவிக்கிறது.

இக்கோட்பாடுகளுக்கு ஆதாரமாகக் "குமரிநாட்டின்கண் உறைந்த நம் பண்டைத் தமிழ் மக்களில் ஒரு சாரார் அந்நாடு கடல்கொள்ளப்பட்ட ஞான்று ஆண்டு நின்றும் போய்ப் பாபிலோனியா, சாலடி முதலான நாடுகளில் குடியேறினார்கள் என்பதும் புலனாகா நிற்கும். அஃதல்லாமல் சாலடியர் வணங்கிய மற்றொரு கடவுட் பெயரான "முரு" என்னும் சொல்லும் தமிழ்க் கடவுளான முருகன் என்பதோடு ஒற்றுமை உடையதாகக் காணப்படுதலும் உற்றுணர்தற்பாலதாகும்" என மறைமலையடிகள் தாம் எழுதிய சிவஞான போத ஆராய்ச்சி நூலில் தெரிவித்துள்ளார்[3].

இதுகாறும் கூறியவற்றிலிருந்து அறியப்படுவது, மகேந்திரமலை மிகச்சிறந்த புனிதச் சூழ்நிலையில், பண்டைத் தமிழ்ச்சங்கம் நிறுவிய கபாடபுரத்து நிலப்பகுதியில் விளங்கியிருந்தது என்பதாகும். இங்கே, ஆகமங்கள் குரு பரம்பரை முறையில் உணர்த்தப்பட்டன என மாணிக்கவாசகரும் திருமூலரும் கூறியுள்ளவை கருத்தில் கொள்ளத்தக்கனவாகும்.

## ஆகமங்களின் தொன்மை

மாந்தர் பின்பற்ற வேண்டிய ஒழுக்கமுறைகள், கோயில்களில் புரியவேண்டிய பணிகள், கோயில்களில் செய்யவேண்டிய பூசைகள், அங்கு நடத்தப்படத்தக்க திருவிழாக்கள், மனத்தை நிலைப்படுத்துவதற்குரிய யோகமுறைகள், உலகப் பற்றிலிருந்து விடுபட்டுப் பெறத்தக்க கருத்தின்நிலைகள் ஆகியவற்றைப் பற்றியும்

கோயில்களை அமைப்பதற்காக நிலத்தைத் தெரிந்தெடுத்து அதில் திருவுருவங்களை நிலைப்படுத்தல், திருக்குளம், நந்தவனம் அமைத்தல் முதலியவற்றைப் பற்றியும் ஆகமங்கள் விளக்குகின்றன.

சிவவழிபாடுகளும் குறிப்பாகச் சிவலிங்க வழிபாடும் ஆகமங்களால் தெளிவாக வகுக்கப்பெற்றுள்ளன. மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழாய்வுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற சிவலிங்கத் திருவுருவங்கள பலவற்றைக் கண்ட மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்கள் வியப்படைந்து உலகில் மிகவும் தொன்மை வாய்ந்த சமயம் சைவ சமயமே ஆதல் வேண்டும் என்னும் உண்மையைத் தெரிவித்துள்ளார்கள்.

தற்போதுள்ள ஆகமங்கள் முதலில் தமிழில் இருந்தவை எனவும் பின்னர் அவை வடமொழியிலாக்கப்பட்டன எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். இவற்றில் இடைச்செருகல்கள் உள்ளன என்பதைக் கா.சு. பிள்ளை, தாம் செந்தமிழ்ச் செல்வியில் எழுதிய கட்டுரையில் தெரிவிக்கிறார்.

இவ்வழிபாடுகள் ஏறத்தாழ 7000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே நடைமுறையில் இருந்திருக்க வேண்டுமென்னும் கருத்துள்ளது. "சிவம்" என்பது தமிழ்ச் சொல்லெனவும் இதிலிருந்து தான் வேதகாலத்து உருத்திர சிவத்திற்கு ஆதாரம் அமைந்ததெனவும் டாக்டர் கிரைசன் தெரிவித்துள்ளார். சிவம் என்னும் சொல், செம்மை என்னும் பண்பின் அடியாகப் பிறந்தது. வடமொழியாளர்கள் தமிழ் மக்களோடு கொண்ட தொடர்பின் விளைவாகச் சிவம் என்னும் சொல் வடமொழியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனச் சட்டோபாத்தியாயா எடுத்துக்காட்டியுள்ளார். ஆரியர் வருமுன்னரே இந்நாட்டில் சிவவழிபாடு இருந்தது என்று ஆசிரியர் ரகோசின் தாம் எழுதிய வேதகால இந்தியா (VEDIC INDIA) என்னும் நூலில் தெரிவித்துள்ளார்.

### சைவ ஆகமங்கள்

காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டு சைவ ஆகமங்கள் உள்ளன. இவற்றுள் காமிகம், காரணம், சுப்பிரபேதம், மிருகேந்திரம், மகுடம் ஆகியவை சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன. இவையே அச்சில் வெளிவந்துள்ளன. இவற்றுள் காமிகம், காரணம் ஆகிய இரண்டு மட்டுமே சிவன் கோயில்களில் பின்பற்றப்படுகின்றன. இவ்விரண்டனுள் காமிக ஆகமத்தினைப் பெரும்பான்மைக் கோயில்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. காமிகம் என்னும் பெயர் விரும்பியதை அளிப்பவர் என்ற பொருளும் காரணம் என்னும் பெயர் எல்லாவற்றிற்கும் காரணமானவர் சிவபெருமான் என்ற பொருளும் கொண்டுள்ளன. சுயம்புலிங்கங்கள் உள்ள கோயில்களில் காரண ஆகமமே வழங்கிவருகின்றது.

### வைணவ ஆகமங்கள்

வைணவத்தில் வைகானசம், பாஞ்சராத்திரம் என்னும் இரண்டு ஆகமப் பிரிவுகள் உள்ளன.

### 1. வைகானசம

திருமால் விகனசர் என்னும் வைணவ முனிவர் வடிவில் புகட்டிய உபதேசமே வைகானசம் ஆகும். இவ்வுபதேசத்திற்கு ஆதாரமாகவுள்ளது, வைகானச கல்ப் சூத்திரமாகும். இது நாராயணனைப் பரம்பொருளாகக் கொள்கிறது. நாராயணனின் சக்தி சீதேவி; சேதனமாகிய சீவர்களும் அசேதனமாகிய உலகமும் சக்தியின் வடிவங்கள். சபம், ஓமம், அருச்சனை, யோகம் ஆகியவற்றைச் சாதனங்களாக இதன்வழி நிற்போர் கொள்கிறார்கள். உருவங்களை வழிபடும் அர்ச்சா ரூப வழிபாட்டை வைகானசம் சிறப்பாகக் கொண்டுள்ளது.

விகனசரின் மாணவர்கள் பிருகு, அத்திரி, வைசிபர், மரிச்சி ஆகிய நால்வராவர். இவர்கள் நான்கு சம்மிதைகளை இயற்றினார்கள். இவற்றுள் சிலவே இப்போது உள.

### 2. பாஞ்சராத்திரம்

ராத்திரம் என்பது ஒரு நாளைக் குறிக்கிறது. 1. காலையில் சமயப்பணி புரியக் கோயிலுக்குச் செல்லுதல் (அபிகமனம்), 2. பூசைக்குத் தேவைப்படும் பொருள்களைத் திரட்டல் (உபாதானம்), 3. பூசை செய்தல் (ஈஜ்யம்), 4. சாத்திரங்களைப் பயிலுதல் (சுவாத்தியாயம்), 5. தியானம் (யோகம்) இவை வேதாந்த தேசிகர் இயற்றிய ஸ்ரீ வைணவ தினசரியில் காட்டப்பட்டுள்ளன.

பாஞ்சராத்திரம் என்பதற்கு மற்றுமொரு விளக்கமுமுள்ளது. திருமால் ஐந்து இராத்திரிகளில் முனிவர் ஐவருக்கு மெய்ப்பொருளைப் புகட்டினார். இக்காரணமாகப் பாஞ்சராத்திரம் அமைந்தது என்றும் கூறப்படுகிறது. மற்றும் விரிவான விளக்கம் பரம்பொருள் அருள்புரியும் வடிவங்களைக் காட்டுகிறது. அவர் இலட்சுமி நாராயணன் என்னும் பெயரில் விளங்குகிறார். சேதனத்தில் அடங்கும் சீவர்களும் அசேதனமாகிய உலகமும் ஸ்ரீதேவியின் வடிவங்கள். பரம்பொருள் விபு, விபவம், வியூகம், அந்தர்யாமி, அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளில் அருள்புரிகிறார். அவையாவன : (1) விபு-பரத்துவ நிலையைக் காட்டுகிறது. (2) விபவம்-இராமர் கண்ணன் நரசிம்மர் ஆகியோர்களைப் போன்ற அவதாரங்களைக் குறிக்கிறது. (3) வியூகம்-வாசுதேவன், சங்கர்ஷணன் (கண்ணன் உடன்பிறந்தாராகிய பலராமன்), பிரத்தியும்நன் (கண்ணன் புதல்வர்), அநிருத்தன் (கண்ணனின் பேரர் ) ஆகியோர். (4) அந்தர்யாமி என்பது ஒவ்வொருவரது உள்ளத்திலிருக்கும் இறைவனைக் குறிக்கிறது. (5) அர்ச்சை – கோயில்களில் எழுந்தருளிய திருமாலின் விக்கிரகங்களின் வடிவங்கள். இவ்வைந்து நிலைகளிலும் அர்ச்சை முதன்மை பெறுகிறது. இதனை அர்ச்சாவதாரம் எனவும் கூறுவர். இவ்வைந்து முறைகளிலும் இறைவனை வழிபடுவதே பாஞ்சராத்திர நெறியாகும்.

---

1. ஆகமங்கள் என்னும் சொல் பாசத்தை நீக்கி வீடுபேற்றை அளிப்பது என்னும் பொருள் கொண்டுள்ளது.

ஆகமங்கள் 28. அவையாவன: 1. காமிகம் 2. யோகசம் 3. சிந்தியம் 4. காரணம் 5. அசிதம் 6. தீப்தம் 7.சூட்சமம் 8. சகஸ்ரம் 9. அம்சுமத் 10. சுப்ரபேதம் 11. விசயம் 12. நிச்வாசம் 13. வாயம்புவம் 14. அனலம் 15. வீரம் 16. ரெளரவம் 17. மகுடம் 18. விமலம் 19. சந்த்ரஞானம் 20. முகபிம்பம் 21. ப்ரோத்கீதம் 22. லலிதம் 23. சித்தம் 24. சந்தானம் 25. சர்வோக்தம் 26. பாரமேச்சுவரம் 27. கிரணம் 28. வாதுளம்.

2. தமிழர் சமயம் - கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்.,

3. சிவஞான போத ஆராய்ச்சி - மறைமலையடிகள்; தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1971 . 147-148

4. Antiquity of Saivism as a Religion - B.D.Jetty., Saiva Siddhanta vol.4 No.2. page 84.

5. நீதிபதி மகராஜன் குழு அறிக்கை, தமிழ்நாடு அரசிதழ், 27-8-1982 பக்கம்.18.

# வரலாற்றுக்கு முற்பட்ட கோயில்கள்

இராமாயண காலத்தில் கோயில்கள் இருந்தனவென்று இராமாயணத்தின் 4-ஆவது காண்டம் கூறுகிறது. இராவணன் சிவ வழிபாட்டில் திளைத்தவன் எனவும் அவன் எங்கே சென்றாலும் அங்கு அவன் பொன் சிவலிங்கம் ஒன்றைக் கொண்டு சென்று, மணல் மீது அதனை நிலைப்படுத்தி அதற்குத் தூப தீப மலர் வழிபாடு செய்து வந்தான் எனவும் இராமாயண உத்தரகாண்டம் கூறுகிறது. அரசாட்சியை விரும்புகிறவர்கள் பொன் சிவலிங்கவழிபாடு மேற்கொள்ளவேண்டும் என ஆகமம் கூறுவதால் இராவணன் இவ்வாறு வழிபாடாற்றினான் என்று சொல்லப்படுகிறது. அருச்சுனன் தனது தீர்த்த யாத்திரையின்போது, தெற்கே காவிரியிலும் மற்றப் புண்ணிய நதிகளிலும் நீராடி ஆங்காங்கிருந்த கோயில்களில் வழிபாடாற்றினான் எனப் பாரதம் கூறுகிறது.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த சோழர்களுள் முசுகுந்தன், மனுநீதிச்சோழன் போன்ற மன்னர்கள் சைவத்தில் ஈடுபாடுடையவர்களாக இருந்தார்கள் என்பதற்குத் தமிழ் இலக்கியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

கண்ணப்ப நாயனார் சிவபெருமானைப் பூசித்த காளத்தி மலையில் ஆதி சைவராகிய சிவகோசரியார் ஆகமத்திலியம்பிய பூசனைக்கேற்ப வழிபட்டார் எனவும் மனுநீதிச்சோழன் "பூசனைக்கங்கண் நிபந்தம் ஆராய்ந்துள்ளான் துங்க ஆகமம் சொன்ன முறையால்" எனவும் பெரியபுராணம் கூறுகிறது.

# வரலாற்றுக் காலத்துத் தொன்மைக் கோயில்கள்

தமிழ் இலக்கணம் வகுத்தமுறையில் தொல்காப்பியர் ஐந்திணை ஒழுக்கத்தைப் பற்றிக் கூறியபோது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றைப் பிரித்து அவற்றிற்குரிய தெய்வங்களாக முறையே முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை என்போரைக் குறிப்பிட்டுள்ளார். "கொடிநிலை கந்தழி வள்ளி" எனத் தொடங்கும் தொல்காப்பியச் சூத்திரம், நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டியவாறு ஒரு பற்றுக்கோடுமின்றி "அருவாகித் தானே நிற்கும் தத்துவப்பொருள்" எனச் சிவபெருமானைச் சுட்டிக்காட்டுகிறது.

சங்ககாலத்தில் சிவபெருமானே தலைமைத் தெய்வமாகவும் முழு முதல்வனாகவும் போற்றப்பெற்றுள்ளார். விண்ணும் மற்றுமுள்ள பொருட்பகுதிகள் பலவும் சிவபெருமானின் திருக்கோலமாகக் கொண்டு இறைவனை இப்பெருந்தோற்றத்தின் முழுமுதல்வனாகக் கருதிய குறிப்பு புறநானூற்றின் முதற்பாடலிலே காணப்படுகிறது. ஆகமங்களில் காணப்பெறும் சிவபெருமானின் மூர்த்தங்களாகிய "தாழ்சடைபொலிந்த அருந் தவத்தோன்," "கறைமிடற்றண்ணல்," "நீலமணிமிடற்றொருவன்" "முழுமுதல்வன்"; "நீலமேனி வாலிழை பாகத்தொருவன்" "மழை தலை வைத்தவன்" "புங்கவம் ஊர்வோன்" "ஆலமர் செல்வன்" முதலிய சொற்றொடர்கள் சங்ககால இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. முல்லைப்பாட்டில் காணப்பெறும் "வலம் பொறித்தமா தாங்கு தடக்கை நீர் செல நிமிர்ந்த மாஅல் போல" என்பதும் பெரும்பாணாற்றுப் படையில் காணப்பெறும் "இருநிலம் கடந்த திருமருமார்பின் முந்நீர் வண்ணன்" என்பதும் மதுரைக்காஞ்சியில் காணப்பெறும் "மாயோன் மேய ஓணம்" என்பதும் பரிபாடலில் காணப்பெறும் ஆறு பாடல்களும் திருமாலைக் குறிக்கின்றன.

திருமுருகாற்றுப்படையில் காணப்பெறும் "சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து" என்பது முருக வழிபாட்டைக் குறிக்கிறது. சிலப்பதிகாரம் திருவேங்கடமலையில் எழுந்தருளிய திருமாலின் நின்ற திருக்கோலத்தையும் திருவரங்கநாதரின் பள்ளி கொண்ட திருக்கோலத்தையும் அழகிய முறையில் பாடுகிறது. மேலும் சிவபெருமான், ஆறுமுகன், திருமால் ஆகியோர்களுக்குக் கோயில்கள் இருந்தன என்பதனையும்

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.

# கோயிலின் தத்துவப்பொருள்

அகன்ற பரம்பொருளாகிய இறைவனுக்கு நானகு பக்கங்களிலும் எல்லைக்கோடுகள் வரையறுத்துச் சுவர்கள் நிறுவிக் குறுகியதொரு பரப்பளவில் கட்டடம் அமைத்து அதையே அவர்தம் இருப்பிடமாகக் கொள்வது எவ்வாறு பொருத்தமாக அமைகிறது என்பது ஆய்ந்து பார்க்கத் தக்கதாகும்.

தம்மால் பயிரிடப்பட்டது கொடிய விலங்குகளினாலோ பகைவர்களினாலோ அழிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதற்காக, பயிரிட்டவர், தம் மாடமாளிகையை விடுத்து அப்பயிரின் அருகிலே ஒரு குடிசையில் வாழ்வதைப்போல, அங்கு இங்கு எனாதபடி எங்கும் கருணையையே வடிவமாக் கொண்ட இறைவனும் தமது அருளை அடியவர்கள் எளியமுறையில் பெறுவதற்கு வாய்ப்பாக அவர்கள் வாழும் இடங்களில் உள்ள திருக்கோயில்களைத் தம் இல்லங்களாகக் கொள்கிறார்.

இறைவன் எழுந்தருளியுள்ள கருவறையே கோயிலின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் மிகவும் முக்கியமானது. கருவறையைச் சுற்றிலும் ஒன்று முதல் ஐந்து சுற்றுகள் உள்ளன. சுற்றுகள் ஆகமங்களில் ஆவரணங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. சிலர் இவற்றைச் சுற்றுப் பாதைகள் என விளக்கமாகக் கூறுவர். ஆனால், பிராகாரம் என்னும் சொல்லே பரவலாகப் பயன்படுத்தப்பெற்று வருகிறது. ஒரு பிராகாரமுடைய கோயில் மாந்தர் தூல உடம்பு எனப்படும் பருவுடலைக் குறிக்கிறது. மூன்று பிராகாரங்களுடையை கோயில்களைப் பொறுத்தவரையில், அவை மாந்தர்களின் பருவுடல்(தூல உடல்) நுண்ணுடல் (சூக்கும உடல்) நுண்ணுண்ணுடல் (காரண உடல்) ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலைப் போன்று ஐந்து பிரா்காரங்களைக் கொண்டுள்ள கோயில்களைப் பொறுத்தவரையில், அவை(1) அன்னைய் கோசம் (2) பிராணமய கோசம் (3) மனோமய கோசம் (4) விஞ்ஞானமய கோசம் (5) ஆனந்த மய கோசம் என்னும் அடுக்கடுக்காகவுள்ள ஐந்து கோசங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஐந்துக்கு மேற்பட்ட பிரா்காரங்களைச் சில கோயில்கள் கொண்டுள்ளன. இவற்றிற்கு எடுத்துக்காட்டு, திருவரங்கம் அரங்கநாதர் கோயில். இவை பூ, புவ, சுவ, மகா,

ஜனா, தப, சத்திய ஆகிய ஏழு உலகங்களுக்கு அமைந்த நுண்மையில் மாந்தர்க்கு ஏழு நுண்ணுடல்கள் என்பதைக் குறிக்கின்றன. எனவே கோயில் அமைப்பு, உடம்பின் அமைப்போடு ஒத்துள்ளது.

ஒரு மாபெரும் எரிப் பிழம்பு அண்டத்தைச் சுற்றிச் சூரியமண்டலத்தையும் நட்சத்திரமண்டலத்தையும் ஆட்டி வைக்கும் ஆற்றல் கொண்டுள்ளது. இம்மண்டலத்தைப் போன்று கோயிலின் கருவறையில் வீற்றிருக்கும் இறைவன் மூன்று, ஐந்து, ஏழு ஆவரணங்களையும் தம்முள் அடக்கியுள்ளார். கோயிலுக்கு ஆலயம் என்னும் ஒரு பெயரும் அமைந்துள்ளது. இச்சொல் ஆன்மாவாகிய உயிர் இலயம் (ஒழுக்கம்) பெறுதற்குரிய இடம் என்னும் பொருள் கொண்டுள்ளது. கருவறைக்கு அப்பாலுள்ள கோயிற்பகுதிகள் அனைத்தும் கொண்ட பெரும்பரப்பு ஆலயம் ஆகும்.

இது மாந்தர்தம் ஊன் உடம்பாகும். இவ்வகையில் ஊனுடம்பு ஆலயம் எனத் திருமூலர் குறிப்பிட்டுள்ளதை இங்கு நினைவுகூர்தல் தகும். மாந்தருக்கு உள்ளம் உளது. இது தாமரை மலர்போல விரிந்திருப்பதால், இதற்கு உள்ளக் கமலம் என்பது சிறப்புப்பெயராகும். அன்பர்கள் அழுத்தமாக இறைவனை நினைத்தால் அவர் விரைந்து அவ்வுள்ளக் கமலத்தை நோக்கி வந்து அங்கு வீற்றிருப்பார். இவ்வுண்மையை,

" மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

என்னும் திருக்குறளும் அதற்கு உரை வகுத்த பரிமேலழகரின் விளக்கமும் எடுத்துக்காட்டுகின்றன. எனவே, திருமூலர் கூறுவது போல், உள்ளம் பெருங்கோயிலாகிறது.

சிவன் கோயில்களைப் பொறுத்தவரையில் சிவலிங்கம், கோபுரம், ஒளிவிளக்கு ஆகியவை கோயிலுக்கு இன்றியமையாதவை. இவற்றைப் போன்று உடலுக்கு உள்ளம், ஊனுடம்பு, வாய், உயிர், புலன், அறிவு ஆகியவை தேவை. இவ்வுண்மைகளைத் திருமூலர் தாம் அருளிய

" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச்சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்னும் பாடலில் தெரிவித்துள்ளார். மற்றோரிடத்தில் திருமூலர் "மாந்தர் உடல் நடமாடும் கோயில்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கோபுரம் என்பது கோ+புரம் என்னும் இரு சொற்களைக் கொண்டது எனவும் பசுக்கள் எனப்படும் கோக்களாகிய மக்கள் உட்பட எல்லா உயிரினங்களும்

பதி எனப்பெறும் இறைவனை அடைவதற்குரிய வாயிலே(வழியே) கோபுர வாசல் என்றும் தெரிவிக்கப்படுகிறது. கருவறை மீதுள்ள விமானமும் முக்கியமானது. மானம் என்பது அளத்தற் பொருளைக் குறிக்கிறது. விமானம் என்பது இறைவன் பெருமை சிறப்பாக அளந்து அமைக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இடைகலை, பிங்கலை என்னும் இருநாடிகளின் வழியாகச் சென்று ஒரு நாடியாகிய சுழுமுனை அமைந்து நிமிர்ந்து நிற்கும் தன்மையைக் கொடிமரம் காட்டுகிறது. சிவலிங்கத்தின் முன் பலிபீடமும் நந்திதேவர் திருவுருவமும் உள்ளன. சிவலிங்கம்-பதி, நந்தி-பசு, பலிபீடம்-பாசம். இவ்வகையின் பசு, பதி, பாசம் என்னும் சைவசித்தாந்த முப்பொருள் உண்மை விளக்கம் பெறுகிறது.

கோயிலில் காணப்படும் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நீராடுமண்டபம், அலங்காரமண்டபம், சபாமண்டபம் என்னும் ஆறுமண்டபங்களாலும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆறாதாரங்களும் அறியப்படுகின்றன.

## தலபுராணங்கள்

இராமாயணம், பாரதம் ஆகியவை இதிகாசங்கள். புராணங்கள் பதினெட்டுள்ளன. இவை பதினெண்புராணங்கள் எனப்படும். இப்புராணங்களில் சிவபுராணங்களும் விட்டுணுபுராணங்களும் உள்ளன. காந்தம், கந்தப்பெருமான் புராணமாகும். இது வடமொழியில் உள்ளது. இராமாயணமும் பாரதமும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பதினெண்புராணங்களுள் பல தமிழில் வெளிவந்துள்ளன.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டுவரையில் சைவசமய ஆசிரியர் நால்வரும் ஆழ்வார்களும் தலங்கள் பலவற்றிற்கும் சென்று அங்கு வீற்றிருக்கும் இறைவன் மீது பதிகங்கள் பாடியருளினார்கள். அப்பதிகங்கள் அத்தலங்களின் கோயில்கள், அங்குள்ள தீர்த்தங்கள், அங்கு நிலவியிருந்த இனிய இயற்கைச் சூழ்நிலைகள் ஆகியவற்றை எடுத்துக்கூறுகின்றன.

பின்னர்ச் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம், பரஞ்சோதிமுனிவர் எழுதிய திருவிளையாடற்புராணம் ஆகியவை வெளிவந்தன. இவை புராணம் என்னும் தலைப்பில் அமைந்தன. புராணம் என்னும் சொல் பழமை என்னும் பொருள் தருகிறது. பண்டைப் புராணங்களின் சிறப்பைப் பெறவேண்டும் என்பதற்காக இம்மூன்று நூல்களும் புராணம் என்னும் தலைப்பில் வெளிவந்தன போலும். இதன்பின்னர், ஊர்தோறும் எழுந்த கோயில்களை மையமாகக் கொண்டு அந்த அந்த ஊர்களின் வரலாற்று அடிப்படையில் கதைகள் தோன்றின; புதிய பாடல்கள்

இயற்றப்பட்டன. இவற்றையெல்லாம் பயன்படுத்தி, அந்த - அந்தத் தலத்திற்கு நூல்களை இலக்கிய முறையில் கவிஞர்கள் புராணம் என்னும் தலைப்பில் இயற்றினார்கள்.

ஆங்காங்குள்ள கோயில்கள் புண்ணியத்தலங்கள் எனவும் அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்டால், பாவங்களிலிருந்து நீங்கப்பெற்று நல்வாழ்வு பெறலாம் எனவும் தலபுராணங்கள் எளியமுறையில் எடுத்தியம்புகின்றன. மற்றும் சமயக்கருத்துகளில் சிறந்தவற்றையும் தலபுராணங்கள் எடுத்துக்கூறின. இத்தகைய தலபுராணங்கள் துன்பத்தில் உழலும் மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையை ஊட்டின. தலபுராணங்கள் காப்பு, கடவுள்வாழ்த்து, அவைஅடக்கம், நாட்டுப்படலம், நகரப்படலம், வரலாற்றுப்படலம், மூர்த்தங்களின் சிறப்பு, தலமகிமைச்சுருக்கம் என்பன போன்ற தலைப்புகளில் அமைந்தன. தலபுராணம் சமயத்தை விளக்கித் தெய்வ வழிபாட்டை நிலைப்படுத்தியுள்ளது.

தலபுராணங்களுக்கு வரம்பு உண்டு என்பதைப் பற்றிக் கருத்தில் கொள்ளத்தக்கன சிலவுள.

தலபுராணங்கள் ஆராய்ச்சி நூல்கள் அல்ல. ஆதலினால், அவற்றில் உண்மைக்கு மாறானவையும் சிற்சில இடங்களில் இடம்பெறுகின்றன. தலபுராணங்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் கால வரிசையில் சில சமயங்களில் அமைவதில்லை. ஒரு கோயில் தலபுராணம் மற்றொரு கோயிலின் தலபுராணத்திற்கு மாறான கருத்துகளையும் தெரிவிக்கின்றது. ஒரு புராணத்தில் உயர்நிலையில் காட்டப்பெறும் தெய்வம் மற்றொரு தலபுராணத்தில் தாழ்நிலையில் காட்டப்பெறலாம். இவ்விரு தலபுராணங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து ஆய்வு செய்வதில் பயன்விளையாது; குழப்பம் நேரிடக்கூடும். ஆதலால், அந்த அந்தக் கோயில் தலபுராணம் அந்த அந்தக் கோயிலுக்குரியது என வரையறை செய்துகொள்ளவேண்டும். தலபுராணங்கள் கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் செய்யுள் வடிவில் இயற்றப்பட்டன. இவ்வாறு பல தலபுராணங்களை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றினார். இந்நூற்றாண்டில் பூவை கலியாணசுந்தர முதலியார் சிலபுராணங்களைச் செய்யுள் வடிவிலும் உரைநடையிலும் இயற்றியுள்ளார்.

## தலவிருட்சம்

கோயில்கள் முதலில் மரத்தொகுதிகளுக்கிடையே அமைந்தன. பின்னர் விரிவுபடப்பட்ட மலையுச்சிகள், சோலைகள், நீர்க்கரைகள் போன்றவற்றில் கோயில் அமைக்கும் முறை நடைமுறைக்கு வந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தில் தமிழரின்

நிலப்பாகுபாடான ஐவகை நிலங்களும் உள்ளன.

குறிஞ்சி - மலையும் மலையைச் சார்ந்ததும்-திருக்கழுக்குன்றம், திருக்கச்சூர், அச்சிறுபாக்கம். முல்லை - காடும் காட்டைச் சார்ந்ததும்-திருமுக்காடு, கடம்பர் கோயில், திருஆலங்காடு. மருதம் - வயலும் வயலைச் சார்ந்ததும்-சின்னம்பேடு, ஆயர்பாடி. நெய்தல் - கடலும் கடலைச் சார்ந்ததும்-மயிலை, திருவல்லிக்கேணி, திருவொற்றியூர், திருவான்மியூர். பாலை - (திருசுரம்) திரிசூலம், திருப்பாலைவனம்.

எத்தகைய நிலங்களில் கோயில்கள் அமைக்கப்பட்டபோதிலும் அவ்விடங்களில் மரங்களுக்குச் சிறப்பு அளிக்கப்பட்டது.

மரங்களை வழிபடும் வழக்கம் பற்றிப் பேராசிரியர் மோனியர் வில்லியம்ஸ் கூறும்போது "மரங்கள், புதர்கள், செடிகள் ஆகியவற்றினுள்ளே தெய்வ ஆற்றல்திரட்டின் மிக மேற்பட்ட இயற்கைத் தன்மைகள் இருப்பதாகக் கருதப்படுவதை முன்னிட்டு அவற்றை வழிபடுதல் எங்குமே பரவலாயிற்று" எனக் கூறுகிறார் (இந்தியாவில் சமய எண்ணங்களும் வாழ்க்கையும் பக்கம் 326-329). எண்ணற்ற தென்னிந்தியக் கோயில்கள் மரங்களோடோ காடுகளோடோ தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. இவ்வகையில், செங்கற்பட்டு மாவட்டத்தின் எடுத்துக்காட்டுகள் திருவாலங்காடு, திருவேற்காடு ஆகியவை.

கோயில்கள் வளர்ந்தாலும் மரத்தினை மறக்காமல் அதற்கெனக் கோயில்களில் ஓரிடம் ஒதுக்கி அதில் அதனையும் வழிபடு பொருளாக்கினார்கள் இவ்வகையில் இதற்குத் தலவிருட்சம் என்னும் பெயர் அமைந்தது. விருட்சம் என்னும் சொல் பெருகுதல் என்னும் பொருளைக் கொண்டது. ஒரு மரம் பல மரங்களாகப் பெருகுதல் போல மக்கள் வாழ்வும் மரங்களை வணங்குவதால் பெருகும் என்னும் நம்பிக்கை மலர்ந்தது. இதன் அடிப்படையில் எல்லாக் கோயில்களிலும் ஒவ்வொரு மரம் தலமரமாக விளங்குகிறது. இத்தகைய தலவிருட்சங்களில் கொன்றை, வில்வம், நாகலிங்கம் வன்னி, அத்தி போன்றவை அடங்குகின்றன. திருமால் கோயில்களில் மகிழமரம், புன்னை மரம் போன்ற மரங்களும் தலமரங்களாகப் போற்றப்பட்டன. சிறுதெய்வக் கோயில்களில் வேப்பமரம், தெய்வத்தன்மை வாய்ந்ததாகப் போற்றப்பட்டது.

மரங்களுக்கு அரசன் போன்று முதன்மை தாங்குவது அரசமரம். இதுவே சிவலிங்கம் போன்றதாக மதிக்கப்படுகிறது. நிலத்தின் அடியிலிருக்கும் இம்மரத்தின் பகுதி பிரமதேவனுக்குரியது எனவும் இதன் நடுப்பகுதி திருமாலுக்குரியது எனவும் இதன்மேற்பகுதி உருத்திரனுக்குரியது எனவும் கருதி இதனை வலம் வந்து இதற்கு வழிபாடாற்றுவது வழக்கமாக இருந்துவருகிறது.

அரசும் வேம்பும் இணைந்திருந்தால் அது சிவமும் சக்தியும் இணைந்திருப்பதாகக் கருதப்படுகிறது. இவ்விரு மரங்களையும் வலம்வந்து வழிபாடாற்றுகிறார்கள். பெரும்பாலும் குளக்கரையில் அரசமரத்தடியில் விநாயகர் திருவுருவம் வணங்கப்பெறுகிறது. ஆலமரம் திருவாலாங்காட்டில்

தலவிருட்சமாகவுள்ளது. திருக்கச்சியேகம்பத்தில் உள்ள மாமரம் மிகப் பழமையானது என்று அயல்நாட்டு அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். வாழைமரம் திருக்கழுக்குன்றத்தில் தலவிருட்சமாக உள்ளது.

சில நிலங்கள் மரத்தொகுதியாலே குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் சில கீழே குறிக்கப்படுகின்றன.

கடம்பமரம் - கடம்பர் கோயில்

வாழைமரம் - கதலிவனம் - (கழுக்குன்றம்)

வேலமரம் - வேற்காடு, (திருவேற்காடு)

மாமரம் - மாங்காடு

பல ஊர்களில் மரங்களின் அடியில் இறைவனை எழுந்தருள்வித்து உலாக்காண்பர். காஞ்சிபுரம் மாவடிசேவை, திருமால் கோயில்களில் புன்னை விருட்சம், முருகன் கோயில்களில் கற்பக விருட்சம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

# கோயில்களின் திருவுருவங்கள்

தமிழ்நாடு எழில் மிக்க கோயில்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கி வருதற்குரிய ஆதாரங்களில் அக்கோயில்களிலுள்ள திருவுருவங்களின் அமைப்பும் ஒன்றாகும். அவற்றைப் பற்றி இங்கே காண்போம்.

## 1. விநாயகர்-பெயர்விளக்கம்

விநாயகர் என்னும் சொல்லிலுள்ள முதல் எழுத்து "வி". இது சிறப்பு, உயர்வு, தலைமை முதலியவற்றைக் குறிக்கிறது. இவ்வகையில் விநாயகர் ஒப்பற்ற தலைவர் ஆகிறார். விநாயகருக்கு இத்தகைய ஒப்பற்ற தலைமை கிடைத்தமைக்கு முதற்காரணம், இறைவனை வழிபடுதற்குரிய மந்திரங்களுக்குள் தலை சிறந்த மந்திரமாகிய "ஓம்" என்னும் பிரணவத்தின் அடிப்படையில் இவர்தம் திருவுருவம் அமைந்திருப்பதேயாகும்.

பிரணவம் அ, உ, ம் என்னும் மூன்று ஒலிகளைக் கொண்டது. இவற்றுள், அகர|ஒலி எல்லாச்செயற்கை ஒலிகளாகவும் பிரிந்து படைத்தல் தொழிலையும் அதன் பின்னர் உகர ஒலி தோன்றிச் சிறிது நேரம் நிற்கிறது. இது

படைக்கப்பட்டவற்றைத் தம்தம் கால எலலையளவு வரையில் நிலை நிறுத்துகிறது. இது காத்தல் தொழிலைக் குறிக்கிறது.இம்மந்திரத்தை உச்சரிக்கும் உதடுகள் ஒன்று சேர்ந்து முடிக்கும் நிலையில் மகாரம் அமைவதால், இஃது அழித்தலைக் குறிக்கிறது. ஆதலால், ஓங்காரமாகிய பிரணவம் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முப்பொருள்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. பிரணவமந்திரம் ஓதுவோரை உலகியலிலிருந்து இறையியலுக்குக் கொண்டு சென்று அங்கு அவரை நிலைப்படுத்துகிறது என்று அதர்வசிவ உபநிடதம் கூறுகிறது.

## 2. இறைவனின் பிள்ளை பிள்ளையாராதல்

இறைவனிடமிருந்து தோன்றியவற்றிற்கெல்லாம் முதலாவதாக உள்ளது ஓங்கார மந்திரம் ஆனதால், ஓங்கார வடிவினராகிய விநாயகர் இறைவனின் மூத்த மகனாகக் கொண்டாடப்பெறுகிறார். இவர் கொண்டுள்ள திருவுருவத்தில் இறைவனின் பிள்ளை; இறைப்பிள்ளையாக மதிக்கப்பட்டுப் பிள்ளையார் என்னும் பெயர் தாங்குகிறார்.

சிவனும் பார்வதியும் கூடிப் பிள்ளையாரைப் பெற்றார்கள் என்பது அகார உகாரங்களாகிய சிவமும் சக்தியும் கூடியே சுத்த மாயா காரியமாகிய நாதப்பிரணவமாயிற்று என்பதை விளக்க வந்ததாகும். இம்மந்திரத்தின் அடிப்படையில் எந்தவொரு செயல்புரியத் தொடங்கும்போதும் பிள்ளையார் சுழியை இடுகிற வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது.

## 3. யானைமுகத்தோடு அங்குச பாசமேந்திய ஐங்கரன்

யானை முகமும் தொங்கி நீண்டு சுருளும் துதிக்கையும் "ஓ" என்னும் எழுத்தின் வடிவம் கொண்டுள்ளது. விநாயகரின் மூன்று கண்களும் சூரியன், சந்திரன், தீ என்னும் மூன்று ஒளிகளையும் அவர்தம் ஐங்கரங்களும் படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் புலப்படுத்துகின்றன.

விநாயகரின் திருவுருவத்தின் ஒருபுறம் யானையின் மருப்பைக்கொண்டுள்ளது; மறுபுறம் மருப்பின்மையைக் கொண்டுள்ளது. மருப்பு ஆண் யானையையும் மருப்பின்மை பெண்யானையையும் குறிக்கின்றன. இவ்வகையில் ஆண், பெண் ஆகிய இருபால்கள் குறிப்பிடப்பெறுகின்றன. யானை அஃறிணையில் அமைகிறது. இவ்வாறு விநாயகர் உயர்திணை ஆண்பால், உயர்திணைப்பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் என்னும் மூன்றினையும் கொண்டுள்ளார். யானைத் தலையும் மனிதவுடலும் குறட்பூதப்பாதமும் கொண்ட விநாயகர் திருவுருவம் எல்லாமுமாயும் விளங்குகிறது. விநாயகர் தம் கைகளிலுள்ள பாசத்தால் உயிர்களைப் பற்றி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அங்குசத்தால் அடக்குகிறார்.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் நரசிங்கவர்ம பல்லவமன்னனோடு சேனைத் தலைவராகச் சென்று வாதாபிப் போரில் புலிகேசியை வென்று வந்த

சிறுத்தொண்டராலேயே தென்னகத்தில் விநாயகர் இடம்பெற்றார் என்னும் கொள்கையைச் சிலர் கொண்டுள்ளனர். ஆனால், கீழ்க்காணும் காரணங்களைக் கொண்டு கி. பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே தொன்மைக்காலத்தில் விநாயகர் வரலாறு அமைந்திருந்தது என்பதை டாக்டர் ச. தண்டபாணிதேசிகர் வலியுறுத்துகிறார்.

வியாசர் பாரதத்தை விநாயகர் எழுதினார் என்பதை ஒரு வரலாறு கூறுகிறது. மணிமேகலையில் "கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை" என்னும் தொடர் காணப்படுகிறது. இதில் அடங்கிய வரலாறு விநாயகர் காகத்தின் வடிவுகொண்டு கமண்டலத்தைக் கவிழ்த்ததையன்றி வேறு எதனையும் கூறுவதில்லை. இது கணபதி சங்ககால இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளார் என்பதைக் காட்டுகிறது.

கல்லாடம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ இயற்றப்பட்டதென்பதை மறைமலைஅடிகள் தடைவிடைகளைக் கொண்டு விளக்கியுள்ளார். கல்லாடத்தில் கணபதி வணக்கச் செய்யுள் காணப்படுகிறது.

விநாயகர் திருவுருவங்களில் பால கணபதி, தருண கணபதி, பக்தி கணபதி, வீர கணபதி, சத்தி கணபதி, துவிஜ கணபதி, சித்தி கணபதி, உச்சிட்ட கணபதி, நிருத்த கணபதி, (கூத்தாடும்பிள்ளையார்), ஊர்த்துவ கணபதி, ஏகாட்சரக் கணபதி, வர கணபதி, திரயாட்சர கணபதி, க்ஷீரபிசார கணபதி, அரித்திரா கணபதி, ஏக தந்த கணபதி, சிருட்டி கணபதி, உத்தண்ட கணபதி, இரண்யவிமோசன கணபதி, துட்டி கணபதி, துளிமுக கணபதி, மும்முக கணபதி, சிங்க கணபதி, யோக கணபதி, துர்க்கா கணபதி, சங்கட கரகணபதி, சித்தி விநாயகர், வரசித்தி விநாயகர், வலம்புரி விநாயகர், சக்தி கணபதி, பஞ்சமுக கணபதி, பஞ்சபூத கணபதி, மூசிக கணபதி என்பன போன்ற பல பெயர்களில் அருள்புரிந்துவருகிறார். விநாயகரைப் பற்றிய பிற விவரங்கள் விநாயக புராணத்தில் காணலாம்.

சில கோயில்களில் விநாயகர் திருவருட்பொலிவு தோன்றுகிறது. செங்கற்பட்டு மாவட்டக் கோயில்களுள் திருக்கச்சூர் கோயிலிலுள்ள விநாயகர் தாலமூல விநாயகர் என்னும் பெயரிலும் கருக்கடி விநாயகர் என்னும் பெயரிலும் வீற்றிருக்கிறார். திருமாகறலில் பொய்யா விநாயகராகப் போற்றப்பெறுகிறார். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் விகடசக்கர விநாயகர் என்னும் பெயரில் வழிபடப் பெறுகிறார். சென்னை மாநகரில் சுந்தர விநாயகர், பிரசன்ன விநாயகர், வினை தீர்த்த விநாயகர், செல்வவிநாயகர், சந்தன விநாயகர், சித்திகணேசர் போன்ற பெயர்களில் வழிபடப்பெறுகிறார்.

## ஆகமங்களில் காணப்படும் பிள்ளையார் திருவுருவங்கள்

### 1. *பாலகணபதி*

யானைமுகமும் நான்கு திருக்கரங்களும் உடையவர். உதிக்கின்ற

செங்கதிர்போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவர்தம் துதிக்கையில் மோதகம் விளங்கும்.

### 2. தருண கணபதி

எட்டுத் திருக்கரங்களையும் யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன்கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு இவற்றையுடைவர். நண்பகல் தோன்றுகின்ற சூரியனைப் போன்ற நல்ல சிவந்த திருமேனி படைத்தவர்.

### 3. பக்தி கணபதி

சரத்காலத்து நிறைமதி போன்ற வெண்ணிறம் படைத்தவராக, தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயச பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி, யானைமுகம் உடையவராக விளங்குபவர்.

### 4. வீரகணபதி

வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறையும் தாங்கிய பதினாறு திருக்கரங்களையும் சிவந்த திருமேனியையும் சிறிது சினந்த திருமுகத்தையும் உடையவர்.

### 5. சத்தி கணபதி

செவ்வந்திவானம் போன்ற நிறமுடையவராக, பச்சைநிற மேனியளாகிய தேவியைத் தழுவிக்கொண்டு இருப்பவர். பாசம், பூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.

### 6. துவிஜ கணபதி

நான்கு திருக்கரங்களிலும் முறையே புத்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன் போல வெண்மையானவர். நான்கு யானை முகங்களை உடையவர்.

### 7. சித்தி கணபதி

மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுள்பட ஐந்து கரங்களில் தரித்தவரும் பொன்கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குபவர்.

8. உச்சிஷ்ட கணபதி

நீலோத்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை ஆகியவற்றைத் தரித்தவர். நீலநிறத் திருமேனி உடையவராக விளங்குபவர்.

9. விக்ன கணபதி

சங்கு, கரும்புவில், மலரம்பு, கோடரி, பாசம், சக்கரம், கொம்பு ,மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றொடு கூடிய திருக்கரங்களையுடையவர்; ஆபரணங்களை நிரம்பத் தரித்தவர்; பொன்மேனியராக விளங்குபவர்.

10. க்ஷிப்ர கணபதி

தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம்,அங்குசம் ஆகியவை ஏந்தியவர். செவ்வரத்தம்பூப் போன்ற அழகிய மேனியர்; செந்நிறமானவர்.

11. ஏரம்ப கணபதி

அபயம், வரதம் கொண்ட கைகளையுடைவர். பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானை முகம் ஐந்துடையவர். பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்.

12. இலட்சுமி கணபதி

எட்டுக் கைகளிலும், கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப் பூவை ஏந்திய இருபெருந்தேவிமார்களோடு திகழுபவர்.

13. மஹா கணபதி

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம் தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், இரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர், பிறைமுடியர், மடிமீது எழுந்தருளியிருக்கிற தாமரையை ஏந்திய தேவியாரால் சுவையோடு தழுவப்பெற்றவர்.

14. விசய கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

**15. நிருத்த கணபதி**

இவர் கூத்தாடும் பிள்ளையார் எனப்பெறுபவர். மோதிரங்களணிந்த விரல்களையுடைய கைகளில் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் இவைகளைத் தரித்தவர். பொன் போன்ற நிறமுடைய திருமேனியர்; கற்பக விருட்சத் தினடியில் எழுந்தருளியிருப்பவர்.

**16. ஊர்த்துவ கணபதி**

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடைவர். பொன் வண்ண மேனியர். பச்சை நிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.

**17. ஏகாட்சர கணபதி**

செந்நிறமானவர்; செம்பட்டாடையர்; செம்மலர் மாலையர்; பிறைமுடியர்; முக்கண்ணர்; குறுந்தாளர்; குறுங்கையர். மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங்கிய கரங்களையுடையவர். யானை முகவர்; பதுமாசனத்திருப்பவர்; பெருச்சாளி வாகனர்.

**18. வரகணபதி**

செவ்வண்ணர்; யானைமுகவர்; முக்கண்ணர்; பாசம் அங்குசங்களைத் தரித்தவர். தேன்நிறைந்த மண்டையையுடையவர்; பிறை முடியர்.

**19. திரயாக்ஷ்ர கணபதி**

அசைகின்ற செவிகளில் சாமரையணிந்தவர்; பொன்னிறமானவர்; நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் - இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

**20. க்ஷிப்ரபிரசாத கணபதி**

பாசம், அங்குசம், கல்பலகை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை விஷ்டரம் இவற்றைத் தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.

**21. ஹரித்திரா கணபதி**

மஞ்சள் நிறமானவர். நான்கு கரங்களையுடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர்.

## 22. ஏகதந்த கணபதி

பேழை வயிற்றினர்; நீலமேனியர்; கோடரி, அட்சமாலை, இலட்டு, தந்தம் இவற்றை உடையவர்.

## 23. சிருஷ்டி கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர்; பெருச்சாளி வாகனத்தையுடையவர்; சிவந்த திருமேனியர்.

## 24. உத்தண்ட கணபதி

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், இரத்தினகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக்கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய, பச்சை மேனியளாகிய தேவியால் தழுவப் பெற்றவர்.

## 25. இரணமோசன கணபதி

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர்; வெண்பளிங்கு போன்ற மேனியர்; செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

## 26. துண்டி கணபதி

அட்சமாலை, கோடரி, இரத்தினகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

## 27. துவிமுக கணபதி

தந்தம், பாசம், அங்குசம், இரத்தினபாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர்; பசுநீல மேனியர். செம்பட்டாடையும், இரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

## 28. மும்முக கணபதி

வலக் கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடக் கைகளில் பாசம், அமுதகலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரையாசனத்தின் நடுப்பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம்பூப் போன்ற சிவந்த நிறம் உடையவர்.

## 29. சிங்க கணபதி

வீணை, கற்பகக் கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலக் கைகளில் தாங்கியவர். தாமரை, இரத்தினகலசம், பூங்கொத்து, அபயம் - இவையமைந்த இடக்கைகளை

யுடையவர். வெண்ணிறமானமேனியர்; யானைமுகவர்; சிங்கவாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

**30. யோக கணபதி**

யோகநிலையில், யோகபட்டம் தரித்துக்கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக்கொண்டு பாசம், அட்சமாலை, யோக தண்டம், கரும்பு இவற்றை ஏந்தியிருப்பவர்.

**31. துர்க்கா கணபதி**

சுட்ட பசும்பொன் நிறம்; எட்டுக்கைகள்; பெரிய திருமேனி; அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் ஆகியவற்றை வலக்கையில் ஏந்தியவர்; பாசம், வில், கொடி, நாவற்பழம் ஆகியவற்றை இடக்கையில் கொண்டவர்; செந்நிற ஆடையர்.

**32. சங்கடஹர கணபதி**

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பசியமேனியளாக, நீலப் பூவை ஏந்தியவராக இருப்பவர். வலக்கையில் அங்குசம், வரதம் உடையவர். இடக்கையில் பாசம், பாயசபாத்திரம் ஏந்தியவர்; செந்தாமரைப் பீடத்தில் அமர்ந்தவர்; நீலநிறமான ஆடையணிந்தவர்.

## சிவலிங்கம்

நம் இந்திய நாட்டில் சிறப்பாகப் போற்றி வழிபடப்பெறும் தெய்வத்திருவுருவங்களில் சிவலிங்கத் திருவுருவம் மிகச் சிறப்புடையதொன்றாகும். இமயம் முதல் குமரிவரையிலுள்ள எண்ணிறந்த கோயில்களில் சிவலிங்கத் திருவுருவம் சிறப்புற நிறுவப்பெற்றுத் தொன்னெடுங் காலம் முதல் இன்றளவும் பல கோடிக்கணக்கிலான மக்களால் பாராட்டிப் போற்றி வணங்கப் பெற்று வருகிறது.

சிவலிங்க வழிபாடு ஏறத்தாழ ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டில் நிலவியிருந்தது என்பதை மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழாய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இந்நாட்டில் மட்டுமன்றி, எகிப்து, சிரியா, சிறியஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய பல நாடுகளிலும் சிவலிங்க வழிபாடு பரவியிருந்தது என்பதைப் பேரறிஞர் எச்.எம்.வெஸ்ட்ராப் தாம் இயற்றிய நூலில் தெரிவித்துள்ளார்.

"இலிங்கம்" என்னுஞ் சொல் "இலங்கு" என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றியது என்பர் சிலர். "லிங்", "கம்" என்னும் இரு சொற்களைக் கொண்டது "லிங்கம்" எனவும் இவ்வகையில் "லிங்" லயம் ஒடுக்கம்; "கம்" தோற்றம் என்பனவற்றைக் குறிக்கிறது எனவும் இஃது உலகங்களின் ஒடுக்கத்திற்கும் தோற்றத்திற்கும் காரணமாக இருக்கும் சிவபெருமானை உணர்த்தி நிற்கிறது எனவும்

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகிறார். லிங்கம் என்னும் சொல்லுக்குப் பிரகாசம் என்னும் பொருளும் உண்டு என்பதை "இந்தச் சுந்தரச் சுயம்புலிங்கம் சுயம் பிரகாசமாகும்" எனப் பரஞ்சோதிமுனிவர் தாம் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் தெரிவித்துள்ளார்.

பிரணவ மந்திரத்தின் அடையாளமான இலிங்கத்தின் பீடம் ஓங்காரம்; அதன் நடுப்பகுதியாகிய கண்டம் மகாரம்; உள்வட்டம் உகாரம்; மேற்பகுதி அகாரம் என்பதாகத் திருமந்திரம் சிவலிங்கத்தைக் குறிக்கிறது. வட்ட வடிவம் விந்து; நாதம் நீண்ட கோடு வடிவம் உடையது; இவ்விரண்டும் சேர்ந்த வடிவம் சிவலிங்கம்.

## ஆறுவகை இலிங்கங்கள்

1. அண்டலிங்கம் 2. பிண்டலிங்கம் 3. சதாசிவலிங்கம் 4. ஆன்மலிங்கம் 5. ஞானலிங்கம் 6. சிவலிங்கம் என்னும் ஆறு வகையாகச் சிவலிங்கம் கருதப்பெற்று அவரவர் பக்குவத்திற்கேற்ப வணங்கப் பெறுகிறது.

### 1. அண்டலிங்கம்

எழுத்து, பதம், மந்திரம் ஆகிய மூன்றையும் கொண்டது சொல்உலகு. தத்துவம், புவனம், கலை ஆகிய மூன்றையும் கொண்டது பொருள்உலகு. எழுத்து, பதம், மந்திரம், தத்துவம், புவனம், கலை ஆகிய ஆறும் உயிர்களின் இன்பதுன்ப நுகர்ச்சிக்கும் முத்திக்கும் வழியாக இருப்பதால் இவை அத்துவாக்கள் ஆகும். (அத்துவா வழி) இந்த ஆறு அத்துவாக்கள் பரு (தூலத்)த் திருமேனிப் பகுதிகளாகும். இவ்வத்துவாக்களைச் சிவலிங்கத்தின் பகுதிகளாகக் கருதி வழிபடுவது அண்டலிங்க வழிபாடாகும்.

### 2. பிண்டலிங்கம்

அண்டத்தின் பெரும்பரப்பில் உள்ளன எல்லாம் பிண்டமாகிய மானிட உடலிலும் உள்ளன. ஆதலால், மேலே கூறிய அத்துவாக்கள் ஆறும் மனித யாக்கையில் உள்ளன. இவற்றை மனித உடலில் உள்ள ஆதாரங்களில் நினைந்து வழிபடும் அகவழிபாடு பிண்டலிங்க வழிபாடாகும்.

### 3. சதாசிவலிங்கம்

சதாசிவலிங்கத்தில் சிவபெருமான் 5 திருமுகங்கள், 10 திருக்கரங்கள், 15 திருக்கண்கள் உடையவராக உள்ளார். 10 திருக்கரங்களில் 10 வகையான ஆயுதங்களையும் படைக்கலங்களையும் ஏந்தியுள்ளார். இவர் ஓருடல், இரு திருவடிகள் ஆகியவற்றைக் கொண்ட திருமேனி உடையவராய்க் கருதப்பெற்று வழிபடப் பெறுகிறார். இவருடைய 5 திருமுகங்கள் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் பெயர்களைப் பெறுகின்றன. இவை முறையே, அருளல், மறைத்தல், அழித்தல் (ஒடுக்கம்), காத்தல், படைத்தல் ஆகிய

ஐந்தொழில்களையும் செய்யும் சக்திகள். இத்திருமேனி ஐம்பெரும் மந்திரங்களை (பஞ்சப்பிரம மந்திரம்) வடிவமாகக் கொண்டுள்ளது. ஆதலால், இம்மந்திரங்களால் சதாசிவலிங்கம் பூசிக்கப் பெறுகிறது. இம்மந்திரங்கள் அரூபமாய் (உருவமற்றவையாய்) சதாசிவ உருவத்திருமேனியில் பதிவுறுகின்றன. அந்நிலையில் வழிபாடு செய்யப் பெறுவதால், சதாசிவலிங்கம் அருவுருவமாகிறது.

4. ஆன்மலிங்கம்

அண்டம், பிண்டம், சதாசிவம் ஆகிய மூன்றும் சிவபெருமான் திருமேனிகள். இவை போன்று, மும்மலங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு, தூயதாய் நிற்கும் உயிரும் சிவபெருமானது திருமேனியாம். இஃது ஆன்மலிங்கம் எனப்பெறும். அகப்பூசையில் இந்த இலிங்கம் இதயத் தாமரையில் இருப்பதாகக் கருதிப் பூசிக்கப்பெறுகிறது. இவ்வழிபாட்டினைச் சிவயோகியர் செய்வர்.

"என்றுநின் றேத்துவன் எம்பெரு மான்தன்னை
ஒன்றியென் உள்ளத்தின் உள்ளிருந் தானே" (திருமந்திரம் 1762)

எனத் திருமூலர் தமது அகவழிபாட்டினைக் கூறுகிறார். இங்கு உள்ளம் என்பது உயிர்களை உணர்த்தி நிற்கிறது.

5. ஞானலிங்கம்

ஞானமே வடிவாக உள்ளவர் சிவசக்தி. ஞானமே உருவான சக்தியும் சிவபெருமானும் ஒன்றித்து, ஒருவரை விட்டு மற்றவர் என்றும் பிரியாது நின்று, உயிர்களுக்குச் சிவஞானத்தை நல்கும் சிவனது நிலையை ஞானலிங்கம் உணர்த்துகிறது.

"எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
முந்த வுரைத்து முறைசொல்லின் ஞானமாம்"

(திருமந்திரம் 1770)

என்பது திருமூலர் திருவாக்காகும்.

எந்தை பரமன் - சிவபெருமான் (பரமசிவன்), என்னம்மை - பரை. இவ்விருவர் கூட்டமே ஞானலிங்கம். முந்த உரைத்து - சிவபெருமானின் பதமாகிய சிகாரத்தை முன் நிற்குமாறு உரைத்து, பின்னர்ப் பரையின் பதமாகிய வகாரத்தை உரைத்து, 'சிவ' என்னும் மகாகாரண திருவைந்தெழுத்தை மனத்தில் செபித்தலாகும். முறைசொல்லின் - இத்திருவைந்தெழுத்தின் உண்மையை உணர்ந்து அஃது உணர்த்தும் ஞானநிலையில் நின்று செபித்தலாம். ஞானமாம்-ஞானலிங்கம் வெளிப்பட்டுப் பேரொளிமயமாய்ச் சத்தி தோன்றிக் காட்சியளித்து நிற்கும் இந்த இலிங்கம் சிவஞானிகள் வழிபடுவதற்குரியது.

## 6. சிவலிங்கம்

இந்த இலிங்கம் ஆனந்தமேயாகத் திகழ்வது. இது சிவன், சத்தி, பரநாதம், பரவிந்து, சதாசிவன், மகேசன், உருத்திரன், மால், அயன் ஆகிய ஒன்பது வடிவங்களைத் தன்னுள் கொண்டுள்ளது. இது பரமசிவம் எனப்படுகிறது.

"மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே." (திருமந்திரம் - 1776)

என்பது சிவலிங்கத்தை உணர்த்தும் திருமந்திரப்பாடல்.

பராநந்தி - பரமசிவம்.

பலம்தரு இலிங்கம் - இறுதிப்பயனாகிய பேரின்பத்தைத் (சிவானந்தத்தைத்) தரும் சிவலிங்கம். மேலும், "கிடந்தின்புற அன்றென்று அருள்செய்யும் ஆதிப்பிரானே" (திருமந்திரம் 1775) என்னும் திருவாக்கில் இந்தச் சிவலிங்கம் பேரானந்தத்தை அனுபவிக்குமாறு அருள்பாலிப்பது என்றும் இஃது அன்றும் இன்றும் என்றும் இவ்வாறு அருள்பாலிப்பது என்றும் இதுவே அயன் முதல் சிவன் வரையுள்ள ஒன்பது வடிவங்களுக்கும் முதலாவது என்றும் திருமூலர் கூறுகிறார். இந்தச் சிவலிங்கம் அதிதீவிரப்பக்குவம் பெற்ற சிவஞானிகளுக்கே காட்சியளித்து, சிவானந்த அனுபவத்தைத் தரும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணிவாசகப் பெருமான், திருமூலர் ஆகியோர் போன்ற ஆச்சாரியமூர்த்திகள் இச்சிவலிங்கத்தில் பரசிவத்தைச் சிவஞானத்தாற் கண்டு, பேரானந்த அனுபவம் பெற்று அந்த ஆனந்த வெள்ளத்தில் அழுந்தி நின்றவர்கள்.

### சலலிங்கமும் அசலலிங்கமும்

சிவலிங்கம், சலலிங்கம், அசலலிங்கம் என்னும் இருபெரும்பிரிவுகளில் அமைகின்றது. சலலிங்கம், சங்கமலிங்கம் எனப்படும். மண்ணாலும் கல்லாலும் பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களாலும் சந்தனம், வன்னி முதலிய மரங்களாலும் செய்யப்படும் சிவலிங்கம் சலலிங்கம். சிறுகல் வடிவிலான லிங்கத்தைச் சிலர் தம் கழுத்தில் அணிந்து கொண்டு அதை வணங்குகிறார்கள். இவர்கள் இலிங்காயதர்கள் ஆவார்கள். இவர்களைச் சங்கமர் எனவும் குறிப்பிடுகின்றனர். அசலலிங்கம் அல்லது தாவரலிங்கம் என்பது இடத்தை விட்டு அப்புறப் படுத்தப்பட முடியாதது.

திருக்கோயில்களின் மூலத்தானத்தில் நிலையாக நிறுவப்படுவன அசலலிங்கங்கள். இவற்றின் வகைகளும் இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளும் கீழே குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் தலைசிறந்தது சுயம்புவம்-சுயம்புலிங்கம். இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் கீழ்க் காண்பன.

| | | |
|---|---|---|
| 1. சுயம்புலிங்கம் | - இது தானே தோன்றுவது | - அச்சிறுபாக்கம், திருவிற் கோலம், திருவான்மியூர், திரு முல்லைவாயில் முதலிய தலங்களில் உள்ள சிவ லிங்கங்கள் சுயம்பு லிங்கங்கள். |
| 2. தெய்வீகம் | - திருமால், பிரமதேவன் முதலியோர்களால் உருவாக்கப்பெற்று வழி படப் பெற்றவை. | - காஞ்சிபுரம் கச்சபேசர் கோயிலில் திருமால் அமைத்த சிவலிங்கம் உள்ளது. சீர்காழியில் பிரமன் அமைத்த சிவலிங்கம் உள்ளது. இவை தெய்வீக லிங்கங்கள். |
| 3. காணபத்தியம் | - கணங்களால் நிறுவப் பெற்று வழிபடப் பெற்றவை (கணேசர், முருகர், நந்தி முதலிய கணங்களால் நிறுவப்பெற்றுள்ளவை) | - திருத்தணிகையில் குமரேசர் சிவபெருமானைச் சிவலிங்க வடிவில் வழிபட்டார். இது குமரேசம் என வழங்குகிறது. |
| 4. மானுடம் | - மாந்தர்களால் உருவாக்கப் பெற்று வழிபடப் பெற்றவை. | - காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் பல்லவ மன்னன் இராசசிம்மன் அமைத்து வழி பட்டான். |
| 5. ஆர்சிகம் | - முனிவர்களால் நிறுவப் பெற்று வழிபடப் பெற்றவை. | - மதங்க முனிவர் பூசித்தது. காஞ்சிபுரத்திலுள்ளது. இது மதங்கீசம் என விளங்கி வருகிறது. |
| 6. அசுரம் | - அசுரர்களால் உருவாக்கப் பெற்றுப் பூசிக்கப் பெற்றவை. | - காஞ்சிபுரத்தில் தக்கன் அமைத்துப் பூசித்தது. இஃது அவன் பெயரில் தக்கீசர் கோயில் என விளங்கி வருகிறது. |
| 7. சுரர் | - தேவர் உருவாக்கிப் பூசை செய்தது | - காஞ்சிபுரத்தில் சுரகரேசுவரர் கோயிலில் உள்ளது. |
| 8. பாணம் | - பாணாசுரன் வழிபட்ட லிங்கம் | - ஸ்ரீசைலம், நேபாளம், மகேந் திரம் போன்ற இடங்களில் இச்சிவலிங்கங்கள் காணப் |

படுகின்றன. இவை சுயம்பு இலிங்கத்திற்கு ஒப்பானவை என்று காமிக ஆகமம் கூறுகிறது.

மனிதர் உருவாக்கிய சிவலிங்கங்கள் நான்கு வகைப்படும். அவையாவன: (1) அட்டோத்திரலிங்கம், 108 லிங்கங்களை உடையது. (2) சகஸ்ர லிங்கம் - 1001 சிவலிங்கங்களைக் கொண்டது. இவ்விலிங்கங்கள் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ளன. (3) தாராலிங்கம் (பட்டைகளையுடையது) இது காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் உள்ளது. (4) முகலிங்கம் - ஒருமுகமுடைய இலிங்கம். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ளது. ஐந்து முகமுடைய சிவலிங்கத்தில் கிழக்கில் தத்புருஷ முகமும் தெற்கே அகோரமுகமும், மேற்கில் சத்தியோசாத முகமும் வடக்கில் வாமதேவ முகமும் வடகிழக்கில் ஈசான்யமுகமும் உள்ளன. இச்சிவலிங்கம் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ளது. இவை தவிர 2, 3, 4 முகங்கள் கொண்ட இலிங்கங்களும் உள்ளன.

பல நிகழ்ச்சிகளைத் தாங்கியவகை காட்டும் சிவலிங்கங்களும் உள்ளன. எம்பிராட்டியின் முலைத் தழும்பும் வளைத்தழும்பும் பெற்றது காஞ்சியிலுள்ள ஏகாம்பரநாதர் கோயில் சிவலிங்கம் ஆகும். புலியால் அறையப்பெற்று அதன் சுவடுபட்ட சிவலிங்கத்தைத் திருப்புலிவனம் சிவன் கோயிலில் காணலாம். காமதேனுவின் பால்கறையையும் நந்தினியின் கால்சருக்கியமையால் அதன் குளம்பு பதிந்த சுவட்டினையும் உடையது திருவான்மியூர் மருந்தீசர் கோயிலிலுள்ள சிவலிங்கம்.

**நீர்படாதலிங்கம்** : தண்ணீர்படாமல் பாதுகாக்கப்பெறும் சிவலிங்கங்களும் உள்ளன. இவை திருமுல்லைவாயிலிலும் திருவொற்றியூரிலும் உள்ளன. திருவொற்றியூர் இலிங்கத்திற்குச் சந்தனமும் சாம்பிராணித் தைலமுமே சாத்தப் பெறும். அபிடேகம் ஆவுடையார்க்கு மட்டுமேயாகும்.

**லயலிங்கம்** : இறைவனிடம் சகலமும் ஒடுங்கும். பஞ்சபூதங்கள் குரங்கு வடிவில் ஒரு சிவலிங்கத்துள் ஒடுங்குவதைப் பெரியபாளையம் முத்தீசுவரர் கோயிலில் காண்கிறோம்.

**வெளிப்படுதல்** : சத்தி சிவலிங்கத்தினின்று வெளிப்படுதல் காஞ்சி ஆதிபீட காளிகாம்பாள் கோயில் சிற்பத்திலும் கண்ணப்பர் தமது கண்ணைப் பெயர்த்தெடுத்தலைத் தடுத்து நிறுத்தும் சிவபெருமானது கை சிவலிங்கத்திலிருந்து வெளிப்படுதல் கண்ணப்பர் கதைச் சிற்பங்களிலும் காணப்படுகின்றன.

**தன்மயமானலிங்கம்**: திருமால் ஓதவுருகீசராய்க் காஞ்சிபுரம் திருமேற்றளி கோயிலில் சிவலிங்க வடிவம் எய்தினார்.

பட்டினத்தடிகள் திருவொற்றியூர்க் கடற்கரையில் தவமிருந்து வந்த ஒருநாள்

அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களிடம் தெரிவித்தது, 'தம்மீது ஒரு சால் மூடப்படவேண்டும்' என்பதாகும். அச்சிறுவர்களும் அவ்வாறே செய்தார்கள். ஆனால், சிறிது நேரம் கழிந்த பின்னர் அதனைத் திறந்து பார்த்தபோது அவர் அங்குக் காணப்படவில்லை. ஆனால் அங்கு ஒரு சிவலிங்கம் காணப்பட்டது. பட்டினத்தடிகளே இங்குச் சிவலிங்கமாக ஆயினர்.

பாதரசலிங்கம்: பாதரசத்தைக் கட்டி இலிங்கமாகச் செய்து வழிபடுவது ஓர் இலட்சம் சிவலிங்கங்களை ஒருசேரப் பூசிப்பதை ஒக்கும் என்பர். திருமுல்லைவாயிலில் பாதரசலிங்கம் வைக்கப்பட்டுள்ளது.

கவசலிங்கம்: உள்ளே உண்மையான இலிங்கத்திற்குப் பழுதுவாராமலிருக்கக் கல்லினால் சிறு இலிங்கவடிவம் செய்து அதன் உட்குழிவு உண்மை இலிங்கத்தை மூடிவிடுமாறு செய்யப்படுகிறது. காஞ்சிபுரம் மணல் இலிங்கம் கல்கவசமிடப்பட்டது. பெரும்பேறு தான்தோன்றீசுவரமுடையார் கோயிலில் உள்ள மணல் இலிங்கம் செப்புக் (குவளை) கவசத்தால் மூடப்பட்டுள்ளது.

## சிவமூர்த்தங்கள்

சிவமூர்த்தங்கள் அளவற்றன. கேசிமுனிவர் என்பவர் "அஷ்டாட்ட விக்ரக லீலை" என்ற ஒரு நூலை வடமொழியில் இயற்றியுள்ளார். இந்நூல் 'அஷ்டாட்ட மூர்த்தம்' எனவும் 'சிவபராக்கிரமம்' எனவும் வழங்கி வருகிறது. இது சிவபெருமான் 64 திருவுருவங்களைக் கொண்டு அடியார்க்கருள் செய்ததை உணர்த்துகிறது. இந்த விக்கிரக லீலையைத் தியான உருவங்களாகவும் அவற்றை அடியார்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுக் கிரியாரூபமாகவும் ஆகமங்கள் கூறுகின்றன. புராணங்கள் இவற்றை வரலாற்று வடிவில் கூறுகின்றன. இந்நூல் தியான சுபோகங்களுடனும் திருவுருவப் படங்களுடனும் வெளியிடப்பட்டுள்ளது. இது 64 திருவுருவங்களைப் பற்றிக் கூறுகிறது. வடமொழி கந்தபுராணத்தில் சனத் குமார சம்கிதையில் மூர்த்தி பலிபீடம் உரைக்கும்போது இம்மூர்த்தங்களின் பெயர்களும் சுருக்கமான வரலாறுகளுடன் கூறப்பட்டுள்ளன என்பர். எனினும் 25 திருவுருவங்களை (மூர்த்தங்களை) மகேசுவர மூர்த்தங்கள் எனச் சிறப்பாகக் கொள்கின்றனர்.

சிவமூர்த்தங்களுள் சில நிக்கிரக மூர்த்தங்களாகவும் சில அனுக்கிரக மூர்த்தங்களாகவும் உள்ளன. காலகாவர், காமதகனர் போன்ற மூர்த்தங்கள் நிக்கிரக மூர்த்தங்கள். நடராசர், சந்திரசேகரர், உமாமகேசுவரர், கலியாணசுந்தரர், தட்சிணாமூர்த்தி, சண்டேசுவர அனுக்கிரகர் போன்ற மூர்த்தங்கள் அனுக்கிரக மூர்த்தங்களாகும்.

### 1. உமாமகேசுவரர்

இவர் தன்னைவிட்டுப் பிரியாது நிற்கும் உமையுடன் நின்று உயிர்கள் உய்யும்

பொருட்டு படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்பவர். பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐவரும் தமது முன்னிலையில், ஐந்தொழில்களுள் முறையே தத்தமக்குரிய தொழில்களைச் செய்து கொண்டிருக்க, தாம் அவற்றைக் கடைக்கணித்துக்கொண்டு அசைவற்று இருக்கும் நிலையில், சிவபெருமான் உமாதேவியாரை இடப்பாகத்தில் உடன்கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலையே உமாமகேசுவரர் வடிவமாகும். இம்மூர்த்தி, உயிர்களுக்கு இம்மை மறுமை ஆகிய இவ்விரண்டிற்கும் உரிய இன்பங்களை அளிப்பவர்.

## 2. சுகாசனர்

இம்மூர்த்தி அமர்ந்த வடிவம் உடையவர். இராசராசன் போன்றவர். பத்ர பீடத்தின்மீது அமர்ந்தவர். இடக்கால் பீடத்தில் மடக்கிக் கிடத்தப்பெற்றும் வலக்கால் தொங்கவிடப்பெற்றும் சுகமாக இருப்பவர். நிமிர்ந்து இருப்பவர். மூன்று கண்களை உடையவர். அருள் ததும்பிய தெளிந்த முகம் உடையவர். புலித்தோல் ஆடை அணிந்தவர். வெண்பட்டாடை உடுத்தவர். வலக்கையில் மழுவும் இடக்கையில் புள்ளிமானும் ஏந்தியவர். மற்றொரு வலக்கரத்தில் அபய முத்திரையும் இடக்கரத்தில் கடக முத்திரையும் கொண்டவர். இரு காதுகளிலும் வட்டமான குண்டலங்கள் அணிந்தவர். அல்லது வலக்காதில் மகரக்குழையையும் இடக்காதில் ஓலைச்சுருளையும் அணிந்தவராக இருப்பவர். பூணூல் பூண்டவர்; பெரிய பாம்புகளைக் கைவளைகளாக அணிந்தவர்; இவர் நாட்டுக்கும் அரசனுக்கும் சுகத்தைக் கொடுப்பவர்.

- குமாரரால் இயற்றப்பட்ட 'சிற்பரத்தினம்',
திருதேவநாதாச்சாரியார் தமிழ்மொழிபெயர்ப்பு

## 3. இடபாரூடர்

திரிபுர அசுரர்களை அழிப்பதற்காகச் சூரியனையும் சந்திரனையும் சக்கரங்களாகவும் பூமியையே தேராகவும் மேருமலையையே வில்லாகவும் கொண்டு போருக்குச் செல்லத் தேரின் மீது ஏறும்போது விநாயகர் வழிபாடு செய்யாததால், அத்தேர் ஒடிந்தது. அந்நிலையில் திருமால் இடப (எருது) வடிவங்கொண்டு அவரைத் தாங்கி நின்றார். இந்நிலையே இடபாரூடர் திருவுருவமாகும். இவ்வரலாறு உபதேச காண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

## 4. இடபாந்திகர்

எல்லா உலகுகளும் உயிர்களும் ஒடுங்கி அழிகின்ற இறுதிக் காலத்தில், தாமும் அழிய நேரிடுமே என்று அஞ்சிய அறக்கடவுள் (தருமதேவதை) யாது செய்வது என்று ஆராய்ந்து இடப வடிவம் கொண்டு தஞ்சமடைய சிவபெருமான் அறவெள்விடையாகிய அதன்மீது அமர்ந்து அருள்புரிந்தார். இந்த மூர்த்திக்கு இடபாந்திகர் என்பது பெயராகும்.



இடபாரூடர்

"அறன் உருவாகிய ஆன் ஏறு ஊர்தல்
இறையவன் யான் என இயற்றுமாறே"

என்பது பட்டினத்தடிகள் அருள்வாக்கு.

## 5. புயங்கலலிதர்

புயங்கம் - பாம்பு; லலிதம் - அழகு

கருடனுடைய துன்புறுத்தலை ஆற்றாது தம்மை வந்தடைந்த பாம்புகளைத் தம் திருமேனியில் அழகுற அணிந்த மூர்த்தி இவராவார் (சிவபராக்கிரமம்).

## 6. இலிங்கோற்பவர்

ஒருநாள் பிரமதேவரும் திருமாலும் செருக்குற்றுத் தங்கள் இருவருள் பெரியவர் யாவர் என்பதற்கு விடை காணும்வகையில் இருவரும் பூசலிட, அவர்கள் முன் ஒரு பேரொளிப்பிழம்பு தோன்றிற்று. அதன் அடிமுடி கண்டு கொள்பவரே பெரியவர் என்னும் முடிவை இருவரும் ஏற்றுக்கொண்டனர். பிரமதேவன் அன்ன வடிவங்கொண்டு பிழம்பின் உச்சியைத் தேடி உயரப் பறந்தான். திருமால் அடியைக் காணும் அவாவுடன் அவனியை அகழ்ந்து கீழே சென்றார். ஆனால், அவர்களால் அதன் அடியையும் முடியையும் காண இயலவில்லை. அவர்கள் அப்போது செருக்கொழிந்தார்கள். சிவபெருமான் ஒளி வடிவு நீங்கிச் சிவலிங்க வடிவில் தோன்றி அவர்களுக்கு அருள்புரிந்தார். இலிங்கோற்பவர் திருவுருவம் சிவன் கோயில்களின் கருவறையில் மேற்குச் சுவரின் புறத்தே காணப்படும். இலிங்கோற்பவரின் இருமருங்கும் பிரமதேவனும் திருமாலும் கூப்பிய கரங்களுடன் நிற்பதை இத்திருவுருவத்தில் காணலாம்.

## 7. கங்காதரர்

ஒரு சமயம் உமாதேவியார் கயிலையில் சிவபெருமானின் இரு கண்களையும் தம் கைகளால் மூடினார். சூரியன், சந்திரன் ஆகிய இருவரும் சிவபெருமானின் திருக்கண்களாக இருப்பதால், உலகம் முழுதும் இருளில் ஆழ்ந்தது. அந்நிலையில் உயிர்கள் மிகவும் வருந்தின. இதனால் அம்பிகை அஞ்சி நிற்க, அம்மையின் திருமேனியில் வியர்வை அரும்ப, அஃது அம்பிகையின் கைவிரல்களினின்றும் கங்கை, வெள்ளமாக ஓடிற்று. இப்பெருவெள்ளத்திற்கு அஞ்சிய யாவரும் சிவபெருமானிடம் சரண் அடைந்தார்கள். அப்போது சிவபெருமான் அவ்வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி, அதனைத் தமது சடாமுடியில் ஏற்றுக்கொண்டார். இந்நிலையைக் குறிப்பது கங்காதரர் திருவுருவமாகும்.

## 8. கங்காவிசர்ச்சனர்

கோசல நாட்டின் அயோத்தி நகரில் சகரன் அசுவமேத வேள்வி இயற்றினான்.

தன் வீரத்திற்கும் வெற்றிக்கும் அறிகுறியாகப் பல நாடுகளுக்கும் சென்று வருமாறு அவன் விடுத்த குதிரையை, இந்திரன் தனது செருக்குக் காரணமாகக் கவர்ந்து சென்று, அதனைப் பாதாள உலகத்தில் தவம்புரிந்து கொண்டிருந்த கபில முனிவருக்குப் பின்புறம் கட்டிவைத்தான். அக்குதிரையைத் தேடிச் சகரன் மக்கள் அறுபதினாயிரம் பேர்களும் பாதாளத்திற்குச் சென்று அக்குதிரையைக் களவாடியவர் கபில முனிவரே என்று கருதி அவருடன் போரிட முற்பட்டனர். அப்போது, அம்முனிவரது சீற்றப்பார்வையால், சகரனின் மக்கள் அனைவரும் எரிந்து சாம்பலாயினார். பின்னர் அவர்களின் பரம்பரையில் தோன்றிய பகீரதன் தம் முன்னோர்களாகிய அவர்கள் வீடுபேறு அடையச் சிவபெருமானை நோக்கித் தவம் இயற்றினான். அவன் விரும்பியவாறு, கங்கை நீரை அவன் முன்னோர்களின் சாம்பல் மீது படியச் செய்வதற்காகக் கங்கையைத் தமது சடைமுடியில் ஏற்றுக்கொண்டு அதன் பெருக்கால் உலகம் அழிந்துவிடாமல் பாதுகாக்கத் தன் சடைத்திரளிலிருந்து கங்கையின் ஒரு பகுதியை மட்டும் விடுத்தார். இவ்வாறு அவர் கங்கையை விடுத்த நிலையிலுள்ள திருவுருவமே கங்காவிசர்ச்சனர் திருவுருவமாகும்.

## 9. திரிபுராந்தகர்

முன்னொரு காலத்தில் தாரகாசுரன் மக்களாகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்துன்மாலி என்னும் அசுரர்கள் மூவரும் பெருந்தவம்புரிந்து, பறந்து திரிந்துலவும் தன்மை உடைய பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் அமைந்தவையாகிய மூன்று பெரும் கோட்டைகளைப் பெற்றார்கள். அவற்றைக் கொண்டு அவர்கள் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருங் கொடுமைகள் செய்துவந்தார்கள். இவர்களின் செருக்கை அடக்கச் சிவபெருமான் உலகினைத் தேராகவும் சூரியன் சந்திரன் ஆகியோர்களைச் சக்கரங்களாகவும் வானவர்களைப் படைகளாகவும் கொண்டு அத்தேரின் மீதேறி அசுரர்களை எதிர்த்துப் போர்புரியப் புறப்பட்டார். அப்போது தேவர்கள் "நமது துணைகொண்டு சிவபெருமான் போர்புரியச் செல்கிறார்" என்று சொன்னார்கள். "நமது உதவியின்றி இவரால் இவ்வசுரர்களை வெல்ல இயலுமோ?" என்றெண்ணிச் செருக்குற்றார்கள். இதையறிந்த சிவபெருமான் இவர்களின் அறியாமையை நினைந்து, சிறிது புன்முறுவல் தோன்றச் சிரித்தார். அச்சிரிப்பிலே அம்மூன்று கோட்டைகளாகிய திரிபுரங்கள் அழிந்தன. இவ்வாறு சிவபெருமான் திரிபுரங்களை அழித்தநிலையே திரிபுராந்தக மூர்த்தமாகும்.

## 10. கலியாணசுந்தரர்

ஒரு சமயம் முனிவர்கள் சிவாகமங்களின் உட்பொருளை விளக்குமாறு சிவபெருமானிடம் வேண்டிக்கொண்டார்கள். இதற்கேற்பச் சிவபெருமான் அவர்களுக்குச் சரியை, கிரியை, யோகம் ஆகியவை பற்றி விரிவாக விளக்கினார். அப்போது சிவபெருமான் மௌனநிலையில் அமர்ந்திருந்தார். இந்நிலையில் பல ஊழிக்காலங்கள் கடந்தன. உயிர்கள் போக நுகர்ச்சியின்றிச் செயலற்றிருந்தன. அதனையுணர்ந்த பிரமதேவன், திருமால் முதலியோர் சிவபெருமானை, நுகர்ச்சியில் ஈடுபட்டு இன்புற வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். இவ்வேண்டுகோளை



**கல்யாணசுந்தரர்**

ஏற்றுக் கொண்ட சிவபெருமான் எல்லா உயிர்களும் இன்புற்று இல்லற வாழ்க்கை மேற்கொள்ளும் பொருட்டு மலையரசன் பொற்பாவையாகப் பிறந்துவளர்ந்த பார்வதி தேவியாரை மணம்புரிந்துகொண்ட நிலையே கலியாணசுந்தர மூர்த்தமாகும்.

## 11. அர்த்தநாரீசுவரர்


ஒரு சமயம் பிருங்கி முனிவர் கயிலைக்குச் சென்றபோது சிவபெருமானும் உமையம்மையாரும் வீற்றிருந்த நிலையில் அவ்விருவரையும் ஒருசேர வணங்காமல் ஒரு வண்டின் வடிவெய்திச் சிவபெருமானை மட்டும் வலம் வந்து வணங்கினார். அது கண்ட தேவியார் தவம் கிடந்து சிவபெருமானின் இடப்பாகத்தில் பாதி அளவு இடம் பெற்றார். இங்ஙனம் ஒரு பாதி ஆணும் மறுபாதி பெண்ணுமாகப் பிரிவின்றி வடிவுகொண்டிருக்கும் இத்திருவுருவமே அர்த்தநாரீசுவரர் மூர்த்தமாகும். அம்மையப்பர் என்னும் நிலையில் உள்ளவர் இவர். இவரே எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாக உள்ளார்.

## 12. சோமாசுகந்தர்

சோமாசுகந்தர் மூர்த்தம் தமிழ்நாட்டின் தனிப்பெருஞ்சிறப்புக்குரியது. இந்திய நாட்டின் எந்தப் பகுதியிலும் காணப்படாமல் தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது. மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், ஏகாம்பரநாதர் கோயில் ஆகிய கோயில்களில் சிவலிங்கத்திற்குப் பின்புறமுள்ள கருவறைச் சுவரில் இத்திருவுருவம் காணப்படுகிறது.

இம்மூர்த்தி தமது இடப்பக்கத்தில் உமையம்மையையும் தமக்கும் உமையம்மைக்கும் இடையே கந்தபிரானையும் கொண்டவர். சோமாசுகந்தர் என்ற வடமொழிச் சொல் ச+உமா+சுகந்தர் என்ற மூன்று வேர்ச்சொற்களாகப் பிரிக்கப்பட்டு உமையுடனும் கந்தருடனும் கூடியிருப்பவர் என்னும் பொருளைத் தருகிறது.

இத்திருவுருவத்தில் சுகாசன மூர்த்தி போன்றே சிவன் அமர்ந்திருப்பார். அவரது இடப்புறத்தில் ஒரே ஆசனத்தில் உமையம்மை வீற்றிருப்பர். தேவியின் வலப்பாதம், பீடத்தின் மேல் மடங்கியவாறு கிடத்தப் பெற்றிருக்கும். இடப்பாதம் கீழே தொங்கவிடப் பெற்றிருக்கும். தேவி தமது இடக்கையில் வரத முத்திரையையும் வலக்கையில் குவளை மலரையும் தரித்திருப்பர்; தேவி எல்லா ஆபரணங்களையும் அணிந்திருப்பர்; சிவப்பு ஆடை தரித்திருப்பர்; கிரீட வடிவமுள்ள மகுடமும் முத்துமாலைகளும் அணிந்திருப்பர்; இருவருக்கும் இடையே கந்தப்பெருமான் எழுந்தருளியிருப்பர். இவர் தேவியின் கழுத்து அளவு இருப்பது உத்தமம் என்றும் அதற்குக் குறைந்திருப்பது மத்திமம் என்றும் தேவியின் தன அளவு இருப்பது அதமம் என்றும் சிற்பநூல்கள் கூறுகின்றன. கந்தப்பிரான் வீற்றிருந்தவாறு


PŪRVAKEŚA
AKṢISŪTRA
HANU
HIKKĀSŪTRA
HṚDAYASŪTRA
NĀBHISŪTRA
LIṄGAMŪLA
ŪRUDIRGHA
JĀNU
JAṄGHĀDIRGH
PĀDADIRGHA
63

சோமாசுகந்தர்

அல்லது நின்றவாறு இருப்பர்; கூத்தாடுபவராகவும் அமைக்கப் பெறுவதுண்டு. ஆடை இன்றியே இருப்பர். இடக்கையில் கனியும் வலக்கையில் சசீ முத்திரையும் தரித்திருப்பர். இறைவரது திருமுகம் சற்றுத் தேவியின் பக்கம் சாய்ந்து இருக்கும்.

(சிற்பரத்தினம், சிற்பசாத்திரம், தமிழ்மொழிபெயர்ப்பு).

இந்த மூர்த்தி விட்டுணுவால் தொழப்பெற்ற மூர்த்தி. இம்மூர்த்தியைத் திருமால் தமது மார்பிலே வைத்துக்கொண்டும் பாற்கடலில் சேசயனத்தின் மேல் இருந்துகொண்டும் பல்லாயிரம் ஆண்டுகள் தமது மனத்தே வழிபட்டார் என்பது வரலாறு. இந்திரன் அவுணர்களால் வந்த துன்பத்தை நீக்கும்பொருட்டு, இம்மூர்த்தியை திருமாலிடமிருந்து பெற்று, தமது இந்திர உலகுக்கு எடுத்துச் சென்று வழிபட்டுவந்தான். மீண்டும் அசுரரால் இடர்ப்பட்ட இந்திரன் முசுகுந்த சக்கரவர்த்தியின் உதவியால் அசுரரை வென்றான். இம்மூர்த்தியைக் கண்ணுற்ற முசுகுந்தன் அவரைக் கண்டு பரவசப்பட்டு ஆனந்தமுற்றுத் துதித்து வணங்கினான். அப்போது எம்பெருமான் கருணை கூர்ந்து, "விட்டுணு அளவில்லாத காலம் எம்மை அன்போடு பூசித்து வந்து, பின்னர் இந்திரனிடத்தில் கொடுத்தார். நீ எம்மை பூவுலகிற்கு எடுத்துச் சென்று பூசித்து வருவாயாக" என உணர்த்தினார். இந்திரன் முசுகுந்தனுக்கு விருந்து செய்வித்து, அணி, ஆடை முதலிய செல்வங்களெல்லாம் கொடுத்து"இன்னும் உனக்கு வேண்டியது இருந்தால் சொல்லுக" என்றான். முசுகுந்தன் "என் உலகில் எல்லாச் செல்வங்களும் உள; எனக்கு வேண்டுவது நீ பூசித்துவரும் சோமாசுகந்த மூர்த்தியே" என்றான். அதற்கு இந்திரன் "இம்மூர்த்தி எனதன்று; விட்டுணுவினது; அவர் சம்மதத்தைப் பெற்றால் இம்மூர்த்தியை உனக்குத் தருவேன் " என்றான்.

முசுகுந்தன் விட்டுணுவிடம் சென்று அவர் அனுமதியைப் பெற்றான். இந்திரனுக்கு மூர்த்தியை விட்டுப் பிரிய மனமில்லை. ஆதலின் ஒரு சூழ்ச்சியை மனத்திற்கொண்டு, தேவ தச்சனை வரவழைத்துத் தன்னிடமுள்ள சோமாசுகந்த மூர்த்தி போன்று ஆறு மூர்த்திகளைச் செய்வித்து, முசுகுந்தன் கையில் ஒவ்வொன்றாகக் கொடுத்தான். இறைவன் திருவருளால் இம்மூர்த்திகள் இந்திரன் பூசித்துவந்த மூர்த்தி அல்லர் என்பதை முசுகுந்தன் அறிந்து, இம்மூர்த்திகள் ஒவ்வொன்றையும் 'இவர் அல்லர்' என்று கூறினான். பின்னர் விட்டுணுவும் தானும் பூசித்த மூர்த்தியைக் கொடுக்க, 'அவர் இவர்தாம்' என்று கூறி மூர்த்தியைப் பெற்றுக்கொண்டான். இந்திரன் மற்ற ஆறுமூர்த்திகளையும் அவனிடமே தந்து "இவர்களைப் பூவுலகில் நிறுவிப் பூசிப்பாயாக" எனக் கூறி முசுகுந்தனுக்கு விடைகொடுத்து அனுப்பினான்.

இந்திரன் திருவாரூரில் வன்மீகப் பெருமான் கோயிலில் விட்டுணு மூர்த்தி பூசித்த சோமாசுகந்த மூர்த்தியை ஆகம விதிப்படித் தாபித்து, ஏனைய ஆறு மூர்த்திகளையும் திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருவாய்மூர், திருமறைக்காடு, திருக்கோளிலி ஆகிய தலங்களில் தாபித்து நித்திய பூசைகளுக்கு வேண்டிய நிபந்தங்களையும் நிறுவினான். சோமாசுகந்த மூர்த்தியே இத்தலங்களில் தியாகராசர் என்ற திருப்பெயரில் வழங்கிவருகிறார். இந்தத்

தலங்களும் சப்தவிடங்கத் தலங்கள் எனப் பெயர் பெறுவன. இத்தலங்களில் வீற்றிருந்தருளும் தியாகராசரும் பின்வருமாறு பெயர் பெற்றுள்ளார்.

திருவாரூர்_வீதிவிடங்கர்; திருநாகைக்காரோணம்_சுந்தரவிடங்கர்; திருநள்ளாறு_நகரவிடங்கர்; திருக்காறாயில்_ஆதி விடங்கர்: திருவாய்மூர்_நீலவிடங்கர்; திருமறைக்காடு_புவனிவிடங்கர்; திருக்கோளிலி_அவனி விடங்கர். இத்தலங்கள் ஒவ்வொன்றிலும் தியாகராசர் ஒவ்வொரு வகையான நடனத்தைச் செய்வர்;

திருவாரூர் _ அசபா நடனம்; திருநாகைக்காரோணம் _ பாராவார தரங்க நடனம்; திருநள்ளாறு _ உன்மத்த நடனம்; திருக்காறாயில் _ குக்குட நடனம்; திருவாய்மூர் _ கமல நடனம்; திருமறைக்காடு அம்ச நடனம்; திருக்கோளிலி _ பிரமர நடனம்.

இந்தத் தலங்களன்றித் திருவான்மியூர், திருவொற்றியூர் போன்ற தலங்களிலும் தியாகராசர் சந்நிதிகள் உள்ளன. சோமாசுகந்த மூர்த்தியைத் திருநாவுக்கரசு சுவாமிகள் "ஐயன்காண், குமரன்காண், ஆதியான்காண், திருவாரூரான்காண் என் சிந்தையானே" எனத் திருவாரூர்த் திருத்தாண்டகத்தில் போற்றுகிறார் (6_24_8).

இங்கு ஐயன்_சிவபெருமான்; குமரன்_கந்தன்; ஆதியான்_ஆதிசத்தியை உடையவன்; உமையம்மையை இடப்பக்கத்தில் உடையவர். இது திருவாரூரில் உள்ள வீதிவிடங்கத் தியாகராசரை நினைந்துபாடியது. மேலும், திருவாரூர் போற்றித் திருத்தாண்டகத்தில்

"செம்பொனே மரகதமே மணியேபோற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி"

எனவும் அப்பர் போற்றித் துதிக்கிறார்.(6. 32. 8.)

இங்குச் 'செம்பொன்' என்றருளியது சிவபெருமானை; இவர் 'செம்மேனியம்மான்'; 'பொன்னார் மேனியன்' எனப் போற்றப்பெறுகிறார்.

மரகதம்_ பச்சைநிறம் ; இங்குப் பச்சைநிறமுடைய உமாதேவியைக் குறித்தது. உமாதேவிக்கு மரகதவல்லி என்ற ஒரு பெயரும் உண்டு.

மணி _செம்மணி; செவ்வேள்; கந்தப்பெருமான்.

"செம்பொனே மரகதமே மணியே போற்றி" என்பது "ஓம் உமாமகேசுவராய நம" என்ற வடமொழி மந்திரத்திற்கு நேரொத்த தமிழ் மந்திரம். இம்மந்திரம் சைவத் திருமணங்களில் மணமகன், மணமகளுக்கு மங்கல நாணைச் (மாங்கல்யம்) சூட்டும்போதும் மங்கல நாண் முடிச்சில் திருநீறு சாத்தும் போதும் ஓதப்பெறுவது. சோமாசுகந்தரே நன்மகப்பேற்றினைத் தரும் அருள் மூர்த்தியாதலின் இவரை நினைந்து திருமணக் காலங்களில் துதிப்பது ஆகம முறையாக உள்ளது.

இத்திருவுருவங்களை வழிபடுவோர், கணவனும் மனைவியுமாய் இல்லறத்தில் இணையிலா இன்பம் துய்த்து நல்ல மகப்பேறும் குலவளர்ச்சியும் பெற்று இம்மையில் சிறந்து வாழ்வதுடன் மறுமையில் வீடுபேறும் அடைவார்கள் என்பதைக் கச்சியப்பமுனிவர்,

"தொல்லை யுலகம் போற்றெடுக்கும்
சோமாற் கந்தர் தமைப் பணிவோர்
நல்ல மகவும் சந்தானத்
தொடர்பும் இனிது நனிபெறுவார்"

என்னும் பாடலின் மூலம் தெரிவிக்கிறார்.


## 13. சந்திரசேகரர்

பிரமதேவன் புதல்வன் தக்கன். இவன் தன் புதல்விகளாகிய இருபத்தேழு நட்சத்திரங்களையும் சந்திரனுக்குத் திருமணம் செய்துகொடுத்தான். சந்திரனோ அப்புதல்விகள் அனைவரையும் அன்போடு நடத்திவராமல். அப்புதல்விகளுள் உரோகிணி, கார்த்திகை ஆகிய இருவர் மீது மட்டும் காதல் மிகுதியாகக் கொண்டிருந்தான். இதன் காரணமாகச் சீற்றங்கொண்ட தக்கன், சந்திரனுக்கு ஒரு சாபம் இட்டான். இதன் விளைவாகச் சந்திரன் நாள்தோறும் தேயத் தொடங்கினான். இந்நிலையில் சந்திரன் சிவபெருமானிடம் சரண் புகுந்தான். சந்திரன் மீது இரக்கம் கொண்டார் சிவபெருமான். தம் காலில் வீழ்ந்த சந்திரனைத் தம் தலையில் சூடிக்கொண்டார். மக்கள் தவறு செய்தாலும் அத்தவறுகளை உணர்ந்து வருந்தி மனம் திருந்தித் தம்மை அடைந்தால் இறைவன் அவர்களைக் காப்பாற்றுவார் என்பதைச் சந்திரசேகரர் திருவுருவம் காட்டுகிறது.

சிற்பநூலின் படி சந்திரசேகரர் திருவுருவம் மூன்றுவகையில் உள்ளது. அவையாவன: _ கேவலமூர்த்தி, கௌரி மூர்த்தி, ஆலிங்கன மூர்த்தி என்பவை

1. **கேவலமூர்த்தி**: இவர் தேவி இல்லாமல் தனித்து நிற்கும் மூர்த்தி. இரு கால்களும் சமமாக உள்ள நிலையில் நின்றவாறு இருப்பர்; வலக்கையில் அபய தான முத்திரையும் இடக்கையில் வரத தான முத்திரையும் கொண்டவர். மற்றொரு வலக்கையில் மழுவும் இடக்கையில் மானும் தரித்தவர். சடைமுடி அணிந்தவர். வலப்புறத்தில் பிறைச்சந்திரனை அணிந்தவர். மூன்று கண்களையுடையவர். பவளம்போன்ற திருமேனியுடையவர். கணுக்கால் வரை தொங்குமாறு ஆடை அணிந்தவர். இவர் முத்தியைக் கொடுப்பவர்.

2. **கௌரீசகித மூர்த்தி**: மேல் கூறிய திருவுருவம் கொண்ட சந்திரசேகரமூர்த்தி வேறு ஒரு தனிப்பீடத்தில் நின்றவாறு கௌரிதேவி இடப்புறம் இருக்கப்பெற்றால் அவர் கௌரீ சகித சந்திரசேகர மூர்த்தி என்று சொல்லப்படுகிறது. தேவி தமது வலக்கையில் குவளை (நீலோறபல மலரை) மலரைத் தரித்தவர். இடக்கையைத் தொங்கவிட்டுக் கொண்டு இருப்பவர். இவர் பிறவி அச்சத்தை நீக்குபவர்.



சந்திரசேகரர்

3. **ஆலிங்கனமூர்த்தி**: இவ்வடிவில் சந்திரசேகரர் இடப்பக்கத்தில் இருக்கும் தேவியை நாபிக்கு மேலே தமது இடக்கையினால் தழுவி இருப்பர்; தேவி தமது வலக்கையினால் சந்திரசேகரரது வலப்புறத்து அரைஞாணுக்கு மேலே அணைத்தவாறு இருப்பர். இவ்வாறு ஒருவரைஒருவர் ஆலிங்கனம் செய்துகொண்டிருக்கும் மூர்த்தி ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தி. இவர் இம்மை மறுமை இன்பங்களைத் தருபவர்.

## 14. பிட்சாடனர்

வேள்விகளே பயன் அளிக்கும் ஆதலால், இறைவன் அருள் தேவையில்லை என்னும் நிலையில் தாருகவனத்து முனிவர்கள் இருந்தார்கள். இவர்களைத் திருத்தச் சிவபெருமான், பிட்சாடனராகத் தாருகவனத்திற்குச் சென்றார். திருமால், மோகினி வடிவத்தில் பிட்சாடனராகிய சிவபெருமானைப் பின்தொடர்ந்தார். பிட்சாடனர் முன்னிலையில் முனிவர் பத்தினிகள் தங்கள் நிலை கலங்கினார்கள். மோகினி வடிவங்கண்டு முனிவர்களும் தம் நிலையிலிருந்து தாழ்ந்தார்கள். பின்னர்த் தங்கள் தவற்றை உணர்ந்தார்கள்; சிவ வழிபாட்டை ஏற்றுக் கொண்டார்கள். முனிவர்களின் அறியாமையைப் பிச்சை ஏற்றதுபோல் நம்முடைய அறியாமையைப் பிச்சையாக ஏற்று நம்மைச் சீர்திருத்துகிறார் சிவபெருமான். இதைப் பிட்சாடனர் வடிவம் உணர்த்துகிறது.

## 15. நடராசர்

நடராசர் திருவுருவம் சிவன் கோயில்கள் எல்லாவற்றிலும் தெற்கு நோக்கியவாறு அருள்புரிந்து கொண்டிருப்பதைக் காணலாம். நடராசர் வடிவின் ஒவ்வொரு பகுதியும் பற்பல நுட்பங்களை உள்ளடக்கிக் கொண்டு ஒப்புயர்வற்ற நிலையில் விளங்கிவருகிறது. உலகம் ஆகிய அண்டம் அமைந்திருப்பதுபோன்று நம் உடலாகிய பிண்டமும் அமைந்துள்ளது. அண்ட வெளியில் திருநடம் புரிவது போன்று நம் உடம்பாகிய பிண்டத்தில் இறைவன் திருநடம் புரிந்துவருகிறார். அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் கோட்பாட்டிற்கேற்ப அணுக்களும் அண்ட கோடிகளும் தம்தம் நிலையிலும் நெறியிலும் ஆடி அசைந்து முறையே இயங்கிக்கொண்டு இருப்பதற்குக் காரணம் நடராசரது ஆடலும் அருளியக்கமுமே ஆகும்.

சிவபெருமானின் திருவுருவங்களுள் மிகப்பெருஞ்சிறப்புடையதாக இந்நாளில் எல்லோராலும் மிகப்பெரிதும் விரும்பிப் போற்றப்படுவது நடராசரின் திருவடிவமாகும். இஃது அறிவியல் முறையிலும் பெருமையை விளக்குகிறது. ஆதலினால், காலமும் இடமும் கடந்து, பல்வேறு நாடு, மொழி, சமயம் சார்ந்த மக்கள் அனைவராலும் வியந்து போற்றப்படத்தக்கதாய் இத்திருவுருவம் விளங்குகிறது. இத்திருவுருவம் பற்றிப் பல கோணங்களில் பேராராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடராசர் திருவுருவம் இறைவர் படைத்தல்(சிருஷ்டி), காத்தல் (திதி), அழித்தல்

(சங்காரம்,) மறைத்தல் (திரோபவம்,) அருளல் (அனுக்கிரகம்) ஆகிய ஐந்தொழில்களையும் உயிர்கள் உய்வதற்காகச் செய்பவர் என்பதனை உணர்த்துகிறது. உடுக்கை ஏந்திய திருக்கரம் படைத்தலையும் அமைந்த (அபய) திருக்கரம் காத்தலையும் அனல் ஏந்திய திருக்கை அழித்தலையும் (ஒடுக்கத்தையும்) ஊன்றிய திருவடி மறைத்தலையும் தூக்கிய திருவடி அருளலையும் உணர்த்துவனவாக உள்ளன. இவ்வுறுப்புகள் ஐந்தும் ஐந்தொழில்களைச் செய்யும் ஐந்து சத்திகள். இவ்வாறு கருதப்பெறும் நடராச வடிவம் ஐந்தொழில் நடனத்தைக் குறிப்பதாக உள்ளது.

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்றகதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

என்ற உண்மை விளக்கப் பாடல்கள் மூலம் அறியப்படும் (பா.36).

மேலும் உடுக்கை ஏந்திய திருக்கரம் மாயாமல நீக்கத்தையும் அனல் ஏந்திய திருக்கரம் வினைகளைச் சுட்டெரித்துக் கன்ம மல நீக்கத்தையும் ஆணவமலமே உருவான முயலகன் மீது ஊன்றிய திருவடி, ஆணவமல நீக்கத்தையும் உணர்த்தும் காரணத்தால், இவ்வுருவம் உயிரிகளின் பாசங்களைப் போக்குபவர் இறைவர் என்பதை உணர்த்துவதாக உள்ளது. இதனை,

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியரு ளானெடுத்து நேயத்தா
லானந்த வாரிதியி லான்மாவைத் தானமுத்த
றானெந்தை யார்பரதந் தான்."

என்ற உண்மை விளக்கப் பாடலாலும் உணர்கிறோம் (பா. 37).

பாச நீக்கத்தை உயிர்களுக்கு இறைவர் அருளிய பின்னர்ப் பாசநீக்கம் பெற்ற உயிர்களுக்குப் பேரானந்த நிலையாகிய முத்தியையும் அருள்கின்றார் என்பதனை இப்பாடலின் பிற்பகுதி உணர்த்துகிறது. இந்த நிலையில் வலப்புறத்தே வீசிய இடக்கரம் இறைவரது திருவருட்சத்தியாக அபயகரத்தில் உயிர் அடங்கிய ஆனந்தத்தில் அழுந்தி நிற்கும். எனவே, நடராசர் உயிர்களுக்குப் பாசநீக்கம் அருளி பேரின்பப் பெருவாழ்வைத் தரும் மூர்த்தியாவார் என்பது தெளிவாகிறது.

## 16. காமதகனர்

காசிப முனிவருக்கும் மாயை என்பவருக்கும் மக்களாகப் பிறந்த சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் ஆகிய மூவரும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருந்தொல்லைகளை விளைவித்து வந்தார்கள். அதனால் துன்புற்ற தேவர்கள்

சிவபெருமானிடம் முறையிட, அவர் தம்மைப் போன்ற மகன் ஒருவனைத் தருவதாகக் கூறினார். அப்போது சிவபெருமான் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய முனிவர்களின் வேண்டுகோளின்படி அவர்களுக்குத் தத்துவ உபதேசம் செய்ய முற்பட்டுச் சின்முத்திரை காட்டி யோக நிலையில் அமர்ந்தனர். இதன் காரணமாகப் பலயுகங்கள் கழிந்தன. இந்நிலையில் சிவபெருமான் யோக நிலையிலிருந்து மாறித் தேவியோடு இணைந்து மகப்பேறு எய்துமாறு செய்யவும் காமதேவனை வற்புறுத்தினர். திருக்கயிலைக்கு அவனைத் தேவர்களும் முனிவர்களும் அனுப்பினார்கள். இந்த ஏற்பாட்டிற்கேற்ப மன்மதன் தன்னிடம் இருந்த மலரம்புகளை எய்தான். இறைவர் தம் நெற்றிக் கண்ணைத் திறக்க மன்மதன் எரிந்து சாம்பலாயினான். இது காமதகனர் மூர்த்த வரலாறாகும். மக்கள் காம வேட்கையை அடக்கி உய்தல் வேண்டும் எனும் உயரிய உண்மையைக் காமதகனர் திருவுருவம் காட்டுகிறது.

## 17. காலகாலர்

கவுசிக முனிவரின் புதல்வராகிய மிருகண்டு முனிவர், முற்கல முனிவரின் மகளாகிய மருத்துவதி எனும் அம்மையை மணந்து, இல்வாழ்க்கை நடத்திவந்தனர். தமக்குப் புதல்வர்ப் பேறு வாய்க்காமையால் மிருகண்டு முனிவர் காசித் தலத்திற்குச் சென்று, சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். சிவபெருமான் திருவருளால் மார்க்கண்டேயர் என்னும் புதல்வர் தோன்றினார். அவரது வயது பதினாறாண்டுக் காலமே என அறிந்து, தாய் தந்தையர் வருந்தினர். தந்தை தாயாரின் கவலையை அறிந்த மார்க்கண்டேயர் "சிவபெருமானை வழிபட்டு இறவாநிலை நான் பெறுவேன்: நீவிர் கவலற்க" எனக் கூறிச் சிவபூசை செய்து வந்தனர். அவரது உயிரைக் கவர்ந்து செல்ல இயமன் அங்குப் போந்தான். அவனது வருகையை அறிந்த மார்க்கண்டேயர், தாம் வழிபட்டு வந்த சிவலிங்கத்தைத் தழுவி அணைத்திருந்து அதனிடம் அடைக்கலம் புகுந்தனர். காலன் சினங்கொண்டு அவர் மீதும் அவர் தழுவி அணைத்துக்கொண்டிருந்த சிவலிங்கத்தின் மீதும் தனது பாசக்கயிற்றை வீசிப் பற்றி இழுக்க முனைந்தான் சிவபெருமான் அப்போது சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, தமது இடக்காலால் காலனைச் சீறி உதைத்தார். அவன் வீழ்ந்தான். இவ்வாறு மார்க்கண்டேயர் என்றும் பதினாறு வயதுடன் நீடு வாழ்ந்து விளங்கும்படி சிவபெருமான் அருள் புரிந்தார். இவ்வரலாற்றைத் திருநாவுக்கரசர் தமது சாய்க்காட்டுத் திருநேரிசைப் பாடல் ஒன்றில் நமக்கு உணர்த்துகிறார்.

"தோடுலா மலர்கள் தூவித் தொழுதெழு மார்க்கண்டேயன்
வீடுநாள் அணுகிற்றென்று மெய்கொள்வான் வந்த காலன்
பாடு தான் செல்லும் அஞ்சிப் பாதமே சரணம் என்னச்
சாடினார் காலன் மாளச்சாய்க்காடு மேவினாரே" -4-65-1.

இதனால் சிவபெருமானுக்குக் காலசம்மாரர், காலகாலர் என்னும் பெயர்கள் வழங்குவனவாயின. இவ்வரலாறு சோழநாட்டில் திருக்கடவூர்த் தலத்தில் நிகழ்ந்தது.

## 18. சண்டேசுவர அனுக்கிரகர்

சோழநாட்டில் சேய்ஞலூரில் எச்சதத்தன் என்பவருக்கும் பனித்திரை அம்மையாருக்கும் மகனாகத் தோன்றியவர் விசாரசருமர். இவர் சிறுவராக இருந்தபோது பள்ளிக்குச் சென்ற வழியில் இடையன் ஒருவன் தன் கோலால் பசுக்களை அடிப்பதைக் கண்டார். உடனே அவனை விலக்கிவிட்டுப் பசுக்களை மேய்த்து வந்தார். இவரது பேரன்பு காரணமாகப் பசுக்கள் மிகுதியான பால் சுரந்தன. விசாரசருமர் தாம் பசுக்களை மேய்த்து வந்த மண்ணியாற்றுப் பரப்பில் மணலினால் சிவலிங்கம் அமைத்து அதற்கு அப்பசுக்கள் சொரிந்த பாலை அபிடேகம் செய்துவந்தார். இவ்வாறு விசாரசருமர் சிவலிங்க வழிபாட்டுக்குப் பயன்படுத்தி வந்ததை நன்கு உணர்ந்து கொள்ளாத அவர் தந்தை பசுக்களின் பாலை விசாரசருமர் வீணாக்கினார் எனக்கருதிச் சீற்றங்கொண்டு விசாரசருமர் பூசைபுரிந்த மணல் இலிங்கத்தையும் அருகிலிருந்த பால் குடத்தையும் தம் காலால் தகர்த்தார். சிவபூசையில் மனத்தை ஈடுபடுத்தித் திளைத்திருந்த விசாரசருமர் அருகில் கிடந்த கோலைக் கொண்டு எச்சதத்தன் காலை நோக்கி வீசினார். அக்கோல் மழுவாக மாறி எச்சதத்தன் இரு கால்களையும் துண்டித்தது. இந்நிலையில் சிவபெருமான் வெளிப்பட்டு. இனி நாமே நினக்குத் தந்தையாவோம்; நாம் உண்டனவும் உடுப்பனவும் சூடுவனவும் ஆகிய நின்மாலியங்கள் நினக்கே உரியவை; நீ சண்டேசுவரர் என்னும் பதம் பெறுக" என்று அருளினார். இந்நிலையே சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி திருவுருவமாகும்.

இவ்வரலாற்றினையும் அப்பர் அடிகள் சாய்க்காட்டுத் திருநேரிசைப் பதிகத்தில்

> "ஆமலிபாலும் நெய்யும்ஆட்டி அர்ச்சனைகள் செய்து
> பூமலி கொன்றை சூட்டப்பொறாததன் தாதைதாளைக்
> கூர்மழுவொன்றால் ஓச்சக் குளிர்சடைக் கொன்றைமாலைத்
> தாமநற் சண்டிக்கீந்தார் சாய்க்காடு மேவினாரே" (4-65-6.)

என அறிவுறுத்துகிறார். சிவன் கோயிலின் வடபுறச்சுவரை அடுத்து இவர் சிறிய தொரு கோயிலில் வீற்றிருப்பார். சிவன் கோயில்களில் நிகழும் பஞ்சமூர்த்திகளின் புறப்பாடு என்னும் நிகழ்ச்சியில் சண்டேசுவரர் இடம்பெறுகிறார். முற்காலத்தில் கோயில் நிகழ்ச்சிகள், செயல்கள் அனைத்துமே சண்டேசுவரர் பெயராலேயே நிகழ்ந்து வந்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

## 19. தட்சிணாமூர்த்தி

சச்சிதானந்தனான சிவன் ஞான வடிவினனாய் நின்று அறிவு பரப்பும் குருவாக விளங்குவதை எடுத்துக்காட்டுவது தட்சிணாமூர்த்தி திருவுருவம். அது கருவறையின் தெற்குப் பக்கத்தே வெளிச்சுவரில் அமைந்த மாடத்தில் தெற்கு முகமாக விளங்குமாறு நிறுவப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவர் ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருக்கும் நிலையில் உள்ளார். இவரது வலப்பாதம் கீழே தொங்கவிடப்பட்டும் இடப்பாதம் மடங்கியும் இருக்கும். தலைமுடி விரிந்தோ, சடாமகுடமாகவோ, சடாபந்தமாகவோ, சடாமண்டலமாகவோ இருக்கும். சிரசின் இடப் பக்கத்தில் ஊமத்தம் பூவும் நாகமும் இருக்கும் வலப்பக்கத்தில் பிறைச்சந்திரன்; சிரித்த முகம்; வெண்ணிற ஆடை; பூணூல்; மூன்று கண்கள்; இடக்காதில் சங்க குண்டலம்; வலக்காதில் மகர குண்டலம்; உருத்திராக்கங்களால் ஆன கண்டமாலையும் இதய மாலையும் பூண்டுள்ளார்.

இம்மூர்த்தியின் பேதங்கள் நான்கு

### 1. தர்மவியாக்கியான தட்சிணாமூர்த்தி

அபஸ்மாரன் முதுகின் மேல் வலப்பாதம் வைக்கப்பட்டிருக்கும். வலக்கையில் உருத்திராக்க மாலை; இடப்பற முன்கையில் வரதம் அல்லது தண்டம்; இடப்பக்க மேற்கையில் மான் முதலியவற்றைப் பெற்றிருப்பார். இம்மூர்த்தி பிரமபுத்திரர்களாகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனத் குமாரர் ஆகிய நான்கு முனிவர்களுக்கும் சரியை கிரியை யோகம் ஆகியவற்றையும் ஞானத்தையும் உபதேசித்தவர் ஆவார்.

### 2. வீணாதர தட்சிணாமூர்த்தி

முன் கை இரண்டிலும் வீணையை வைத்திருக்கும் மூர்த்தி. மற்றவை முன்கூறியது போலவேயாம்.

### 3. ஞான தட்சிணாமூர்த்தி

இம்மூர்த்தி முன்கைகள் இரண்டிலும் ஞானமுத்திரையையும் அபய முத்திரையையும் தரித்தவர். பின் வலக்கையில் உருத்திராக்க செபமாலையும் பின் இடக்கையில் குவளை மலரும் தாங்கியவர். வெண்மைநிறம் கொண்டவர். பல ஆபரணங்களைத் தரித்தவர். மற்றவை முன் கூறியவாறு.

### 4. யோக தட்சிணாமூர்த்தி

இம்மூர்த்தியினது ஞான முத்திரை கொண்ட வலக்கை உளம்நோக்கியவாறு இதயத்திற்குச் சரியாக அமைந்திருக்கும். வரத முத்திரை தரித்த இடக்கை, பீடத்தின் மீது வைத்தவாறு இருக்கும். முன்கைகளில் உருத்திராக்க மாலையும் குவளை மலரும் பின்பக்கத்தில் சடைகள் தொங்கியவாறும் இருக்கும். இம்மூர்த்தியில் பல வகைகள் உண்டு. இம்மூர்த்தியைத் தியானம் செய்தால் எல்லாத் துக்கங்களும் நீங்கும் என்பதாகக் கூறுவர். உயிர் இறைவரோடு இரண்டறக் கலத்தலே யோகம். சனகாதி நால்வருக்கும் இதனைச் சின்முத்திரையில் இவர் உணர்த்தினார். உயிர் மும்மலங்களையும் விட்டு இங்கு சிவத்தை அணைத்து நிற்றலைக் குறிப்பது சின்முத்திரை. இம்மூர்த்தியில் உயிர் மோதிரவிரல்; சிவம் பெருவிரல்; ஏனைய மூன்று

விரல்களும் மும்மலங்கள். இம்மூன்றும் தனித்து வேறாக நிற்க மோதிர விரலின் நுனி, பெருவிரலின் அடியில் பொருந்தும்.

## 20. நீலகண்டர்

எல்லையற்ற தமது பேரருளின் பெருக்கால் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினை விரும்பி ஏற்று உண்டருளிய நிலையில், சிவபெருமான் திருநீலகண்டர் எனப் போற்றப்படுகிறார். "ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன் மால் உள்ளிட்ட மேலாய தேவரெல்லாம் வீடுவர் காண் சாழேலோ" என்பது திருவாசகம் இத்திருவுருவை இடைவிடாது தியானித்தும் துதித்தும் வழிபட்டு அருள்பெற்றவர் திருநீலகண்ட நாயனார். திருக்கோயிலில் பிரதோட காலத்தில் இத்திருவுருவம் பாராட்டப்பெறுகிறது. இறைவர் நஞ்சுண்ட வரலாற்றினை அப்பர் சுவாமிகள் பின்வரும் பாடலில் நமக்கு உணர்த்துகிறார்.

"வடங்கெழுமலை மத்தாக வானவர் அசுரரோடு
கடைந்திட எழுந்த நஞ்சங்கண்டு பஃறேவரஞ்சி
அடைந்து நுஞ்சரணமென்ன அருள்பெரிதுடையராகித்
தடங்கடல் நஞ்சம் உண்டார் சாய்க்காடு மேவினாரே".

## 21 சங்கர நாராயணர்

திருமால் சிவபெருமானது பாதித் திருமேனியை விரும்பிப் பூசை செய்ய, இறைவர் அவருக்கு அருள்பாலிக்குமாறு இவ்வடிவம் கொண்டார். வலப்பக்கத்தில் கொன்றைப் பூ; இடப்பக்கத்தில் துளசி; வலப்பக்கம் புலித்தோலாடை; இடப்பக்கம் பீதாம்பரம்; வலக்கரத்தில் மான், இடக்கரத்தில் சக்கரம்; வலப்பக்கம் செந்நிறம் பொருந்திய திருவுருவம்; இடப்பக்கம் பச்சைநிறம் கொண்ட திருவுருவம் ஆகியவை பொருந்திய சிவன் பாதியும் திருமால் பாதியுமாக விளங்கும் மூர்த்தமே அரியர்த்தர் அல்லது சங்கர நாராயணர் எனப்பெறும் மூர்த்தி.

## 22. எச்ஞேசுவரர்

எச்ஞம் என்பது சிவ வேள்வியைக் குறிப்பது. சைவமுறையில் ஐந்துவகையான வேள்விகள் சொல்லப் பெறும். அவை கன்மவேள்வி, தவவேள்வி, செபவேள்வி, தியான வேள்வி, ஞானவேள்வி என்பன.

வேதமுறைபபடி செய்யப்பெறும் பிரமவேள்வி (வேதம் ஓதுதல்), தேவ வேள்வி (வழிபாடு செய்தல்), மனிதவேள்வி (விருந்தோம்பல்), உயிர்வேள்வி (உயிர்களிடத்து இரக்கம் கொண்டு உணவிடுதல் முதலியன செய்தல்), பிதுர்வேள்வி (தென்புலத்தார் கடன் தீர்த்தல்) ஆகிய ஐவகை வேள்விகளும் சைவ வேள்வியாகிய கன்ம வேள்வியில் அடங்குவன. தவவேள்வி என்பது சரியை, கிரியை, தியானம் என்ற மூன்று நெறிகளிலும் நிற்றலாகும். உரிய தீட்சைகளைப் பெற்று திருவைந்தெழுத்தைக் கணித்தல் செப வேள்வி; சிவனது அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூவகைத்

திருமேனிகளையும் தியானித்தல் தியான வேள்வி; பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் சிறப்புகளை உணர்ந்து, ஞான நூல்களை ஓதுதல், ஓதுவித்தல், கேட்டல், பின்னர்ச் சிந்தித்தல், நிட்டைகூடல் ஆகியவை ஞானவேள்வி. இந்த ஐவகை வேள்விகளின் பயன்களை அருள்பவர் எக்ஞேசுவரார்.

## 23. உக்கிரர்

இறைவரது கருணை அறக்கருணை, மறக்கருணை என இருவகைப்படும். அறக் கருணையாவது அன்பர்களை விரும்பி ஏற்று அவர்கள் விரும்பும் நலங்களை எல்லாம் அளித்துக் காத்து அருள்புரிதல். மறக்கருணையாவது கொடியவர்களைத் தண்டித்துத் திருத்தி ஆட்கொண்டு அருள்புரிதல். இவ்வாறு மறக்கருணையால் கொடுமை அல்லது தீமைகள் உலகில் பரவிப் பெருகாமல் அழித்தொழித்து உயிர்களைக் காப்பாற்றி அருள்பவர் உக்கிரர். இவர் குரண்டன் என்னும் அசுரனை அழித்தருளியவர் ஆவர். இவர் நான்கு தோள்களும் மூன்று கண்களும் உக்கிரமான தோற்றமும் உடையவர். பாம்பை அரைஞாணாக அணிந்து கையில் கபாலம் ஏந்திச் சுருண்ட தலையில் கொக்கின் இறகணிந்து அச்சுறுத்துகின்ற ஓங்கார ஒலி செய்பவராய் வீர நகைபுரிந்துகொண்டு அருளானந்த நடனம்புரிவார்.

## 24. ஆபத்துசகாயர்

இறைவன் தம்மைத் தொழுபவர்களின் துயர்களைப் போக்கிக் காத்தலையே தனக்குரிய தொழிலாகக் கொண்டவர். தம் அடியவர்களுக்கு இடுக்கண் நேரிடும்போதெல்லாம் துணைபுரிபவர். இவரருகே விநாயகர், முருகர், திருமால், பிரமதேவர், மற்றும் மகேசுவரி, நாராயணி, கௌமாரி, இந்திராணி, காளி, அபிராமி, வராகி என்னும் ஏழு மாதர்களும் ஒன்பது கோள்கள், பற்பல முனிவர்கள் ஆகியோர்களும் சூழ்ந்து நிற்க, அழகிய பொற்றவிசின் மீது வீற்றிருந்து அருள்பவர்.

## 25. வீரபத்திரர்

தக்கன், தான் இயற்றிய வேள்விக்குச் சிவபெருமானை அழைக்கவில்லை. தக்கனைத் திருத்தச் சிவபெருமான் வீரபத்திரராகித் தக்கன் வேள்வி செய்யும் இடத்திற்குச் சென்று தமக்குரிய அவியைத் தக்கனிடம் கோரினார். தக்கன் அதனை வழங்க மறுத்தான். வீரபத்திரர் தக்கன் வேள்வியை அழித்தார். தக்கன் தலையை வெட்டி வேள்வித் தீயினில் இட்டார். இறந்த ஆட்டுத் தலையைத் தக்கனின் குறை உடலில் பொருத்தினார். தத்தம் செயல்களில் வீரமும் வெற்றியும் வேண்டுவோர் வீரபத்திரரை வழிபட்டுப் போற்றுகின்றனர். வீரசைவர் வீரபத்திரரைச் சிறப்பாக வழிபடுகிறார்கள்.

# அம்மையின் திருவுருவங்கள்

உலகம் யாவையும் படைத்துக் காத்து ஒடுக்கி அருள்புரியும் பரம்பொருள் சிவம் என்றும் அச்சிவம் அவ்வாறு செயற்படும் வகையில் அதற்குரிய ஆற்றல் சக்தி என்றும் ஆன்றோர்கள் வகுத்துள்ளார்கள். சிவம் அமைதியாக நிற்கும் நிலை; அது செயற்படத் தொடங்க உதவுவது சிவத்தின் ஆற்றல்; இந்த ஆற்றலே சக்தி. பொன்னிலிருந்து அதன் நிறத்தையும் சூரியனிலிருந்து அதன் ஒளியையும் சிவத்திலிருந்து சக்தியையும் பிரித்தறிதல் இயலாததொன்றாகும்.

சத்தியையும் சிவத்தையும் உலகியல முறையில் மனைவியும் கணவனுமாக நூல்கள் காட்டுகின்றன. ஆனால் சிவமும் சத்தியும் கணவனும் மனைவியும் அல்லர். ஏனெனில், சிவம் பிரமசாரி; சத்தி கன்னி; எனினும் அவ்விருவரும் இணைந்து இவ்வுலகின் உயிர்கள் அனைத்தையும் ஈன்றனர் எனச் சிவஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த சாத்திரம் கூறுகிறது. பலவகை நிலைகளில் திகழும் சிவமும் சத்தியும் உலக உயிர்களுக்கெல்லாம் தாயும் தந்தையுமாக அருள் நலங்கள் புரிந்து வருகிறார்கள்.

சிவத்தையும் சத்தியையும் அம்மையப்பனாகக் கருதுமிடத்துச் சத்தி சிவத்தின் தேவி என்னும் கோட்பாடு நிலைபெற்றுள்ளது. சிவன் கோயில்களில் தேவியின் திருவுருவங்கள் நிலைப்படுத்தப் பெற்றுள்ளன. கிபி 9-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே தேவிக்குத் தனிச் சந்நிதிகள் அமைக்கப்பட்டன என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

காஞ்சியில் பாடல்பெற்றுள்ள ஏகாம்பரநாதர் கோயில், கச்சி அநேகதங் காவதம், கச்சிமேற்றளி, கச்சி நெறிக்காரைக்காடு, ஓணகாந்தன்தளி ஆகிய சிவத்தலங்களும் பாடல் பெறாத கச்சபேசர் திருக்கோயில் போன்ற கோயில்களும்! கிபி. 9-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தோன்றியவை. ஆதலால், இங்கு அம்பிகைக்குத் தனிச் சந்நிதி இல்லை.

சத்தி ஒன்றேயாயினும் அதன் செயற்பாட்டால் அது பலவகையாகக் கூறப்படும். அவை :- மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை, பக்குவம் எய்திய உயிர்களை மலத்திலிருந்து விடுவித்துச் சிவத்துடன் சேர்க்கும் மனோன்மணி (உயிர்களிலெல்லாம் ஒன்றி உடன் கலந்து நின்று புண்ணிய பாவங்களை அகற்றுவிக்கும்), சர்வபூதகமணி (சூரியனிடத்தில் பதிந்து நின்று தீயவற்றை அழித்து நல்லவற்றைப் பெருக்கி வளர்க்கும்; ஆக்கம் அளிக்கும்), பலப்பிதமனி, (சந்திரனிடத்தில் நிலைபெற்ற அமுதத் துளிகளைச் சொரிவித்துப் பயிர் பச்சைகளும் உயிர்த் தொகுதிகளும் செழித்தோங்க உதவும்), பலவிகரணி (வானத்திலிருந்து

கொண்டு எல்லாப் பொருள்களையும் ஏற்று நின்று அவை தன்னில் கலந்து இனிய இடம் தந்து நிற்கும்), கலவிகரணி (காற்றில் கலந்து பிராண மயமாய் விளங்கி உயிர்களுக்கு நலம் விளைவிக்கும்), காளி (நெருப்பில் தங்கி அதற்கு வெப்பம் அளித்து நிற்கும்), வாமை (மண்ணில் விளங்கும் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களின் இயல்புகளும் செயல்களும் நிகழுமாறு செய்யும்).

மற்றவகையில் உலகை இயக்கி ஐந்தொழில்கள் புரிந்துவரும் சத்தி, அன்பர்கள் பொருட்டுப் பலபெயர்களையும் கொள்ளும் இம்முறையில் பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்னும் சப்தமாதர்களாகும். சத்தி வழிபாட்டை விளக்கும் சாத்தேய சமயத்தின் தந்திரநூல்கள் பாலாம்பாள், லலிதாம்பாள், இராசராசேசுவரி, அன்னபூரணி, வராகி, புவனேசுவரி ஆகியவை போன்ற சத்திகளின் வடிவங்களைக் குறிப்பிடுகின்றன. எனினும், திருக்கோயில்களில் எந்த எந்தச் சிவமூர்த்தி எழுந்தருளியுள்ளாரோ அந்த அந்தச் சிவமூர்த்திக்கு ஏற்றவாறு திருப்பெயர்களைத் தேவியர் தாங்கியுள்ளார்.

# திருமாலின் தெய்வத்திருவுருவங்கள்

## பூவராகவர்

திருமாலின் பத்து அவதாரங்களில் மீன், ஆமை, பரசுராமர் ஆகிய அவதாரங்கள் தவிர மற்ற அவதாரங்கள் ஏழும் பரவலாக வழிபடப்பெறுகின்றன. ஏனமாய் அவதரித்துப் பூமிதனை இடந்து வந்த பெருமானை வராகமூர்த்தி எனும் பெயரில் வணங்கி வருகின்றோம். பூ தேவியை விருப்பமொடு அணைத்து எழுந்து வரும் நிலையில் இருப்பதால், இவர் பூவராகவர் என்று அழைக்கப்பெறுகின்றார். இப்பெருமானிடம் பல்லவ மன்னர்களுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. அதனால், மாமல்லபுரத்தில் பல இடங்களில் வராகமூர்த்தியை அவர்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கியுள்ளனர். இம்மூர்த்தி வலத்தோளில் பூதேவியை ஏந்தியுள்ள நிலையை வலவெந்தைப்பிரான் என்றும் இடத்தோளில் ஏந்தியுள்ள நிலையை இடவெந்தைப்பிரான் என்றும் வணங்குவர். செங்கற்பட்டுப் பகுதியிலுள்ள மலைவையாவூர்க் கோயிலில் ஆதிவராகப் பெருமானின் அழகிய சந்நிதி அமைந்துள்ளது. திருவிடந்தையிலுள்ள நெடிய வடிவம் அழகியதும் சிறப்பு வாய்ந்ததுமாகும்.

## அழகியசிங்கர்

நான்காவது அவதாரமான நரசிம்ம அவதாரம், தமிழ்நாட்டில் மிகப்பரவலாகப் போற்றப்பெறுகின்றது. ஆளான கோளரி என்று எழுந்த நரசிம்ம அவதாரம் பிரகலாத ஆழ்வார் சொல்லிற்கேற்ப, இரணியன் எற்றிய தூணினின்று

வெளிப்பட்டது. பின்னர் இரணியனைக் கொன்று அடங்காச் சினத்துடன் நின்றபோது, தாயார் அவரது சீற்றத்தைத் தணிவித்து அவா் உலகிற்கு அருள்புரியுமாறு செய்தார். இலக்குமியோடு கூடிய நரசிம்மர், இலட்சுமி நரசிம்மர் எனப் போற்றப்பெறுகின்றார். பால நரசிம்மர், யோக நரசிம்மர், உக்கிர நரசிம்மர், அழகிய சிங்கர் போன்ற 9 திருவடிவங்களில் நரசிம்மா வணங்கப்பெறுகிறார். வேளுக்கை, வேளச்சேரி, சிங்கப்பெருமாள் கோயில், பழையசீவரம் ஆகிய இடங்களில் நரசிம்மப்பெருமாளுக்கு அமைந்த திருக்கோயில்கள் உள. அவை தவிரப் பெரிய திருமால் கோயில்களில் நரசிம்மருக்கு ஒரு சந்நிதி அமைந்துள்ளது. 4 திருக்கரங்கள் முதல் 18 திருக்கரங்கள் வரை நரசிம்மர் திருவுருவம் பெற்றுள்ளது. சுதர்சன சக்கரத்துள் ஒருபுறம் சுதர்சன ஆழ்வாரும் மறுபுறம் நரசிம்மரின் வடிவமும் உள்ளன.

## திருவிக்கிரமர்

ஐந்தாவது அவதாரமான வாமன அவதாரத்தை வணங்கும் வழக்கம் இல்லையென்றாலும் இவ்வரலாற்றினையொட்டிய பின்பகுதியில் விண்ணளவு வளர்ந்து உலகைத் திருவடியால் அளந்த திருவிக்கிரம அவதாரம் மிகவும் சிறப்பான முறையில் வணங்கப் பெறுகிறது என்பதை அறிய முடிகிறது. பல்லவர் சிற்பங்களில் திருவிக்கிரம அவதாரத்திற்கு உன்னதமான இடத்தை அளித்துள்ளனர். மாமல்லபுரம் ஆதிவராகர் குகையில் ஒரு புடைப்புச் சிற்பமாக இது மிளிர்கிறது. இவர் மாபலியிடம் குறுமுனியாக வந்து தானம் கேட்டல், பின்னர் வான்முகடுவரை வளர்தல், வானுலகை நீட்டிய திருவடியைப் பிரமன் நீராட்டல் போன்ற காட்சிகள் அழகுற வடிக்கப்பெற்றுள்ளன. காஞ்சி உலகளந்த பெருமாள் கோயில் இவ்வவதாரத்தை ஒட்டி எழுந்த சிறந்த கோயிலாகும்.

## பரசுராமர்

ஆறாவது அவதாரமான பரசுராமர் வழிபாடு பெருங்கோயில்களில் இல்லை. ஆனால், மாரியம்மன் கோயில்களில் பரசுராமரின் உலோகத் திருமேனி இருக்கிறது. சிறு தெய்வங்களுள் இரேணுகை என்னும் சிறு தெய்வத்தின் புதல்வராகப் பரசுராமர் போற்றப்பெறுகிறார்.

## இராமர்

ஏழாம் அவதாரமான இராமருக்கு அநேக கோயில்கள் அமைந்துள்ளன. மதுராந்தகம் ஏரி காத்தராமர், பொன்விளைந்த களத்தூர் தர்பசயனராமர், ஆகியோர் கோயில்கள் இராமருக்கு என்றே அமைந்தவை. எல்லாத் திருமால் கோயில்களிலும் இராமர், சீதை, இலக்குவன் ஆகியோருக்குத் தனிச்சந்நிதிகள் அமைந்துள்ளன.

### பலராமர்

எட்டாம் அவதாரமான பலராமருக்கு அநேக கோயில்கள் பண்டைய நாளில் இருந்தன என்பதைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆனால், தற்போது பலராமருக்குத் தனிக்கோயில்களோ சந்நிதிகளோ அமைக்கும் வழக்கமில்லை. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் கருவறையுள் கண்ணனுடன் பலராமர் திருவுருவமும் உள்ளது.

### கண்ணன்

ஒன்பதாம் அவதாரமான கண்ணன் அவதாரம், தமிழக மக்களின் மனத்தோடு பின்னிப்பிணைந்தது. மற்ற அவதாரங்களை விடத் தமிழகத்தில் மிகச் செல்வாக்கு பெற்ற நிலையில் கண்ணன் வழிபாடு விளங்குகிறது. பாலகிருட்டிணர், இராதாகிருட்டிணர், பார்த்தசாரதி, பாண்டவதூதர், வேணுகோபாலர், நவநீதக் கண்ணன், காளிங்கமர்த்தனன் ஆகிய அநேக வடிவங்களில் கண்ணன் வணங்கப்பெறுகிறார். பெரும்பான்மைக் கோயில்களின் கருவறையினுள்ளும் செப்புத் திருமேனியாக கண்ணன் வடிவம் இருக்கிறது.

குழலூதும் கண்ணனாகப் பாபுராயன்பேட்டையிலும் பாண்டவர்க்குத் தூது சென்றவராகக் காஞ்சிபுரத்திலும் குன்றம் ஏந்திக் குளிர்மழை காப்பவனாக மாமல்லபுரத்திலும் பார்த்தனின் (அர்ச்சுனனின்) சாரதியாகத் திருவல்லிக்கேணியிலும் மாடுமேய்க்கும் நிலையில் சாட்டையேந்தி நிற்கும் சிறுவனாக (பொன்னேரி) ஆயர்பாடியிலும் இராசகோபாலனாக வடமதுரையிலும் (பொன்னேரி) கண்ணன் அருள்பாலிக்கின்றார்.

### கல்கி

பத்தாவது அவதாரமான கல்கி அவதாரம், யுகமுடிவில் எழும் என நம்பப்படுகிறது. எனினும், குதிரை முகத்துடன் சங்கு, சக்கரம் ஆகியவற்றையேந்தி இலக்குமியை மடிமீது இருத்தி அபயவரதமருளும் அயக்கிரீவ மூர்த்தியை அறிவின் கடவுளாகப் பக்தர் போற்றி வணங்குகின்றனர். காஞ்சி வரதர் கோயிலில் அயக்கிரீவரின் சந்நிதி அமைந்துள்ளது. தூப்புல் வேதாந்த தேசிகர் அயக்கிரீவரை வழிபட்டு ஞானம் பெற்றதாகத் தேசிகர் மகாத்மியம் கூறுகிறது.

# திருக்கோயில்களில் திருமாலின் திருவுருவங்கள்

**திருவரங்கர் (அரங்கநாதர்)** : இது திருமால் திருப்பாற்கடலில் ஆதிசேடன் மீது பள்ளிகொண்டுள்ள வடிவம். இவ்வடிவம் பெருங்கோயில்கள் யாவற்றிலும் அமைந்துள்ளது. படுக்கையாக அமைந்து விரிந்த படத்தினைக் குடையாகப் பிடிக்கும் ஆதிசேடன் மீது பெருமாள் பள்ளி கொண்டிருப்பார். காலடியில் மகாலட்சுமி திருவடி வருடக் கொப்பூழினின்று வெளிவந்து நீண்டுள்ள மலர்ந்த தாமரையில் பிரமதேவர் வீற்றிருப்பார். பல்லவர் காலச் சிற்பங்களில் மட்டும் மதுகைடபர், சங்கு சக்கரம், மார்க்கண்டேயர் முதலிய திருவுருவங்கள் காட்டப்பெற்றிருக்கும். செங்கற்பட்டு மாவட்டத்தில் தேவதானம் ஊரில் அமைந்துள்ள அரங்கர் வடிவமே மிகப்பெரிதாம். இது 7 மீட்டர் நீளமும் 3 மீட்டர் உயரமும் உடையது. மாமல்லபுரம், காஞ்சி சொன்னவண்ணம் செய்தபெருமாள், திருநீர்மலை ஆகியவை போன்ற இடங்களில் பள்ளிகொண்ட பெருமாளுக்கென்றே திருக்கோயில்கள் உள்ளன.

**தலசயனர்**: பாம்பணையின்றிக் கையைத் தலைக்கு அணையாக வைத்துச் சயனித்த திருக்கோலம் கொண்டதால், மாமல்லபுரம் பெருமாள், தலசயனர் என்னும் பெயரில் விளங்குகிறார்.

**ஜலசயனர்**: சுற்றிலும் நீர் தங்கியிருக்க நடுவிலுள்ள திட்டின் மீது படுத்துள்ள கோலம். மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலில் உள்ள திருமால் இக்கோலத்திலுள்ளார் என்பதால், இவர் ஜலசயனர் என்றழைக்கப்படுகிறார்.

**வைகுண்டப் பெருமாள்**: ஆதிசேடன் குடைபிடிக்கத் திருமால் சீதேவி, பூதேவியுடன் அமர்ந்திருக்கும் கோலம் இதுவாகும். இவர் சங்கு, சக்கரம் ஆகியவற்றை மேற்கரங்களில் ஏந்தியுள்ளார். இவரது வலக்கை அபயமுத்திரையுடனும் இடக்கை தொடை மீதும் உள்ளன. இக்கோலத்தைக் காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் சந்நிதியில் காணலாம்.

**விசயராகவர்**: வீற்றிருந்த திருக்கோலம்.. இங்கு ஆதிசேடன் இன்றிச் சிம்மாசனத்தில் இருத்தல். இக்கோலம் புதுவாயில் கோயிலில் அமைந்துள்ளது.

**கேசவன்**: கேசி என்ற அசுரனை அழித்ததால், திருமால் கேசவன் எனப் பெயர் பெற்றார். மனக்கலக்கத்தை நாசம் செய்பவன் என்பதாலும் கேசவன் என்னும் பெயர் உண்டாயிற்று. நின்ற வடிவம்; மேற்கைகளில் சங்கு, சக்கரம்; கீழ் வலக்கை அபயம்; இடக்கை தொடைமீது இருத்தல் ஆகியவற்றைக் கொண்டிருப்பது இத்திருவுருவமாகும். திருமயிலை, கூவத்தூர் போன்ற இடங்களில் கேசவப்பெருமாள்

அருள் பாலிக்கிறார்.

**வரதர்:** மூலவராக இருக்கும் நிலையில் மேற்கரங்களில் சங்கு, சக்கரம் ஆகியவற்றை ஏந்தியும் கீழ் வலக்கரம் அபய முத்திரையைக் கொண்டும் இடக்கரத்தைக் கதாயுதத்தின் மீது ஊன்றிய நிலையிலுள்ள சிற்பங்களில் அமைக்கும்போது வரதர் கருடன் மீது இவர்ந்து வருவதாகக் காட்டப்பெறுவர். அரிய நிலையில் திருவல்லிக்கேணி வரதர் சந்நிதியிலுள்ள பெருமாள் கருடன் மீது அமர்ந்து வருதல் போலவும் காஞ்சிபுரம் அட்டபுயத்தார் சந்நிதியில் சிறு உலோகத் திருமேனியில் கருடன் மீது இவர்ந்து வருதல் போலவும் அமைக்கப்பட்டுள்ளன.

**சீனிவாசா:** திருமகள் நீங்காது வாசம் செய்கின்ற மார்பினராதலால், இவர் சீனிவாசர் எனப்பெற்றார். நான்கு கரங்கள். மேற்கரங்கள் சங்கு, சக்கரத்தையும் கீழ் வலக்கரம் வரதமுத்திரையையும் கொண்டுள்ளது. இடக்கரம் தொடை மீது வைத்த நிலையில் உள்ளது. திருப்பதியை அடியொற்றி எழுந்த எல்லாத் தமிழகக் கோயில்களிலும் திருமால் சீனிவாசர் என்றே அழைக்கப்பெறுகின்றார்.

**கோவிந்தன்:** பசுக்கூட்டங்களின் தலைவன் எனும் பொருளில் இச்சொல் வந்தது. கண்ணனைக் கோவிந்தன் என்பர் (எனினும் சில இடங்களில் பள்ளி கொண்ட பெருமாளுக்கும் இப்பெயர் அமைந்திருப்பது சிந்தித்தற்குரியது).

**வேணுகோபாலர்:** நான்கு கரங்களில் மேற்கரங்களில் சங்கு, சக்கரம் ஆகியவற்றை ஏந்தியும் கீழ்க்கரங்களில் குழலைப் பிடித்து வாய்வைத்து ஊதுதல் போன்றும் இடக்காலையூன்றி வலக்காலை நளினமாக மடக்கி இடக்காலின் குறுக்கில் ஊன்றியிருப்பதும் இத்திருவுருவத்தின் கோலமாகும். இத்திருவுருவத்தின் இருபுறமும் இராதை, உருக்குமணி என்னும் இரு தேவியர் இருப்பர்.

**சந்தானகோபாலர்:** தவழ்கின்ற நிலையில் ஒருகையில் வெண்ணெய் ஏந்தியுள்ள குழந்தை வடிவம்.

**ஆலிலைக் கிருட்டிணர்:** ஆலிலையின் மீது படுத்து வலக்கால் பெருவிரலைச் சுவைக்கின்ற (வடபத்திரசாயி) குழந்தை வடிவம் இதுவாகும்.

**நவநீதக் கண்ணன்:** ஒரு காலையூன்றி ஒரு காலைத் தூக்கி நடனமாடும் நிலையில் ஒரு கையை வீசியும் ஒருகையில். வெண்ணெய் உருண்டை ஏந்தியும் உள்ள இவ் வடிவம் எல்லாத் திருக்கோயில்களிலும் அமைந்துள்ளது. நவநீதம் = வெண்ணெய்.

**பரம பதநாதன்:** பரம பதமாகிய வைகுண்டத்திலே வீற்றிருப்பவன்.

**வைகுண்டநாதர்:** வைகுண்டத்தில் வீற்றிருப்பவன்.

**வாசுதேவன்:** வசுதேவனின் மகன் ஆனதால் வாசுதேவன் என்று பெயர் அமைந்தது.

**அநிருத்தன்:** திருமாலின் வியூக அவதாரங்களில் ஒன்று. அநிருத்த வரதர் உத்திரமேரூர் சுந்தரவரதர் சந்நிதியில் உள்ளார்.

**கேசவன்:** கேசி என்னும் அரக்கனைக் கொன்றதால் கேசவன் என்ற பெயர் பெற்றார். மனக்கலக்கத்தை நாசம் செய்வதாலும் கேசவன் என்ற பெயர் வழங்குகிறது.

**மாதவன்:** மது என்னும் அசுரனைக் கொன்றதால் மாதவன் என்னும் பெயர் வந்தது. மா - இலக்குமி; தவன் - கணவர்; இலக்குமியின் கணவர் என்பதும் பொருளாம். கீதையில் உபதேசித்தவாறு 'தவசிகளில் இருக்கிறேன்' என்றபடி தவசிகளில் பெரும்தவசி என்னும் பொருளில் மாதவன் என்னும் பெயர் உண்டாயிற்று.

**மதுசூதனன்:** மது என்னும் அசுரனைத் தந்திரத்தினால் கொன்றதனால் இப்பெயர் பெற்றார்.

**ரிஷிகேசன்:** புலன்களை ஆள்பவன்.

**புருடோத்தமன்:** புருஷர்களில் உத்தமன்

**பத்மநாபர்:** நாபியிலிருந்து கமலத்தை மலர்வித்தவர். அதில் பிரமதேவர் தோன்றினார். பின்னர் அவரால் உலகம் படைக்கப் பெற்றது.

**அத்தியூரான்:** அத்தியூராகிய காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருப்பவர். இவரே வரதராசர்.

**நீலமேகன்:** மேகம் போன்று நீல வண்ணமுடையவன்.

**தாமரைக் கண்ணன்:** தாமரை போன்ற கண்களை உடையவர் இச்சொல் திருக்குறளில்

> "தாம்வீழ்வார் மென்றோள் துயிலி னினிதுகொல்
> தாமரைக் கண்ணா னுலகு"

என்றவாறுள்ளது. தாமரைக்கண்ணான் உலகு என்பதற்குச் "செங்கண்மால் உலகம்" எனப் பொருள் காண்கிறார் பரிமேலழகர்.

**கண்ணன்:** அழகிய கண்களை உடையவன்.

**கிருட்டிணன்:** கருவண்ணமுடையவன்.

**புண்டரீகாட்சன்:** புண்டரீகம் - தாமரை; அட்சம் - கண். தாமரை போலும் கண்களையுடையவன்.

ஆராஅமுதன்: ஒப்பில்லாத அமுதம் போன்றவன்.

ஒப்பிலியப்பன்: ஒப்புயர்வு அற்றவன்.

சௌரிராசன்: இன்பத்திற்கு உரியவன்.

மணவாளன்: திருமகளோடு விரும்பி உறைந்திருப்பவன்.

சௌந்தரராசன்: அழகிற்கு அரசன்.

நம்பி: மக்களுள் சிறந்தவன்.

பரிமளரங்கன்: வாசனை நிரம்பிய சூழலில இருப்பவன்.

கசேந்திரவரதன்: கசேந்திரன் என்னும் யானையை முதலை வாயிலிருந்து மீட்டு வரமருளியவன்.

பக்தவத்சலன்: பக்தர்கள் மீது (வாத்ஸல்யம் - அன்புடைமை) அன்புடையவன்.

தெய்வநாயகன: தேவர்களுக்கு நாயகனாக இருப்பவன்.

பேர்அருளாளன்: பேரருள் அருள்பவன்.

செங்கண்மால்: சிவந்த கண்களை உடையவன்.

சௌம்ய நாராயணன்: அழகிய நாராயணன்.

சத்தியமூர்த்தி: தருமத்தின் தலைவன்.

சகந்நாதன்: உலகங்களுக்குத் தலைவன்.

இலட்சுமி நாராயணன: இலக்குமியோடு உறைபவன்.

அரவிந்தலோசனன்: தாமரைக் கண்களை உடையவன்.

திருவாழ்மார்பன்: இலக்குமியை மார்பில் வைத்திருப்பவன்.

சகதீசன்: உலகங்களுக்கு ஈசன்.

தாமோதரன்: (தாமம் - கயிறு; உதரம் - வயிறு) யசோதையினால் வெளியில் செல்லாதபடி தாமத்தால் உரலோடு ஒன்றும்படி உதரத்தில் பிணிக்கப்பட்டவன்.

**தேவகிநந்தன்:** தேவகியின் குமாரன்.

**ஏழுமலையான்:** ஏழுமலைகளில் வீற்றிருப்பவன்.

**ஜனார்த்தனன்:** தீயநெறிப்பட்ட மக்களை நரகத்திற்கு அனுப்பி வதைப்பவன்.

**நாராயணன்:** நாரம் - நீர்; அயனன் - சஞ்சரிப்பவன். இது நீரில் உறைபவன் என்னும் பொருள் கொண்டுள்ளது.

**முகுந்தன்:** முத்தியளிப்பவன்.

**மால்:** மயக்கமளிப்பவன் - உலக மாயையை அனுபவிக்கச் செய்பவன்.

**லோகநாதன்:** உலகிற்குத் தலைவன்.

**விட்டுணு:** விட்டுணு - வியாபகர்; எங்கும் நிறைந்தவர்.

**சீனிவாசன்:** திருமகளோடு நீங்காது வசித்திருப்பவன்.

**மணிவண்ணன்:** நீலமணி போன்ற நீலவண்ணத்தையுடையவன்.

கோயில்களில் மேற்கண்ட சில பெயர்களுக்கு முன்னர் ஆதி என்ற சொல் பழமையைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. அவை, ஆதிகேசவன், ஆதிநாராயணன் என்பன போன்ற பெயர்கள் ஆகும். பெருமான், பக்தர்கள் வேண்டிய இடத்தில் தோன்றுதலைப் பிரசன்னமாதல் என்பர். அவ்வாறு பெருமான் எழுந்தருளிய திருப்பதிகளில் பிரசன்ன என்ற அடைமொழியுடன் திருமாலின் திருநாமம் வழங்குகின்றது. அவை, பிரசன்ன வரதராசர், பிரசன்ன வெங்கடேசர் என்பன போன்ற பெயர்களாம்.

## திருமாலின் தேவியர் திருவுருவங்கள்

திருமால் கோயில்களில், மூலவர் தனித்தோ தேவியர் இருவருடனோ எழுந்தருளியிருப்பார். உடன் எழுந்தருளியிருக்கும் தேவியரை உபய நாச்சிமார்கள் என்பர். மூலவர் தனித்தோ, தேவியருடனோ நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என நான்கு வகைக் கோலங்களில் இருந்தாலும் உற்சவர் உபயநாச்சிமார்களுடனே நின்றவண்ணம் அருள்பாலிக்கின்றார். கண்ணன் திருக்கோயில்களில் இராதையும்

உருக்குமணி தேவியாரும் உடன் எழுந்தருளியுள்ளனர். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயிலில் கண்ணனுடன் உருக்குமணி, அண்ணன் பலராமன், புதல்வன் சாத்யதி, பேரன் அனுருத்தன் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர்.

இராமன் திருக்கோயில்களில் சீதை, இலக்குவன், அனுமன் ஆகியோருடன் எழுந்தருளியுள்ளனர். இராமன் பட்டாபிடேகக் கோலத்தில் இருப்பின், பரதன் சத்ருக்கனன் ஆகியோர் கவரி வீசுவது போலவும் எழுந்தருள்கின்றனர். அமர்ந்த நிலையில் திருமால் இலக்குமியை மடியில் அமர்த்திக்கொண்டு இலட்சுமி நாராயணனாகக் காட்சியளிக்கிறார்.

திருமால் பள்ளி கொண்டுள்ள நிலையில் பாயாக ஆதிசேடனும் கொப்பூழினின்று உதித்த தாமரையில் பிரமதேவனும் பாதத்தை வருடும் நிலையில் திருமகளும் ஆசிபெறும் நிலையில் மார்க்கண்டேயரும் விளங்குகின்றனர். பூவராகவராகத் திருமால் எழுந்தருளும்போது அவரது தூக்கிய திருவடியைத் தாங்கும் நிலையில் ஆதிசேடன் என்னும் பாம்புஅரசன் ஐந்து தலைகளுடன் தாங்குபவராகவும் அவருடன் அவர்தம் முனைவியரும் எழுந்தருளியுள்ளனர்.

வரதராசப் பெருமான் புடைப்புச் சிற்பமாக மாடங்களில் எழுந்தருளும்போது ஆதிமூலமே என அலரும் யானையும் அதன் காலைப் பிடித்துள்ள முதலையும் பெருமாளைத் தாங்கிப் பறந்து வரும் கருடனும் காட்டப்பெறுகின்றனர். கண்ணனின் லீலைகளைத் தூண்களில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கும்போது வரலாற்றையொட்டிய நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. கொக்கு வடிவான அசுரனின் வாய் பிளத்தல், காளிங்கன் என்னும் பாம்பின் தலைமீது நடனம் ஆடுதல் போன்றவை செதுக்கப்பெற்றுள்ளன. "வஸ்திராபஹரணம்" என்னும் நிகழ்ச்சி பல கோயில்களின் கோபுரங்கள், தூண்களில் திரும்பத் திரும்பச் செதுக்கப்பட்டுள்ளன. மரத்தின்மீது அமர்ந்துள்ள கண்ணன், மரக்கிளைகளில் கோபியரின் கீழே நீரிலிருந்து எழும் ஆடையற்ற பெண்டிர் ஆகியோர் உருவங்கள் செதுக்கப்பெற்றுள்ளன.

மாமல்லபுரத்தில் திருமாலின் அவதாரத்தையொட்டிச் சிற்பங்கள் தொகுதி தொகுதியாகக் காட்டப்பெற்றுள்ளன. அவற்றுள் கண்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கிப் பிடிக்க அதன்கீழ்க் கோபாலர்கள், மாடுகள் யாவும் ஒதுங்கியுள்ள காட்சியும் திருமால் பள்ளி கொண்டிருக்கத் திருமகளும் மார்க்கண்டேயரும் வணங்கி நிற்கவும் மதுகைடபர் ஓடும்படி சங்கும் சக்கரமும் பரந்து வந்து அவர்களைத் துறத்துவதும் ஆகிய காட்சிகளும் மிக அழகிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னர்களுக்குப் பின்னர்க் கருவறையும் ஒரே தெய்வத்தை மட்டுமே ஏற்றி வழிபடும் வழக்கமும் வந்துவிட்டன. உத்திரமேரூர் போன்ற சில கோயில்களில் திருமால் வீற்றிருக்கப் பிரமனும் சிவனும் அவரை வணங்கி வழிபடுவது போலவும் அமைக்கப்பட்டுள்ளன.

## தாயார், ஆண்டாள் ஆகியோர்

எல்லோருக்கும் தாயாக விளங்குபவர் இலக்குமி பிராட்டியார். அதனால் இவர் தாயார் என வழங்கப்படுகிறார். இலக்கியங்களில் திருமகள் என்று போற்றப்பெறுகிறார். திருமாலின் மார்பில் மரு அல்லது ஸ்ரீவத்சமாகத் திகழ்பவரும் திருமகளே. திருமாலின் அருகில் நிற்கும் நிலையில் ஸ்ரீதேவி என அழைக்கப்படுகிறாள். தாயார் திருவுருவம் இந்திர திக்கான கிழக்குத் திசையை நோக்கி, நான்கு கரங்களுள் மேலிரண்டு கரங்களில் தாமரை மலர்களையும் கீழிரண்டு கரங்களில் அபய வரதமுத்திரைகளையும் ஏந்தித் தாமரை மலரில் வீற்றிருக்கின்றது. இதே நிலையில் அனைத்துத் திருமால் கோயில்களிலும் இவளது சந்நிதி விளங்குகிறது (ஆயர்பாடி கரிகிருட்டிணன் கோயிலில் மட்டும் தாயார் நின்ற வண்ணம் இருகரங்களுடன் அருள்பாலிக்கின்றார்). இப்பெருமாட்டி தாமரை மலரை மிகவும் விரும்பி அதில் உறைவதால் அலர்மேல் மங்கை என்ற பெயரும் இவருக்கு வழங்குகிறது.

### ஆண்டாள்

திருமாலின் மற்றொரு தேவி பூதேவியாவார். வானுலகச் செல்வமனைத்திற்கும் அதிபதியான திருமகளைப் போலப் பூமியில் உள்ள அனைத்துச் செல்வங்களுக்கும் அதிபதியான பூமிதேவியே பூதேவியாவார். பூமாதேவியே கோதை நாச்சியாராகப் பிறந்து சூடிக் கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாளாகித் திருமாலை மணந்தவர். ஆதலின் பூதேவிக்கு வடிவமாக ஆண்டாளையே கோயிலில் வைத்து வழிபடுகின்றனர்.

### நீலாதேவி

ஸ்ரீதேவி, பூதேவி தவிர நீலாதேவி என்ற ஒரு தேவியும் திருமாலுக்கு உள்ளார். மலையாள நாச்சியார், துலுக்க நாச்சியார் போன்றோர் அவ்வட்டாரங்களையொட்டி எழுந்த கதைகளுள் பலரும் இறைவனை ஆண்டாளைப்போன்று அடியொற்றி மணந்தனர். இவர்கள் இறைவன் மீது செலுத்திய அன்பின் நிலை கொண்டு இவர்களைக் கோயில்களில் ஏற்றி வைத்து வழிபட்டனர். இவர்களே துலுக்க நாச்சியார், மலையாள நாச்சியார் (உறையூர்ச் சேரகுலவல்லி) என்பவராவர்.

**அவதாரங்களில் தேவியர்**: திருமால் அவதரித்த காலங்களிலெல்லாம் திருமகளும் உடன் அவதாரம் செய்தார். இராமனாக அவதரித்தபோது சீதையாகவும் கண்ணனாக அவதரித்தபோது உருக்குமணியாகவும் பிராட்டியாகவும் அவதரித்தார்.

# முருகப்பெருமான்

**பொது:** குறிஞ்சித் திணைக்குரிய தெய்வம் முருகப்பெருமான் என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதாலும் இக்குறிஞ்சித் திணைப்பகுதியே, நெடுங்காலத்திற்கு முன்னர் முதன்முதலில் மக்கள் தோன்றிய குமரிமலையையுடைய குமரிக்கண்டம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுவதாலும் இக்குமரிக்கண்டம் கடல்கோள்களால் அழிந்தபோது அக்கடல்கோள்களுக்குத் தப்பிப் பிழைத்த வீரமகேந்திரமே முருகப்பெருமான் வென்ற சூரபதுமனது வீரமகேந்திரம் என ஆராய்ச்சியாளர் கருதுவதாலும் முருகப்பெருமான் வரலாறு மிகத் தொன்மைக் காலத்திற்குரியது என்பதை அறியலாம்.

தேவர்கள் சிவபெருமானிடம் சென்று சூரபதுமனால் தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை எடுத்துரைத்து முறையிட, அப்பெருமான் தம் ஆறுமுகங்களிலிருந்து ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்த, அவை விசும்பில் பரவின. அவற்றை வாயுதேவன் தாங்க இயலாது தீக்கடவுளிடம் ஒப்புவிக்க, அக்கடவுளும் தம்மால் அவற்றைத் தாங்க இயலாது கங்கையில் விட, அக்கங்கை அவற்றை நாணற்புற்கள் செறிந்த ஒரு பொய்கையில் சேர்ப்பித்தது. அங்கு அப்பொறிகள் ஆறுகுழந்தைகளாகி ஒரு தாமரை மலரில் வீற்றிருக்க அக்குழந்தைகளுக்குக் கார்த்திகைப் பெண்கள் அறுவர் பாலூட்டினார்கள். இந்நிலையில் சிவபெருமானும் உமையம்மையும் அப்பொய்கைக்குச் சென்றனர். உமையம்மையார் ஆறு குழந்தைகளையும் எடுத்து மார்போடணைக்க, அக்குழந்தைகள் ஆறும் ஒரு குழந்தையாக மாறியது. அக்குழந்தைக்குக் கந்தன் என அம்மையார் பெயர் சூட்டினார். இதன்பின்னர் முருகப்பெருமான் கயிலையில் செல்வக்குமரனாக வளர்ந்தார். இவர் அப்போது ஆற்றிய திருவிளையாடல்கள் பல.

பின்னர் இவர் தாம் சூரபதுமன் மீது தொடுத்த போரில் முதலில் சூரபதுமன் தம்பிகளாகிய தாரகாசுரன், சிங்கமுகன் ஆகியோரை வென்று, இறுதியில் சூரபதுமனைத் தமது வேலால் அழிக்க, அவனது உடல் இருகூறாக, அவற்றில் ஒன்று மயிலாகவும் மற்றது சேவலாகவும் ஆக, அவ்வாறான மயிலைத் தம் வாகனமாகவும் சேவலைத் தமது கொடியாகவும் கொண்டார்.

திருமாலின் புதல்வியர்களுள் முன்னவராகிய அமிர்தவல்லி முருகப்பெருமானைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென, அப்பெருமானின் ஆறெழுத்து மந்திரம் ஓதிக்கொண்டே தவம் இயற்ற அத்தவத்திற்கு இரங்கிய முருகப்பெருமான் அவள் முன்தோன்றி, அவள் தான் விரும்பியவாறு அழகிய பெண்ணுருவம் தாங்கி இந்திரனிடம் செல்லுமாறு பணிக்க அவளும் அவ்வாறு சென்றபோது அவளை இந்திரன் தன் யானையைக் கொண்டு வளர்த்தான். அவ்வாறு அத்தெய்வயானை

வளர்த்ததால் அப்பெண்மணி தெய்வயானை என்னும் பெயர் தாங்கினார். பின்னர், சூரன் முதலியோரை முருகப்பெருமான் வதைத்து வெற்றியெய்திய பின்னர் இந்திரன் தாம் வளர்த்த தெய்வயானையை முருகப்பெருமானுக்கு உரிய கற்புமுறையில் திருமணம் செய்து கொடுத்து அத்தெய்வயானையையும் பரிசாக அளித்தார். இத்தெய்வயானை முருகப் பெருமானிடம் எய்தியபோது, தான் இந்திரனை விடுத்து முருகப்பெருமானிடம் வந்து சேர்ந்ததன் காரணமாச இந்திரன் செல்வம் குறைந்துவிடாமல் இருக்க, அந்தயானை இந்திரன் திசையை நோக்கி நின்றது. திருத்தணிகை மலை உச்சியில் சுப்பிரமணியர் கோயிலின் முன்புறம் ஐராவத யானை உருவம் இந்திரதிசையை நோக்கி நிற்பதாக அமைக்கப்பட்டுள்ளது.

திருமாலின் இரண்டாம் புதல்வியாகிய சௌந்தரவல்லி தொண்டைநாட்டில் வள்ளிக் கிழங்கு தோன்றும் வள்ளிமலைப் பகுதியில் சூக்கும உடலில் நின்று முருகப்பெருமானைக் கணவனாகப் பெறுவதற்காகத் தவம் புரிந்துவந்தாள். அப்போது அம்மலைக்கருகில் தவம் இயற்றிக் கொண்டிருந்த சிவமுனிவர்தம் தெய்வீக மோகமான நோக்கு ஒரு மான் வயிற்றில் பொருந்த, அதன் கருவில் சௌந்தரவல்லி நுழைந்தாள்; பின்னர் அழகிய மானிடப் பெண்ணாகத் தோன்றினாள். வள்ளிக்கிழங்கு தோன்றிய நிலப்பகுதியில் தோன்றியதால் இவள் வள்ளி என்னும் பெயர் தாங்கினாள்; அப்போது அம்மலையின் வேடர் தலைவனும் அவன் மனைவியும் பெண்மகவு வேண்டித் தவம் இயற்றியிருந்தார்கள். அவர்கள் தங்கள் தவப்பயனாக வள்ளியைத் தங்கள் மகளாக் வளர்த்தார்கள். பின்னர் வள்ளியம்மையை முருகப்பெருமான் களவுமுறையில் திருமணம் செய்துகொண்டார்.

சிவபெருமானின் வடகிழக்குத்திசைக்கு மேலே உள்ள ஈசான முகம், கிழக்கே உள்ள தத்புருஷ முகம், மேற்கே உள்ள சத்தியோசாதமுகம், தெற்கே உள்ள அகோரமுகம், வடக்கே உள்ள வாமதேவ முகம் ஆகிய ஐந்து முகங்களோடு அவர்தம் கீழ்நோக்கிய முகமாகிய அதோமுகமும் சேர முருகனுக்கு ஆறுமுகங்கள் ஆயின. சிவபெருமானது திருநாமமாகிய அஞ்செழுத்துடன் நாதப் பிரமமாகிய பிரணவமும் சேர்ந்து ஓம் நமச்சிவாய என நிற்கும் தூல பஞ்சாட்சரமே முருகனுக்கு 'சரவணபவ' என்னும் ஆறெழுத்து மந்திரம் ஆயிற்று. இதனை,

"நன்முகம் இரு மூன்றுண்டால்; நமக்கவை தாமே கந்தன்
நன்முகம் ஆகியுள்ள தாரகப் பிரம்மம் ஆகி
முன்மொழி கின்றதம் மூவிரண் டெழுத்தும் ஒன்றாய்
உன் மகன் நாமத்தோர் ஆறெழுத்தென உள்ள அன்றே!"

என்னும் கந்தபுராணத்து உற்பத்திக் காண்டம் திருவிளையாட்டுப் படலத்தின் 18-ஆவது பாடல் தெரிவிக்கிறது. இதனால் முருகவேள் சிவபெருமானின் வேறு அல்லர் என்பது புலனாகிறது.

ஆதலின் "நமது சத்தி அறுமுகன்; அவனும் யாமும் பேதம் அன்றாம்; நம் போற் பிரிவிலன்; யாண்டும் நின்றாம்; ஏதமில் குழவி போல்வான்; யாவையும்

உணர்ந்தான்; சீரும் போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்" என்று கந்தபுராணம் இதனை நமக்கு உணர்த்துகின்றது.

முருகப்பெருமானின் தேவியர் இருவரில், தெய்வயானை ஞானசத்தி; அண்டங்கள் அனைத்தையும் பிரகாசிக்கச் செய்யும் சத்தி; வள்ளி கிரியா சத்தி.

முருகப்பெருமான் திருக்கையில் ஏந்திய வேல், சிவபிரான் திருக்கரத்தில் உள்ள இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்று சத்திகளாய் விளங்கும் மூவிலைச் சூலம்போன்று, இம்மூன்று வேறுபாடுகள் காட்டாது ஒன்றாகத் திகழும் அகண்ட சிற்சத்தியாம். சிற்சத்தி என்பது ஞான சத்தி. வேல் தாங்கிய முருகப்பெருமான் ஞானசத்திதரன்' என்னும் பெயர் கொண்டது இக்காரணம் பற்றியேயாம்.

சிவபெருமானுக்கு மகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்து இருப்பதுபோன்று, முருகப்பெருமானுக்கு ஞானசத்திதரர், கந்தர், தேவசேனாபதி, சுப்பிரமணியர், கஜாரூடர், சரவணபவர், கார்த்திகேயர், குமாரர், சண்முகர், தாரகாந்தர், சேனாபதி, பிரமசாத்தர், கல்யாணர், பாலசுப்பிரமணியர், கிரௌஞ்சத்துவஞ்சர், மயூர வாகனர் போன்ற பல மூர்த்தங்கள் உள்ளன.

## 1. ஞானசத்திதரன்

சத்தி என்பது ஓர் ஆயுதம் ஆகும். முருகப்பெருமான் சத்தியாகிய ஆயுதத்தை வலக்கையில் ஏந்தியிருக்கிறான். ஆதலால் திருத்தணிகைத் திருக்கோயிலிலுள்ள முருகப்பெருமான் ஞானசத்திதரன்.

## 2. கந்தர்

"சேயோன் வடிவம் ஆறும் திரட்டி நீ ஒன்றாய்ச் செய்தாய், ஆனதனாலே கந்தன் எனும் நாமம் பெற்றான்" எனச் சிவபெருமான் உமாதேவியை நோக்கிக் கூறியதாகக் கந்தபுராணம் கூறுகிறது. கடவுளர் பலரின் ஆற்றல் ஒருங்கே திரண்டவன் கந்தன் என்னும் பொருளும் இப்பெயரில் உள்ளது. கந்து நடுதறியையும் குறிக்கும். இது தண்டாயுதம் ஆகும். ஆதலால், கந்தன் என்னும்சொல் பழனியாண்டவர் திருவுருவத்தையும் குறிக்கிறது.

## 3. தேவசேனாபதி

பிரமதேவன், திருமால் ஆகிய தேவர்கள் படைக்குத் தலைவர் ஆதலின் முருகப் பெருமான் தேவசேனாபதி என்னும் பெயர் பெற்றார். "பிரமதேவன், திருமால் முதலிய சேனைகட்கு ஜகத்குருவாகிய ஸ்ரீசுப்பிரமணிய மூர்த்தி, சேனாபதியாமாறு அவருக்கு வேத வேதாந்தங்களின் கரையைக் கண்ட வசிட்டர் முதலிய பிரம இருடிகள் பிரமாண்டத்தின் மேல் உறை புண்ணிய க்ஷேத்திர தீர்த்தங்களால், பற்பல வேத மந்திரங்களை ஓதிக்கொண்டு பட்டாபிஷேகம் செய்தனர்" என்று வடமொழி ஸ்காந்தபுராணம் சம்பவகாண்டத்தின் 32-ஆம் அத்தியாயத்து 89-ஆம் சுபோகத்தில்

கூறுவதைத் திரு பாம்பன் சுவாமிகள் எடுத்துக்காட்டுகிறார் (சுப்பிரமண்ய வியாசம் பகுதி 40).

## 4. சுப்பிரமணியர்

சுப்ரமண்யம் (ஸுப்ரஹ்மண்ய) என்னும் வடமொழிச் சொல் மூன்று வேர்ச்சொற்களைக் கொண்டது.

சு - (ஸு) என்னும் சொல்லின் பொருள் சுகத்தைக் குறிக்கும். இது தூய (பரிசுத்த) சுகம்; இதுவே ஆனந்தம்.

பிரம்மம் (ப்ரஹ்மம்) என்பதின் பொருள் இணையற்று எங்கும் நிறைந்துள்ள அகண்ட சிதாகாசம்; ஞானப்பெருவெளி என்பதாம்.

ணியம் (ந்யம்) அந்தப் பிரமத்தினின்றும் வெளிப்பட்டு விளங்கும் பேரொளி. 'ந்யம்' என்பது வடமொழி இலக்கணப்படி 'ணயம்' எனத் திரியும். சுப்பிரமணியர் சுவானுபூதிச் செல்வர்களுக்கு அந்த அனுபூதிப் பொருளாய்ப் பிரகாசிப்பவர். (பாம்பன் சுவாமிகள் அருளிய தகராலய ரகசியம்; இரண்டாம் காண்டம் பா.43, சுவாமிகள் உரை) "அனாதி நித்தியப்பிரமஞானாந்த சிவப்பிரகாசம் என்று ஓத உள்ள பரஞ்சோதியாய்ப் பிரகாசிப்பதான அனுபவ சொரூபமே சுப்பிரமணியம் என்று அறியவேண்டும்" (பாம்பன் சுவாமிகள், சுப்பிரமணிய வியாசம் பகுதி 58).

## 5. கஜாரூடன் (களிற்றூர்திப் பெருமான்)

முருகப் பெருமானுக்கு யானை வாகனமும் உண்டு. இத்திருவுருவத்தினை நக்கீரர் தாம் இயற்றிய திருமுருகாற்றுப்படையில் திருச்சீரலை வாயில் பகுதியில் விரித்துரைத்துள்ளார். இவ்வாறு ஆண்யானை மீது ஒரு முகமும் நான்கு கைகளும் உடையவராய், இடப்பக்கத்துக் கைகள் இரண்டில் உரு எழுதிய கோழிக்கொடியும் கேடயமும் வலப்பக்கத்துக் கைகள் இரண்டில் வேலும் வாளும் ஏந்தியிருக்கிறார்.

## 6. சரவணபவன்

"சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஆறுபொறிகளை நாணல் நிறைந்த சரவணப்பொய்கையில் இட்டபோது அதனின்று அவர் தோன்றியதன் காரணமாக இப்பெயர் முருகப் பெருமானுக்கு அமைந்தது. சரம் - நாணல்; வணம் - செறிவு. இலகு நீர் என்னும் பொருளைத்தருவது. பவன் - தோன்றினவன். நாணற்புற்கள் செறிந்த பொய்கையில் தோன்றினான் சரவணபவன்" (பாம்பன் சுவாமிகள் சுப்பிரமணிய வியாசம் - 28).

## 7. கார்த்திகேயர்

சரவணப் பொய்கையில் குழந்தை வடிவிலிருந்தபோது கார்த்திகைப்பெண்கள்

அறுவர் திருமுலைப்பாலூட்டியதால் இப்பெயர் அமைந்தது. இதில் இவருக்கு ஆறுமுகங்கள் உள்ளன. தமக்குப் பாலூட்டிய கார்த்திகைப் பெண்களின் நினைவாகத் தமக்குத் திங்கள்தோறும் நடத்தப்பெறும் சிறப்பு வழிபாட்டுக்குக் கிருத்திகை என்னும் பெயர் அமையுமாறு இவரே அருள்புரிந்தார்.

## 8. குமரர்

குமரன், குமாரன் என்னும் பெயர்கள் சிவபெருமான மகன் என்னும் பொருளைக் கொண்டுள்ளன. குமாரன் என்பது இளையோன் என்னும் பொருளும் தருதலால், இப்பெயர் பிரமசாரி என்ற பொருளையும் தரும். வடமொழி ஸ்காந்தபுராணம் சம்பவகாண்டம், முதல் அத்தியாயத்து, 10_ஆவது சுலோகம் அறுமுகனைப் 'பிரஹ்மசாரி' என்று கூறுகிறது. அதனால் குமாரக் கடவுளின் தேவிகளை நித்திய கன்னிகைகள் எனவே நாம் அறியவேண்டும். சிவனும் சத்தியும் இணைந்து அண்டங்கள் எல்லாவற்றையும் தோற்றுவித்தபோதும் சத்தி கன்னியே என்று சிவஞானசித்தியார் கூறுவதுபோன்று தெய்வயானை. வள்ளி ஆகிய இருதேவியர்களும் கன்னியர்களேயாம்.

கு - அருவருப்பு; மாரன் - நாசம் செய்பவன் என்று வடநூலார் பொருள் கூறுவர். கு - அருவருக்கத்தக்க மலபந்தம்; பாசம்; "எனவே குமாரன் என்னும் சொல்லுக்கு உயிர்களின் பாசத்தைப் போக்கியருள்பவர் என்றே தமிழில் பொருள் கொள்ளப்படும்" (பாம்பன் சுவாமிகள் சுப்பிரமணிய வியாசம் 22).

## 9. ஆறுமுகர்

சிவபிரானுடைய முகங்கள் ஐந்தும் சிற்சத்தியாகிய முகம் ஒன்றும் ஆக ஆறு திருமுகங்கள் கொண்டவர். தம் அடியார்களுக்கு அஞ்சுமுகம் (இடுக்கண்) தோன்றும் போதெல்லாம் ஆறுமுகம் கொண்டு வந்து தோன்றி அருள்புரிகிறார். "அஞ்சுமுகம் தோன்றாமல் ஆறுமுகம் காட்ட வந்த செஞ்சரணச் சேவடியைச் சிந்தை வைப்பது எந்நாளோ" எனத் தாயுமானவர் கூறுகிறார்.

ஞானம், ஐசுவரியம், திரு, வீரியம், வைராக்கியம், புகழ் என்னும் இறை குணங்கள் ஆறும் ஆறுமுகங்களாயின என்பர் சான்றோர். இவ்வகையில் ஆறுமுகன், சண்முகன் என்னும் பெயர்கள் அமைந்தன. வேல், அம்பு முதலியவற்றைத் தாம் ஏந்திக்கொண்டு இருபுறங்களிலும் வள்ளி தெய்வயானையோடு மயில்மீது இவர்ந்தோ உடனிருந்தோ காட்சியளிக்கிறார் எனத் திருமுருகாற்றுப்படைப் பாடல் இத்திருவுருவத்தைச் சிறப்பித்துக் காட்டுகிறது.

## 10. தாரகாந்தன்

சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் என்னும் அசுரர்கள் மூவரையும் முருகப்பெருமான் அழித்தார் என்பது கந்தபுராண வரலாறு. தாரகன் மாயையில் வல்லவன். கிரவுஞ்சம் என்னும் மலையின் குகையில் புகுந்து வீரவாகு தேவர்

முதலியோர்களை மயக்கமுறுமாறு செய்தான். முருகப்பெருமான் தனது வேலால் தாரகனை அழித்தார். அதனால் இவர் தாரகாந்தர் என்னும் பெயர்பெற்றார். தாரகனுக்குக் கந்தர் இயமனாகத் தோன்றியவர். இவர் ஆறுதிருமுகங்களோடும் பன்னிரு கைகளோடு காட்சியளிக்கிறார்.

## 11. பிரமசாத்தர்

சிவபெருமானை வணங்கப் பிரமதேவன் கயிலைக்குச் சென்றபோது முருகப் பெருமானை வணங்காது எளிதாக அவரை நினைத்ததால், முருகப்பெருமான் வீரபாகு தேவரைக் கொண்டு பிரமதேவரைப் பிடித்து வந்து, அவரது தொழில் முதலியவை பற்றியும் பிரணவ மந்திரத்தின் பொருளைப் பற்றியும் வினவினார். பிரணவத்தின் உட்பொருளை அவரால் கூற இயலவில்லை. ஆதலால், அவரை முருகப்பெருமான் குட்டிச் சிறையிலிட்டார். பின் அவரது படைப்புத் தொழிலை முருகப்பெருமானே மேற்கொண்டார். பிரமசாத்தர் என்னும் சொல் பிரமனைத் தண்டித்தவர் என்னும் பொருள் கொண்டுள்ளது. (சாத்தன் . தண்டிப்போன்) இத்திருவுருவத்தில் முருகப்பெருமான் ஒரு திருமுகமும் நான்கு கைகளும் கொண்டு வலக்கையில் அடயமுத்திரையும் உருத்திராக்கச் செபமாலையும் கொண்டுள்ளார்; வரதமுத்திரையும் கமண்டலமும் இடக்கையில் உள்ளன. இத்திருவுருவங்கள் குமரக்கோட்டத்திலும் திருப்போரூர்க் கந்தசாமி கோயிலிலும் உள்ளன.

## 12. வள்ளி மணாளன்

முருகப்பெருமான் தெய்வயானையின் கணவர் எனினும் அவரை வள்ளி கணவன் என்றே துதிக்கிறார்கள். உலகில் இல்வாழ்வு இனிது நடைபெறுவதற்காக முருகப்பெருமான் வள்ளியை மணம்புரிந்தார். வலக்கைகளில் அபய முத்திரையும் உருத்திராக்க மணிவடமும் ஏந்தி, இடக்கையில் வரத முத்திரையுடனும் ஒருமுகமுடையராய்த் திருமால் தாரை நீர்வார்த்துக் கொடுக்க வலப்பக்கமுள்ள வள்ளியை ஏற்று மணந்துகொள்ளும் நிலையில் இத்திருவுருவம் உள்ளது.

## 13. பாலசுப்பிரமணியர் (இளமுருகன்)

இவர் ஒரு திருமுகமும் இரண்டு கைகளும் உடையராய் வலக்கையில் தாமரை மலர் ஏந்தி இடக்கையைத் தம் இடுப்பில் வைத்துக் கொண்டிருக்கிறார். இவரைப் பாலசுந்தரர், பாலசுவாமி என்னும் பெயர்களிலும் குறிப்பிடுவர். இவர்தம் திருவடிகளில் இளஞ்சிறார்க்குரிய கிண்கிணிச் சதங்கை அணிந்திருக்கிறார்.

## 14. கிரவுஞ்சபேதனர்

கிரவுஞ்சம் என்பது சூரபதுமன் தம்பியாகிய தாரகன் உறைவிடம். இங்கு இவனை வெல்லச் சென்ற வீரவாகு தேவரும் அவர் துணைவர்களும் தாரகனின் கிரவுஞ்சமலையில் சிக்கி மயக்கமுற்றார்கள். முருகப்பெருமான் தம் வேலைக் கொண்டு அம்மலையைப் பிளந்து வீரபாகு முதலியோரை விடுவித்தார். சங்ககால

நூல்கள் கிரவுஞ்சபேதனரை "குருகுபெயர்க்குன்றம் கொன்றோன்" எனக் குறிப்பிடுகின்றன. இவர் ஆறுமுகங்களும் எட்டுக்கைகளும் உடையவர்.

## 15. சிசிவாகனர்

முருகன் மயில் வாகனத்தை ஊர்தியாகக் கொண்டவர். சிசி என்பது மயிலுக்குப் பெயர். மயில் கொடியாகவும் உள்ளது.

## 16. அஜாரூடர்

பிரமன் ஒரு வேள்வியை நாரதரிடம் செய்யுமாறு கூற, அவர் அதனைத் தவறாக மந்திரம் ஓதிச் செய்தார். அதிலிருந்து ஒரு செந்நிறமுடைய ஆட்டுக்கடா தோன்றி உலகை அழிக்க முனைந்தது. முருகப்பெருமான் வீரவாகுதேவரை அனுப்பி அதனைப் பிடித்துவரச்செய்து அதனை அடக்கித் தனது வாகனமாக்கிக் கொண்டார். இந்நிலையில் அவருக்கு அஜாரூடர் என்னும் பெயர் வழங்குகிறது. (அஜம் - ஆடு, ஆரூடர் - அதன் மீது ஏறிவருபவர்).

## 17. சிம்ம வாகனர்

பிரம்மசாத்தர் வடிவத்திற்குச் சிம்மவாகனம் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இவருக்குச் சிம்மவாகனர் என்னும் பெயர் வழங்குகின்றது.

# சூரியன்

### (தனித்த நிலையிலும் நவக்கிரகங்களோடும்)

சூரியவழிபாடு தொன்றுதொட்டு விளங்கிவருகிறது. சூரியன் ஒளியின் தலைவனாவான். சூரியனை ஒட்டியே உயிர்கள் வாழ்கின்றன. சைவம் சூரியனைச் சிவசூரியனாகவும் வைணவம் சூரியநாராயணனாகவும் போற்றுகின்றன. சூரியன் மனைவியர் உஷா, சாயா எனவும் உஷா, பிரத்யுஷா எனவும் அழைக்கப் பெறுகின்றனர். சூரியன் ஏழு வண்ணங்களையுடைய ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றைச் சக்கரத்தேரில் பவனி வருகின்றார். வானமண்டலத்தில் சூரியன் நடுநாயகமாகவும் மற்றக் கோள்கள் அவரைச் சுற்றியும் அமைந்திருக்கும்.

சிவன் கோயில்களில் உட்பிராகார வடகிழக்கு முனை சூரியபதமாகக் கருதப்பட்டு அங்குச் சூரியனை நிலைப்படுத்தி வணங்குகின்றனர். சூரியன்

தலையைச்சுற்றி ஒளிமண்டலம் விளங்குகிறது. சூரியனின் தேரோட்டி கருடபகவானின் உடன்பிறந்தாராகிய அருணன் ஆவார். சிவபூசையின் தொடக்கத்தில் சூரியனை வழிபடவேண்டும்.

கோயில்களில் நவக்கிரகத்தை அமைக்கும்போது நடுவில் சூரியனை அமைத்து வழிபடுவர். பல இடங்களில் இவர் தேவியாரோடு காணப்பெறுகிறார். காஞ்சிபுரம் கச்சபேசர் கோயில் சூரியனால் வழிபாடு செய்யப்பட்ட கோயிலாகும். இன்றும் அக்கோயிலில் கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் சூரியனை முன்னிட்டுச் சிறப்பான விழாக்கள் நடைபெறுகின்றன.

மயூரசன்மன் எனபான் தனக்கு நேர்ந்த கண் இழப்பை முன்னிட்டு இக்கோயில் இஷ்ட தீர்த்தம் எனும் சூரிய தீர்த்தத்தில் மூழ்கி வழிபட்டுக் கண்பார்வை பெற்றான். அவன் இயற்றிய சூரிய சதகம் இக்கோயில் சுவரில் பொறிக்கப்பட்டிருந்ததென்று கூறுவர். கோயம்பேடு குசலவபுரீசுவரர் கோயில் போன்ற கோயில்களில் உள்ள நவக்கிரகங்களில் சூரியன் தேவியரோடு குதிரைகள் பூட்டிய தேரில் வருவதாகத் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

## சண்டேசுவரர்

சோழநாட்டில் மண்ணியாற்றின் தென்கரையில் சேய்ஞலூர் என்னும் சிவத்தலம் இருக்கிறது. சேய் ஆகிய முருகர் சிவபெருமானை வழிபட்ட இடம் சேய் நல் லூர். இங்கு வாழ்ந்த அந்தணச் சீலர் எச்சதத்தன் என்பவர் மகன் விசார சருமர். இவர் இளம்வயதிலேயே கலைகள் பலவும் கற்றுத் தெளிவுபெற்றவர். ஒருநாள் பசுக்களை அடித்துக் கொடுமை செய்த ஓர் இடையனை விலக்கிவிட்டுத் தாமே அப்பசுக்களை மேய்த்து அவற்றை அவற்றின் உரிமையாளர்களிடம் சேர்ப்பித்து வந்தார். இவரது பேரன்பின் விளைவாகப் பசுக்கள் மிகுதியான பால் சுரந்தன. அதனைத் தாம் வழிபாட்டிற்கென மண்ணால் அமைத்துக்கொண்ட சிவலிங்கத்திற்கு அபிடேகம் செய்வதற்குப் பயன்படுத்தி வந்தார். இதனைக் கண்ணுற்ற அப் பசுக்களின் உரிமையாளர்கள் எச்சதத்தனிடம் முறையிட, அவர்தம் மகன் சிவபூசைக்கென வைத்திருந்த திருமஞ்சனக்குடப் பாலைத் தம் காலால் இடறிச்சிந்தினார். வழிபாட்டில் திளைத்திருந்த விசார சருமர், தம்மை மறந்த நிலையில் அருகிலிருந்த ஒரு கோலை எடுத்து எச்சதத்தன் மீது எறிந்தார். அது சிவன் அருளால் மழுவாகமாறி எச்சதத்தனின் இரு கால்களையும் வெட்டிக் கீழே வீழ்த்தியது. பின்னரும் விசார சருமர் சிவ வழிபாட்டிலே மனம் ஒன்றி நின்றார். அப்போது சிவபெருமான் வெளிப்பட்டு "நம் பொருட்டால், ஈன்ற தந்தை விழ எறிந்தாய் அடுத்த தந்தை இனி உனக்கு நாம்" என்று அருளிச்செய்து அவரை அணைத்துத் தழுவி உச்சிமோந்து மகிழ்ந்தார்.

விசாரசருமர் சிவபெருமான் திருமலர்க்கையால் தீண்டப் பெற்றதால் சிவமாகி ஒளி வடிவம் பெற்றார். சிவபெருமான் அவரைத் தொண்டர்களுக்குத் தலைவராக்கி "எமக்கு நிவேதனம் செய்யப்படும் பொருள்கள் யாவும் இனி நினக்கே உரியன. நினக்குச் சண்டீசன் என்னும் பதவி தந்தோம்" என அருளி அதற்கு அடையாளமாகத் தம் மாலையை அவருக்குச் சூட்டித் திருவருள் புரிந்தார். இதன் காரணமாகச் சிவபெருமான் மூர்த்தங்களுள் சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தம் என்பதும் ஒன்றாக ஆகியது. சண்டேசுவரர் வரலாற்றை அப்பர் தமது திருச்சாய்க்காட்டுத் திருநேரிசைப் பதிகத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

"ஆமலி பாலும் நெய்யும் ஆட்டி அர்ச்சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறாததன் தாதைதாளைக்
கூர்மழுவொன்றால் ஓச்சக் குளிர்சடைக்கொன்றைமாலைத்
தாமநற் சண்டிக்கீந்தார் சாய்க்காடு மேவினாரே" (4.65.6)

இந்த வரலாறு பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. இம்முறையில் சண்டேசர் என்னும் பெயர் பெற்ற இவர் "அரனார் (சிவபெருமான் ) மகனார் ஆயினார்" எனச் சேக்கிழார் தாம் அருளிய பெரிய புராணத்தில் கூறியுள்ளார். விநாயகர் மூத்த பிள்ளையார்; முருகப்பெருமான் இளையபிள்ளையார்; திருஞானசம்பந்தர் ஆளுடைய பிள்ளையார்; சண்டேசுவரர் சேய்ஞலூர்ப் பிள்ளையார் ஆவர். இக்கோட்பாட்டிற்கேற்பச் சிவன் கோயிலின் வரவு செலவுகள் சண்டேசுவரர் பெயரில் எழுதி வருவது பண்டைக்காலத்து முறையாகும். இம்மரபினையே கீழ்க்காணும்,

"சண்டீச் சரன்ஓலை சாகரர்சூழ் வையத்தீர்
கண்டீச் சுரன்கருமம் ஆராய்க - பண்டே
அறஞ்செய்தான் அறங் காத்தான் பாதம்
திறம்பாமைச் சென்னி மேல் வைத்து"

என்னும் கல்வெட்டுப் பாட்டு தெரிவிக்கிறது. "சண்டேசுவரர் அறத்தைச் செய்தார்: அவர் செய்யும் அறத்தைக் காத்தவர் சிவபெருமான். அருகில் இருந்த கோலை மழுவாக்கி, அதைச் சண்டேசுவரர் எறியுமாறு செய்து, அறத்துக்குத் தடையாக நின்ற எச்சதத்தனின் இருகால்களையும் ஒடித்தார். இறைவன் திருவருளன்றி வேறன்று. அத்திருவருளாகிய திருவடியை உங்கள் சென்னி மேல் என்றும் நீங்காதவாறு வைத்து உய்ம்மின்" என்கிறது இத்திருப்பாடல். இப்பாடல் அறங்களைச் செய்யும்போது நான் செய்தேன் என்னும் தன் சிறப்பு - இன்றி, இறைவனது திருவருளே அறத்தைச் செய்வித்தது என எண்ணிச் செய்தல் வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறது. இக்காரணம் பற்றியே பண்டைக்காலத்தில் சண்டேசுவரர் பெயரால் அறத்தைச் செய்து வந்தனர் என்பது புலனாகும்.

மேலே கூறப்பட்ட கல்வெட்டுப் பாடல் மதுராந்தகம் வட்டம் பெரும்பேறு கிராமம் தான்தோன்றீசுவரர் கோயிலின் முன் மண்டபத்துத் தெற்குச்சுவரில் காணப்படுகிறது. கோயிலின் உடைமைகளைச் சண்டேசுவரர் பெயரில் எழுதி

வருவது முற்காலத்து முறையாகும். சிவன் கோயில்களுக்கு வகுக்கப்படும் அறக்கட்டளைகளை ஒழுங்காகச் சண்டேசுவரர் பெயரில் எழுதி வருகிறார்கள்.

சிவன் கோயில்களில் சிவலிங்கத் திருமேனியின் அபிடேக நீர் விழும் கோமுகியை அடுத்து அருகில் அமைக்கப்பட்டுள்ள சிறு மண்டபத்தின் தெற்கு நோக்கியவாறு சண்டேசுவரர் திருவுருவத்தை நாம் வழிபடுகிறோம். இவருக்குச் சண்டேசுவரர், சண்டீசுவரர், சண்டகேசர், சண்டேசுவரநாயனார் என்னும் பெயர்களும் உள.

திருக்கோயிலுக்குச் சென்று வழிபடும் அன்பர்கள், கோயிலை வலம் வராது ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கிப் பின்னர்ச் சண்டேசுவரர் கோயிலை அடைந்து கோயில் வழிபாட்டின்போது பெறப்பட்ட பூமாலை முதலிய நின்மாலியப் பொருள்களைச் சண்டேசுவரர் சந்நிதியில் சேர்த்து, "சிவவழிபாட்டுப் பயனை அளித்தருள்க" என அவரிடம் வேண்டிக்கொள்ள வேண்டும். அதன்பின்னர் அவர் நமக்கு அப்பயனை அளித்தார் எனக் கொண்டு அப்பொருள்களை ஏற்றுக் கொள்ளவேண்டும். இப்பொருள்கள் சிவநின்மாலியங்கள் எனப்படும். நின்மலம் லியங்கள் என்பது அழுக்கின்மையாகித் தூய்மை பெற்றவை. இவை சிவநின்மாலியங்களாகும்.

சண்டேசுவரர் சிவனடியார்கள் அனைவருக்கும் தலைமை கொண்டவர். இவருக்குத் தொண்டர் நாயகம் என்னும் பெயர் உள்ளது. இதனைத் திருவிசைப்பாப் பாடல்,

"தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித்தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்கும் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுகமே"

எனக் கூறுகிறது.

சண்டேசுவரர் தியான வடிவத்தை அகோர சிவாச்சாரியர் தமது "பரார்த்த நித்திய பூஜாவிதி" என்ற நூலில் உணர்த்துகிறார்.

"இரண்டு கண்களையும் பொன் வண்ணத்தையும் உடையவராயும் சடாமகுடத்தால் அலங்கரிக்கப் பெற்றவராயும் வலக்கையில் பரசையும் (மழுவையும்) இடக்கையை ஊரு ஹஸ்தமாகவும் (தொடையில் வைத்த கையாகவும்) வலக்காலைத் தொங்கவிட்டுக் கொண்டும் இடக்காலைப் படுக்க வைத்துக் கொண்டும் இருப்பவராயும் பூணூல்களால் அலங்கரிக்கப்பட்டவராயும் அதிகமான சாந்தியை உடையவராயும் இருக்கும் சண்டேசுவரரைத் தியானிக்கிறேன்" என்று தியானித்துப் பூசிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

ஆகமங்களில் நான்கு வகையான சண்டேசுவரர்கள் கூறப்படுகின்றனர்.

ஒவ்வொரு யுகத்தினும் வெவ்வேறு உருவங்களைக் கொண்டவராகவும் வெவ்வேறு பெயர்களைக் கொண்டவராகவும் விளங்குகின்றார்.

## கிருதயுகத்தில் உருத்திர சண்டேசுவரர்

இவர் நான்கு திருமுகங்கள், நான்கு கைகளிலும் சூலம், உருத்திராக்க மாலை, பரசு (மழு), கமண்டலம் ஆகியவற்றைக் கொண்டவர். இவரே சிவபூசையில் மூன்றாவது ஆவரணத்தில் பூசிக்கப்பெறும் கணநாதர்களில் ஒருவர். திரேதா யுகத்தில் பிரசண்டர்; ஒரு முகம், நான்கு கைகள், அவற்றில் சூலம், உருத்திராக்க மாலை, டங்கம் (உளி), கண்டி ஆகியவை கொண்டவர். துவாபர யுகத்தில் வீரசண்டர்; இவர் வடிவம் பிரசண்டர் போன்றது. கலியுகத்தில் தலனிசண்டர்; இவர் வடிவம் இரு கைகள்; மழுதாங்கியது ஒன்று; மற்றொன்று தொடை மேல் வைத்தது.

மேலும்,

| | | |
|---|---|---|
| விநாயகப் பெருமானுக்கு | - | கும்ச சண்டர் |
| சுப்பிரமணியருக்கு | - | மித்ர சண்டர் |
| சிவபெருமானுக்கு | - | தவனி சண்டர் |
| தேவிக்கு | - | யமனீ சண்டர் |
| சிவசூரியனுக்கு | - | தேஜ சண்டர் |

என்னும் பெயர்களை ஆகமங்கள் கூறுகின்றன. மூன்றாவது ஆவரண சண்டேசுவரரை 'க்ரியாக்ரமத் யோதி' என அகோர சிவாசாரியார் அருளிய நூல் குறிப்பிடுகிறது. அவரை "நான்கு முகங்கள், பன்னிரண்டு கண்கள், நான்கு கைகளில் கமண்டலம், சூலம், செபமாலை, மழு ஆகியவற்றை உடையவராகவும் நாகத்தைப் பூணூலாக அணிந்தவராகவும் தியானிக்க வேண்டும்" என்று இந்நூல் கூறுகிறது. சிவனே உருத்ரசண்டர்.

# வயிரவர்

ஐந்து முகங்களுடன் விளங்கிய பிரமதேவன் தன்னை ஐந்து முகமுடைய சிவபெருமானோடு சமநிலை கொண்டாடியபோது, பிரமதேவன் செருக்கை அடக்க வயிரவர் தன் நகத்தால், பிரமதேவன் உச்சி மேலிருந்த தலையைக் கொய்தார். அதன் பின்னர் ஐந்து தலை கொண்டிருந்த பிரமதேவன் தனது ஒரு தலையை இழந்து நான்முகனாயினான். வயிரவர் சிவபெருமான் நெற்றியில் தோன்றியவர் எனக் கடம்பவனப் புராணம் கூறுகிறது.

'பரார்த்த நித்திய பூஜா' விதி "செம்மை வண்ணம் உடையவராகவும் மூன்று கண்களையும் இரண்டு சடைகளையும் உடையவராகவும் கைகளில் மருகம், சூலம் என்னும் இவற்றைத் தரித்தவராகவும் நிர்வாணராகவும் கிண்கிணி மாலையை அணிந்தவராகவும் இளமைப்பருவத்தில் அழகானவராகவும் உள்ள வயிரவரை வணங்குகின்றேன்" என்று வயிரவரைத் தியானித்துப் பூசிக்க வேண்டும் என்கிறது.

வயிரவர் சிவகுமாரராகக் கருதப் பெறுபவர். இவர் ஒவ்வொரு சேத்திரத்திற்கும் அதிபதி. இவருக்கு சேத்திர பாலகர் என்னும் பெயரும் அமைந்துள்ளது. இவர் நாய் வாகனத்தை உடையவர். குருரூப வயிரவர், அசிதாங்க வயிரவர், கால வயிரவர், சண்ட வயிரவர், உன்மத்த வயிரவர், கபால வயிரவர், பீசண வயிரவர், சம்மார வயிரவர் என வயிரவர் எண்மர் உளர். காசி சேத்திரத்தை மகாகால வயிரவரும் தில்லையைக் கால வயிரவரும் காத்துவருவதாக மரபுவழிச் செய்தி கூறுகிறது. தில்லைச் சிற்றம்பலத்தில் சுவர்ண கால வயிரவர் உற்சவத் திருமேனியாக உள்ளார்.

காஞ்சி ஏகாம்பரர் கோயிலில் அசிதாங்க வயிரவர் உற்சவத் திருமேனியாக உள்ளார். கால வயிரவர் சந்நிதி எப்போதும் தெற்கு நோக்கியவாறு இருக்கும். மற்ற எழுவகை வயிரவர்கள் மேற்கு நோக்கியோ தெற்கு நோக்கியோ இருப்பர். வயிரவ பதம் என்பது கோயிலில் சுவாமி சந்நிதியின் வடகிழக்கு முனையில் சற்றுத் தென்புறம் தள்ளி அமைந்திருக்கும். எட்டு வயிரவர் உருவங்களுக்கும் காஞ்சிபுரத்தில் சிறுசிறு சந்நிதிகள் ஒரு கோயிலில் உள்ளன. இது தற்போது சோழீசுவரர் கோயில் என விளங்கிவருகிறது.

## நந்திதேவர்

நந்திதேவர் சிவகணங்களுக்குத் தலைவர். சிவபெருமானது திருவுருவம் போன்று தாமும் நெற்றிக்கண், நீலகண்டம், நான்கு திருக்கரங்கள் ஆகியவற்றைக் கொண்ட திருவுருவம் பெற்று, சிவபிரானது திருநாமமாகிய நந்தி என்னும் பெயரையும் தாங்கியவர். நந்தி என்பது சிவபெருமானது பெயர் என்பதனை "நந்தி நாமம் நமச்சிவாயவே" என்ற திருஞானசம்பந்தர் பெருமான் திருவாக்காலும் "நந்தியருளாலே" "நந்தியருள் பெற்ற", "நந்தியிணை அடி" போன்ற திருமூலர் திருவாக்குகளாலும் அறியலாம். தேவர்கள் அனைவரும் இவரது அனுமதிபெற்றே சிவபெருமானைத் தரிசிக்க உள்ளே செல்ல வேண்டும். இது பற்றி இவர் அதிகார நந்தி எனப்பெயர் பெற்றுள்ளார். இவர் திருவுருவத்தைப் பற்றிக் கடம்பவனப் புராணம் கூறுகிறது. இவர் தமது நான்கு திருக்கரங்களிலும் மழு, மான், பொற்பிரம்பு, வாள் ஆகியவற்றைத் தாங்கியவர். இறைவனைப் போல் சந்திரனைச் சடையில் தரித்தவர்; யானைத்தோல் உடுத்தவர்; புலித்தோலை மேலே உத்தரிகமாக உடையவர்; நீலகண்டம் உடையவர்; மார்பில் உருத்திராக்க மாலையும்

முத்துமாலையும் அணிந்தவர்; அழகான நெற்றியில் நீற்றைப் புண்டரிகமாக அணிந்தவர்; இவர்தம் தேவி இவரது இடப்பால் வீற்றிருப்பர். சிவபெருமானை எப்போதும் தியானித்துக் கொண்டிருப்பவர்; சிவகணங்கள், தேவர்கள், யோகிகள் ஆகியோர் பலர் இவரைச் சூழ்ந்து வழிபட்டு நிற்பர்.

நந்தீசர் உறைவர் சிவ கணங் கட்கெல்லாம்
நாயகமர்; அக்கணங்கள் சூழ்ந்து போற்ற
எந்தீசன் தனக் கிரண்டாம் ஈசன்என
மழு உழை பொன் மணிப்பிரம்பு தாங்கித்
தந்தீசன் உதவு பிறை வேணி ஓங்கத்
தந்தி புலியுரி உடை உத்தரிகமாக
இந்தீசன் போன்று பிரசன்னமாகி
எழில்வதனம் தொழுபவர்க்கும் கருணை நல்க.

தந்தரத்தில் விடம் இலங்க அங்கமாலை
கவின்பெறு முத்தார வடம் மார்பின் மல்கச்
சுந்தர நெற்றியில் திரிபுண்டர வெண்ணீறு
துலங்கிடக் காமன் வல்லி இடப்பால் மேவ
அந்தரத்தர் யோகர் நறுமலரிட்டேத்த
அருமறை ஆகமம் துதிப்ப அலைகொண்டே தாம்
சிந்துரத்தின் உரிபோர்த்த சிவனைச் சிந்தை
செய்திருப்பர் நித்திய தத்துவம் பெற்றோங்கி.

(- கடம்பவனப் புராணம், மகா கயிலை மான்யம்
உரைத்த அத்தியாயம் பா. 58, 59.)

சிவபூசையில் ஐந்து ஆவரண அதிதெய்வங்களைப் பூசிக்கும்போது, மூன்றாவது ஆவரணத்தில் நந்திதேவர் பூசிக்கப்பெறுவர். மூன்றாம் ஆவரண அதிதெய்வங்கள் நந்தி, மகாகாளர், பிருங்கி, கணபதி, இடபதேவர், கந்தர், தேவி, சண்டேசுவரர் ஆகிய எட்டுக் கணத்தலைவர்கள். (கணநாதர்கள்) இவர்கள் ஈசானம் முதலிய எட்டுத் திக்குகளிலும் சிவபெருமானைச் சூழ்ந்து வீற்றிருந்து சிவபெருமானைத் தியானித்துக் கொண்டிருப்பவர். இக்கணத்தலைவர்கள் பல்லோரிலும் தலைசிறந்தவராய் ஈசான திக்கில் எழுந்தருளி இருப்பவர் நந்திதேவர். நந்திதேவரை சத்தி, குண்டலி என்று பரார்த்த நித்திய பூஜாவிதியால் நாம் அறிகிறோம்.

நந்திதேவர் கீழ்க்காணுமாறு பல பெயர்களில் விளங்குகிறார்.

**பாலநந்தி** : மகாமண்டபத்தில் இறைவனை நோக்கி எழுந்தருளியிருக்கிறார். பல **கோயில்களில்** பித்தளையால் இவர் உலாத்திருமேனியாக உருவாக்கப் பட்டிருக்கிறார்.

**மகாநந்தி** : கொடிமரத்திற்கு முன்புறம் எழுந்தருளியிருப்பவர். பிரதோடம்,

கொடியேற்றம் ஆகிய நாள்களில் இவருக்குச் சிறப்பு ஆராதனைகள் நடைபெறும்.

**இராஜநந்தி** : மன்னர்கள், தங்கள் கீர்த்தியும் மேன்மையும் விளங்குமாறு சுதையினால் செய்து வண்ணந்தீட்டி முதற்பிரகாரத்தில் மிகப்பெரிய அளவில் செய்து வைப்பது வழக்கம்.

மற்றும் எல்லாப் பிராகாரங்களில் உள்ள நந்திதேவர்கள், முதலாம் பிராகார நந்தி இரண்டாம் பிராகாரநந்தி எனப் பிராகார எண்ணிக்கையில் குறிக்கப் பெறுவர். மலைமீது இறைவன் இருக்கும்போது மலையைச் சுற்றி எட்டுத்திசைகளிலும் நந்திதேவர் திருவுருவங்கள் வைக்கப்பெறுகின்றன.

இறைவனுக்கு அநேக வாகனங்கள் இருந்தாலும் இடபம் என்னும் நந்தியே முதன்மையானது. கொடியேற்றம், இறைவன் திருமணக்காட்சி, பிரதோடம் ஆகிய எல்லா நாள்களிலும் இறைவன் இடபத்தின் மீதே எழுந்தருள்கிறார். பிரமன், திருமால், தருமதேவதை ஆகிய தேவர்களும் விடை வாகனமாக இறைவனைத் தாங்கியிருக்கின்றனர். பிரமன் தாங்கியது வேதவெள்விடை, திருமால் தாங்கியது மால்விடை, தருமதேவதை தாங்கியது தருமவெள்விடை என விளங்குகின்றன. இறைவன் அடியவர்களுக்கு ஆனேற்றின் மீது இவர்ந்து வந்தே காட்சியளிக்கிறார். இத்தகு நந்திகள் அணிமணிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சமாதியடைந்த நிறைமொழி மாந்தர்கள், சித்தர்கள் ஆகியோர் கோயில்களில் சிவலிங்கத்தை நிறுவி வழிபடுவர். அச்சிவலிங்கத்தின் முன்னுள்ள நந்தி யோகநந்தி எனப்படும். இஃது அணிமணி ஏதுமின்றி இருக்கும்.

கோயில் கோபுரங்கள், விமானங்கள் இவற்றின் முனைகள் மதிற்சுவர் உச்சி ஆகியவற்றில் நந்திதேவரின் திருவுருவங்கள் அழகுற அமைக்கப்பெறுகின்றன. சுவாமி வீதி உலா வரும்போது அவர் ஏந்திவரும் செங்கோல், கொடிமரத்தின் உச்சி ஆகியவற்றிலும் நந்தியுருவம் அமைக்கப்பெறுகின்றன. நந்திதேவர் பல புராணங்களை அருளிச்செய்தார் என்பதைப் புராணங்கள் தெரிவிக்கின்றன.

சில கோயில்களில், எடுத்துக்காட்டாக வடதிருமுல்லைவாயில், சோமங்கலம், மதுரமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களின் வெளிப்புறத்தில் நந்திதேவர் திருவுருவம் சுவாமி சந்நிதியை நோக்காது வெளிப்புறம் நோக்கியுள்ளது. இதற்கு ஒரு காரணம் காட்டப்படுகிறது. தொண்டை மண்டலத்தை ஆண்ட தொண்டைமான் சக்கரவர்த்தி, சிவபெருமானிடம் ஆழ்ந்த பற்றுடையவன். அவனுக்குத் தொல்லை தந்தவர்கள் குறும்பர் முதலானவர்கள். தொண்டைமான் சிவபெருமானிடம் இதைப்பற்றி முறையிட்டதன் பேரில் அப்பகைவர்களை விரட்டித் துரத்தி விடுமாறு நந்திதேவருக்கு ஆணையிட அவர் அவ்வாறு செய்ததை, இக்கோயில்களின் வெளிப்புறத்தை நோக்கி அவர் அமர்ந்திருப்பது காட்டுகிறது என்பர்.

# கருடர்

பிரமதேவா புதல்வர் காசிபர். காசிபருக்கும் அவர் மனைவி கத்துருவுக்கும் தோன்றியவர்கள் அருணனும் கருடனும் ஆவர். அருணன் சூரியனுக்குத் தேரோட்டியாகப் பணிபுரிந்து வருகிறார்.

கத்துருவும் காசபருடைய மறறொரு மனைவியாகிய விநதையும் தம்முள் அழகிற் சிறந்தவர் எவர் என்பது பற்றிப் பூசலிட்டுக் கொண்டார்கள். காசிபர் கத்துருவே அழகிற் சிறந்தவள் என்றார். இதற்கேற்ப விநதை கத்துருவுக்கு அடிமையானாள். இந்திரன் உலகத்திலிருந்து அமுதக் கலசத்தைக் கொணர்ந்தால், "உன் அடிமைத் தன்மையை நீக்குவேன்" என்றாள் கத்துரு. விநதை, தன் புதல்வனான கருடனை அனுப்பி அமுதக் கலசத்தைக் கொணரச் செய்து தன் அடிமைத் தன்மையை நீக்கிக் கொண்டாள். கருடர் திருமாலுக்கு ஊர்தியாகிச் சிவபெருமான் அருளால் சிறந்த வளமையும் பெற்றார். கருடர் இந்திரனை வென்று வந்ததற்காகத் திருமால் அவரைத் தமது வாகனமாக ஏற்றுக்கொண்டார். அதனால் அவருக்குப் பெரிய திருவடி என்னும் பெயரும் உண்டு.

கருடர், கருடாழ்வார் என்றும் கருத்தமன் என்றும் அழைக்கப்பெறுகின்றார். 'விரி நீல் சிறகு வியன்மார்பன்' எனத் தமிழ் இலக்கியங்கள் இவரைப் போற்றுகின்றன. திருமாலின் கொடியிலும் கருடர் உருவம் விளங்குகின்றது.

கசேந்திர வரதர் சிற்பங்களில் திருமால் கருடர் மீது இவர்ந்து வருவதாகச் செதுக்கப்பட்டுள்ளன. எல்லாத் திருமால் கோயில்களிலும் கருவறையை நோக்கியவாறு கருடர் கைகூப்பி அஞ்சலி செய்யும் வடிவில் நின்றவண்ணம் சேவை சாதிக்கிறார். ஆனால் மதுராந்தகம் போன்ற இடங்களில் முழங்காலிட்டு அமர்ந்து கைகூப்பியவடிவில் உள்ளார்; திருவரங்கத்தில் பத்மாசனத்தில் வீற்றிருந்து அஞ்சலி செய்வது போல் சுதை வடிவில் எழுந்தருளியுள்ளார். திருவரங்கம் கோயிலிலுள்ள கருடர் திருவுருவம் தமிழகத்தில் மிகப்பெரிய வடிவம் ஆகும். இஃது அழகுற வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

திருமால் கோயில்களில் சிறப்பான வாகனம் கருட வாகனமாகும். கருட வாகனம் மரம், வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் செய்யப்படுகிறது. கருட வாகனத்தில் திருமால் எழுந்தருளி வருவதைக் கருடசேவை என்பர். சில கோயில்களில் பலமுறை கருடசேவை நடைபெறும். அவை ஆனிக் கருட சேவை, வைகாசிக் கருட சேவை, வைகுண்ட ஏகாதசிக் கருட சேவை என்பனவாகும்.

வைணவ ஆகமங்களில் மூன்றாம் நாள் காலை அல்லது ஐந்தாம் நாள் இரவு

கருட வாகனசேவை விழா நடத்த விதிக்கப்பட்டுள்ளது. வைணவர்கள் வீட்டு நிலைப்படியை அலங்கரிக்கும் ஐந்து திருவடிவங்களில் (திருமண், சங்கு, சக்கரம், கருடர், அனுமர்) கருடர் வடிவமும் ஒன்றாகும்.

# ஆஞ்சநேயர்

வாயுபகவானுக்கும் அஞ்சனாதேவிக்கும் குமாரனாகப் பிறந்தவர் ஆஞ்சநேயர். இவர் தாம் பிறந்தவுடன் கிழக்கு வானில் எழும் சூரியனைச் செம்பழம் என்று எண்ணி, அதனைத் தாவிப்பிடிக்க முயன்றார். சூரியன் அஞ்சி, இந்திரனை ஏவ அவன் இவரது தாடையில் அடிக்க இவர் மயங்கி வீழ்ந்தார். அனு என்பது தாடை ஆகும். இந்த அனுவில் இந்திரனின் வச்சிராயுதத்தால் ஆஞ்சநேயர் அடிபட்டதால் இவர் அனுமன் என்னும் பெயர் பெற்றார். அஞ்சனை தேவியின் நேயத்திற்குரியவன் என்பதால் ஆஞ்சநேயர் எனப் பெயரும் பெற்றார்.

இவரது வலிமையை மெச்சிய சூரியன் இவருக்கு ஆசிரியனாக இருந்து கல்வி கற்பித்தார். பின்னர் வாலியின் தம்பியாகிய சுக்ரீவனிடம் அமைச்சரானார். பின்னர் இராம இலட்சுமணரைக் கண்டு அவர்களின் அன்பினரானார். சீதையைக் கண்டுபிடித்து இராமர் இலங்கையை வெல்ல அவருக்கு உதவினார். இராமராலும் சீதையாலும் தம் தந்தையெனப் போற்றப்பெற்றவர் அனுமர்.

சிரஞ்சீவிகள் எழுவரில் ஒருவர் ஆஞ்சநேயர். இவர் எப்போதும் இராம நாமத்தைச் செபித்து வருபவர். திருமால் கோயில்களின் வெளியில் சிறு சந்நிதியில் அனுமன், கருவறையை நோக்கி வணங்கும் நிலையில் உள்ளார்; அனுமனுக்கென்று அமைந்த கோயில்களில் வீரஆஞ்சநேயர், விஜய ஆஞ்சநேயர் போன்ற பல வடிவங்களில் காட்சியளிக்கின்றார்.

திருமால் கோயில்களில் அனுமந்த வாகன சேவை நடைபெறுகின்றது. இந்நாளில் அனுமர் தோள் மீது திருமால் எழுந்தருள்வார். சூளாமணி தந்த கண்மணி, சொல்லின் செல்வன் என இலக்கியங்கள் இவரைப் போற்றுகின்றன.

அருச்சுனனின் கொடியில் அனுமர் விளங்குகிறார். வைணவர்கள் வீட்டு நிலைப்படியை அலங்கரிக்கும் ஐந்து வடிவங்களில் அனுமரும் ஒருவர்.

இவர் கருவூலம், கோட்டைகள், மலைவழிப்பாதைகள் ஆகியவற்றினைக் காவல் காப்பவராகவும் வழித்துணைவராகவும் விளங்குகின்றார். அனுமருக்கென்று மிகப்பெரிய ஆஞ்சநேயர் சிலைகள் அமைந்துள்ளன. சாரூப நிலையில் நான்கு கரங்களைக் கொண்டு சங்கு, சக்கரம், யோக முத்திரை ஏந்தி யோகாஞ்சநேயராகச்

சோளிங்கபுரத்துச் சின்னமலையில் வீற்றிருக்கின்றார். பதினெட்டு கரங்களை உடைய ஆஞ்சநேயராகத் தஞ்சை மாவட்டம் அனந்தமங்கலத்திலும் ஐம்முக ஆஞ்சநேயராகச் சேலம் கந்தாசிரமத்திலும் உள்ளார்.

புத்தியையும் பலத்தையும் வேண்டுவோர் அனுமனை வேண்டுகின்றனர். மார்கழி மாதத்தில் அனுமந்த ஜெயந்தி கொண்டாடப்பெறுகிறது.

## அத்திரதேவர்

சிலப்பதிகாரத்தில் வாள்களிலும் வீரர் தோள்களிலும் கொற்றவை உறைவதாகக் கூறப்பட்டுள்ளது. பெருந்தெய்வங்களின் வழிபாட்டில் அந்த அந்தத் தெய்வங்களின் படைக்கலங்களும் வழிபடப்பெறுகின்றன. சிவபெருமானின் சூலம், திருமாலின் சக்கராயுதம் (சக்கரத்தாழ்வார்), அம்பிகைக்கும் விநாயகருக்கும் உரிய அங்குசம், முருகப்பெருமானின் வேல் ஆகியவை வழிபடப் பெறுகின்றன. கொடியேற்றத்திற்கு முன் இப்படைக்கலங்களுக்குக் காப்புக்கட்டி பூசை புரியவேண்டும்.

ஆயுத வடிவில் அத்திரதேவர் காட்சியளிக்கிறார். அத்திரதேவருக்கு உரியவாகனம் பல்லக்கு, வாத்தியம், ஒருமுகமுடைய தோற்கருவி. பல திருக்கோயில்களில் சூலாயுதம் மட்டுமே அத்திரதேவராக எழுந்தருளியிருக்கும். சில கோயில்களில் சூலத்தின் இடையில் சந்திரசேகரர் திருவுருவத்துடன் உமாதேவி திருவுருவத்தையும் அமைப்பது வழக்கம். செங்கற்பட்டு மாவட்டத்தில் கும்மங்கலம் அகத்தீசர் கோயில், திருமயிலைக் காரணீசர் கோயில் ஆகிய இடங்களில் இத்தகைய அத்திரதேவர்களைக் காண்கிறோம்.

அம்பிகை கோயிலிலும் விநாயகர் கோயிலிலும் அங்குசம் அத்திரதேவராக விளங்குகிறது. இவ்வங்குசத்திலும் அம்பிகை, கணபதி உருவங்களைக் காண்கிறோம். சென்னை ஜார்ஜ்டவுன் பிரசன்ன விநாயகர் கோயில் அத்திரதேவரில் விநாயகர் உருவமும் சென்னை காளிகாம்பாள் கோயிலிலுள்ள அங்குசத்தில் அன்னை அமர்ந்துள்ள வடிவமும் இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

திருமால் கோயிலில் சக்கரத்தாழ்வார் எனப்படும் அத்திரதேவரைக் காண்கிறோம். இது சக்கரவடிவிலும் சில சமயம் சக்கரத்துடன் அறுகோண நட்சத்திரமும் நான்குபுறமும் தீச்சுடர்களிலும் காட்டப்பெற்றுள்ளன. முருகன் கோயில்களில் வச்சிராயுதம் அத்திரதேவராக விளங்குகிறது.

கோயில்களில் தெய்வத் திருவுருவம் உலாவருமுன் அத்திரதேவர் உலாவருவதும்

அப்போது எட்டுத் திக்குகளிலும் இத்திருவுருவத்தின் முன் பலி (சோற்றுருண்டை) இடுவதும் தெய்வத்திருவுருவம் உலாவரும்போது தீயது எதுவும் நடைபெறாதிருக்க வேண்டும் என்பதற்காகவே.

## சக்கர வழிபாடு

இறைவரையும் அம்மையையும் விக்கிரகங்களில் வழிபடுவது போன்று சக்கரங்களிலும் வழிபடும் முறை உண்டு. இச்சக்கரங்கள் இறைவன் அல்லது இறைவியின் எங்கும் நிறைந்த நிறைவை (சர்வ வியாபகத்தை) உணர்த்துவதாக உள்ளன. வழிபடப்பெறும் தெய்வத்தின் இச்சக்கரத்தின் பூரண வியாபகம் பல அண்டங்கள், அண்டங்களில் உள்ள பல்வேறு உலகுகள், அவ்வுலகுகளின் அதிதெய்வங்கள் (சிறுதெய்வங்கள்) ஆகியோர்களைத் தன்னுள் அடக்கி, எல்லார்க்கும் மேம்பட்டு நிற்பதனைக் காட்டுகிறது. சக்கரம் பொன், வெள்ளி, தாமிரம் ஆகியவற்றில் ஏதாயினும் ஒன்றால் தகட்டில் ஒரு படம் போன்று வரையப்படுவது. சக்கரம் இறைவன், இறைவி, அவர்தம் பரிவார தெய்வங்கள், பரிவார தெய்வங்கள் ஆட்சி செலுத்தும் உலகுகள் ஆகிய எல்லாரையும் உணர்த்துவதாக இருப்பதால், இறைவர் இறைவி ஆகியோர் திருமேனியாகக் கொண்டு, உரிய மந்திரங்களால் இச்சக்கரங்கள் பூசிக்கப்பெறுகின்றன. பெரும்பாலும் சத்தியாகிய இறைவிக்கே சக்கர பூசை செய்யப்படும்.

நம் உடலில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி என்னும் சக்கரங்கள் உள்ளன. இவற்றின் வரிவடிவின் தோற்றம் சக்கரம். இதனை யந்திரம் எனவும் கூறுவர். யந்திர வழிபாடு நம்நாட்டில் பண்டைக்காலத்தே பரவியிருந்தது. யந்திரங்கள் அனைத்திலும் சிறப்புப் பெற்றது ஸ்ரீசக்கரம். இதற்கு யந்திரராசன் என்னும் தனிப்பெயரும் உண்டு. இதில் நாற்பத்து மூன்று முக்கோணங்கள் உள்ளன. இந்த யந்திரத்தில் மேருப்ரஸ்தார ஸ்ரீசக்கரம், கயிலாசப்பிரஸ்தார ஸ்ரீசக்கரம் பூப்பிரஸ்தார ஸ்ரீசக்கரம் என மூன்று வகைகள் உள்ளன. மேருப்ரஸ்தாரத்தில் உச்சியில் விளங்குவது பிந்து. இதன் பீடமாக அடியில் இருப்பது முக்கோணம். இம்முக்கோணத்தின் கீழ் இருப்பது எண்கோணம். இந்த எண்கோணத்தின் கீழ்ப் பத்துக்கோணமும் இந்தப் பத்துக்கோணத்தின் கீழ் மற்றுமொரு பத்துக்கோணமும் அதன் கீழ்ப் பதினான்குகோணமும் அதன்கீழ் எட்டுத்தள மலரும் இவ்வெட்டுத்தளங்களைத் தாங்கி நிற்கும் பதினாறு தள மலரும் ஆகிய இவற்றை மூன்று வட்டங்கள் தாங்குகின்றன. இவ்வட்டங்களின் அடியில் நான்கு பக்கங்களிலும் நான்கு வாயில்களோடு எல்லாவற்றையும் தாங்கி நிற்பன பூப்புரங்கள். இந்த யந்திரம் நீளம், அகலம், உயரம். கனம் ஆகியவற்றை ஒரே சீராகவுள்ள கோணங்களாகக் கொண்டுள்ளது.

மேரு . யந்திரம் படிப்படியாக எழுந்து குவிந்து உச்சியில் மேலே குறிப்பிடப்பட்ட பிந்து மட்டும் தெரியுமாறு இருக்கும். இது பிந்துதேவியாகிய மகா திரிபுரசுந்தரியின் உறைவிடம். முக்கோணங்கள் இத்தேவியின் பரிவார தெய்வங்களின் உறைவிடங்கள். ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனி இடம் உள்ளது. பூப்பிரஸ்தார யந்திரம் பொன்னாலோ வெள்ளியாலோ செம்பினாலோ செய்யப்பட்ட தகடுகளில் வரையப்படுவதாகும். சிவன் கோயில்களிலும் தேவி கோயில்களிலும் திருவுருவங்களை நிறுவுதற்கு முன்னர் யந்திரங்களை நிறுவும் வழக்கம் உண்டு. இத்தகைய யந்திரங்கள் நிலத்தின் அடியில் இருக்கும்; வெளியில் தெரியா. தேவி ஆலயத்தில் யந்திரங்கள் வெளியில் தெரியும் வண்ணம் வெளியே வைத்து அவற்றிற்குப் பூசை செய்யப்படுவதும் உண்டு.

திருமூலதேவ நாயனார் இச்சக்கரத்தைப் பற்றித் தமது திருமந்திரத்தில் திரிபுரை சக்கரம் என்னும் பகுதியில் (சத்தி வழிபாட்டை பற்றிக் கூறும் நான்காம் தந்திரத்தில்) விரிவாகக் கூறியுள்ளார்.

மாங்காடு காமாட்சியம்மன் கோயிலில் பூப்பிரஸ்தார யந்திரமே வழிபாட்டிலுள்ளது. இங்கு மூலத்தானத்தில் ஒரு மீட்டர் நீள அகல உயர அமைப்புக் கொண்ட அடுக்காக அமைந்த சக்கரம் வரையப்பட்டுள்ளது. எனினும், மக்கள் தெய்வத் திருவுருவத்தை எளிதில் புரிந்து கொள்ளார் என்பதற்காக ஓர் உற்சவரும் மூலத்தானத்தில் நிலைப்படுத்தப் பெற்றுள்ளார். காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் காமாட்சியம்பிகைக்கு முன்புறம் ஒரு சக்கரம் உள்ளது.

திருவாலங்காடு வடவாரண்யேசுவரர் கோயிலில் 51 அட்சரங்களைக் கொண்ட திருவம்பலச் சக்கரம் பூசிக்கப்பட்டு வருகிறது. திரு அம்பலச் சக்கரத்தைப் பற்றித் திருமூலர் விரிவாக உணர்த்தியுள்ளார். திரிபுரை சக்கரம், திருவம்பலச்சக்கரம் ஆகிய இரு சக்கரங்களன்றி ஏரொளிச் சக்கரம், வயிரவர் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதிச் சக்கரம், நவாக்கரி சக்கரம் ஆகிய ஐந்து சக்கரங்களைப் பற்றியும் நான்காவது தந்திரத்தில் விரிவாகக் கூறியுள்ளார்.

திருப்போரூர் முருகன் கோயில் உள்சுற்றின் வடகிழக்கு முனையில் சிதம்பரசுவாமிகளால் நிறுவப்பெற்ற யந்திரம் தனிச்சந்நிதியில் உள்ளது. இச்சக்கரத்தில் நாகாபரணம், திருவாசி ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. இதற்கு ஆறுகாலங்களில் பூசைகள் செய்யப்படுகின்றன.

திருத்தணிகை முருகன் திருவுருவத்தின் திருவடியின் கீழ் யந்திரம் அமைக்கப்பட்டுள்ளது; அபிடேகம் நடைபெறுகிறது. பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சக்கரங்கள் பல கோயில்களில் வைத்து வழிபடப்பெற்று வருகின்றன. திருவான்மியூர் மருந்தீசர் கோயிலில் திரிபுரசுந்தரி கோயிலின் உட்புறத்துக் கிழக்குச் சுவரில் ஸ்ரீசக்கரம் வரையப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

# துவாரபாலகர்

துவாரம் என்பது கோயிலின் வாயிலைக் குறிக்கும். பெருங்கோயில்களில் வெளிவாயில் முதற்கொண்டு ஒவ்வொரு வாயிலின் இருமருங்கிலும் இரு காவலர் இருப்பது மரபாகும். இவர்கள் துவாரபாலகர் என்றோ துவார பாலிகைகள் என்றோ அறியப்படுகிறார்கள். இவர்கள் இரு கைகளையோ நான்கு கைகளையோ கொண்டு விளங்குகின்றனர். வாள் அல்லது தண்டாயுதம் இவர்களின் கையில் இருக்கும். இவர்கள் முக்கண்களுடன் சடா மகுடந்தாங்கி ஒரு காலையூன்றி ஒரு காலை உடலின் குறுக்காகத் தண்டத்தின் மீது வைத்திருப்பர். இவர்களின் உடலில் நாகங்கள், மணிவடம் ஆகியன இருக்கும். சில இடங்களில் துவாரபாலகர்களுக்குக் கொம்புகளும் உள. ஒரு கை ஒன்றெனச் சுட்டும் முத்திரையைக் காட்டுகிறது. இஃது இறைவன் ஒப்பற்ற நிலையில் உள்ளார் என்பதைக் காட்டுகிறது. இது பல்லவர் காலக் கோயில்களில் உள்ள நிலையாகும். இவ்வமைப்புகளைத் திருக்கழுக்குன்றத்து மலை இறங்கும் வழியில் உள்ள குடைவரை கோயிலில் காணலாம்.

பல்லவர் காலச் சிவன் கோயில்களில், இரண்டு கைகளுடனும் பூத உருவத்துடனும் துவார பாலகர்களைக் காண்கிறோம். இவர்களுள் கண்டாகர்ணன், குடகர்கணம் என்பார் சிறு துவாரபாலகர்களே ஆவர். திருமால் கோயில் துவாரபாலகர்களைச் செயன், விசயன் என்று கூறுவாறும் உளர். உத்திரமேரூர்ச் சுந்தரவரதர் கோயில் துவார பாலகர்களாக நவன், சூடன் என்போர் விளங்குகின்றனர். இதே கோயிலின் மூன்றாந் தளத்திலுள்ள திருவரங்கநாதர் வாயிலில் கங்கையும் காவிரியும் துவார பாலிகைகளாக விளங்குகின்றனர்.

சக்தி கோயில் துவாரபாலிகையர் நான்கு கைகளுடையவர்கள். இத்தகையவர்களின் மிகப்பெரு வடிவம் காஞ்சிபுரம் காளிகோயிலில் காணப்படுகிறது. முருகப்பெருமான் துவார பாலகர்கள் சுமுகர், சுதாகர் எனப்படுவர். இவர்கள் தேவர் இனத்தவர்கள். இவர்கள் தங்கள் நான்கு கரங்களிலும் சக்தி வச்சிரம், முத்திரை தண்டாயுதம் ஆகியவற்றை ஏந்திக் கிரீடம் அணிந்திருப்பர். பழனியாண்டவர் கோயிலிலுள்ள முகக்காவலர் இடும்பனும் கடம்பனும் ஆவர். விநாயகப் பெருமானின் காவலர் அதிபலன், பலன் எனப்படுவோர் ஆவர். விநாயகர் ஆடல் கோலத்திலிருப்பின், அவர்தம் துவாரபாலகர்கள் லம்போதரன், குண்டோதரன் ஆவார்கள்.

துவார பாலகர் வடிவங்கள் எப்போதும் கருங்கல்லில் செய்யப்படுவதே வழக்கம். எனினும், பல கோயில்களில் சுதையினாலான துவாரபாலகர்கள் உருவங்களும் உள்ளன. இளையனார் குமரன் கோயிலில் துவாரபாலகர்கள் மூன்று மீட்டர் உயரத்தில் சுதையினால் செய்யப்பட்டுப் பல்வேறு வண்ணங்கள்

தீட்டப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளனர். கரிய வண்ணம் தீட்டப்பட்ட கருங்கல் சிலை. துவாரபாலகர்களும் உளர். கருங்கல்லால் ஆன துவாரபாலகர்களின் நெடிய வடிவங்கள்தாம் பல கோயில்களிலுள்ளன.

சில திருமால் கோயில்களிலுள்ள துவாரபாலகர் வடிவம் உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் கோயிலிலுள்ள துவாரபாலகர்கள் செப்புத் திருமேனிகளாக எழுந்தருளியுள்ளனர். இவர்களது கிரீடத்தின் உச்சிகளில் ஒருவருக்குச் சங்கும் மற்றொருவருக்குச் சுடர்களோடு கூடிய சங்கும் விளங்குகின்றன. திருமாலின் துவாரபாலகர்கள் சங்கு, சக்கரம், கதை ஆகியவற்றை ஏந்தியுள்ளனர்.

இவர்களுக்கு வடைமாலை, அன்னபாவாடம், வெண்ணெய் ஆகியவை படைக்கப்பெறுகின்றன. திருவாயிலை அடையும்போது இவர்களது உத்தரவைப் பெற்றே உட்செல்ல வேண்டும். அறுகு, சிவப்பு மலர்கள் ஆகியன இவர்களுக்கு ஏற்றவை. இவர்களுக்கென்று விழா ஏதும் இல்லை.

# இறைவனிடம் அன்பு செலுத்திய பெரியோர்கள் கடவுளாகப் போற்றப்பெறுதல்

இறைவனிடம் அன்பு செலுத்தி மேன்மையுற்ற பெரியோர்கள் கடவுளர்களாக வழிபடப் பெற்று வருகிறார்கள். தொண்டை நாட்டில் சைவத்தில் மேன்மையுற்று விளங்கியவர்கள் காரைக்கால் அம்மையார், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்திசுவாமிகள், சேரமான் பெருமாள்நாயனார், திருமூலர், கண்ணப்ப நாயனார் போன்றோர் ஆவர். கி.பி.10-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்க் கோயில்களில் நாயன்மார்களின் உருவங்களை நிலைப்படுத்தி வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. தலையாய ஆழ்வார்களாகிய கருடாழ்வார், விபீடண ஆழ்வார், பிரகலாத ஆழ்வார் ஆகியோர் திருவுருவங்களும் வழிபடுவதற்குரியவை ஆயின. அடியவர்கள் வடிவங்கள் பெரும்பாலும் அவர்கள் தங்கள் கைகளைக் கூப்பி, இறைவனை வணங்கும் நிலையில் உருவாக்கப் பெற்றன.

எனினும், ‘அம்மையே’ என இறைவனால் அழைக்கப்பெற்றவரும் மூத்ததிருப்பதிகம் பாடியவருமான காரைக்காலம்மையார் இறைவனை வேண்டிப்பெற்ற பேய்க்கோலமும் திருக்கோலக்காவில் இறைவனால் அளிக்கப்பெற்ற தாளத்துடன் விளங்கும் திருஞானசம்பந்தரின் திருவுருவமும் அமைக்கப்பெறலாயின. நாயன்மார்கள் ஒரே வடிவினராக இருப்பதால், ஒருவரை மற்றவர்களிலிருந்து பிரித்தறிந்து கொள்வதற்காக, அவரவர் வரலாற்றினைக் குறிப்பதாகத்

திருவுருவங்கள் அமைந்தன. உழவாரப் பணிபுரிந்து சிறப்புற்ற திருநாவுக்கரசு நாயனார் திருவுருவம் அவரது கையில் உழவாரப்படை ஏந்தியவண்ணம் அமைக்கப்பட்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் மணக்கோலம் கொண்டவர். ஆதலால், அவர் திருவுருவம், ஒரு கையில் பூச்செண்டும், அவர் கண்ணிழந்த காலத்தில் இறைவன் ஊன்றுகோல் ஒன்றை அவருக்கு அளித்ததால் மற்றொரு கையில் ஊன்றுகோலுடனும் காணப்படுகின்றது. நின்றசீர் நெடுமாறன், காடவர்கோன் கழற்சிங்கர் ஆகியோர் மன்னர்கள். இவர்களின் உருவங்கள், தலையில் கிரீடமும் இடையில் வாளும் கேடயமும் தெரியுமாறு அமைக்கப்பெற்றுள்ளன. அமைச்சராகிய குலச் சிறையாரைக் குறிக்க, அவரது திருவுருவத்தில் (பாண்டியநாடு) முத்துக்களால் அழகுபடுத்தப்பட்ட தலைப்பாகை காட்டப்பெற்றுள்ளது. உழவர் பெருமகனாராகிய நந்தனாரைக் குறிக்க அவரது திருவுருவத்தில் தலைப்பாகையும் கைகளில் மண்வெட்டியும் காட்டப்படுகின்றன. சலவையாளராகிய திருக்குறிப்புத் தொண்டர் திருவுருவத்தில் கையில் துவைத்த துணி இருப்பது காட்டப்பட்டுள்ளது.

இறைவனுக்குப் பூசைசெய்த அரிவாட்டாய நாயனார் திருவுருவத்தில் கையில் அரிவாள் இருப்பதும் வெட்டுண்ட சிவனடியார் தலை புகழ்ச்சோழர் கையில் இருப்பதும் விறன்மிண்ட நாயனார் கையில் பூக்குடலை இருப்பதும் அவரவர் வரலாற்றைக் குறிப்பனவாகும். சிவனைச் சிந்தித்துக் கொண்டிருந்தவர்களாகிய வாயிலார் நாயனார், பூசலார் நாயனார் ஆகியோர் திருவுருவங்கள் சில கோயில்களில் அமர்ந்தநிலையில், மார்பில் சிவலிங்கங்களின் உருவத்தோடு இருக்கின்றன.

இறைவன் கைப்பட எழுதிய திருவாசகத்தை ஏந்திய மாணிக்கவாசகர் உருவமும் இறைவனே முதலடி எடுத்துக் கொடுத்த பெரியபுராணச் சுவடியை ஏந்திய சேக்கிழார் திருவுருவமும் சின் முத்திரையைக் கொண்டுள்ளன. தோற்றத்தில் ஒருவர் திருவுருவம் மற்றவர் திருவுருவத்திலிருந்து வேறுபாடு விளங்க, மாணிக்கவாசகர் துறவியாதலால், அவர் திருவுருவம் முழங்காலுக்கு மேல் ஆடையுடுத்தியவாறும் சேக்கிழார் வாழ்வு பெற்ற அமைச்சர் ஆதலால், அவர் திருவுருவம் முழு ஆடை உடுத்தி உச்சியில் சிறுகுடுமி உடையவராகவும் காட்டப்படுகின்றன. திருமயிலையில் அறுபத்துமூவர் திருவுருவங்கள் கல்லாலும் செம்பாலும் சிறப்பாக உருவாக்கப்பெற்றுள்ளன. திருமயிலை, திருக்கழுக்குன்றம், பெருநகர், அச்சிறுபாக்கம், திருவொற்றியூர், கச்சி ஏகம்பம் ஆகிய தலங்களில் அறுபத்துமூவர் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

வரலாற்றுப்போக்கில் சில விழாக்கள் நடைபெறுகின்றன. திருமயிலையில் திருஞான சம்பந்தர் ஞானப்பால் உண்ணும் காட்சி, அதிகாரநந்தி திருநாளில் நடைபெறுகிறது. இக்கோயிலில் திருஞானசம்பந்தரின் தந்தையாகிய சிவபாத இருதயர் செப்புப்படிவம் உள்ளது. இந்நிகழ்ச்சி அச்சிறுபாக்கத்திலும் திருக்கழுக்குன்றத்திலும் கொண்டாடப் பெறுகிறது. காஞ்சிபுரம் கச்சபேசர் கோயிலில் சிறுத்தொண்டர் நாயனார் தன் மகனைத் தனது மடியில் படுக்க வைத்து அவனை அறுப்பது போலவும் சிவனடியார் தலையைப் புகழ்ச் சோழர் சுமந்தவாறுள்ளது போலவும் திருவுருவங்கள் காட்டப்பட்டுள்ளன. பெருநகர்

அறுபத்து மூவரில் சீராளனை இடுப்பில் தூக்கி நிற்கும் சிறுத்தொண்டர் திருவுருவம் உள்ளது.

மேலும் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் அங்கம்பூம்பாவை குடத்தினின்று வெளிவருவதுபோன்ற திருவுருவம் காணப்படுகிறது. திருவான்மியூர்க் கோயிலில் வால்மீகி, கோவூரில் சுந்தரபாண்டியன், திருமுல்லைவாயிலில் தொண்டைமான் சக்கரவர்த்தி, காமாட்சியம்மன் கோயிலில் துர்வாசர் துண்டீரமகாராசன் ஆகியோர் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

பாண்டிய மன்னனால் சிறப்பிக்கப் பெற்ற பெரியாழ்வார், யானை மீது ஊர்வலம் வந்தார். அப்போது கருட வாகனத்தில் அவருக்கு வைகுந்த வாசராகிய பெருமான் காட்சியளித்தார். அப்போது யானை மீதிருந்த பெரியாழ்வார் அந்த யானையின் பக்கவாட்டில் தொங்கிக்கொண்டிருந்த மணிகளை இயக்கிப் பல்லாண்டு பாடினார். இத் திருவுருவம் ஓவியமாகப் பெருமாள் கோயில்கள் பலவற்றில் காட்டப்பட்டுள்ளது. ஆழ்வார் பதின்மருள் நம்மாழ்வார் சின்முத்திரையுடன் அமர்ந்தநிலையில் காட்டப்படுகிறார். அருகில் மதுரகவியாழ்வார் கைகூப்பிய வண்ணம் நின்றவண்ணத்திலும் ஆச்சாரியார் மணவாள மாமுனிகள், இராமானுசர், வேதாந்த தேசிகர் யாவரும் அமர்ந்த நிலையிலும் காட்சியளிக்கின்றனர். இராமானுசர் முக்கோலும் அதில் கொடியையும் ஏந்தியுள்ளார். குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் போன்றோரைக் கிரீடம் அலங்கரிக்கின்றது. தொழுத கையும் அணைந்த வேலும் என்ற முறையில் திருமங்கையாழ்வார் வெறும் வேலோடு காட்சியளிக்கிறார். சில இடங்களில் இவர் மனைவி குமுதவல்லி நாச்சியாரும் உள்ளார்.

ஐம்மாவட்டத்தில் இராமானுசரைப் பிரிய மனம் பொறாதவர்கள் அவரது சிலையைச் செய்து அவரிடம் காண்பிக்க அவர் அதைத் தழுவிக் கொண்டார். இத்திருமேனி திருப் பெரும்புதூரில் உள்ளது. இதற்குத் "தானுகந்த திருமேனி," என்பது பெயர். இவை தவிர பாகவத சிரோன்மணிகளாகிய அண்ணன், பெரியவாச்சான்பிள்ளை, மணக்கால் நம்பி ஆகிய பலர்க்கும் திருவுருவச் சிலைகள் உள்ளன.

காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் சைவசித்தாந்தச் சந்தானாச்சாரியர் களாகிய மெய்கண்டதேவர், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகியோர் திருவுருவச் சிலைகள் உள்ளன. சங்கரர் திருவுருவமும் அவர்தம் சீடர்களின் திருவுருவங்களும் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலிலுள்ளன.

கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாச்சாரியர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், வள்ளலார், பாம்பனடிகள் ஆகியோருக்கு அவர்களின் இயல்பான வடிவங்கள், கந்தகோட்டம், இராயப்பேட்டை, சித்தபுத்தி விநாயகர் கோயில் ஆகிய கோயில்களில் உள்ளன.

பட்டினத்தடிகள் சமாதி எய்திய திருவொற்றியூரில் அவர் சமாதியில் சிவலிங்க

வடிவமாக எழுந்தருளியுள்ளார். வைகானச ஆச்சாரியரான விகனசர், அத்வைத ஆச்சாரியரான சங்கரர், இலகுளீசன ஆச்சாரியராகிய கௌளீசர் ஆகியோருக்குச் சிலைகள் உள்ளன. சங்கராச்சாரியாருக்குக் காஞ்சிபுரத்தில் தனிச் சிறுகோயிலும் அவரது வரலாற்றை விளக்கும் தொடர் சிற்பங்களும் இருக்கின்றன. திருவொற்றியூர், திருமுல்லைவாயில் போன்ற இடங்களில் சங்கராச்சாரியார் தம் சீடர்களுடன் வீற்றிருக்கும் சிலைகள் உள்ளன. நெடுமரம், புதுவாயில் போன்ற இடங்களில் விகனசர் உருவம் உள்ளது. விகனசர் நான்கு கைகளுடன் சங்கு, சக்கரம், தண்டம் ஆகியவை ஏந்தியவராக உள்ளார். இலகுளீசரான ஆச்சாரியர் சிவன் அம்சமாதலின் கௌளீசர் நான்கு கைகளுடன் மேற்கரங்களில் கபாலம், சூலம் ஆகியவற்றையேந்தி, சின்முத்திரையுடன் காட்சியளிக்கிறார்.

கௌமார சமயக் காவலர் அருணகிரிநாதர் ஆவார். இவர்தம் வடிவம் திருத்தணிகை முருகன் கோயிலில் பதுமாசனத்தில் அமர்ந்த நிலையில் கைகளைக் கூப்பியவாறுள்ளது. ஆனால், சென்னையையொட்டிய பல கோயில்களில் நின்றவாறு அஞ்சலிகூப்பியோ, கையில் திருப்புகழை ஏந்தியவாறோ துறவுக் கோலத்தில் காட்டப்பெறுகின்றார். கச்சிஏகம்பம் போன்ற பல கோயில்களில் அறுபத்துமூவரை ஓவியமாகத் தீட்டி வைத்துள்ளனர். துப்புல் வேதாந்த தேசிகர் கோயில் உட்பிரகாரத்தில் அவர்தம் .வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

# அறுபத்துமூவர்

1. **அதிபத்த நாயனார்**: நுளையர் (மீன் பிடிப்பவர்). சோழநாடு, நாகபட்டினம். நவரத்தினமிழைத்த பொன்மீனைத் தாம் வைத்துக்கொள்ளாமல் சிவ பெருமானுக்கென அதனைக் கடலில் விட்டவர்.

2. **அப்பூதியடிகள் நாயனார்**: அந்தணர். சோழநாடு, திங்களூர். மகன் இறந்ததையும் மறைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகட்கு அமுதளித்தவர்.

3. **அமர்நீதி நாயனார்**: வணிகர். சோழநாடு, பழையாறை. சிவனடியார் தந்த கோவணம் காணாமற் போக, அதற்கு நிறையாக மனைவி மக்கள் சொத்துகளுடன் தம்மையும் சிவனடியாருக்குத் தரமுற்பட்டவர்.

4. **அரிவாட்டாய நாயனார்**: வேளாளர். சோழநாடு, கணமங்கலம். சிவ நிவேதனத்துக்குரிய பொருள் சிந்தியதற்காகத் தமது கழுத்தை அறுக்க முற்பட்டவர்.

5. **ஆனாய நாயனார்**: இடையர். மழநாடு, மங்கலவூர் - பசு மேய்க்கும்போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் அமைத்து வாசித்தவர்.

6. **இசைஞானியார்**: ஆதி சைவர். நடுநாடு, திருநாவலூர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை மகனாகப் பெற்று வளர்க்க பெண்மணியார்.

7. **இடங்கழி நாயனார்**: அரசர். கோனாடு, கொடும்பாளூர். அடியாரைத் தாம் வழிபாடு செய்வதற்காகத் தேவைப்பட்ட நெல் திருடினவர்க்கு மேலும் பொருளும் நெல்லும் தந்தவர்.

8. **இயற்பகை நாயனார்**: வணிகர். சோழநாடு, காவிரிப்பூம்பட்டினம். சிவனடியாருக்குத் தமது மனைவியையே தானமாகக் கொடுத்தவர்.

9. **இளையான்குடி மாற நாயனார்**: வேளாளர். இளையான்குடி - விதைத்த நெல்லெடுத்து வீட்டின் கூரையை விறகாகப் பயன்படுத்தி அடியார்க்கமுதளித்தவர்

10. **உருத்திர பசுபதி நாயனார்**: அந்தணர். சோழநாடு, திருத்தலையூர் அல்லும்பகலும் திருக்குளத்து நீரில் கழுத்தளவின் நின்று ஸ்ரீ ருத்திரமந்திரம் செபித்துவழிபட்டவர்.

11. **எறிபத்த நாயனார்**: சோழநாடு, கருவூர் - பூக்குடலையைச் சிவனடியாரிடமிருந்து பிடித்திழுத்துச் சிதறச் செய்த மன்னன் பட்டத்து யானையை வெட்டியவர்.

12. **ஏயர்கோன் கலிக்காம நாயனார்**: வேளாளர். சோழநாடு, திருப்பெருமங்கலம். சிவபெருமானையே தூதாக விடுத்த வன்றொண்டரை இகழ்ந்து பின்பு திருவருள் விளையாட்டால் அவர்தம் நண்பரானவர்.

13. **ஏனாதி நாத நாயனார்**: சான்றார். சோழநாடு, எயினனூர் - போர்புரியும் பகைவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும் அவனாற் கொல்லப்படும்படி நடந்து கொண்டவர்.

14. **ஐயடிகள் காடவர்கோன் நாயனார்**: குறுநில மன்னர். தொண்டை நாடு, காஞ்சிபுரம் - பதவியை வெறுத்துத் தலயாத்திரை செய்து சேத்திர வெண்பாவால் நிலையாமை கூறியவர். இப்பாடல்கள் சைவத் திருமுறைகளின் 11-ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

15. **கணநாத நாயனார்**: அந்தணர். சோழநாடு, சீகாழி - திருஞானசம்பந்தரை வழிபட்டுச் சரியைத் தொண்டர்க்குப் பயிற்சி தந்தவர்.

16. **கணம்புல்ல நாயனார்**: இருக்கு வேளூர் - புல் விற்று நெய் கொண்டு திருவிளக்கெரித்தவர்; நெய்யின்மையால் தமது தலைமுடியையே எரித்தவர்.

17. **கண்ணப்ப நாயனார்**: வேடர். தொண்டைநாடு, உடுப்பூர் - ஆறே நாளில் அளவுகடந்த பக்தி செய்து காளத்தியப்பருக்குத் தம் கண் அப்பியவர்.

18. **கலிக்கம்ப நாயனார்**: வணிகர். நடுநாடு, பெண்ணாகடம் - தமது பழைய வேலையாள் சிவனடியானாக வந்தபோது தாமும் அவனை வழிபட்டு, அவனை வழிபடாத தம் மனைவியின் கையை வெட்டியவர்.

19. **கலிய நாயனார்**: செக்கார், தொண்டைநாடு, திருவொற்றியூர் - திருவிளக்குக்கு எண்ணெய் இன்மையால், தமது இரத்தங்கொண்டு எரிக்க முயன்றவர்.

20. **கழறிற்றறிவார் நாயனார்**: (சேரமான் பெருமாள் நாயனார்) :- அரசர். மலை நாடு, கொடுங்கோளூர் - நடராசர் பாதச் சிலம்பொலி கேட்கத் தாழ்த்தமையால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோழமை பெற்றவர். சிவபெருமானுடைய திருமுகப்பாசுரம் பெற்றவர். கயிலை சென்று ஞானவுலா பாடியவர்.

21. **கழற்சிங்க நாயனார்**: குறுநில மன்னர். சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காகத் தம் மனைவியின் மூக்கை சிவனடியார் ஒருவர் அறுத்த தண்டனை போதாதென்று அம்மலரை எடுத்த அவள் கையையும் வெட்டியவர்.

22. **காரி நாயனார்**: சோழநாடு, திருக்கடவூர் - கோவை பாடிப் பொருள் பெற்று ஆலயப் பணி செய்தவர்.

23. **காரைக்காலம்மையார் (பேயார்)** : வணிகர், சோழநாடு, காரைக்கால் - சிவ பெருமானை வேண்டி மாம்பழமும் பேய் வடிவமும் பெற்றவர். ஆலங்காட்டில் ஆடல் கண்டவர். மூத்த திருப்பதிகம் முதலிய பதிகங்கள் பாடியவர். இப்பதிகங்கள் சைவத்திருமுறை 11-ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

24. **குங்குலியக்கலய நாயனார்**: அந்தணர். சோழநாடு, திருக்கடவூர் - மனைவியின் தாலியை விற்றுக் குங்குலியம் வாங்கியவர். சாய்ந்த இலிங்கத்தைத் தம் கழுத்தின் பூமாலை கொண்டு நிமிர்த்தியவர்.

25. **குலச்சிறை நாயனார்**: பாண்டியநாடு, மணமேற்குடி - மன்னன் சமணனாயிருந்த போதும் தாம் சிவனடியாரை வழிபட்டவர். திருஞானசம்பந்தரை அழைத்து வந்து அரசனையும் நாட்டையும் சைவமாக்கியவர்.

26. **கூற்றுவ நாயனார்**: குறுநில மன்னர். களந்தை - தில்லை வாழ்ந்தணர் தமககு முடிசூட்டமறுக்கவே, தில்லையம்பலவன் திருவடிகளையே முடியாகச் சூட்டப் பெற்றவர்.

27. **கோச்செங்கட் சோழ நாயனார்**: அரசர். சோழநாடு - முற்பிறவியில் சிலந்தியாகச் சிவபூசை செய்தவர். எழுபது சிவாலயங்களைக் கட்டியவர்.

28. **கோட்புலி நாயனார்**: வேளாளர். சோழநாடு, திருநாட்டியத்தான்குடி - சிங்கடி, வனப்பகை என்ற இரண்டு புதல்வியரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அர்ப்பணம் செய்தவர். சிவபூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரனைவரையும் (சிசு உட்பட) கொன்றவர்.

29. **சடைய நாயனார்**: ஆதி சைவர். நடுநாடு, திருநாவலூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெற்று அவருக்குச் சடங்கவி சிவாசாரியர் மகளைத் திருமணம் செய்விக்க முயன்றவர்.

30. **சண்டேசுவர நாயனார்**: அந்தணர். சோழநாட்டு, திருச்சேய்ஞ்ஞலூர் - அபிடேகப் பாற்குடத்தைத் தம் தந்தை காலால் இடறியதைக் கண்ணுற்றதும் அவரது காலை வெட்டித் தொண்டர்க்கு நாயகம் பெற்றவர்.

31. **சத்தி நாயனார்**: வேளாளர். சோழநாடு, விரிஞ்சியூர் - சிவனடியார்களைக் குறை கூறுபவர்களுடைய நாக்கை அறுத்தவர்.

32. **சாக்கிய நாயனார்**: வேளாளர். திருச்சங்கமங்கை - மறவாது நாடோறும் சிவலிங்கத்தின் மீது கல்லெறிந்து வழிபட்டவர்.

33. **சிறப்புலி நாயனார்**:- அந்தணர். சோழநாடு, திருஆக்கூர் - அடியார்கட்கு அமுதும் பொருளும் தந்தவர்.

34. **சிறுத்தொண்ட நாயனார்**: மாமாத்திரப் பிராமணர். சோழநாடு, திருச்செங்காட்டாங்குடி - வாதாவிப்போரில் வென்றவர். சிவனடியார்க்குத் தமது ஒரே மகனைக் கறியாகச் சமைத்து வைத்தவர்.

35. **சுந்தரமூர்த்தி சுவாமிகள்**: ஆதி சைவர். நடுநாடு, திருநாவலூர் - திருத்தொண்டத் தொகை பாடியவர், இறைவனைத் தூது கொண்டவர்; முதலையுண்ட பிள்ளையை வருவித்தவர். இவர் அருளிய பதிகங்கள் ஏழாவது திருமுறை வடிவில் உள்ளன.

36. **செருத்துணை நாயனார்**: வேளாளர். சோழநாடு - தஞ்சாவூர் - கழற்சிங்க நாயனாருடைய மனைவி சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காக அவள் மூக்கை அறுத்தவர்.

37. **சோமாசிமாற நாயனார்**: அந்தணர். சோழநாடு, திருஅம்பர் - வேதவேள்வி செய்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டவர்.

38. **தண்டியடிகள் நாயனார்**: சோழநாடு, திருவாரூர் - பிறவிக் குருடராயிருந்தும் திருக்குளப்பணி செய்து குருடு நீங்கிச் சமணரை வென்றவர்.

39. **திருக்குறிப்புத் தொண்ட நாயனார்**: ஏகாலியர். தொண்டைநாடு, காஞ்சிபுரம் சிவனடியாருக்கு வாக்களித்தவாறு துணியைத் தோய்த்துலர்த்தித் தர முடியாமற்

போனபடியால் தமது தலையைக் கல்லின் மீது மோதிக் கொள்ள முயன்றவர்.

40. **திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்**: அந்தணர். சோழநாடு, சீகாழி - உமா தேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்றவர். தேவாரம் பாடி எலும்பைப் பெண்ணாக்குதல் முதலிய பல அற்புதங்கள் செய்து, தமது திருமணத்துக்கு வந்தவர்கள் அனைவருக்கும் முத்தி தந்தவர். இவர் அருளிய பதிகங்கள் 1, 2, 3 திருமுறைகள் வடிவிலுள்ளன.

41. **திருநாவுக்கரசு சுவாமிகள்**: வேளாளர். நடுநாடு, திருவாமூர் - கருங்கல்லோடு கடலில் வீழ்த்தப்பட்டவர். ஐந்தெழுத்தோதிக் கடலில் மிதந்து கரையேறிப் பல தேவாரங்கள் பாடிக் கைத்தொண்டு செய்து முக்தியடைந்தவர்; இவர் அருளிய பதிகங்கள் 4,5,6- ஆம் திருமுறைகளில் உள்ளன.

42. **திருநாளைப்போவார் நாயனார்** (நந்தனார்): புலையர். சோழநாடு, ஆதனூர் - தில்லையைக் காண விரும்பித் தீப்புகுந்து முனிவராயெழுந்து சிற்றம்பலவன் திருமுன்பு திருவருளில் மறைந்தவர்.

43. **திருநீலகண்ட நாயனார்**: குயவர். சோழநாடு, சிதம்பரம் - அயலறியாவண்ணம் மனைவியின் சபதத்துக்குடன்பட்டு அவளைத் தீண்டாது இளமையிலும் முதுமையிலும் இல்லறம் நடத்திப் பின் திருவருளால் இளமை பெற்றவர்.

44. **திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்**: பாணர். நடுநாடு, திருஎருக்கத்தம்புலியூர் - திருஞானசம்பந்தருடன் சென்று யாழிசைத்தொண்டு புரிந்தவர்.

45. **திருநீலநக்க நாயனார்**: அந்தணர். சோழநாடு. சிவபெருமான் திருமேனி மீது விழுந்த சிலம்பியைப் போக்கத் தம் வாயால் ஊதிய தம்துணைவியைக் கடிந்தவர். பின்னர்ச் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்றவர். திருஞானசம்பந்தருடன் பல தலங்களுக்கும் சென்றவர். இறுதியில் திருஞான சம்பந்தர் திருமணத்தில் கலந்துகொண்டு அந்நிலையில் இறைவன் திருவடி சேர்ந்தவர்.

46. **திருமூல நாயனார்**: இடையர். சோழநாடு, சாத்தனூர் - மூலன் உடலில்தாம் புகுந்து மூவாயிரம் ஆண்டிருந்து திருமந்திரம் அருளிச்செய்தவர். திருமந்திரம் பத்தாம் சைவத்திருமுறையாகவுள்ளது.

47. **நமிநந்தியடிகள் நாயனார்**: அந்தணர். சோழநாடு, ஏமப்பேறூர் - தண்ணீரால் விளக்கெரித்தவர். திருவாரூர்ப் பிறந்தாரையெல்லாம் சிவசாரூப்பியராகக் கண்டவர்.

48. **நரசிங்க முனையரைய நாயனார்**: குறுநில மன்னர். நடுநாடு. சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்தவர். சிவவேடம் பூண்ட காமக்குறி மலர்ந்த தூர்த்தனையும் வழிபட்டவர்.

49. **நின்றசீர் நெடுமாற நாயனார்**: அரசர். பாண்டிநாடு, மதுரை - திருஞான

சம்பந்தர் தந்த திருநீற்றால் சுரம் நீங்கி அவர் திருவாக்கால் கூன் நிமிரப்பெற்றுச் சைவரானவர்.

50. **நேச நாயனார்**: சாலியர். காம்பீலி நகரம் - சிவனடியார்கட்கு ஆடை நெய்து கொடுத்தவர்.

51. **புகழ்ச்சோழ நாயனார்**: அரசர். சோழநாடு, உறையூர் - பகைவனது அறுபட்ட தலையிற் சிவசின்னமாகிய சடை கண்டஞ்சி உயிர்விட்டவர்.

52. **புகழ்த்துணை நாயனார்**: ஆதிசைவர். செருவிலிபுத்தூர் - சிவபூசைக்குதவியாகப் பஞ்ச காலத்தில் இறைவனால் காசு அளிக்கப்பெற்றவர்.

53. **பூசலார் நாயனார்**: அந்தணர். தொண்டைநாடு, திருநின்றவூர் - மனத்திலேயே கோயில் கட்டிச் சிவவழிபாடு செய்தவர்.

54. **பெருமிழலைக்குறும்ப நாயனார்**: பெருமிழலையூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு யோகத்தால் அவர் கயிலை செல்லுதலறிந்து தாமும் கயிலை சென்றவர்.

55. **மங்கையர்க்கரசியார் (மதுரை)**: அரசியார். பாண்டிநாடு - திருஞானசம்பந்தரை வரவழைத்துத் தமது கணவரையும் நாட்டையும் சைவ நெறிப்படுத்தியவர்.

56. **மானக்கஞ்சாற நாயனார்**: வேளாளர். கஞ்சாறூர் - திருமணம் தொடங்கும் போது திருமணப் பெண்ணாகிய தம் மகளின் தலைமயிரை அறுத்துச் சிவனடியாருக்குத் தந்தவர்.

57. **முருக நாயனார்**: அந்தணர். சோழநாடு, திருப்புகலூர் - புட்பத்தொண்டு செய்து திருஞானசம்பந்தர் திருமணத்தில் முத்திபெற்றவர்.

58. **முனையடுவார் நாயனார்**: வேளாளர். சோழநாடு, திருநீடூர் - கூலிக்குப்போர் செய்து அக்கூலி கொண்டு சிவனடியாரை வழிபட்டவர்.

59. **மூர்க்க நாயனார்**: வேளாளர். தொண்டைநாடு, திருவேற்காடு - சூதாட்டத்தாற் கிடைக்கும் பொருள் கொண்டு சிவனடியார்களை வழிபட்டவர்.

60. **மூர்த்தி நாயனார்**: வணிகர். பாண்டிநாடு, மதுரை - சந்தனம் தருகிற திருப்பணியில் முட்டுபாடு நேரவே முழங்கையை அரைத்தவர்; திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி ஆகிய மூன்றையும் கொண்டு அரசாண்டவர்.

61. **மெய்ப்பொருள் நாயனார்**: குறுநில மன்னர். நடுநாடு, திருக்கோவலூர் வஞ்சித்துத் தம்மைக் கொல்லும் சிவவேடதாரியைக் காப்பாற்றித் தம் உயிர் விட்டவர்.

62. **வாயிலார் நாயனார்:-** வேளாளர். தொண்டைநாடு, மயிலாப்பூர் - மானசீகமான ஞான பூசை செய்தவர்.

63. **விறன்மிண்ட நாயனார்:-** வேளாளர். மலைநாடு, செங்குன்றூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடுதற்குக் காரணமாயிருந்தவர்.

மேற்கூறிய விவரங்களுள் சிலருடைய மரபு, நாடு, ஊர் முதலியன குறிக்கப்படாமைக்குக் காரணம், சேக்கிழார் சுவாமிகள் அவற்றைப் பெரியபுராணத்துள் கூறாமையேயாகும். அறுபத்து மூவர் பெயர்கள் அகரவரிசையில் கோவை செய்யப்பெற்று எண்கள் தரப்பட்டுள்ளன.

# ஆழ்வாராதியர்

## முதலாழ்வார்கள்

பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய இம்மூவருமே முதலாழ்வார்கள். பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்துத் திருவெஃகாவிலுள்ள கண்ணன் கோயில் பொற்றாமரைக் குளத்தில் தோன்றியவர். பூதத்தாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அப்பாலுள்ள மாமல்ல மாதவிப் பூவில் தோன்றினார். பேயாழ்வார் தேனமர் சோலை மாடமயிலையிலுள்ள ஆதிகேசவப்பெருமாள் கோயில் திருக்கிணற்றின் செவ்வந்திப் பூவில் தோன்றினார். இம்மூவரும் ஒரு நாள் திருக்கோவலூரில் தங்கியிருந்தபோது, அவர்களுக்கு நம்பெருமானார் அருள்புரிந்தார். இம்மூவரும் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகளை அருளிச் செய்தனர்.

## திருமழிசையாழ்வார்

பார்க்க மாமுனிவர், ஒரு வேள்விபுரிந்து அதில் நாராயணனை வழிபட்டார். அதன் பயனாக, அவர் துணைவியார் ஒரு மகவைப் பெற்றெடுத்தார். இக்குழந்தை திருவாளன் என்போராலும் அவர் துணைவியார் பங்கயச் செல்வியாராலும் வளர்க்கப் பெற்றுப் பின்னர்த் திருமழிசையாழ்வாராகப் புகழ் எய்தியதை வரலாறு கூறுகிறது.

திருமழிசையாழ்வாரின் பெருமைகளை உணர்ந்திருந்த அந்நாட்டு மன்னர் திருமழிசை ஆழ்வாரைக் கொண்டு தம்மீது பாடல் இயற்றப்பெற விரும்பினார். இதற்காக, திருமழிசையாழ்வாரின் மாணவராகிய கணிகண்ணரை அம்மன்னர் வரவழைத்துத் தம்மீது பாடல் இயற்றவேண்டுமெனத் திருமழிசையாழ்வாரிடம் கேட்டுக்கொள்ளுமாறு கணிகண்ணரிடம் தெரிவித்தார். பெருமாள் மீது

துதிப்பாடல்களைத் திருமழிசையாழ்வார் இயற்றுவாரேயன்றி மனிதர், மன்னர் ஆகியோர் மீது பாடல் இயற்றார் என்பதைக் கணிகண்ணர் அம்மன்னருக்குத் தெளிவாக எடுத்துரைத்தார். கணிகண்ணர் தெரிவித்த இவ்வெதிர்ப்பை அம்மன்னர் எதிர்பார்க்கவில்லை. உடனே கணிகண்ணர் மீது சீற்றம் கொண்டு கணிகண்ணர் நாட்டிலிருந்து வெளியேற வேண்டும் என அம்மன்னர் ஆணை பிறப்பித்தார். இதனைக் கேள்வியுற்ற திருமழிசையாழ்வார் ஆங்குக் காஞ்சிக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமாளை நோக்கி ஒரு பாசுரம் பாடித் தம் மாணவராகிய கணிகண்ணரைப் பின் தொடர்ந்தார்.

அப்போது அக்கோயிலில் எழுந்தருளிய பெருமாள் தம் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு தம் பெரிய பிராட்டியாருடன் ஆழ்வாரைப் பின் தொடர்ந்து செல்வாராயினர். முன்னே கணிகண்ணர், பின்னே திருமழிசையாழ்வார், இறுதியில் பெருமாள் இப்படி மூவரும் போனதைக் கண்டு மக்கள் பலர் பின்தொடர்ந்து சென்றனர். இதனைச் கண்ணுற்ற வேந்தர், தாம் புரிந்த குற்றத்தினை உணர்ந்து கணிகண்ணரைத் தேடிச்சென்று நகர் திரும்புமாறு வேண்டினார். அவரும் ஆழ்வாரின் அருளை நாடினார். ஆழ்வாரும் பெருமாளை நோக்கி தாம் முன்பு பாடிய பாசுரத்தையே மாற்றி ஒரு பாசுரம் பாடினார். இதன் பயனாகப் பெருமாளும் மக்களும் ஊர் திரும்பினர். திருமழிசை ஆழ்வார் கேட்டுக்கொண்ட வண்ணம், அருள்புரிந்த பெருமாள், சொன்னவண்ணம் செய்த பெருமான் என்னும் பெயரில் விளங்குவாராயினர். இப்பெயர் வடமொழியில் 'யதோத்காரி' என வழங்கி வருகிறது.

## குலசேகராழ்வார்

குலசேகராழ்வார் பெருஞ்சேனையுடன் ஆட்சிபுரிந்து வந்தார். வால்மீகி இராமாயணத்தைச் செவிக்கினிய சொல்லாகக் கொண்டு பற்றற்ற நிலையில் திருவரங்கத்தில் வாழ்ந்துவர எண்ணினார். அவ்வாறே தமது நாட்டின் ஆட்சியைத் தம் மகனிடம் ஒப்புவித்துவிட்டுத் திருவரங்கம் சென்று அரங்கத்தம்மானைக் கண்ணாரக் கண்டு, வாயார வாழ்த்தி வாழும் நாளில், "பெருமாள் திருமொழி" என்னும் திவ்வியப் பிரபந்தத்தை அருளிச் செய்தார். இதிலுள்ள 31 பாடல்களும் அரங்கநாதர் மீது பாடப்பெற்றவை.

## பெரியாழ்வார், ஆண்டாள்

பெரியாழ்வார் அருளியது பெரிய திருமொழி. திருவில்லிபுத்தூரில், ஓர் ஆண்டு ஆடிப்பூர நட்சத்திரத்தில் பெரியாழ்வார் தமது நந்தவனத்தில் திருத்துழாய்க்காக நிலத்தைக் கொத்த, அம்மண்ணின் கீழ்ப் பெண்மகவு ஒன்றினைக் கண்டனர். அம்மகவைத் திருமகள் போல வளர்த்துக் கோதை என்னும் பெயரை சூட்டினார். அவ்வூர்ப் பெருமாளுக்குச் சாத்தத் தாம் கட்டி வைத்திருந்த மாலையை, ஆண்டாள் நாள்தோறும் தாம் சூடிக் கொண்டு அந்நிலையில் தமது அழகைக் கண்ணாடியில் பார்த்து மகிழ்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இத்தகைய செயலை ஒரு நாள் கண்ணுற்ற பெரியாழ்வார், தம் புதல்வியின் செயலைக் கண்டித்து, அவர் அந்நாளில்

பெருமாளுக்கு மாலை சார்த்தவில்லை.

அன்றிரவு பெரியாழ்வார் கனவில் பெருமாள் தோன்றி அந்நாளில் தமக்கு மாலை சாத்தாததற்குக் காரணம் வினவ, ஆழ்வாரும் அதற்குக் காரணம் கூறினார். ஆனால், பெருமாளோ ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே தமக்குகந்தது எனத் தெரிவித்தார். அதுமுதல், "சூடிக்கொடுத்த நாச்சியார்" என்னும் பெயரும் 'ஆண்டாள்' என்னும் பெயரும் அவருக்கு வழங்குவன ஆயின. ஆண்டாள் மார்கழித் திங்களில் நாள்தோறும் நீராடி, நோன்பு நோற்று இனிய தமிழ் மாலையாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய திவ்வியப் பிரபந்தங்களைப் பாடியருளினார். நாச்சியார் திருமொழியில் 'தாமுகக்கும்' என்னும் தலைப்பில் பத்துப்பாடல்களில் திருவரங்கப் பெருமானை இவர் போற்றியுள்ளார். திருவரங்கச் செல்வனார் தமது கனவில் தோன்றித் தமக்கு அளித்த அருளுரைக்கேற்பப் பெரியாழ்வார் ஆண்டாளை மணிப்பல்லக்கில் எழுந்தருளச் செய்வித்துப் பிறர் கண்படாதவாறு அதற்குத் தட்டுப் பாயிட்டு மூடித் திருவரங்கத்துக்கு அழைத்துச் சென்றார். திருவரங்கத்தில் ஆண்டாள், பலரும் காண அரங்கநாதரால் திருமணம் செய்துகொள்ளப்பெற்று வைகுண்டம் சென்றடைந்தார்.

## தொண்டரடிப் பொடியாழ்வார்

தொண்டரடிப்பொடியாழ்வார் சோழநாட்டைச் சேர்ந்த திருமண்டங்குடியில் அந்தணர் குலத்தில் தோன்றி, 'விப்பிர நாராயணன்' என்னும் பெயருடன் திருவரங்கத்தில் நந்தவனம் அமைத்துத் திருவரங்கப் பெருமாளுக்கு மாலைகள் கட்டி அளித்து வந்தார். இவ்வாறு பணியாற்றி வந்த காலத்தில் இவர் தமது நெறியிலிருந்து பிறழ்ந்து தேவதேவி என்னும் பேரழகு வாய்ந்த பெண்மணியோடு வாழ்வாராயினர். இவர் இவ்வாறு வாழ்ந்து வந்த காலத்தில் இவர் மீது பேரிரக்கம் கொண்ட பிராட்டியார், இவருக்கு அருள்புரியுமாறு நம்பெருமானிடம் வேண்ட, நம்பெருமானும் தமது பஞ்ச பாத்திரங்களில் ஒன்றான சுத்தோதகப் பொற்பாத்திரத்தைத் தேவதேவியிடம் கொடுத்துவிட்டார். அடுத்த நாள் அப்பொற்பாத்திரம் தேவதேவியின் இல்லத்தில் இருப்பதாகத் தெரியவந்தது. மன்னரின் காவலர்கள் அப்பாத்திரத்தைத் தேவதேவியின் இல்லத்திலிருந்து கைப்பற்றி, விப்பிரநாராயணனையும் சிறைப்படுத்தினார்கள். அன்றிரவு மன்னர் கனவில் நம்பெருமான் தோன்றி, 'விப்பிர நாராயணனின் முன்வினை நீங்கப் பொற்பாத்திரத்தை நாமே அளித்தோம், என்று தெரிவித்தார். இதன்பின்னர், இவரது புகழ் பரவிற்று. அந்நிலையில் 'தொண்டரடிப் பொடியாழ்வார்' என்ற பெயரில் அரங்கநாதருக்கு இவர் பணியாற்றி வருவாராயினர். அரங்கநாதர் மீது 'திருமாலை' என்னும் தலைப்பில் 45 பாடல்களும் பத்துப்பாடல்களைக் கொண்ட திருப்பள்ளியெழுச்சிப் பதிகமும் இவர் அருளினார். திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் யாவுமே திருவரங்கப் பெருமாள் மீது பாடப்பெற்றவை.

## திருப்பாணாழ்வார்

திருப்பாணாழ்வார் உறையூரில், இழிந்த குலம் என்று கருதப்பட்ட பஞ்சமர்

குலத்தில் தோன்றியவர். இவர் திருவரங்கப் பெருமானிடம் பேரன்பு கொண்டு, காவிரிக்குத் தென்கரையில் வீணையும் கையுமாக நின்று அவரைப் பல நாள்கள் துதித்து வந்தார். திருவரங்கநாதரும் இவருக்கு அருள்பாலிக்கும் நோக்கில், தமக்குத் திருமஞ்சனம் எடுத்துவரும் திருலோகசாரங்க முனிவரிடம், "நமக்கு அந்தரங்கரான பாண்பெருமாளை நெகிழ நினையாதே. இவரை உம்முடைய தோளிலே கொண்டு நம்பக்கல் அழைத்துக் கொண்டு வருக" எனத் தெரிவித்தார். இவ்வாணைக்கேற்பத் திருலோகசாரங்க முனிவரும் திருப்பாணாழ்வாரைத் தம் தோளின் மீது எழுந்தருளச் செய்வித்து அழகிய மணவாளர் திருமண்டபத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தார். அவ்வாறு வந்த திருப்பாணாழ்வார் திருவரங்கப்பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றார். அப்போது இவர் பணிவுடன் 'அமலனாதிபன்' என்னும் தலைப்பில் பத்துப் பாடல்களைத் திருவரங்கப்பெருமாள் மீது அருளினார்.

### திருமங்கையாழ்வார்

திருமங்கையாழ்வார் திருஆலி திருநகரில் தோன்றியவர். சோழமன்னரிடம் சிற்றரசராகவும் சேனைத் தலைவராகவும் திகழ்ந்தார். இவர் திருநறையூரில் வைணவர்களுக்குத் திருவமுது செய்து பெரும் பேறுபெற்ற குமுதவல்லியாரைத் திருமணம் செய்துகொண்டார். தம்மிடமிருந்த செல்வங்களையெல்லாம் திருமாலடியார்களுக்கு அமுது செய்வித்தலிலே இழந்துவிட்டு, வழிப்பறி செய்தும் இப்பணிக்காகப் பொருள் ஈட்டி வந்தார். இந்நிலையில் ஒருநாள் இவருக்கு அருள்புரியத் தம் தேவியருடன் திருமால் இவர் முன் காட்சியளித்தார். அப்போது திருமாலிடமிருந்து இவர் கைப்பற்றிய பொருள்களை எடுத்துச் செல்ல இவரால் இயலாமையால், "நீர் மந்திரம் செய்வீரோ" என்று திருமாலிடம் இவர் வினவ, திருமாலும் அவருக்கு அருள்பாலிக்கும் அருமைக் குருவாக அமர்ந்து பெரிய மந்திரத்தை உபதேசித்தார். அப்போது திருமங்கையாழ்வார் பெருவெள்ளமாகப் பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருஎழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறு திவ்வியப் பிரபந்தங்களை இயற்றினார்.

### நம்மாழ்வார்

பாண்டிய நாட்டில் திருக்குருகூரில், மறந்தும் புறந்தொழாமல் திருமாலுக்குக் வழிவழியாகப் பணி செய்து வந்த திருக்குலத்தில் தோன்றிய காரியாரும் அவர்தம் துணைவியார் உடையநங்கையாரும் இல்லறம் நடத்தி வந்தபோது, தங்களுக்கு மகப்பேறு கோரித் திருக்குறுங்குடிக் கோயிலில் எழுந்தருளிய பெருமாளிடம் வேண்ட, அவரும் மனமுவந்து அருள்புரிந்தார். இவ்வருள் பொலிய, நம்மாழ்வார் தோன்றினார். ஆனால், இவர் எத்தகைய முறுவலும் செய்யாமலும் முலைப்பால் உண்ணாமலும் முழுநிறைவுடன் இருக்கக் கண்ட இவருடைய பெற்றோர்கள் கண்ணும் கருத்துமாகப் பேணி வளர்த்தும் இவர் தம் கண்களை மூடிக் கொண்டும் யாதும் பேசாமலும் இருந்து வந்தார். இத்தகைய நிலையில் இருந்து வந்த நம்மாழ்வாரை, மதுரகவிகள் நேரில் கண்டு அவருடைய திருவடிகளில் வணங்கப் பெருமாளும் கருட வாகனத்தில் எழுந்தருளி, நம்மாழ்வாருக்கு மயர்வற மதிநலம்

நல்கினார். அவ்வருள் தோய்ந்த நம்மாழ்வார், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் திவ்வியப் பிரபந்தங்களை அருளினார். நம்மாழ்வார் ஒருவரையே வழிபட்டவர் மதுரகவிகள். அவர் நம்மாழ்வார் மீது பதினொரு பாடல்களைக் கொண்ட "கண்ணி நுண் சிறுத்தாம்பு" என்னும் திவ்வியப் பிரபந்தத்தை இயற்றினார்.

## வைணவ ஆச்சாரியர்கள்

வைணவ சமயத் தத்துவங்களை உலகிற்கு உபதேசித்து எங்கும் பரவச்செய்து அவற்றை வளர்த்த பெரியோர்களை ஆழ்வார்கள் என்றும் ஆச்சாரியர்கள் என்றும் வழங்குவர். மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் ஒன்றத்திரித்துத் திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களை அருளிச்செய்து தீதில் நன்னெறியாகிய ஞானச்சுடர் விளக்கினை ஏற்றினவர்கள் ஆழ்வார்கள் என்று பேசப்படுவர். தோத்திர ரத்தினம் முதலான தோத்திரங்களாக ஆழ்வார்கள் ஏற்றிய அந்த ஞானச்சுடர் விளக்கினை உலகமக்கள் எல்லாருடைய உள்ளங்களிலும் பிரகாசிக்கச் செய்தவர்கள் ஆச்சாரியர்கள் என்று பேசப்படுவர்.

ஆழ்வார்களுள் முதல்வராய் எய்தற்கரிய மறைகளை ஆயிரம் இன் தமிழால் செய்தற்கு உலகில் வந்த நம் சடகோபரே ஆச்சாரியபரம்பரைக்கு முதல்வர் ஆவர். இவருடைய மாணவர் 'ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் அமுதத் திருவாய்மொழி ஈரத்தமிழின் சீரைப் பயின்று உய்யும் சீலம் கொள் நாதமுனி' ஆவர். இவர் அந்தணர் மரபினர்; ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்தவர். இவருடைய சீடர் (2) உய்யக் கொண்டார். இவருடைய சீடர் (3) மணக்கால் நம்பி. இவருடைய சீடர் (4) ஆளவந்தார். இவருடைய சீடர் (5) பெரிய நம்பி. இவர் சீடர் (6) இராமாநுஜர். இவர் சீடர் (7) எம்பார். இவர் சீடர் (8) பட்டர். இவர் சீடர் (9) நஞ்சீயர். இவருடைய சீடர் (10) நம்பிள்ளை. இவர் சீடர் (11) வடக்குத் திருவீதிப்பிள்ளை. இவருடைய சீடர் (12) பிள்ளை லோகாசாரியர். இவருடைய சீடர் (13) திருவாய்மொழிப் பிள்ளை. இவருடைய சீடர் (14) மணவாளமாமுனிகள். இவருடைய காலம் 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி (கி.பி. 1370-1443) ஆகும். இவரோடு பூர்வாச்சாரியர்கள் பரம்பரை முடிவுறுகிறது. சந்தான பரம்பரையில் ஆச்சாரியர்களுள் முதல்வர் நம்மாழ்வார். கடைசி சீடர் ஆச்சாரியர் மணவாள மாமுனிகள்.

# காளி

காளி வழிபாடு ஆதிகாலத் தெய்வ வழிபாட்டின் ஒரு பகுதியேயாகும். பகைவர்க்குக் காளம் எனும் நஞ்சு போன்றவள் என்பதால் காளி என்னும் பெயர் அவளுக்கு அமைந்தது என்பர். காளி என்பதற்குக் கரிய நிறத்தை உடையவள்

என்னும் பொருளும் உண்டு. சங்கம் மருவிய இலக்கியமான சிலப்பதிகாரத்தில் காளியைப் பற்றிய செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. காளி, "அறுவர்க்கு இளைய நங்கை" (சப்தமாதர்களுள் இளையவள்), "இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு", "தாரகன் மார்பகம் கீண்ட பெண்" என்று போற்றப் பெறுகின்றாள்.

இடைக்கால இலக்கியமான பரணிகளின் தலைவியாகப் போற்றப்படுபவள் காளி. இடங்காளி, அங்காளி, அழகியகாளி, இராஜகாளி, காடுகாளி, பத்திரகாளி, மாகாளி என்னும் பெயர்களில் காளி வழங்கப்பெறுகிறாள். மந்திரங்களுக்குத் தலைவியிவள். மந்திரவாதிகள் இவளைக் குறித்துத் தவம் இயற்றியே தங்கள் மந்திர பதவியையும் மந்திரக் கோலையும் பெறுகின்றனர்.

காளி வழிபாடு இந்தியா முழுமைக்கும் பொதுவானது. காளியின் அருள்பெற்ற காளிதாசன், அநேக இலக்கியங்கலைப் படைத்தான். சென்ற நூற்றாண்டில் காளியின் அருள்பெற்ற இராமகிருட்டிண பரமஹம்சர் ஏற்படுத்திய இராமகிருட்டிண இயக்கமே இன்று உலகளவில் சிறந்த சேவை நிலையமாகச் செயல்பட்டு வருகின்றது.

முதலில் காளிகோயில்கள் சுடுகாட்டின் மையத்திலேயே விளங்கி வந்தன. பிற்காலத்தில் சுடுகாட்டைப் பற்றிய பயம் தோன்றியதும் ஊரின் வடக்கில் இக்கோயில்கள் பெயர்த்து அமைக்கப்பெற்றன. இதற்குப் பிறகு அழகிய காளி என்ற பொருளில் அம்காளி என்னும் பெயர் வழங்குவதாயிற்று. அங்காளம்மன் கோயில்கள் பரவலாக எழுந்தன. அங்காளம்மன் கோயில்கள் பரணி இலக்கியத்தின் அடிப்படையில் காளிக்குக் கூளிகூறியது, பேய்க்கூத்து, களம்காணல் முதலிய அமைப்புகளுடன் திகழ்கிறது. மற்றத் தெய்வங்கள் சுடுகாட்டிற்குப் போகாமல் இருக்க, காளியம்மன் மாசி அமாவாசை நாளில் சுடுகாட்டிற்குச் செல்வதும் அங்குக் கொள்ளையிடும் விழா நிகழ்வதும் குறிப்பிடத்தக்கனவாகும். சுடுகாட்டுக் கொள்ளை என்னும் விழா நடைபெறுவதற்காக மக்கள் தங்கள் பிரார்த்தனைகளுக்கேற்பப் பழங்கள், காய்கள் முதலியவற்றைக் கொண்டு வந்து குவிப்பார்கள். காளி அந்நாளில் சுடுகாட்டுக்கு வரும்போது 'கொள்ளை' எனக் குறிப்பிடுவார்கள். அப்போது அங்கே முன்னமே குவிக்கப்பட்ட பொருள்களை மக்கள் கொள்ளையிட்டுச் செல்வார்கள். சோழர் காலத்தில் காளி வழிபாடு நிசும்பசூதனி, நிசும்பசும்பமர்த்தினி என்னும் பெயர்களில் செழிப்பாக விளங்கிற்று. சோழர்கள் பல போர்களை நடத்தித் தென்னகம் முழுவதையும் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தனர். இவ்வாறு நிகழ்ந்த போர்களின் அடிப்படையில் போர்க்கடவுளுக்கு உரிய கோயிலாகக் காளி கோயில்கள் எழுந்தன.

சோழர், சிவனுக்கென்று எடுப்பித்த பெரிய கோயில்களில் காளி தேவிக்கென்று ஒரு தனிச்சந்நிதியையும் உண்டாக்கினர். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில், திருவொற்றியூர் தியாகேசர் கோயில், திருப்பாசூர் வாசீசுவரர் கோயில், பெரும்பேறு தான்தோன்றீசுவரர் கோயில் முதலிய கோயில்களில் எட்டுக் கரங்களுடன் கூடி அமர்ந்த வடிவில் காளி, சந்நிதியில் உள்ளதைக் காண்கிறோம். திருவொற்றியூரில் வட்டப்பாறையம்மன் என்ற பெயரில் காளி வழிபடப்பட்டு வருகின்றாள்.

காளிதேவி மகாகாளி, பத்திரகாளி, ரௌத்திரகாளி, சுவர்ணகாளி என்னும் பெயர்களில் வழிபடப் பெறுகின்றாள். காஞ்சி நகரில் காளி கோயில்கள் பலவற்றைக் காண்கிறோம். காஞ்சிக் குமரகோட்டத்தையடுத்த ஆதிபீட காளியம்மன், மாகாளியம்மன் கோயில் போன்ற கோயில்கள் உள்ளன. ஆனால் இக்கோயில்கள் பெருந்தெய்வக் கோட்பாடுகளுடன் இணைந்த தன்மையுடையவை. இவை ஆகம முறையில் பூசிக்கப்பெறுகின்றன. இவை கடுமை நீங்கிய தன்மையுடைய சாந்தம் நிறைந்த அம்பிகை கோயில்களாகும். இங்கு மூல வடிவங்களில் கொடுங்கருவிகள், ஜீவாலாமுடி ஆகியவை நீக்கப்பெற்று ஜடாமகுடம், பாசம், அங்குசம் ஏந்தி காளி அமர்ந்துள்ளாள். இத்தகைய கோயிலே சென்னை காளிகாம்பாள் கோயிலாகும். சென்னையிலுள்ள இளங்காளி, கடுங்காளி, இராசகாளியம்மன் யாவும் சிறுதெய்வக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே வணங்கப்பட்டு வருகின்றன. காஞ்சி காளிகோயில்களில் (சென்னை காளிகாம்பாளும்) அன்னையைச் சாந்த வடிவமாக்கி முன்னே யந்திரத்தை நிறுவியுள்ளனர். தவிரக் காஞ்சிநகர்க்கோயில்கள் சாக்த மதத்தின் தலைமையிடமாக விளங்கியவை. அறிவும ஆற்றலும் பெற்ற சமுதாயத்தினரிடையே சாக்த மதக் கருத்துகள் போன்றவை ஒதுக்கப்பட்டு அன்பும் பண்பும் உடைய பகுதியாகக் சாக்தம் திருத்தப்பட்டுப் போதிக்கப்பட்டு வரலாயிற்று. சாக்தத்தில் பீஜாட்சரங்களை எழுதிய மந்திரத் தகடுகளே முக்கியத்துவம் பெற்றவை. இதனாலே மந்திரச் சக்கரமே மாங்காடு காமாட்சியம்மன் கோயிலில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. வீரபலி, இரத்தாபிடேகம் என்று அலைந்து கொண்டிருந்தவர்களிடமிருந்து சாக்தம் விடைபெற்று மிதவாத சாக்தமாக மலர்ந்தது.

திருப்புகழ் காளியைப் பல விதமாகப் புகழ்கிறது. காளி இறைவனோடு நடம் ஆடித் தோற்ற இடம் திருவாலங்காடு. இறைவனை ஆடல் கண்டு அருளிய அணங்கான காளிக்கு இங்குக் கோயில் அமைந்துள்ளது. இங்குள்ள காளி நடனமாடும் நிலையில் உள்ளாள். இறைவனின் கண்ணை மூடிய பாவம் நீங்கத் தீர்த்தயாத்திரை பூண்ட காளி "குந்தினாளாம் கூவத்தூர் குடிகொண்டாள் மலையனூர்" என்றவாறு மாமல்லபுரத்தை அடுத்த கூவத்தூரில் பெருங்கோயிலில் எழுந்தருளியுள்ளாள். மலையனூர் வட ஆற்காடு மாவட்டத்தில் செஞ்சிக்கு அருகில் உள்ளது.

பத்திரகாளியின் நெடிய வடிவம் திருக்கழுக்குன்றம் தாழக் கோயிலில் அமைந்துள்ளது. 18 கரங்களுடன் கூடிய காளி சிலையை அநேக கோயில்களில் காண்கிறோம். பிரளய காலத்தில் சங்காரக் கூத்து முடிந்ததும் காளி சிவலிங்கத்தில் ஒடுங்கிய நிலை காஞ்சி மகாகாளேசர் கோயிலில் உள்ளது. தக்கன் வேள்வியை அழித்த பாவம் தீர யந்திரக் கிணறு அமைத்துக் காளி பூசித்த பெரும்பேர் கண்டிகையில் உள்ள வீரபத்திரர் கோயிலில் காளி சந்நிதியுள்ளது.

# சிறு தெய்வங்கள்

கிராமத் தெய்வங்கள் என்ற முறையில் வழிபடப்பெறும் தெய்வங்களுக்கு வழிபாட்டு முறைகள் ஆகமங்களில் வகுக்கப்படவில்லை. பெரும்பாலும் இறந்தோர் வழிபாட்டினின்றே இவை கிளைத்து வளர்ந்துள்ளன. கிராமங்களில் விநாயகர் கோயில் கூட இல்லாமல் இருக்கலாம். ஆனால், பிடாரி எனப்படும் பெண்தெய்வக்கோயில் இல்லாத ஊரே இல்லை என்று உறுதியாகக் கூறலாம் என்றாலும் அண்மைக்காலம் வரை அவை திறந்த வெளிக் கோயில்களாகவே இருந்து வந்துள்ளன தங்கள் ஆட்சிக் காலத்தில் பெருந்தெய்வக் கோயில்களைக் கூடத் துணிந்து அப்புறப்படுத்திய ஆங்கிலேயர்கள் சிறு தெய்வக்கோயில்களைக் கண்டு அஞ்சினார்கள். இதற்குக் காரணம் அவர்கள் வெப்பத்தைத் தாங்க இயலாதவர்கள். அம்மை நோய்க்கு அவர்கள் அஞ்சினார்கள். அம்மை நோய்களைத் தீர்க்க வல்லவை சிறு தெய்வங்கள் எனவும் இத் தெய்வங்களுக்கு இடர் விளைவித்தால் அம்மை நோய் முதலியவற்றால் துன்புற வேண்டும் எனவும் நினைத்துச் சிறுதெய்வக் கோயில்களுக்கு அவர்கள் இடர் விளைவிக்காததுடன், சென்னையில் பிளேக் மாரியம்மன் கோயில், பெரிய சடையம்மன் கோயில் ஆகியவை போன்ற கோயில்களைக் கட்டியும் கொடுத்தார்கள்.

முதலில் சிறுதெய்வங்கள் உருவமற்ற கல்லாக நடப்பெற்றன. சிறந்த சுடுமண் சிற்பங்களாக படைக்கப்பட்ட பெரிய குதிரைகள், யானைகள் ஆகியவை செய்து வைக்கப்பட்டன. பொதுவாக ஆடிமாத வெள்ளிக்கிழமைகள் பெண்தெய்வங்களுக்கும் திங்கள், சனி ஆகிய நாட்கள் ஆண் தெய்வங்களுக்கும் கொண்டாடத் தக்க நாட்கள் ஆயின. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெண்தெய்வங்களில் அங்காளம்மன், திரௌபதிஅம்மன், அஞ்சூரம்மன், கன்னிமார் ஆகியோரும் ஆண் தெய்வங்களில் ஐயனாரப்பன், முனியசாமி, காத்தவராயன் ஆகியோரும் வழிபடப்பெற்று வருகின்றனர்.

சென்னை நகரிலும் சிறுதெய்வக் கோயில்கள் மிகுதியாகவுள்ளன. ஆனால், இத்தெய்வங்களை வழிபடுவோர் பெருந்தெய்வக் கோட்பாடு உடையவர்களானதால், பெருந்தெய்வமான பராசக்திக்குரிய புனைந்துரைக் கதைகளை இக்கோயில்களுக்குப் பொருத்தி அவற்றிற்குப் பொருத்தமான ஓவியங்களையும் சிற்பங்களையும் அமைத்தார்கள். பிற ஊர்களிலிருந்து சென்னையில் குடியேறியவர்கள் தங்கள் ஊர்களுக்குரிய கோயில்களின் பெயரில் சென்னையில் புதிய கோயில்களை அமைக்க விரும்பினார்கள். இதற்காகத் தங்கள் ஊர்க்கோயில்களின் மண்ணைச் சிறிதளவு தங்கள் மடியில் இட்டுக் கொணர்ந்து சென்னையில் தாங்கள் புதிதாகக் கட்ட விரும்பிய இடத்தில் அதனைப் பெய்து அங்கு அக்கோயில்களை அமைத்தார்கள். இவ்வகையில் 'மடிமண்' கோயில்கள் பல தோன்றின. இம்முறையில் கடும்பாடி, பெரியபாளையம், கோலூர், திருப்பதி, வேம்புலி ஆகிய ஊர்களின்

கிராமத் தெய்வங்கள் சென்னையில் குடியேற்றப் பெற்று நிலைபெற்றன. சென்னை நகரில் தொன்மைக்காலம் முதல் வழிபட்டுவந்த சிறுதெய்வங்கள் துளிர் காவனத்தம்மன், பேயாண்டியம்மன் ஆகியவையாகும்.

தமிழகத்தின் தலைக் கிராமத் தெய்வம் மாரியம்மன் ஆகும். இவ்வழிபாடு ஆதியில் கன்னட நாட்டிலிருந்து தெற்கு நோக்கி வந்தது என்பாரும் உளர். தென்னகத்தின் தலைமைத் தெய்வமாகப் பிடாரியே விளங்குகிறது. பெருந்தெய்வம் போற்றப்படும் ஊர்களில் கூடக் கொடியேற்றத்தின் முன்பு பிடாரிக்கு விழா எடுக்கப்படுகிறது.

பிடாரிக்குக் கல்லால் உருவச்சிலைகள் அமைக்கப்பட்டன. பாசம், தமருகம், கபாலம், சூலம், அழல்முடி ஆகியவற்றோடு அமர்ந்த நிலையில் பிடாரி உருவம் அமைக்கப்படுகிறது. சோழர்காலத்தில் செப்புப் படிவங்களாக உருவாக்கப்பட்ட பல சிலைகள் பிடாரி தெய்வத்திற்குரியன.

பிடாரி உற்சவத் திருமேனிகள் பெருங்கோயில்களிலேயே வைத்துப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றிற்குச் சிவாசாரியார்கள் அபிசேகம், ஆராதனை முதலியவை புரிகின்றனர். இவை செல்லியம்மன் என்ற பெயரில் வழிபடப்பெறுகின்றன. இக்கோயில்கள் வடக்கு நோக்கியிருப்பது மரபாகும். திருவான்மியூர் மருந்தீசர் கோயிலின் வடமேற்குப் பகுதியில் செல்லியம்மன் கோயில் உள்ளது.

## கொற்றவை

"அடங்காப் பசுந்துணி பிடர்த்தலை பீடம் ஏறிய மடக்கொடி; வெற்றிவேல் தடக்கை கொற்றவை" எனச் சிலப்பதிகாரம் கூறும். கொற்றவை "பாய்கலைப்பாவை", "யாளிக்கொடியாள்" என்னும் பல பெயர்களில் வணங்கப் பெறுகின்றாள். சங்க காலத்தில் உயர்ந்த நிலையில் பாலைநிலத்தின் கடவுளாகவும் வாளிலும் வீரர் தோளிலும்வாழ்பவளாகவும்போர்க் கடவுளாகப் போற்றப்பெற்றவள் கொற்றவை.

கொற்றவை எட்டுக் கரங்களையுடையவள். வில், வாள், சங்கு, சக்கரம், குறுவாள், கேடயம், சூலம், கிளி ஆகியவற்றைத் தாங்கி மான் மீது சாய்ந்திருப்பாள். பாய்கின்ற கலைமானை ஊர்தியாக உடையவளாதலால் பாய்கலைப்பாவை என்னும் பெயரும் இவளுக்கு உண்டு. ஓர் இளம்பெண்ணைக் கொற்றவையாக அழகுற அலங்கரித்து வழிபடுவதைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

வெற்றியின் தலைவி (கொற்றம்+அவ்வை) என்ற பொருளில் இப்பெயர் அமைந்தது. முருகனைக் 'கொற்றவைசெல்வ' எனத் திருமுருகாற்றுப் படை கூறுகிறது. பல்லவர்கள் காலத்தில் வடவர் வழிபாடான துர்க்கை வழிபாடு தமிழகத்தில் வேரூன்றிற்று. ஒரே சிற்பத்தில் கொற்றவை, துர்க்கை ஆகிய இருவர் கூறுபாடுகளை இணைத்துச் சிற்பங்களைப் பல்லவர் படைத்தனர். பின்னர்க் கொற்றவை வழிபாடு துர்க்கை வழிபாட்டில் கலந்து மறைந்து விட்டது. போர்களும் கொள்ளையிடுதலும்

குறைந்ததும் துர்க்கை வழிபாடும் தன்னிலையில் குறுகிற்று. துர்க்கையும் தன் இயல்பை விடுத்துச் சிவன் கோயில் கோட்டத் தெய்வமாயினள். துர்க்கைக்குத் தனிக்கோயில்கள் தற்போது இல்லையெனினும் எண்ணற்ற ஊர்களில் கல் பலகைச் சிற்பமாகக் கொற்றவை வடிவம் வணங்கப்பெற்று வருகிறது. இதில் எட்டுக்கரங்களுடன் சங்கு சக்கரம் வளை, தடி, சூலம், வாள், வில், அம்பு, கேடயம் ஆகியவற்றை ஏந்தியுள்ளாள். திருவடியில் பந்து, கழங்கு, கிளி ஆகியன உள்ளன. பின்புறம் ஒரு மான் நிற்கிறது. வலப்பக்கம் தலையை அறுத்துக் கொடுக்கும் மனிதனும் இடப்புறம் வணங்கும் மனிதனும் உள்ளார்கள்; திருவடியில் காட்டெருமைத் தலையும் உள்ளது. செங்கை மாவட்டத்தில் பல ஊர்களில் கொற்றவையின் இத்தகைய சிற்பங்களைக் காண்கிறோம். இவை வெட்ட வெளியில் வைத்தே வணங்கப் பெறுகின்றன.

# தீர்த்தங்கள்

தீர்த்தம் என்னும் சொல் துறை, வழி என்னும் பொருள்களைக் கொண்டுள்ளது. பின்னர் இச்சொல் மக்கள் ஆற்றில் இறங்கிக் குளிக்கும் இடத்தையும் குறிப்பதாக அமைந்தது.

நீர்நிலையில் உடலைத் தூய்மை செய்து கொண்டவுடன் இறைவனை வழிபடுவதற்காக அந்நீர்நிலைக்கு அருகிலே விநாயகர் திருவுருவத்தையோ சிவலிங்கத்தையோ திருமால் திருவுருவத்தையோ மக்கள் நிறுவி அதனை வழிபடத் தொடங்கினார்கள். இவ்வாறு தெய்வத் திருவுருவத்துடன் விளங்கிய இந்நீர்நிலைகள் தீர்த்தங்கள் எனவும் பெயர் எய்தின. நீராடுதலால் முன்பு செய்த வினைகளின் காரணமாக ஏற்பட்ட பாவத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்னும் நம்பிக்கை வலுவுற்றது. ஆதலால், நீர்நிலைகள் யாத்திரைக்குரியவையாக அமைந்தன. பொருள்கள் பலவற்றைப் பயன்படுத்தி வேள்வி செய்வதையும் உடலை வருத்திச் செய்யும் தவத்தையும்விட யாத்திரை மேற்கொண்டு புனித தீர்த்தங்களில் நீராடி அங்குள்ள கோயில்களில் வழிபாடு ஆற்றுவது எளிது என மக்கள் கண்டறிந்து செயல்பட்டார்கள். இதன்விளைவாகத் தீர்த்தக் கரைகளில் கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்கள் கட்டப்பட்ட இடங்களில் நீர்நிலைகள் இல்லையெனில் அங்குக் குளங்களோ கிணறுகளோ தோண்டப்பெற்றன. இவ்வகையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் பொருள்கள் போற்றப்பெற்றன. தீர்த்தம் இறைவனுக்குச் சரிநிகராகப் போற்றப்பெற்றது. "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே" எனத் திருநாவுக்கரசர் தீர்த்தங்களை இறைவனாகவே போற்றினார். (6_78_1)

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு ஓர்
வார்த்தை சொலச்சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

- எனத் தாயுமானவர் சுட்டிக் காட்டியுள்ளார். தீர்த்தம் கடலாகவோ ஆறாகவோ கிணறாகவோ குளமாகவோ இருக்கலாம். திருக்கோயிலில் திருவுருவங்களுக்கு அபிடேகம் செய்ய இத்தகைய தீர்த்தங்களின் புனிதநீர் பயன்படுத்தப்படுகிறது.

சிவன் கோயில்களிலுள்ள தீர்த்தக்குளங்கள் "சிவகங்கை" என்னும் பெயரில் விளங்குவன ஆயின. திருமால் கோயில்களின் தீர்த்தங்கள் "புட்கரணி" என்னும் பெயர் பெற்றுள்ளன. முருகப்பெருமான் கோயில்களின் அருகிலுள்ள குளங்கள், அவர் தோன்றிய சரவணப்பொய்கையின் பெயரில் சரவணப் பொய்கை என்னும் பெயரில் விளங்குகின்றன.

சென்னையைப் பொறுத்தவரையில் தீர்த்தங்களாக அமையக்கூடிய ஆறுகள் இல்லை. சென்னையில் புனித நாள்களில் கடலில் நீராடுதல் பெருவழக்காக நிலைபெற்றுள்ளது. இங்குத் தீர்த்தக் குளங்கள் பல உள்ளன. சென்னையிலுள்ள தீர்த்தக்குளங்களின் தூய்மையை நிலைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு அண்மையில் சீராக்கப்பெற்ற தீர்த்தக்குளம் திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி கோயில் திருக்குளமாகும். புரசைவாக்கம் கங்காதேசுவரர் கோயில் திருக்குளத்தைப் புனிதமாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மற்றக் கோயில்களின் தீர்த்தக் குளங்களும் இவ்வாறு சீர்படுத்தப்படும் என்னும் நம்பிக்கை உள்ளது.

சென்னை, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடல் ஒரு மாபெரும் தீர்த்தமாகவுள்ளது. இங்குச் சேயாறு, பாலாறு, ஆரணிஆறு, பாலிஆறு ஆகியவை தீர்த்த ஆறுகள். பாலிஆறு கூவம் ஆறாகும்.

இந்த ஆறு சென்னைக்கு மேற்கில் 40 கிலோமீட்டர்த் தொலைவில் தற்போது கூவம் என வழங்கிவரும் திருவிற்கோலத்தில் புனிதத் தீர்த்தமாகவுள்ளது. இங்குள்ள தீர்த்தக் குளத்தில் தவளை எதுவும் இல்லை.

கிருட்டிணாம்பேட்டையில் உள்ள ஈசுவரர், தீர்த்தத்தைப் பாலிப்பவர் (பாதுகாப்பார்) ஆதலால் அவர் தீர்த்தபாலீசுவரர் ஆவார்.

## கட்டடக்கலை

சங்ககாலத்துக் கோயில்கள் யாவும் சுடுமண் கோயில்களாக இருந்தமையால், அவை காலப்போக்கில் சுவடற்றுப் போயின. சங்ககாலத்தை அடுத்துச் சோழமன்னன் கோச்செங்கணான் சிவன் கோயில்கள் எழுபது கட்டினான்

என்பதற்காக அவன் "எண்டோள் ஈசற்கு எழில் மாடம் செய்து உலகாண்டான்" எனத் திருமங்கையாழ்வாரால் புகழப் பெற்றான். இவன் கட்டிய மாடக் கோயில்கள் செங்கல்லால் கட்டப்பட்டன.

பல்லவர் ஆட்சி தமிழகத்தில் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கிற்று. அம்மன்னர்கள் கலை விற்பன்னர்கள். வடநாட்டுக் கலைகளையும் ஓரளவு உணர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் காலம் வரை இருந்துவந்த, மண்கோயில்கள் நெடுங்காலம் தாங்குவன அல்ல என்பதை உணர்ந்து, இறைவன் கோயில்கள் நிலைபெற்றிருக்கவேண்டும் என்பதற்காகக் கருங்கலில் கோயில்களை அமைத்தார்கள் மலைப் பாதைகளைக் குடைந்து, மண்டபங்களை உண்டாக்கினார்கள்; பின்னர்த் தனிக்கற்றளிகளைத் தேர்கள் போல் அமைத்தார்கள்; பாறைகளில் உருவங்களைச் செதுக்கினார்கள்; பிறகு செதுக்கிய கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டிக் கோயில்களாக்கினார்கள்.

பல்லவமன்னன் மகேந்திரவர்மன் காலம் முதல் தமிழ்நாட்டில் குடைவரைக் கோயில்கள் தோன்றின. மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம், நாமக்கல் ஆகிய ஊர்களிலுள்ள திருமால் கோயில்களும் வல்லம், தளவானூர், திருச்சிராப்பள்ளி மலை ஆகியவற்றிலுள்ள சிவன் கோயில்களும் மண்டகப்பட்டியிலுள்ள திருமூர்த்தி கோயிலும் மகேந்திரன் காலத்துக் குடைவரைக் கோயில்களாகும். மலைத்தளிகள் எனக் குறிப்பிடப்படும் கற்றளிக் கோயில்கள் ஐந்து, மாமல்லபுரத்தில் நரசிம்மவர்மன் காலத்தில் கட்டப்பட்டன. அவை தற்போது பஞ்சபாண்டவர் இரதங்கள் என்னும் பெயரில் விளங்கிவருகின்றன.

மகேந்திரவர்மன், நரசிம்மன், முதல் பரமேசுவரன் ஆகியோர்களுக்குப் பின்னரும் குடைவரைக் கோயில்கள் சில கட்டப்பட்டன. பின்னர்ச் செங்கல்லும் கருங்கல்லும் இணைத்துக் கட்டப்படும் வகையில் கலப்புக் கோயில்கள் தோன்றின. கூரம் என்னும் ஊரில் முதலாம் பரமேசுவரன் சிவன் கோயிலைக் கலப்புக் கோயிலாகக் கட்டினான். இரண்டாம் நரசிம்மனாகிய இராசசிம்மன் காலத்தில் காஞ்சியில் கயிலாயநாதர் கோயில், பிறவாதான் ஈசுவரம், இறவாதான் ஈசுவரம், மாமல்லபுரத்திலுள்ள கடற்கரைக்கோயில், திருக்கழுக்குன்றம் உச்சியில் உள்ள வேதபுரீசுவரர் கோயில் ஆகியவை தோன்றின. உத்திரமேரூரில் சுந்தர வரதப் பெருமான் கோயில் என்னும் துலாபாராக் கோயில் தந்திவர்மன் காலத்தில் கட்டப்பட்டது. அபராசித மன்னன் காலத்தில் திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோயில் கட்டப்பட்டது.

இவ்வாறு பல்லவர்களால் வளர்க்கப்பட்ட கற்றளிக்கோயில்களின் கலை சோழமன்னன் விசயாலயன் பரம்பரைச் சோழமன்னர் காலத்துப் பேராதரவால் மிக்க உயர்நிலையை அடைந்தது. சோழர்கள் மூலத்தானத்தை மிகப்பெரிதாகக் கட்டினார்கள். முதலில் கருங்கல்லினாலும் பின்னர்ச் செங்கல்லினாலும் கட்டினார்கள். சுற்று மண்டபங்களும் கோபுரங்களும் அளவில் சிறியவையாக அமைக்கபபட்டன. மூலத்தான மூர்த்திக்கும் மற்றச் சுற்றுத் திருவுருவங்களுக்கும் பெரியவையாகச் சந்நிதிகள் அமைக்கப்பட்டன. மதில்கள் உயரமாக

எழுப்பப்பட்டன. செப்புத்திருமேனிகள் அழகாகச் செய்யப்பட்டன. சோழ மன்னர் காலத்தில் நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியோர் திருவுருவங்கள் வணங்கப்பெற்றன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் காட்டிய வழிகளில் கோயில் அமைப்பே ஒரு கலையாகப் போற்றப்பட்டது. சோழநாட்டிலிருந்து இக்கலை பாண்டிநாட்டிற்கும் ஈழநாட்டிற்கும் சென்றது; திரைகடல் ஓடித் தமிழர்பண்பாடுகளைப் பரப்பச் சென்ற தமிழ் வீரர்களும் வணிகர்களும் கோயிற்கலையைச் சாவகம் (ஜாவா), கம்போடியா, (இந்துசீனா) முதலிய நாடுகளுக்குக் கொண்டு சென்றார்கள்.

சோழர்களும் பாண்டியர்களும் மெலிவடைய மைசூர்ப் பகுதியைச் சார்ந்த ஒய்சாலர்கள் சிறிதுகாலம் கோயில் அமைப்பைத் தமிழகத்தில் சிறப்படையச் செய்தார்கள். இவர்கள் தென்னாட்டில் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் கண்ணனூர்ப் போசலேசுவரர் கோயிலில் தங்கள் வேலைப்பாடுகளைப் புகுத்தினர். இதைப்போன்று கோதாவிரிக்கும் கிருஷ்ணா ஆற்றுக்கும் இடைப்பகுதியில் வாழ்ந்த சாளுக்கியர்களும் கோயிற்கலை வளர்ச்சிக்கு உதவினார்கள். பின்னர்த் தோன்றிய முகமதியர் ஆட்சியை எதிர்த்து விசயநகராட்சி தொடங்கிற்று. இவர்கள் காலத்தில் மூலத்தானத்தை விடச் சுற்றுப் புறக்கட்டடங்கள் பராமரிக்கப்பட்டன. முன்மண்டபங்கள், பெருங்கோபுரங்கள், பெரிய மதில்கள், குளங்கள், நந்தவனங்கள் முதலியவற்றை அமைத்துக் கோயில்களைச் சிறப்பித்தார்கள். நான்கு முதல் ஆயிரத்தெட்டுத் தூண்கள்வரை அமைந்த மண்டபங்கள் கட்டப்பட்டன; அழகிய படிகள் கொண்ட தெப்பக்குளங்கள் தோண்டப்பட்டன. தூண்களில் பலவகைச் சிற்பங்களும் விட்டங்களிலும் தளங்களிலும் கற்சங்கிலிகள், கல் மலர்கள் ஆகிய வடிவங்களும் உத்தரங்களில் விலங்குகள் முதலியவற்றின் உருவங்களும் செதுக்கப்பட்டன. இவ்வாறு கோயிற் கட்டடக்கலை வளர்ச்சி பெற்று வந்தது.

விசய நகர ஆட்சிக்குப் பின்னர்க் கோயிற்கலை முகமதியர் ஆட்சியில் ஒளி இழந்து மங்கிய நிலைமை எய்தியது. பின்னர்ப் புகுந்த ஆங்கில ஆட்சியிலும் நம்நாடு அயல்நாட்டவர் கலையிலும் பண்பாட்டிலும் மூழ்கிவிட்டதால், இறுதியில் விசயநகர ஆட்சி வரையில் எய்திய கோயிற்கட்டடக்கலை முன்னேறவில்லை. எனினும், தமிழர் கோயிற்கட்டடக் கலையைக் கூறும் பண்டைக் காலத்து நூல்கள் இன்றளவும் கடைபிடிக்கப்பட்டு வருவதால் பல்லோராலும் போற்றப் பெற்று வருகிறது.

கோயில்களுள் பெரும்பகுதிகளாக விளங்குவன கருவறை, கோபுரம், விமானம், பிராகாரம், மண்டபங்கள் ஆகியவை. ஆதலால், இவற்றின் நுட்பங்களை இங்கு ஓரளவு காண்போம்.

## கருவறைக் கட்டடம்

கருவறைக் கட்டடம் கீழிருந்து மேலாகப் பின்வரும் உறுப்புகளைக் கொண்டது.

(1) அடித்தளம் - இது நிலத்திற்குள் புதைந்துள்ள பகுதி.

(2) உபபீடம் - அடித்தளத்தின் மேல் உள்ளது. கருவறைக்கட்டடத்தின் உயரத்தை மிகுதிப்படுத்தப் பயன்படுவது.

(3) அதிட்டானம் - வெளியே காணப்படும் அடிப்பகுதி. அதிட்டானத்தை அடித்தளம் எனவும் கூறுவர் சிலர். இது பூமிக்குமேல் காணப்படும் அடித்தளம். இஃது அழகிய பல வேலைப்பாடுகள் கொண்டது.

(4) சுவர்

(5) பிரஸ்தாரம் - (கூரை)

(6) கிரீவம் (கழுத்து)

(7) சிகரம்

(8) தூபி

அதிட்டானம் முதல் தூபி வரை உள்ள 6 உறுப்புகளை முறையே அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி ஆகிய மனித உடலின் 6 உறுப்புகளுக்கு ஒப்பிடுவர்.

சிவன், திருமால் ஆகியோர் சந்நிதிகள் மீது சதுரவடிவ விமானமே அமைகின்றது. ஒரே தளத்தினையுடைய விமானம் உருண்டையாகவும் அமையும். மூன்று அல்லது நான்கு தளங்களை உடைய விமானங்கள் சதுரமாகவே அமைகின்றன. கிரீவம் எனப்பெறும் கழுத்துப்பகுதி மட்டும் சிலசமயம் சதுரமாகவும் பெரும்பாலும் வட்டமாகவும் குறைந்த அளவில் எண்கோணமாகவும் அமையும். அம்பிகை அரங்கநாதர் போன்றோர் விமானங்கள் நீள் சதுரமானவையாகும். இவை 1, 2, 4, என அடுக்காக அமையும். இரண்டு பெரிய பிரபைகளுடன் மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட கலசங்களைக் கொண்டு விளங்கும். இவற்றை சாலஹார விமானம் என்பர். நீள் சதுர அமைப்பில் யானைகளின் முதுகு போன்றோ, வைக்கோல் போர், கூரை வீடுபோன்றோ அமைந்து மூன்று, மூன்றுக்கு மேற்பட்ட கலசங்களைக் கொண்டு விளங்குவது சபாஹார விமானம் எனப்படும். மேற்சொன்ன மூன்றையும் 1/2 வட்டம், நீள்சதுரம், பிரபாவலி என்பதும் சேர்ந்து கசப்பிருட்ட விமானம் என்ற அமைப்பும் விளங்குகிறது. சபாகார விமானம் நடராச மூர்த்திக்கும் உற்சவ சோமாசுகந்த மூர்த்திகளுக்கும் உரியது. தூங்கானை மாடம் (தூங்குகின்ற யானையின் வடிவத்தை ஒத்ததாய்) சிவலிங்கத் திருமேனிக்குரியதாகும். நந்தி, கருடன் ஆகியோருக்குச் சதுர விமானங்களும் உள்ளன.

சிவன் கோயில் விமானங்களில் தென்புறம் தட்சிணாமூர்த்தியையும் மேற்கில் திருமாலையும் வடக்கில் பிரமனையும் கிழக்கில் முருகனையும் அமைக்க வேண்டும்.

இடைவெளிகளில் விமானம் தாங்கிகளும் முனைகளில் அட்டதிக்குப் பாலகர்களும் பூதகணங்களும் அவற்றின் இருபுறமும் நந்திதேவர் திருவுருவங்களும் வைக்கப்படும். கிரீவக் கோட்டமுனைகளில் நந்தியின் திருவுருவமும் பூத வடிவமும் வைக்கப்படுகின்றன. கோட்டங்களில் மேற்சொன்ன நால்வர் திருவுருவங்களும் உள. இடையிடையே திருமாலின் தசாவதாரச் சிற்பங்கள், சிவபெருமானின் வீரச்செயல்களைக் குறிக்கும் திருவுருவங்கள் நாயன்மார்கள் சிற்பங்கள் ஆகியவை உள்ளன.

திருமால் கோயில் விமானங்களில் கிழக்கில் பரவாசுதேவர், வடக்கில் கண்ணன், மேற்கில் வராகர், சீனிவாசர், தெற்கில் நரசிம்மர் ஆகியோர் காட்டப்பெறுவர். பெரிய விமானங்களில் திருமாலின் பல்வேறு வடிவங்கள் காணப்படுகின்றன. கிரீவ முனைகளில் கருடன் திருவுருவமும் இருபுறமும் சிங்கத்தின் உருவங்களும் காட்டப்படுகின்றன. திருமகள் (தாயார்) விமானங்களில் அட்டலட்சுமிகளும் ஆண்டாள் கோயில் விமானங்களில் ஆழ்வார்கள், ஆண்டாள் ஆகியோர் திருவுருவங்களும் சிங்கம் முதலியவற்றின் பெரிய வடிவங்களும் உள்ளன. கிராம தேவதைகளுக்கு விமானம் அமைப்பது கூடாதென்பது கருத்தாயினும் பின்னாளில் சாலகார விமானத்தை அமைத்தனர். இதிலும் பிராமி, வைணவி, துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் பூதம், சிங்கம் ஆகிய உருவங்களும் காணப்படுகின்றன.

அறிவியல் நோக்கில் ஒவ்வொருவகையான விமானமும் பால்வழிப்பாதையில் இருந்து சிவப்பு, நீலம் போன்ற கதிர்களை ஆகர்ஷிப்பதாகக் கூறுவர். பல்லவர், சோழர் ஆகியோர் கருவறையின் பெருமை குன்றுதல் கூடாது எனக்கருதி, கருவறை விமானத்தை வாயில் கோபுரங்களை விட உயரமாகக் கட்டினார்கள். சிற்ப மந்திரப்படியும் வைகானச ஆகமப்படியும் 96 வகையான விமான பேதங்கள் உண்டு. சிவாகமப்படி 64 வகைகள் உண்டு. பாஞ்சராத்திர ஆகமம் 48 வகை விமானங்களைக் கூறுகிறது.

## கோபுரம்

விண் அளாவி நிற்கும் கோபுரம் திராவிடக் கலையின் தனிப்பெருமையை எடுத்துக் காட்டுகிறது. வியத்தகு வகையில் ஓங்கி உயர்ந்த நிலைக்கோபுரமே ஒப்புவமையற்ற கலைச் செல்வம் எனக் கொண்டாடப் பெறுகிறது. மானசாரம் பண்டைக் காலத்துப் பெருமை மிக்க சிற்ப சாத்திரமாகும். இந்நூல் முதன்மை வாயில்களுக்கு அணிசெய்யும் ஐந்து வகைக் கோபுரங்களைச் சுட்டிக்காட்டுகிறது. இதன்படி கோயிலின் கருவறையைச் சுற்றி நிற்கும் பிராகாரக் கோபுரம் ஒன்று அல்லது இரண்டு தளங்களைக் கொண்டதாகும். இது துவாரசபை எனப்படும். அதனையடுத்து இரண்டாம் பிராகாரத்துக் கோபுரம் இரண்டு அல்லது இரண்டு முதல் நான்கு வரையிலுள்ள தளங்களைக் கொண்டிருக்கும். இதற்குத் "துவாரசாலை" என்பது பெயராகும். மூன்றாம் பிராகாரத்து வாயில்களுக்குத் "துவார பிரசாதம்" என்பது பெயராகும். இதற்கு மூன்று முதல் ஐந்து வரையிலுள்ள தளங்கள் உள்ளன. நான்காம் பிராகாரத்தின் வாயிலிலுள்ள கோபுரம் நான்கு முதல் ஏழு

தளங்களைக் கொண்டிருக்கும். இதற்குத் "துவார ஆர்மியம்" எனப்பது பெயராகும். ஐந்தாம் பிராகாரத்துக் கோபுரத்தைத் துவார கோபுரம் எனக் குறிப்பிடுவது உண்டு.

கோபுரத்தை இருபுறங்களிலும் நின்று பார்ப்பவருக்கு அடிப்பகுதி அகன்றும் உயர்ந்து கொண்டே செல்லும் பகுதி இருபக்கங்களிலும் சரிநிகர் அளவில் குறைந்தும் விளங்கும். கோபுரத்தின் முற்பக்கத்திலும் பிற்பக்கத்திலும் சாளரங்கள் அமைக்கப்படுகின்றன. இவை நிலைகள் எனவும் மாடங்கள் எனவும் குறிக்கப்படும். விமானங்களை விடப் பிற்காலக் கோபுரங்கள் உயர்ந்திருக்கும். கோபுரத்தில் துவாரம் அல்லது திருவாசல் எனப்படும் வாயில் உள்ளது. சாந்தைப் பயன்படுத்திக் கட்டப்படும் கலை தென்னிந்தியாவில் மேம்பட்டு நன்கு வளர்ந்தது. காஞ்சிபுரம் கயிலாயநாதர் கோயிலில் கல்லால் அமைந்த சிற்ப வேலைகளில் நுட்பமாக உருவாக்கப்பட வேண்டிய பகுதி மட்டும் சாந்தால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வெண்மைச் சாந்து சாத்துவிகம் மிகுந்த நிலையைக் காட்டுகிறது. முக்குணங்களுக்குரிய நிறங்கள் முறையே வெண்மை, செம்மை, கருமை ஆகியவை. இவற்றின் இயல்புகளும் உயர்தல், அகல்தல், இறங்குதல் என்னும் மூன்றுமாம்.

கோபுரக் கட்டடக்கலையின் வளர்ச்சியைப் பல்லவர் காலத்தைத் தொடர்ந்து காணலாம். மாமல்லபுரத்தில் துர்க்கைக்கென அமைக்கப்பட்ட கற்கோயிலில் திரௌபதை இரதத்தின் வாயிலை அழகிய மகரதோரணம் அழகுபடுத்துகிறது. பீமன் இரதத்தின் சிகரமும் கணேசன் இரதத்தின் சிகரமும் பிற்காலப் பல்லவர் காலத்துச் சாலைக்கூரை கோபுரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. புகழ்பெற்று விளங்கிவரும் திருவான்மியூர் மருந்தீசர் கோயிலுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் இரு கோபுரங்கள் அண்மையில் கட்டப்பட்டன. காஞ்சிபுரம் குமரகோட்டத்திற்கும் திருமழிசை ஒத்தாண்டேசுவரர் கோயிலுக்கும் தற்போது கோபுரங்கள் கட்டப்படுகின்றன.

சிவன் கோயில் கோபுரத்தின் மேற்பகுதி சிவ தத்துவங்கள் ஐந்தையும் நடுப்பகுதி வித்தியா தத்துவங்கள் ஏழையும் அடிப்பகுதி ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கையும் உணர்த்தி நிற்பன (சித்தாந்த சாராவளி, சரியாபாதம், சுலோகம் 36). கோபுரம் இறைவனது தூலத் திருமேனி ஆதலால், கோபுரத்தைத் தரிசித்ததும் அட்டாங்க வணக்கம் செய்தல் முறை. கோபுரத்து உறுப்புகள் சாலை, பஞ்சரம், கூடு எனக் குறிக்கப்பெறும். உச்சியில் சுதையால் கலசம் அமைப்பதே பழைய வழக்கமாக இருந்தது. இப்போது செப்பு, தங்க முலாம் பூசிய கலசங்கள் வைக்கப்படுகின்றன. கலசம் பெரும்பாலும் செம்மரத்தாலான தண்டில் பொருத்தப்படும். மொட்டு அல்லது தாமரை, அரடா, குடம், பாதம் என்பதே இதன் உறுப்பாகும். சிலசமயம் எட்டுப்பட்டைகளாகவும் நான்கு பட்டைகளாகவும் கலசம் இருக்கும். தூபியே தூல லிங்கமாகும்.

### பிராகாரங்கள்

கோயில்களுக்கு அழகைத் தருவன பிராகாரங்கள் (திருச்சுற்றுகள்) ஆகும்.

கோயில்களின் பிராகாரங்கள் கோயிலைச் சுற்றித் திட்டமிட்டு அமைக்கப்படும். கருவறை பிராகாரங்களால் சூழப்பெற்று விரியும் முறைமையைக் காரண ஆகமம் விரிவாகச் கூறுகிறது. கோயிலின் கருவறையை அடுத்து முதல் பிராகாரம் அமைகிறது. இதனையடுத்து இரண்டாம் பிராகாரமும் இரண்டாம் பிரகாரத்தையடுத்து மூன்றாம் பிராகாரமும் பின் நான்காம் பிராகாரமும் நான்கினையடுத்து ஐந்தாம் பிராகாரமும் அமைகின்றன. ஒரு பிராகாரக் கோயில்களும் உள்ளன. திருக்கோயிலில் வலம் வருவதற்குப் பயன்படுவன பிராகாரங்கள். வலம் வருதலைப் பிரதட்சணம் எனக் குறிப்பிடுவதுண்டு. பிரதட்சிணம் என்பதன் பொருள் இறைவன் அருளில் வீழ்தல் என்பதாம். பிராகாரங்கள் இவ்வகையில் இறைவன் திருவருள் மயமாக இருக்கின்றன. கருவறையிலுள்ள இறைவனின் நுண்ணிய திருவருட் கிரகணங்கள் எட்டுத் திசைகளிலும் மேலும் கீழும் பரவிப் பிராகாரங்களில் எங்கும் நிறைந்து நிற்கின்றன. திருக்கோயில்களில் வழிபடுவோர் வெளிப்பிராகாரம், பின்னர் உட்பிராகாரம், அதன்பின்னர் அதனுள் உள்ள பிராகாரம் என்னும் முறையில் வலம் வருதல் முறையாகும். இஃது உயிர் தனது பந்தங்களைச் (பாசங்களை) சிறிது சிறிதாக விட்டு ஒழிப்பதைக் கருத்தாகக்கொண்டுள்ளது. வழிபடுவோர் கருவறையின் முன் நிற்கும்போது பாசங்களையெல்லாம் விட்டு நீங்கியவர் எனக் கருதப்படுவர். எனவே, பிராகாரங்களில் வலம் வரும்போது உலகப்பற்றுகள் இன்றி, இறைவனையே அன்புடன் நினைந்து, அவர் அருளில் திளைத்து வலம் வருதல் வேண்டும் என்பது நெறியாகும்.

## மண்டபங்கள்

கோயிலுக்குரிய அங்கங்களுள் மண்டபம் முக்கியமானதாகும். நான்கு தூண்கள் முதல் ஆயிரம் தூண்கள் வரை கொண்ட மண்டபங்கள் உள்ளன. கோயில்களில் குறைந்த அளவில் அர்த்தமண்டபமாயினும் மகாமண்டபமாயினும் இருத்தல் வேண்டும்.

மண்டபங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். வாயில் வைத்துச் சுற்றுச்சுவர்கள் எழுப்பி அறைகள் போலக் கட்டப்பெறுவன. எடுத்துக்காட்டாகக் கருவறையை அடுத்து உள்மண்டபம், நடராசர் மண்டபம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**நெடுமண்டபம்:** பதினாறு தூண்களுடன் குறைந்த அளவில் ஆறுமீட்டர் வரையில் உயரம் கொண்டு அமைவது.

**குறுமண்டபம்:** நான்கு தூண்களுடன், நந்தி, கருடன், சண்டேசுவரர், சிங்கம் ஆகியோர்க்கு அமைக்கப்படும் சிறு மண்டபம்.

**இயல் மண்டபங்கள்:** ஓரளவு உயர்ந்த நிலையில் நான்கு முதல் ஆயிரம் தூண்கள் வரை கொண்டவை. இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள்: கொடியேற்ற

மண்டபம், அலங்கார மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் போன்றவையாகும்.

மண்டபங்களின் உறுப்புகள் உபபீடம், பீடம், தூண்கள், போதிகை, நாடகசட்டம், தளம், குடுமி போன்றவையாம். உபபீடம் என்பது அடித்தளம் நன்கு இட்டு மண்டபம் வலுவுள்ளதாக அமைய அமைக்கப்பெறும் அடித்தளம். அதன்மீது அழகிய வேலைப்பாடுகள் கொண்ட புறச்சுவர்களைக் கொண்டது பீடம் ஆகும். இதனைப் பட்டிகை, பாதம், தாமரை இதழ்கள், குதிரைவரிசை, யானை, அன்னம் போன்ற வரிசைகளால் இட்டு அழகுபடுத்துவர். அதன்மீது மேல்தளத்தைத்தாங்கும் தூண்கள் நிறுவப்படும். இத்தூண்கள் வட்டமாகவும் 4 முதல் 32 பட்டைகளை உடையனவாகவும் இருக்கும். அடி, நடு, தலைப்பாகம் சதுரமாகவும் இடையில் இரண்டு இடங்கள் பல்வேறு பட்டைகளையுடையதாகவும் இருக்கும். தூண்களின் பட்டைகளில் மீன், துவாரபாலகர், மலர்கள், விலங்குகள், தேவ வடிவங்கள், சிவன், திருமால், ஆச்சாரியர் வடிவங்கள் ஆகியவை புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்படுகின்றன. பல்லவர் காலத் தூண்களில் அமர்ந்த சிம்மம், பாயும் சிம்மம் முதலியவையும் விசயநகர அரசர் காலத் தூண்களில் பாயும் குதிரை, பெரிய யாளி போன்றவையும் செதுக்கப்பட்டுள்ளன. கல், மரம், செங்கல் ஆகியவற்றில் தனி ஒரு பொருளைக் கொண்டு கட்டப்படும் தூண் சுத்தம் என்னும் வகையைச் சாரும். இரு பொருள்களைக் கொண்டு கட்டப்படும் தூண் மிசரம் என்னும் வகையில் அடங்கும். மூன்று பொருள்களைக் கலந்து உருவாக்கப்படும் தூண் சங்கீர்ண வகையைச் சார்ந்தது. தூண்கள் சதுர வடிவாகவேனும் எண்கோண வடிவாகவேனும் பதினாறு கோண வடிவாகவேனும் ஐங்கோண வடிவாகவேனும் அறுகோண வடிவாகவேனும் உருவாகலாம். இவ்வகைத் தூண்கள் முறையே பிரமகாந்தம், விட்டுணுகாந்தம், உருத்திரகாந்தம், ஐங்கோணம், அறுகோணம் என்னும் பெயர்கள் பெறுகின்றன. தூணின் அடியும் நுனியும் ஒரே தன்மையினை உடையனவாக இருக்கும்.

போதிகை என்பது தூண்களின் தலைப்பகுதியில் வைக்கும் சும்மாடு போன்ற கல்லாகும். இவற்றைப் பெரும் தாமரை இதழ்களால் அலங்கரிப்பது பல்லவர் கலையாகும். இவற்றில் கீழ் நோக்கி வாழைத்தார் போலத் தாமரை மொட்டமைப்பது நகரத்தார் கலைப்பாணியாகும். இதற்கு மேல் குறுக்காக இடப்படும் தாங்கு கற்கள் நாடகச் சட்டங்கள் எனப்படும். இவற்றில் நெடும் பூக்கள், கொடிகள் ஆகியன செதுக்கப்படும். சில சமயங்களில் பாற்கடலில் அமிர்தம் கடைதல், நாட்டியக்கரணங்கள் போன்றவை செதுக்கப்படுவதும் உண்டு. வடமதுரை கோயில் அலங்கார மண்டபம் நாடகச் சட்டத்துள் தொடர் சிற்பங்களாக இராமாயணக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. திருவான்மியூர் மருந்தீசர் கோயில், திருவொற்றியூர்க் கோயில் நாடகச் சட்டங்களில் அமிர்தம் கடைதல் செதுக்கப்பட்டுள்ளது. திருவொற்றியூரில் இராவணனும் சேர்ந்து அமிர்தம் கடைவதாகக் காட்டப்பட்டுள்ளது. (அழகாகத் தனியாகத் துணைச்சட்டம் அமைப்பதுண்டு. இவற்றை கைச்சட்டம் என்பர். இதையும் பூக்களாலும் கொடிகளாலும் அழகுபடுத்துவர்). மேலே உள்ள தளக்கல் மூடுகல் எனப்படும். உள்பக்கம் நடுவில் தாமரை மலர், அதனைக் கொத்தும் கிளிகள், அட்டலட்சுமிகள், 16 சத்திகள், 12 இராசிகள் போன்றவை செதுக்கப்படும். மேற்பரப்பில் சுதையைப்

பூசிச் சமமாக்கிப் பெரிய மலர்கள், பெரிய ஓவியங்கள் நடராசர் முதலிய உருவங்கள் தீட்டப்படும். கச்சி ஏகம்பர் கோயில் மண்டபங்களில் பலவிதமான மலர்களையும் இறைவடிவ ஓவியங்களையும் காண்கிறோம். மேல் தளத்தின் நடுவில் விளக்கு, ஊஞ்சல் முதலியவை மாட்டுவதற்காகக் கொக்கிகள் பலவும் வைப்பர். மண்டபத்தில் இக்காலத்து "சன்ஷேடு" போல வளைந்த முகடு இருக்கும். இது கொடுங்கை எனப்படும். காஞ்சிபுரம் வரதர் கோயில் கொடுங்கை மரத்தால் செய்தது போன்று உட்புற வளைவில் அநேக வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. வெளிப்பரப்பில் புறாக்கள், குரங்குகள், பூனைகள் ஆகியவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நீர் வடியும் தாரைகள், குரங்கு, முதலை ஆகியவை போன்றும் செய்வதுண்டு. நெடு மண்டபங்களிலும் குறு மண்டபங்களிலும் மட்டும் மேல்தளத்தின் மீது ஒற்றைக் கலசத்துடன் கூடிய விமானம் அமையும். இஃது ஒன்று முதல் பல அடுக்குகளைக் கொண்டதாம்.

## சிலமண்டபங்கள்

**அர்த்தமண்டபம்** : கருவறையை அடுத்து அதனுடன் தொடுக்கப்பட்டவாறே இருப்பது. இதன் வாயிலில் துவாரபாலகர் இருவர் இருப்பர்.

**மகாமண்டபம்** : அர்த்தமண்டபத்தை அடுத்து இருப்பது.

**பிராகார மண்டபம்** : பிராகாரத்தில் நாற்புறமும் சூழ்ந்துள்ளது.

**நிருத்த மண்டபம்** : நடராசர் எழுந்தருளியிருக்கும் மண்டபம். இது பெரும்பாலான கோயில்களின் நடராசர் சபையாகும்.

**நாட்டிய மண்டபம்** : விழாக்காலத்தே தேவரடியார் இறைவனுக்கு நாட்டியக் கலை ஆடும் கூடம். தற்போது தேவரடியார் என்போர் இலர்.

**கலாமண்டபம்** : அழகிய ஓவியங்களாலும் சிற்பங்களாலும் நிறைவிக்கப்பெறும் மண்டபம்.

**போசன மண்டபம்** : இறைவன் திருவமுது கண்டருளுமிடம்.

**சோபன மண்டபம்** : இக்காலத்திய கண்ணாடி அறை. மறையவர்கள் இறைவனை நிலைப்படுத்திச் சோபனம் கூறுமிடம்.

**ஏகாந்த மண்டபம்** : இறைவனை மிகுதியான அலங்காரமின்றி வேதகோஷம், பண் ஒலி, முழவொலியின்றி மௌனமாக தரிசிக்கும் மண்டபம்.

**வசந்த மண்டபம்** : கோடைக்காலத்தில் உத்யானவனத்தில் இறைவனை எழுந்தருளச் செய்யுமிடம். இங்குப் பல கேளிக்கைகள் நடைபெறும்.

**பக்த மண்டபம்**: பக்தர்கள் வீற்றிருந்து இறைவனைத் தரிசிக்க விசாலமாக அமைந்த இடம். அன்றியும் பக்தர்களான நாயன்மார்கள் போன்றோர் உருவமைந்த இடம்.

**வாத்திய மண்டபம்** : இசைக்கருவிகளை வைத்து இசைக்கும் மண்டபம். திருத்தணிகையில் முகமதியர்கள்வாத்தியம் வைத்து இசை அர்ப்பணம் செய்யுமிடம் முல்லா வாத்திய மண்டபமாக விளங்குகிறது.

**பவித்திர மண்டபம்** : புனித சடங்குகளை இறைவனுக்குச் செய்யும் மண்டபம்.

**சிருங்கார மண்டபம்** : சிற்றின்ப லீலைகளைக் காட்டும் பதுமைகள் அமைந்த மண்டபம். இஃது உயிர்தொறும் உறைந்துள்ள படைப்பாற்றலைக் குறிக்கும்.

**திருவோலக்கமண்டபம்** : இறைவன் சிங்காசனத்து வீற்றிருந்து பக்தர் குறையறியும் பாங்குறு மண்டபம். சீரிய சிங்காசனத்திருந்து எங்கள் குறையைக் கேட்டருள்க என்பது போன்ற வேண்டுதல்கள் இங்குக் கருத்திற் கொள்ளத் தக்கன.

**முகமண்டபம்** : இருபுறமும் படிகளுடன் முகப்பையொட்டி அமைந்துள்ள மண்டபம்.

**கொடியேற்ற மண்டபம்** : கொடியேற்றத்தின்போது இறைவன் அமர்ந்துள்ள இடம்.

**இரதாரோகண மண்டபம்** : இரதத்தின் மீது சுவாமியை ஏற்றுவதற்கு வசதியாக நெடிய படிகளுடன் உயரமாக அமைந்த மண்டபம். இதனைத் தேர்முட்டு மண்டபம் என்பர்.

**அலங்கார மண்டபம்** : அலங்கரிக்குமிடம்.

**ஊஞ்சல் மண்டபம்** : ஊஞ்சலிடும் மண்டபம்.

**வேத மண்டபம்** : வேத கோஷமிடும் மண்டபம்.

**ஆசார வாசல் மண்டபம்** : பதினாறு தூண்களுடன் கோயிலுக்கு வெளியே அமையும் மண்டபம்.

**பாரிவேட்டை வனபோசன மண்டபம்** : ஊருக்கு வெளியில் காணும் பொங்கல் நாளிலும் விசயதசமி நாளிலும் வேட்டைக்கு எழுந்தருளும் மண்டபம்.

**நீர்த்துறை மண்டபம்** : ஆற்றங்கரை, குளக்கரை முதலிய தீர்த்தவாரிக்குச் செல்லும்போது எழுந்தருளுமிடம்.

**நீராழி மண்டபம்** : குளத்திற்கு நடுவில் அமைந்துள்ள மண்டபம். தெப்பத் திருவிழா நாள்களில் சுவாமி இங்கு எழுந்தருள்வார்.

**வாகனமேற்று மண்டபம்** : வாகனங்களில் ஏற்றுவித்து உபசரிக்கும் இடம்.

| | |
|---|---|
| கோயில்களின் கருவறை | - தலை, |
| அர்த்த மண்டபம் | - கழுத்து |
| மகாமண்டபம் | - மார்பு |
| நிருத்த மண்டபம் | - தொடை |
| யாக சாலை | - நாபி |
| கோபுரம் | - பாதம் |

என ஆலயம் ஒரு புருஷ வடிவம் கொண்டது என்று ஆகமங்கள் கூறுகின்றன. மானிட உடலில் ஆறு ஆதாரங்கள் அமைந்திருத்தல் போல், ஆலயத்தின் மண்டபங்கள் ஆதார சொரூபமாய் விளங்குகின்றன.

| | |
|---|---|
| கருவறை | - ஆஞ்ஞை (புருவ நடு) |
| அர்த்த மண்டபம் | - விசுத்தி (கண்டம்) |
| மகாமண்டபம் | - அநாதகம் (இதயம்) |
| ஸ்னபன மண்டபம் | - மணிபூரகம் |
| அலங்கார மண்டபம் | - சுவாதிட்டானம் |
| சபா மண்டபம் | - மூலாதாரம் |

**இளைப்பாறும் மண்டபம்** : மலைப்பாதையில், மலைச்சுற்றுப் பாதையில் இளைப்பாறுவதற்கென அமைந்த மண்டபம். திருப்போரூர், திருத்தணிகை, திருக்கழுக்குன்றம் போன்ற இடங்களில் இத்தகைய மண்டபங்களைக் காணலாம்.

**நடுவில் அமையும் சிம்மாசனம்** : நூற்றுக்கால் மண்டபம், அலங்கார மண்டபம் முதலிய மண்டபங்களின் இடையில் ஒரு மேடையை அமைப்பதுண்டு. அம்மேடையை ஓர் ஆமை தன் முதுகில் தாங்கிக் கொண்டிருப்பது போல அமைப்பார்கள். மேடைப் பீடத்தில் எட்டு யானைகள், திக்குப்பாலர் எண்மர், சக்திகள் எண்மர், எட்டு நாகங்கள் ஆகியவற்றைப் படைப்பது வழக்கம், திருக்கழுக்குன்றத்தில் இப்படி, அழகிய ஆமையும் அதன் மூகில் சிம்மாசனமும் கொண்ட மண்டபம் உள்ளது. அஃது ஆமை மண்டபம் என்றே குறிப்பிடப்படுகிறது.

## திருமால் கோயில்களுக்குரியவை

**சொக்கட்டான் அல்லது சதுரங்க மண்டபம்** : சதுரமான அமைப்பில் ஒரு மண்டபம்; அதன் நான்கு முகங்களில் விரிந்து செல்லும் மண்டபம் (வெளி சதுரங்கம்)

**உட்சதுரங்கம்** : நடுவில் உயர்ந்த மண்டபம். அதனை மையமாகக் கொண்டு கூட்டல் குறி போன்று நடைபாதை சுற்றிய மண்டபம்.

**கங்கைகொண்டான் மண்டபம்** : ஊரின் வடமேற்கு முனையில் அமைந்த மண்டபம். கங்கை கொண்ட சோழ மரபினரால் தொடங்கப்பட்டு பல ஊர்களிலும் அவர்கள் பெயராலேயே கட்டப்பட்டுள்ளவை. காஞ்சிபுரம் கங்கை கொண்டான் மண்டபம் இவ்வகையில் புகழ் வாய்ந்தது.

திருக்கோயில்களின் பூசைக்காகப் பயன்படுத்தப்பெறும் பொருள்களும் பகுதிகளும் மந்திரங்களால் தூய்மை செய்யப்பட்டவுடன் அவை உயர்நிலையில் மதிக்கப்படுகின்றன. கோயிலிலுள்ள மண், கல், தூண், மரம், செம்பு, குடம் முதலிய அனைத்துமே மந்திர சக்தி ஊட்டப்பெற்றவையாய்த் தெய்வீகத் தகுதி பெறுகின்றன. உலகில் பொது நிலையில் எங்கும் நிறைந்து விளங்கும் இறைவன் தெருவில் காணப்படும் கல்லிலும் உறைகிறார். எனினும், திருக்கோயிலின் கருவறையில் இலிங்க வடிவில் அமைக்கப்பட்டுப் பூசைகளால் வல்லமை ஊட்டப்பட்ட நிலையிலுள்ள திருவுருவமே சிறப்புமிக்க தெய்வீகச் சாந்நித்தியம் கொண்டுள்ளது என்பது விளங்குகிறது.

### அற்புதச் சிற்பங்கள்

1. தூண்களில் அமைந்த உபதூண்களைத் தட்டினால் ஏழு சுரங்களும் ஒலிக்குமாறு அமைப்பது.

2. தூண்களின் போதிகைகளில் உள்ள சிங்கங்களின் வாயில் வெளியில் எடுக்க முடியாத கற்கள் உருளுவது போல அமைத்தல்.

3. சிறு நுனியில் குச்சியைச் செலுத்தினால் அது மறுமுனையில் நான்காகப் பிளந்துகொண்டு வருவது போன்றமைத்தல்.

4. முனைகளில் கற்சங்கிலிகளைப் பொருத்துதல்.

## சிற்பங்களும் ஓவியங்களும்

தமிழர்க்கு அறுபத்து நான்கு கலைகளையும் உணர்த்திய பெருமாட்டி கலைச்செல்வி சகலகலாவல்லியே என்பதைக் குமரகுருபரர்,

"ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை."

எனப் போற்றுகிறார். இக்கலைகளுள் சிற்பக்கலையும் ஒன்றாகும். இக்கலை வெறும் இயற்கை அழகும் செயற்கை அழகும் மட்டும் கொண்டதன்று. அதன் தனிச்சிறப்பு, இந்திய சமயத் தத்துவக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு என்றும் உள்ள இறைவன் கருணை போன்று என்றும் நிலையாக இருப்பதாகும்.

தமிழகத்தில் பழங்காலத்தில் இறந்த வீரர்களின் நினைவாக "வீரக்கல்லும்" கற்புடைய மகளிருக்கு "மகா சதிர் கல்லும்" நடும் வழக்கம் இருந்தது என்பதைத் தமிழ் இலக்கணங்களும் தமிழ் இலக்கியங்களும் வலியுறுத்துகின்றன. இவ்வாறு வாழ்க்கையில் இடம் பெற்றிருந்த சிற்பக் கலை மிளிர்ந்து, மனிதர் மாடமாளிகைகள் அமைத்துக் கொள்வதற்கும் ஞானநிலை எய்துவதற்கும் பயன்படலாயிற்று. இவ்வாறு சிற்ப நூலறிந்த சிற்பிகள் நாள் பார்த்து, நாழிகை பார்த்து, நேரறி கயிறிட்டுத் திசைகளையும் அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் தங்கள் சிந்தனையில் தேக்கி வைத்த எழில் ஞானத்தில் புகுந்த சிற்பங்கள் எல்லாம் ஒன்றுகூடி எழுந்தன போன்று கோயிற் சிற்பங்கள் அமைந்துள்ளன. இவ்வாறு சிற்பிகளுக்கு வழிகாட்டியவை அகத்தியரது சகளாதிகாரம், காசிபரது காடியபம், மயனது மயமதம், மாநசரது மாநசாரம் ஆகியவையும் பிறவுமாம்.

இச்சிற்பங்கள் நாட்டியக் கலை, சிருங்காரரசம், வீரச்சுவை, புராணத் தத்துவ திருமேனிகள், புள்கள், விலங்குகள், செடிகொடிகள், அழகிய பூக்கள் ஆகியவை அக்காலத் தத்துவங்களுக்கு அப்பால் ஒளியுடன் இன்றும் காட்சியளிக்கின்றன. திருக்கோயில்களில் காணப்பெறும் சிற்பங்கள் வெறுங்கருங்கல்லாலும் ஐந்து உலோகங்களினாலும் ஆக்கப் பெற்றவை. இத் தெய்வத்திருமேனிகள் சிற்பிகளின் தவ வல்லமையாலும் மன ஆற்றலாலும் உருவாக்கப் பெற்றவை. இவ்வாறு சிற்பிகள் பின்பற்றிய தியான சுலோகங்களின் அடிப்படையில் உபவாசமிருந்து இறைவன் திருவருள் துணைகொண்டு கடவுள்களின் தோற்றத்தையும் நிறத்தையும் அணிகளையும் ஊர்திகளையும் அறிந்தார்கள். இச்சாதனைகள் உலகம் போற்றும் நடராசர் சிற்பம், தென்முகப் பரமாசிரியராகிய தட்சிணாமூர்த்தி, சண்டேசரனுக்கிரக மூர்த்தி, நாயக நாயகி முறையில் கலியாண சுந்தரமூர்த்தி, பிச்சை ஏற்கும் மூர்த்தி, வீரச்சுவை ததும்பும் வீரபத்திரமூர்த்தி, மகிசாசுரமர்த்தினி ஆகியவையும் பிறவுமாகும். திருக்கோயில்களில் காணப்பெறும் மற்றுமொரு சிற்பத்திறனை மான் உருவச் சிற்பத்தில் காண்கிறோம். இதனைச் சுக்கிர நீதி சாரம் என்னும் சிற்பநூல் விளக்கி இருப்பினும் இதனை மிகச்சிறந்த முறையில் காட்டுவன கி.பி. 7-ஆம் நூற்றாண்டு மாமல்லபுரம் வராகக் குகைக்குள் பல்லவ சிம்மவிட்டுணு, அவன் தேவியர் ஆகியோர் உருவமும் மகேந்திரவர்மன் உருவமும் ஆகும். இத்தகைய சிற்பங்கள் உண்மை உருவச் சிற்பங்களாகும்.

பல்லவர் காலத்துச் சிற்பங்கள், ஆடை ஆபரணங்கள் குறைந்தவையாகவும் வீரியமும் சாந்தியும் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. சோழர்காலத்துச் சிற்பங்கள் எழில் மிக்க கலையின் களை முழுதும் பொருந்தியவையாக உள்ளன. காஞ்சிபுரம் வரதராசர் கோயில் திருமணமண்டபத்தில் மட்டும் இராமாயணம், பாகவதம், புராணங்கள் ஆகியவற்றின் பல்வேறு நிகழ்ச்சிகளின் காட்சிகளைக்

கொண்ட எண்ணூறு சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை யாவும் விசயநகர மன்னர் காலத்தில் வீறிட்ட உணர்ச்சி ததும்பும் சிற்பங்கள்.

## ஓவியங்கள்

பண்டைத் தமிழர் சிறந்த ஓவியங்களை எழுதுவதில் திறமை படைத்திருந்தார்கள் என்பதற்கும் ஓவிய நூல்கள் நாட்டில் வழக்கில் இருந்தன என்பதற்கும்

நாடக மகளிர்க்கு நுன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூல் கிடைக்கையும்

என்னும் மணிமேகலை (உரை 3 _ 31) ஆதாரமாகவுள்ளது. சிலப்பதிகாரம் அழற்படு காதையில் பாண்டியன் நெடுஞ்செழியன் சிங்காதனத்தில் மடிந்ததை அறிந்த புரோகிதன், சோதிடன், அறக்களத்தந்தணர், மந்திரக்கணக்கர், ஏவலாளர் முதலியோர் திகைத்துப் பேச்சற்று நின்றதைக் கூறவந்த இளங்கோவடிகள், அவர்கள் நிலையைச் சித்திரங்களுக்கு ஒப்பிடுகின்றார். சித்திரப் படங்களில் எழுதப்பட்டுள்ள மக்கள் எவ்வாறு அசைவற்றுப் பேச்சற்றுக் காட்சியளிக்கிறார்களோ அவ்வாறு மன்னனைச் சேர்ந்தோர் திகைத்து நின்றனர் எனக் கூறுகிறார். இதிலிருந்து இளங்கோவடிகள் காலத்தில் தமிழ்நாட்டில் மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் இருந்தன என்பது பெறப்படும்.

சங்ககாலத்திற்குப் பின்னர் மகேந்திரவர்மன் விருதுப் பெயர்களுள் ஒன்று "சித்திரகாரப்புலி" என்பதாம். அவன் "தட்சிண சித்திரம்" என்னும் விரிந்த நூலை எழுதினான் என்பதை மாமண்டூர்க் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. சித்தன்ன வாசல் ஓவியங்கள் அவன் காலத்து ஓவியங்களின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

இராசசிம்மன் கட்டிய புகழ்பெற்ற காஞ்சிபுரத்துக் கயிலாயநாதர் கோயில் சுவர்களில்- அவன் காலத்து ஓவியங்கள் காணப்படுகின்றன. கயிலாயநாதர் கோயிலில் காணப்படும் ஓவியங்கள் ஐந்துதலைகள் மாத்திரமே. அவை கலைவனப்பும் வேலைப்பாடும் உடையவையாகவே காணப்படுகின்றன. இவ்வோவியங்களின் வரி அமைப்பும் நிறங்களின் ஒளியும் சிறந்தவை. வடிவங்கள் ஆண்களின் தலைகளாயிருப்பினும் அழகும் மென்மையும் பொருந்தியவை. பல்லவர் காலத்தில் தோன்றிய ஓவியக்கலை தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் காணப்படும் வகையில் முதலாம் இராசராசசோழன் காலத்தில் உச்சநிலை அடைந்தது. அதன்பின்னர் ஆதரவின்மை காரணமாக இக்கலை தளர்வுற்றது. ஆனால் இக்கலை விசயநகரமன்னர் காலத்தில் மிகப்பெரிய அளவில் வளர்ச்சியுற்றது. காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் தலபுராணக் காட்சிகள், ஆழ்வார்கள், சமய ஆசிரியர்களின் திருவுருவங்கள் ஆகியவை ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. 108 வைணவ திவ்விய தேசங்களின் ஓவியங்கள் சிறப்புற விளங்குகின்றன. இத்திவ்விய தேசங்களின் ஓவியங்கள் திருவள்ளூர் விசயராகவசாமி கோயில் உட்புறச் சுவர்களிலும் காணப்படுகின்றன.

# கல்வெட்டுகள்

மன்னர்களாலும் பொது நிலையங்களாலும் தனிப்பட்டவர்களாலும் அளிக்கப்பட்ட நன்கொடைகளும் நிறுவப்பட்ட அறக்கட்டளைகளும் கோயில்களின் பல பகுதிகளில் பொறிக்கப்பட்டன. இவ்வாறு கல்வெட்டுகளால் பொறிக்கத் தொடங்கியவர்கள் பல்லவ மன்னர்கள். இக்கல்வெட்டுகளில் மன்னர்களின் பெயர்கள், அவர்கள் புரிந்த வீரச்செயல்கள், அவர்கள் செயல்களைச் சுட்டிக்காட்டும் விருதுகள் முதலியவற்றைப் பற்றிய செய்திகளும் இடம்பெற்றன.

காஞ்சி கயிலாசநாதர் கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இராசசிம்ம பல்லவ மன்னனைச் சிவசூடாமணி எனப் புகழ்கிறது. மாமல்லபுரத்து இராசசிம்ம பல்லவேச்சுரக் கல்வெட்டும் பனமலைக் கோயில் கல்வெட்டும் இவனைச் சிவசூடாமணி என்றே சிறப்பித்துரைக்கின்றன. இவ்வேந்தனைப் பரம மகேசுவரனென் உதயேந்திரச் செப்பேடு கூறுகிறது. இவன் காஞ்சியில் கயிலாயத்தையொத்த பெருங்கோயிலொன்றை அமைத்து அதில் சிவபெருமானை நிறுவி வழிபட்ட பெருமையுடையவனென்று வேலூர்ப் பாளையம் செப்பேடு கூறுகிறது. இம்மன்னனுக்கு அளிக்கப்பட்ட இருநூற்றைம்பது பட்டங்கள் கயிலாசநாதர் கோயில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சங்கரபக்தன், ஈசுவரபக்தன், சைவசித்தாந்த மார்க்கே என்பன குறிப்பிடத்தக்கன.

இங்குள்ள கல்வெட்டுகளிலொன்று "துசியந்தன் முதலான அரசர்கள் தெய்வ மொழியைக் கேட்டார்கள் என்பதில் வியப்பில்லை. நற்குணங்கள் பறந்தோடிப்போன இக்கலியுகத்தில் அத்தகைய அசரீரியை ஸ்ரீபரன் (இராசசிம்மன்) கேட்டது வியப்பைத் தருவதே" எனக் குறிப்பிடுகிறது. இவ்வாறு இவன் அசரீரி கேட்ட வரலாற்றைப் பெரியபுராணம் கூறுகிறது. அவ்வரலாறு, "மன்னன் காஞ்சியில் சிவபெருமானுக்குக் கருங்கல் கோயில் அமைத்து ஒருநல்ல நாளில் சிவலிங்கப்பெருமானை நிலைப்படுத்தக் கருதி இருந்தான் என்பதும் அந்த நாளிலேயே திருநின்றவூரில் வாழ்ந்த பூசலார் நாயனாரும் மனத்தினால் அமைத்த மனக்கோயிலில் இறைவனை எழுந்தருளச் செய்வதற்கு எண்ணியிருந்தார் என்பதும் அப்பூசலாருடைய மனக்கோயிலில் எழுந்தருள விரும்பிய சிவபெருமான், அதற்கு முதல்நாள் இரவில் மன்னன் கனவில் தோன்றிக் காஞ்சிக் கோயிலுக்குக் கடவுள் மங்கலம் செய்ய மன்னன் குறிப்பிட்டிருந்த அந்நாளை மாற்றி வேறொரு நாளில் அதனை நிறைவேற்றவேண்டுமென்று அறிவுறுத்தி மறைந்தார்" என்பதுமாகும். இம்மன்னன் சிவபெருமான் பால் எல்லையற்ற பேரன்பினைச் செலுத்தியதால், சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்தில், "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற் சிங்கன் அடியார்க்கும்

அடியேன்" எனப் போற்றினார். ஆதலால், தாம் வாழ்ந்த காலத்தில் அரசாண்ட பெருவேந்தனாகச் சுந்தரரால் பாராட்டப்பெற்றவன் காடவர்கோன் கழற்சிங்கனாகிய இராசசிம்மன் என்கிற இரண்டாம் நரசிம்மவர்மன். இம்மன்னன் மனைவி அரசி அரங்கப்பதாகை கயிலாசநாதர் கோயிலில் சிவன்கோயிலொன்றைச் சிறுவடிவில் அமைத்தார்.

பல்லவர்களைத் தொடர்ந்து சோழர்களும் கோயில்களில் கல்வெட்டுகளைப் பொறித்தார்கள். சோழர் காலத்துக் கல்வெட்டுகளுள் மிக விரிவாக உள்ளது 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீரராசேந்திரசோழன் காலத்துக் கல்வெட்டாகும். பாலாறு, வேகவதி, செய்யாறு என்ற மூன்று ஆறுகளின் கூடலை ஒட்டி மிக இனிய இயற்கைச் சூழ்நிலையில், வாலாசாபாத் புகைவண்டி நிலையத்தை அடுத்த பழையசீவரம் என்னும் ஊருக்கு அருகில் அமைந்த திருமுக்கூடலிலுள்ள வேங்கடேசப்பெருமாள் கோயிலில் அமைந்த வீரராசேந்திரன் காலத்துக் கல்வெட்டு (11-ஆம் நூற்றாண்டு) ஓர் அறக்கட்டளையின் சிறப்பினைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு மிகப் பெரியது.

இவ்வறக் கட்டளை மூன்று நன்கொடைகள் சேர்ந்து அமைந்ததாகும். அவ்வறக் கட்டளையின் ஆண்டு வருமானமாக 3243 கல நெல்லும் 216 1/2 காசுப் பொன்னும் கிடைத்து வந்தன. அவை கோயிலுக்கு அமைந்த பல்வேறு வகைப்பட்ட செலவுகள், வேதம் பயிற்றும் கல்லூரியை நடத்தி, அதனை ஒட்டி மாணவர் விடுதியை அமைத்து நிகழ்த்துவதற்குரிய செலவினங்கள் முதலியவற்றிற்குப் பயன்பட்டன. கோயிலையொட்டி அமைந்த வேதக் கல்லூரியில் இருக்குவேதம், யசுர்வேதம், சில ஆகமங்கள், தந்திரங்கள் முதலியனவற்றைக் கற்பித்து வந்தனர். உணவு விடுதியில் நாள்தோறும் 6 பேர்களுக்கு உணவு இடப்பட்டது.

ஆதுலர் சாலையில், நோயைக் கண்டுபிடித்து, அதனைப் போக்குவதற்குரிய மருந்து கொடுக்கும் வைத்தியன், சல்லியக் கிரியை செய்யும் அறுவை வைத்தியர், மூலிகைள் பறித்து வரும் இருவர், விறகுகள் கொண்டுவரும் மூவர், நோயாளிகளைக் கவனிக்கும் தாதிகள் இருவர், நாவிதர் ஒருவர், காவற்காரர் ஒருவர் ஆகியோருக்கு ஊதியம் வழங்கப்பட்டது. அந்த மருத்துவ மனையில் நோயாளிகள் படுத்துக்கிடக்க 15 படுக்கைகள் இருந்தன. சரக சம்கிதை, சுசுருத சம்கிதை, அட்டாங்க இருதயம் என்ற ஆயுர்வேத நூல்களில் குறிப்பிட்டபடி மருந்துகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. 40 காசுகள் பெறுமானமுள்ள மருந்துகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் 35 கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை சோழர், பாண்டியர், தெலுங்குச்சோழர், காகதியர், ஒய்சாலர், விசயநகர மன்னர் ஆகியோர் காலங்களில் பொறிக்கப்பட்டவை. இக்கல்வெட்டுகள் காஞ்சிபுரத்தின் வரலாற்றைப் பற்றி மட்டுமின்றித் தமிழ்நாட்டின் கிபி. 11 முதல் 17-ஆம் நூற்றாண்டு வரையிலான அரசியல் வரலாற்றை ஒருமுகப்படுத்திக் காட்டும் ஆதாரங்களாகவுள்ளன.

சென்னையைப் பொறுத்தவரையில் மயிலாப்பூர், திருவான்மியூர், திருவல்லிக்கேணி ஆகிய இடங்களிலுள்ள கோயில்களில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மயிலை கபாலீசுவரர் கோயில் போர்ச்சுகீசிய படையெடுப்பாலும் கடல் அரிப்பாலும் சிதைய, முன்பு செயிண்ட் தாமசு சர்ச்சு அருகிலிருந்த இக்கோயில் தற்போது இக்கோயிலுள்ள இடத்தில் 300 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டியபோது அக்கோயில் கல்வெட்டுகள் வீணாயின. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில், பல்லவர் காலத்துக் கல்வெட்டு பாதுகாப்பான நிலையில் இருந்து வருகிறது. திருவான்மியூர்க் கோயில் அன்றைய நிலையில் மிகவும் விரிந்து பரந்தும் இருந்தது. இக்கோயில் கல்வெட்டுகள் திருமயிலை வாலீசுவரர் கோயிலிலும் காரணீசுவரர் கோயிலிலும் காணப்படுகின்றன.

மயிலாப்பூர் வாலீசுவரர் கோயிலின் கிழக்குச் சுவரின் அடிப்பகுதியில் உள்ள கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, திருவான்மியூர் உலகாளுடைய நாயனாருக்கு விளக்குவைக்கத் தில்லை நாயகன் மூன்று காசுகள் சிவப்பிராமணர்களிடம் ஒப்புவித்ததைக் குறிப்பிடுகிறது.

திருமயிலைக் காரணீசுவரர் கோயிலின் அர்த்தமண்டபத்தின் தெற்குச்சுவரில் உள்ள கி.பி.12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, திருவான்மியூர் உலகாளுடைய நாயனாருக்குக் குமாரதேவன் ஒரு சந்தி விளக்கு வைத்ததைக் குறிக்கிறது. இக்கோயில்களில் துண்டுக் கல்வெட்டுகள் பலவுள்ளன. இவற்றிலிருந்து தெரியவருவது திருவான்மியூர்க் கோயிலின் கல்வெட்டுகள் அடங்கிய கற்கள் இக்கோயிலை வந்து அடைந்திருக்கலாம் என்பதாகும்.

திருவான்மியூர் மருந்தீசர் கோயில் திருப்பணி செய்யப்பட்ட போது சுவாமி கோயில் குறுகலாகவும் உயரம் குறைந்தும் இருந்ததால் மூலத்தானத்தைப் பிரித்தெடுத்து அம்பிகை சந்நிதிக்குப் பயன்படுத்திய பின்னாப் புதிய கற்களைக் கொண்டு சுவாமி சந்நிதி கட்டப்பட்டுள்ளது தெரியவருகிறது. திருவான்மியூர் அம்பிகை கோயிலின் கருவறையில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

சோழர் ஆட்சியை நிலைநாட்டிய கொப்பத்துப்போர் பற்றிய விவரம் அச்சிறு பாக்கத்திலுள்ள வீரராசேந்திரன் கல்வெட்டு மூலம் தெரியவருகிறது. "ஒருகுடைநீழல், இருசுடரளவும் முத்தமிழ் ஓங்க நான்மறை வளர" எனப் பத்துவரை அடுக்காக எண்ணலங்காரத்துடன் கூடிய கல்வெட்டு அச்சிறுபாக்கம் கோயிலில் இருக்கின்றது.

சிதம்பரம் கோயிலின் மூர்த்திகளின் பேரில் மன்னர்கள் முதலியோர் நிலையாகச் சொத்துகளை எழுதிவைத்ததைக் கல்வெட்டுகள் குறிப்பிட்டதைக் கொண்டு, பிறரிடம் இருக்கக் கூடிய இக்கோயில் சொத்துகள் பற்றி அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விளைவாக நாற்பதாயிரம் ரூபாய் வரை மீட்கப்பட்டது எனவும் அஃது இப்போது ஓர் இலட்சத்தை எட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதைப் போன்றதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டால் ஆங்காங்குள்ள கோயில்களுக்கு வரவேண்டிய வருமானங்கள் கண்டுபிடிக்கப்படலாம் எனத் தோன்றுகிறது.

இனி, கோயில்களுக்கு ஆதரவளித்து அவற்றின் வளர்ச்சியில் முன்னேற்றம் கண்ட மன்னவர்களைக் காலவரிசையில் இங்கு நினைவு கூர்வோம்.

# மன்னர்களும் சாசன மாலையும்

## பல்லவர் காலக்கோயில்கள்

கி.பி. 2-ஆம் நூற்றாண்டோடு சங்ககாலம் இறுதியடைந்தது. அசோகமன்னர் மறைந்த பின்னர்ச் சாதுவாகன பரம்பரையைச் சார்ந்த ஆந்திர நாட்டு மன்னர்கள் வேங்கடத்திற்கு வடக்கே கங்கையாறு வரையிலுமிருந்த நிலப்பகுதியை கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையில் ஆண்டு வந்தார்கள். இதன்பின்னர், இவர்களின் கீழ்க் கிருட்டினா நதிக்குத் தெற்கிலிருந்து பெண்ணையாறு வரையிலுமிருந்த நிலப்பகுதியில் வாழ்ந்த பல்லவர்கள் அப்பகுதியைக் கைக்கொண்டு, கடப்பைப் பகுதிக் காடுகளில் அக்காலத்தில் வாழ்ந்துவந்த கலப்புரு எனக் கன்னடத்தில் குறிப்பிடப்பட்ட களப்பிர வீரமரபினரைத் தெற்கே பாலாறு வரையில் துரத்திவிட்டார்கள். இக்காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். பின்னர் இவர்களைத் தொண்டைநாட்டிலிருந்து தெற்கே விரட்டியவன் பல்லவமன்னன் சிவசுகந்தவர்மன். இவனுக்குப்பின் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் பெரும்புகழோடு ஸ்கந்தசிஷ்யன் ஆட்சிபுரிந்தான். இவன் திருக்கழுக்குன்றம் கோயிலுக்கு நன்கொடை வழங்கினான். இவனுக்குப் பின்னர்க் குறிப்பிடத்தக்க பல்லவமன்னன் மகேந்திரவர்மன் ஆவான் (கி.பி.600-630). இவன் முதலில் சமண சமயத்தைச் சார்ந்திருந்தான். அக்காலத்தில் இவன் திருநாவுக்கரசு நாயனாருக்கு இன்னல் விளைவித்ததைப் பெரியபுராணம் எடுத்துக்காட்டுகிறது. பின்னர்ச் சைவம் சார்ந்தான். இவன் வல்லம், தளவானூர், சீயமங்கலம், பல்லாவரம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் குடைவரைக் கோயில்களைக் கட்டினான். மண்டகப்பட்டில் திரிமூர்த்திகளுக்கு ஒரு கோயிலும் வல்லத்தில் கணேசருக்கு ஒரு கோயிலும் கட்டினான்.

## நரசிம்மவர்மன் 1 (கி.பி.630-660)

இரண்டாம் புலிகேசியை வென்று வாதாபியைக் கைப்பற்றியவன் இவனேயாவான். மாமல்லபுரத்தில் தற்காலத்திலுள்ள இரதங்களாகிய ஒற்றைக்கல் கோயில்கள் கட்டத் தொடங்கியவனும் இம்மன்னனேயாவான். திருக்கழுக்குன்றத்து மலை மேலுள்ள முன்மண்டபத்தின் மேற்புறத்து இரண்டாம் தூணின் உச்சியில் காணப்படும் கல்வெட்டில் "ஸ்ரீதிருக்கழுக்குன்றத்து பெருமானடிகளுக்குக் களத்தூர்க் கோட்டத்துத் திருக்கழுக்குன்றத்துப் பெருமாள் அடிகளுக்கு வழிபாட்டுப்புறமாக

வாதாபி கொண்ட நரசிங்கபயோகதரையர் வைத்தது" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்குடைவரைக் கோயில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாதாபி கொண்ட நரசிம்மனால் குடைவிக்கப்பட்டதென்பதும் மலைமேல் வீற்றிருக்கும் இறைவன் மூலத்தானத்துப் பெருமானடிகள் என்னும் பெயரில் விளங்கினார் என்பதும் இக்கோயில் வழிபாட்டுக்காகப் புறவாக ஏதோ ஒரு நிலத்தை இம்மன்னன் அளித்தான் என்பதும் தெரியவருகிறது.

## பரமேசுவரன் I (கி.பி. 668-680)

மாமல்லபுரத்துத் தருமராசர் இரதம், கணேச இரதம், இராமாநுச மண்டபம் ஆகியவை "ஆதியந்தகம பல்லவேசுவரம்" எனக் குறிக்கப்படுவதால், இவை இவன் காலத்தில் முடிக்கப்பட்டன எனக் கருதலாம். காஞ்சிப் பகுதியிலுள்ள கூரத்தில் வித்தியவிநோத என்னும் தன் பெயரில் சிவன் கோயில் அமைத்தான். இக்கோயிலின் கூரையை அமைப்பதற்காக, சூளைகளில் ஓடுகள் சுடுவதற்கு ஏற்பாடு செய்தான். இக்கோயிலில் பூசை செய்ய, ஆனந்த சிவாச்சாரியர் என்பவரை நியமனம் செய்தான். இவன் ஆழ்ந்த சிவப்பற்றுக் கொண்டிருந்தான் என்பது மாமல்லபுரத்துக் கணேசர் கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் மூலம் அறியப்படும்.

## இராசசிம்மன் என்கிற நரசிம்ம பல்லவன் II (கி.பி. 680-720)

வெட்டப்பட்ட கற்களைக் கொண்டு கற்கோயில்களை முதன்முதலில் கட்டியவன் இம்மன்னனேயாவான். இம்மன்னன் காஞ்சிபுரத்தில் 58 சிறுகோயில்களைக் கொண்ட கயிலாசநாதர் கோயிலையும் மாமல்லைக் கடற்கரையில் சத்திரிய சிம்ம பல்லவீசுவரம், இராசசிம்ம பல்லவீசுவரம் என்னும் சிறு சிறு கோயில்களையும் கட்டினான். மாமல்லபுரத்து வராக மண்டபத்திலுள்ள ஒலக்கணேசுவரர் கோயிலும் இவனால் கட்டப்பட்டதாகும். சாளுவ குப்பத்தில் அதிரவ சண்டேசுவர கிருகம் என்னும் கோயிலையும் இவன் கட்டினான். பனமலையிலுள்ள தாலபுரீசுவரர் கோயிலில் இவனுடைய கல்வெட்டுகள் காணப்படுவதால், இக்கோயில் இவனால் கட்டப்பட்டிருக்கலாம் அல்லது இவனது ஆதரவைப் பெற்றிருக்கலாம். திருப்போரூரில் கல்தூண் ஒன்றில் காணப்படும் ஒரு கல்வெட்டு, இவன் காலத்தில் ஒரு சிவன் கோயில் இருந்தது என்பதைத் தெரிவிக்கிறது. திருநின்றவூர்ச் சிவன் கோயிலில் இம்மன்னன் காலத்துக் கற்றூண்கள் காணப்படுகின்றன. இதனால் இங்குள்ள சிவன் கோயில் இம்மன்னன் காலத்தது என்பது உறுதியாகிறது.

சுந்தரரால் பாராட்டப்பெற்றவன் காடவர்கோன் கழற்சிங்கனாகிய இராசசிம்மன் என்கிற இரண்டாம் நரசிம்மவர்மன் ஆவான். இம்மன்னன் மனைவி அரசி அரங்கப்பதாகை, கயிலாசநாதர் கோயிலில் சிவன்கோயிலொன்றைச் சிறுவடிவில் அமைத்தார்.

## பரமேசுவரன் 2 (700-770)

திருவதிகைக்கோயில் பராமரிப்புக்காக இவன் பொன் நன்கொடை அளித்தான்.

## நந்திவர்மன் 2 (கி.பி. 710-775)

இவன் திருமங்கை ஆழ்வார் காலத்தில் வாழ்ந்தவன். காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலையும் சீயமங்கலத்தில் சதம்பேசுவரர் கோயிலையும் திருக்கோவலூரில் வீரட்டானேசுவரர் கோயிலையும் காஞ்சியில் முக்தீசுவரர் கோயிலையும் கட்டினான்.

## நந்திவர்மன் (கி.பி. 775-826)

இம்மன்னன் காலத்தில் குடிமல்லத்தில் பரமேசுவரர் கோயிலும் காஞ்சியில் திருமேற்றளிக்கோயிலும் இருந்தன என்பதை இவன் காலத்துக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலில் இம்மன்னனின் 7, 9, 21-ஆம் ஆண்டுகளின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவனுக்கு வயிரமேகன் என்னும் பெயரும் இருந்தது. இங்கு வெட்டுவிக்கப்பட்ட தடாகம் அவன் பெயரில் விளங்கிற்று.

## நந்திவர்மன் 3 (கி.பி. 826-849)

நந்தி கலம்பகம் என்னும் இலக்கியத்தில் இம்மன்னன் போற்றப்பெற்றான். தெள்ளாறு எறிந்த நந்திவர்மன், குமாரமார்த்தாண்டன் என்பன போன்ற பட்டப் பெயர்களை இவன் தாங்கியவன். பொன்னேரிக்கருகில் திருக்காட்டுப்பள்ளியில் புதிதாகக் கட்டப்பட்ட சிவன் கோயிலுக்கு அக்கிராமத்தையே இவன் அளித்தான். கோயிலில் விளக்கு வைப்பதற்காக 100 கழஞ்சுபொன் கொடையாக அளித்தான். திருவொற்றியூர்ச் சிவன்கோயிலில் விளக்குவைப்பதற்காக பொன் நன்கொடையளித்தான்.

இவன் சிவ வழிப்பாட்டில் ஈடுபாடுடையவன். ஆதலினால், இவன் பெருமான் அடிகள் என்னும் பெயரில் திகழ்ந்தான். இவன் காலத்தில் மாங்காடு, திருவொற்றியூர், சத்தியவேடு ஆகிய இடங்களிலுள்ள சிவன் கோயில்கள் மிக்க புகழ் எய்தின. இம்மன்னனின் தேவி மாதவடிகள், திருவொற்றியூர்க் கோயிலில் விளக்கு எரிக்க 30 கழஞ்சு பொன் நன்கொடையாக அளித்தாள்.

மூன்றாம் நந்திவர்மனின் காலத்தில் (835-860) சோழ மன்னன் விசயாலயன் (850-871) தொண்டை நாட்டின் சிலபகுதிகளில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினான் என்பது உத்திரமேரூர்க் கல்வெட்டுகள் மூலம் தெரியவருகின்றது. இவ்வூரில் சுந்தரவரதப் பெருமாள் கோயிலும் வைகுந்தப் பெருமாள் கோயிலும் உள்ளன.

சுந்தரவரதப் பெருமாள் கோயிலில், நந்திவர்மன் 10_ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் வைகுந்தப்பெருமாள் கோயிலில் இம்மன்னன் 7, 9, 21_ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. உத்திரமேரூர் வைகுந்தப்பெருமான் கோயிலில், சோழமன்னன் விசயாலயன் (850_872) 14_ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு நான்கு காணப்படுகின்றன. இவ்வூர் பல்லவர் ஆட்சியிலிருந்து சோழர் ஆட்சிக்கு மாறிய போதிலும் ஊர்ச்சபைகள் தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட கோயில்களைப் பொறுத்த வரையில் தளராது தங்கள் கடமைகளைப் புரிந்துவந்தன என்பதை விசயாலயனின் இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. விசயாலயன் மகன் முதலாம் ஆதித்தன் பல்லவ மன்னன் அபராசிதனை வென்றான்.

## முதலாம் ஆதித்தன் (கி.பி. 871-907)

செங்கற்பட்டுக்குத் தென்கிழக்கிலுள்ள திருக்கழுக்குன்றத்தின் அடிவாரத்திலுள்ள பக்தவத்சலம் கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் காணப்படும் முதலாம் ஆதித்தன் 27_ஆம் ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலில் எழுந்தருளிய பெருமானுக்கு கி.பி. 5_ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவ மன்னன் கந்த சிஷ்யனால் வழங்கப்பட்ட நிவந்தம், வாதாபி வென்ற பல்லவ மன்னன் நரசிம்மவர்மனால் புதுப்பிக்கப்பட்டதையும் இது முதலாம் ஆதித்தனால் மீண்டும் புதுப்பிக்கப்பட்டதையும் தெரிவிக்கிறது. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலிலும் முதல் ஆதித்த சோழன் காலத்துக் கல்வெட்டு காணப்படுகிறது. முதலாம் ஆதித்தன் இராட்டிரக்கூடத்து இளவரசியை மணந்துகொண்டான். இவ்விளவரசி மகன் கன்னரதேவன். இவனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டு திருக்கழுக்குன்றம் கோயிலில் காணப்படுகிறது. முதல் ஆதித்தன் பட்டத்தரசியின் மகன் முதற்பராந்தகன்.

## முதற்பராந்தகன் (கி.பி. 907-955)

முற்காலச் சோழர்களுள் முதற்பராந்தகன் மிகப்பெருவீரனாக விளங்கினான். இவன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டுச் செல்வங்களைக் கைப்பற்றிப் பின்னர் பல்லவமன்னன் அபராசிதனையும் வென்றான். மதுராந்தகத்திற்குத் தென்கிழக்கிலுள்ள திருவெண்காட்டீசுவரர் கோயிலிலும் அச்சிறுபாக்கம் ஆட்சிலிங்கேசுவரர் கோயிலிலும் திருப்போரூர்க் கந்தசாமி கோயிலிலும் இம்மன்னன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சென்னையிலிருந்து வடகிழக்கில் 10 கிலோமீட்டர்த் தொலைவில் கடற்கரையில் அமைந்துள்ள திருவொற்றியூர்ப் பகுதி முதற்பராந்தகன் ஆட்சியில் இணைந்ததை இவ்வூர் ஆதிபுரீசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு தெரிவிக்கிறது.

திருக்கழுக்குன்றத்துக் கோயிலுக்குப் பல்லவ மன்னன் ஸ்கந்தசிஷ்யனால் வழங்கப்பட்டு முதல் நந்திவர்மனால் புதுப்பிக்கப்பட்ட நன்கொடை இரண்டாம் முறையாக இராசகேசரி என்னும் முதல் ஆதித்த சோழனால் புதுப்பிக்கப்பட்டது. திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயிலில், முதல் ஆதித்தன் மகனாகிய முதல் பராந்தகன் (கி.பி. 907_955) 20_ஆம் ஆண்டு முதல் 30_ஆம் ஆண்டு வரையிலுள்ள

கல்வெட்டுகள் காணப்படுவதால், இப்பகுதி இம்மன்னன் காலத்தில் சோழநாட்டின் வடஎல்லையாக இருந்தது எனக்கருதலாம். முதல் பராந்தகன் மகன் இராசாதித்தன் (கிபி. 947_949) தக்கோலப்போரில் உயிர் துறந்தான். இதன்பின்னர் இவன் தம்பி, சிவப்பற்று மிக்குத் திருவிசைப்பா பாடிய கண்டராதித்தன் (கிபி. 949_956) அரசேற்ற காலத்திலும் அதன்பின்னரும் அம்மன்னன் மனைவி மாதேவடிகள் என்னும் செம்பியன் மாதேவியார் கோயிற்பணிகள் பல புரிந்தார். இவர் இளமையிலேயே கைம்பெண் ஆனதால் தாபத நிலையில் ஏறத்தாழ 30 ஆண்டுகள் வாழ்ந்து, சிவனடி மறவாச் சிந்தையில் தன் ஆற்றலையும் செல்வத்தையும் புதுக்கோயில்கள் எழுப்புவதிலும் பழையகோயில்களைப் புதுப்பிப்பதிலும் கோயில்களுக்குரிய நன்கொடைகளையும் மானியங்களையும் அளிப்பதிலும் தன் வாழ்நாட்களைச் செலவிட்டாள். அவளுடைய ஈடுபாடும் பக்தியும் அரச குடும்பம் முழுவதும் பரவிவிடவே அவள் மகன் மதுராந்தகனும் அவனுடைய தேவிமார் பலரும் அரசியல் அதிகாரிகள் பலரும் இறை திருப்பணிகளில் ஈடுபடுவாராயினர். முற்பட்ட சோழர்கள் காலத்து அரச குடும்பத்தைச் சார்ந்த பெண்களாகிய மலர்க்குவியல்களிடையே செம்பியன் மாதேவி தாமரையாகக் காட்சி வழங்குகிறாள்.

கண்டராதித்தன் இளவல் அரிஞ்சயன். அரிஞ்சயனின் மகன் பராந்தக சுந்தர சோழனான இரண்டாம் பராந்தகன் (956_963). இச்சுந்தரசோழன் அரசுப் பரம்பரையைச் சேர்ந்த பார்த்திவந்தராதிபதிவர்மன் 10_ஆம் ஆண்டுக் கல்வெட்டு சைதாப்பேட்டை வேளைச்சேரி சப்தமாதர் கோயிலில் காணப்படுகிறது. இஃது இக்கோயிலின் பூசைக்கான அறக்கட்டளையைக் குறிப்பிடுகிறது. இங்குள்ள தண்டீசுவரர் கோயிலில் விளக்கெரிப்பதற்காக வழங்கப்பட்ட அறக்கட்டளைகளை இக்கோயிலிலுள்ள இம்மன்னனின் 7_ஆம் ஆண்டுக் கல்வெட்டும் 9_ஆம் ஆண்டுக் கல்வெட்டும் தெரிவிக்கின்றன.

பொன்னேரியிலிருந்து திருவொற்றியூர் செல்லும் வழியிலுள்ள மீஞ்சூர் வரதராசப் பெருமாள் கோயில், சோழகுல சுந்தர விண்ணகம் ஆழ்வார் என விளங்கிவந்தது. இக்கோயிலில் சுந்தரசோழன் 3_ஆம் ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலுக்குத் திருப்பணி செய்யப்பட்ட செய்தியைக் கூறுகிறது. சுந்தரசோழன் காஞ்சியில் பொன்மாளிகை என்னும் சித்திர மண்டபத்தில் உயிர் துறந்தான். இச்சுந்தரசோழன் மகன் இரண்டாம் ஆதித்தன் (964_969) அரசேற்றான். இவனுக்குப் பின்னர் கண்டராதித்தன் மகனாகிய உத்தமசோழன் (969_985) ஆட்சிபுரிந்தான்.

## அபராசிதன்

இம்மன்னன் காலத்தில் திருத்தணி வீரட்டானேசுவரர் கோயில் கட்டப்பட்டது என்பதைக் கோயிலில் பொறிக்கப்பட்ட தமிழ்ப்பாடல் ஒன்று தெரிவிக்கிறது. இம்மன்னன் தேவி திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயிலில் விளக்கெரிக்கப் பொன் கழஞ்சு வழங்கியதை ஒரு கல்வெட்டு கூறுகிறது.

பல்லவ மன்னர்கள் மூன்றாம் நந்திவர்மன் காலத்தின் பிற்பகுதியும் நிருபதுங்கன் அபராஜிதன் கம்பவர்மன் ஆகியோர் ஆட்சிக்காலமும் சோழ

மன்னர்கள் விசயாலயன், முதலாம் ஆதித்தன் முதற்பராந்தகன் ஆகியோர் ஆட்சிக்காலமும் ஒரே காலத்தியவை. ஆதலால், இப்பல்லவர் காலத்திலே இச்சோழமன்னர்கள் தங்கள் தங்கள் ஆட்சியைத் தொண்டைநாட்டில் படிப்படியாக விரிவாக்கம் செய்துகொண்டு அதே சமயத்தில் அப்பகுதிகளில் திருக்கோயில்களின் வளர்ச்சிக்கும் வழிவகுத்து வந்தார்கள். சோழமன்னன் விசயாலயன் தலைமையில் எழுந்த சோழர் அரசு தலை தூக்கி வடதிசையில் கங்கையையும் தென்திசையில் கடாரத்தையும் தன் எல்லைகளாகக் கொண்டு வளம்பெற்று மேலோங்கிற்று. இதனைக் கீழ்க்காணும் முறையில் சுருக்கமாகக் காண்போம்.

## முதற்பராந்தகன் (907-955)

முற்காலச் சோழர்களுள் முதற்பராந்தகன் மிகப்பெருவீரனாக விளங்கினான். இவன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டுச் செல்வங்களைக் கைப்பற்றிப் பின் பாண்டியநாட்டுத் தலைநகராகவிருந்த மதுரையை எரித்தான். இவ்வகையில் இவன் மதுரைக்கு அந்தகன் (இயமன்) போல் செயற்பட்டதால் இவனுக்கு மதுராந்தகன் என்னும் பெயர் அமைந்தது. தொண்டை நாட்டில் மூன்றாம் நந்திவர்மனுக்குப் பின்னர் நிருபதுங்கன் 41 ஆண்டுகளும் (கி.பி. 855_896) கம்பவர்மன் 33 ஆண்டுகளும் (878_910) அபராஜிதன் 18 ஆண்டுகளும் (கி.பி. 879_897) தொண்டை மண்டலத்தின் வெவ்வேறு பகுதிகளில் ஆட்சிபுரிந்து வந்தார்கள். இவர்களைப் பராந்தகன் வென்றான். பல்லவர்களின் சிறப்பிடம் பராந்தகன் பெயரில் மதுராந்தகம் என விளங்குவதாயிற்று. மதுராந்தகத்திற்குத் தென்கிழக்கில் ஒரு கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள திருவெண்காட்டீசுவரர் கோயிலிலும் அச்சிறுபாக்கம் ஆட்சிலிங்கேசுவரர் கோயிலிலும் திருப்போரூர் கந்தசாமி கோயிலிலும் இம்மன்னர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சென்னையிலிருந்து வடகிழக்கில் 10 கிலோமீட்டர்த் தொலைவில் கடற்கரையில் அமைந்துள்ள திருவொற்றியூர்ப் பகுதி முதற்பராந்தகன் ஆட்சியில் இணைந்ததை இவ்வூர் ஆதிபுரீசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்ட இம்மன்னன் 20_ஆம் ஆண்டு முதல் 35_ஆம் ஆண்டு வரையிலுள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## இராசாதித்தனும் கண்டராதித்தனும்

முதற்பராந்தகனின் முதல் மகன் இராசாதித்தன் இராட்டிரக்கூடத்து மூன்றாம் கிருட்டிணனை எதிர்த்துத் தக்கோலத்தில் தொடர்ந்த போரில் இறந்தான். இதன் பின்னர்ப் பராந்தகன் இரண்டாம் மகன் அரசேற்று சைவத்திருமுறைத் திருவிசைப்பா பாடிப் புகழ் எய்தியதை வரலாறு கூறுகிறது. கண்டராதித்தன் தேவியர் செம்பியன் மாதேவி இளம்வயதிலே கைம்பெண் நிலை அடைந்ததை முன்னிட்டு 30 ஆண்டுகள் திருக்கோயில்களைத் திருத்தி அமைத்தலிலும் புதிய கோயில்களை உருவாக்குவதிலும் அவற்றிற்கு நன்கொடை வழங்குதலிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இவ்வகையில் இவரது கோயிற்பணியை வடதிருமுல்லைவாசல் சிவன்கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு கூறுகிறது.

## இரண்டாம் பராந்தகன் எனப்பெறும் சுந்தரசோழன்

சென்னை சைதாப்பேட்டையிலிருந்து மூன்று கிலோமீட்டர் தென்மேற்கிலுள்ள வேளச்சேரி சப்தமாதர் கோயிலில் அடைமொழியில்லாத பரகேசரிவர்மன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று அரிஞ்சயன் காலத்ததாகத் தோன்றுகிறது. மற்றது சுந்தரசோழன் காலத்ததாகவோ, சுந்தரசோழன் புதல்வனாகிய இரண்டாம் ஆதித்தன் காலத்ததாகவோ இருக்கவேண்டும்.

செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரியிலிருந்து திருவொற்றியூர் செல்லும் வழியிலுள்ள மீஞ்சூர் பெருமாள் கோயிலிலும் மதுராந்தகம் திருவெண்காட்டீசுவரர் கோயிலிலும் சுந்தர சோழன் காலத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

தொண்டை நாட்டின் வடபகுதியிலிருந்து தன் ஆதிக்கத்தை விரிவாக்கச் சுந்தரசோழன் காஞ்சிபுரத்தில் தங்குவதற்காக அங்குப் பொன்மாளிகையொன்று கட்டி அமைத்தான். அதில் அவன் கி.பி. 973 ஆம் ஆண்டில் இறந்தான்.

## இரண்டாம் ஆதித்தனும் மதுராந்தக உத்தமசோழனும்

சுந்தர சோழனுக்குப் பின்னர் இரண்டாம் ஆதித்தன் பட்டம் எய்தினான். இவன், தன் தந்தை சுந்தரசோழன் காலத்திலேயே முடிசூடிக் கொண்டதால் இவனது ஆட்சி சுந்தரசோழன் ஆட்சியோடு இணைந்தது. இரண்டாம் ஆதித்தனுக்குப் பின்னர்க் கண்டராதித்தன் செம்பியன்மாதேவியர் ஆகியோர் மகனாகிய மதுராந்தக உத்தமசோழன் பட்டம் எய்தினான்.

திருவிடந்தை வராக மணவாளப்பெருமாள் கோயிலில் விளக்கு எரிக்க 30 கழஞ்சு பொன் நன்கொடை அளிக்கப்பட்டதை உத்தமசோழன் 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது.

## முதலாம் இராசராசசோழனும் முதலாம் இராசேந்திரசோழனும்

உத்தமசோழனுக்குப் பின்னர் அரசேற்ற முதல் இராசராசன் காலத்திலும் அவன் மகன் இராசேந்திரன் காலத்திலும் சோழப்பேரரசு தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகத்தின் ஒரு பகுதி இலங்கை ஆகியவற்றைத் தன்னுட்கொண்டு அதன் தலைநகர் ஜயங்கொண்ட சோழபுரம் எனவும் காஞ்சிபுரம் அதன் இரண்டாம் தலைநகர் போன்றும் இருந்து வந்தன. இராசராசன் காலத்துக் கல்வெட்டுகள் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில், திருவிடந்தை வராகப்பெருமான் கோயில், திருமுக்கூடல் வேங்கடேசப்பெருமாள் கோயில் கோயம்பேடு குசலவர் கோயில் முதலிய கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ளன. முதலாம் இராசேந்திரன் காலத்துக் கல்வெட்டுகள் திருமுக்கூடல் வேங்கடேசப்பெரும்மாள் கோயில் அச்சிறுபாக்கம் ஆட்சிலிங்கேசுவரர் கோயில் முதலியவற்றில் காணப்படுகின்றன.

## இராசாதிராசனும் இரண்டாம் இராசேந்திரனும்

இராசாதிராசனுக்குப் பின் இராசேந்திரன் கி.பி. 1014 முதல் 1052-ஆம் ஆண்டு வரை அரசாண்டான். இவன் 32-ஆம் ஆண்டுக் கல்வெட்டு காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலிலும் வரதராசர் கோயிலிலும் காணப்படுகிறது. இம்மன்னன் திருவிடந்தைக் கிராமத்தையே திருவிடந்தை வராகப்பெருமாள் கோயிலுக்கு அளித்தவன். இராசாதிராசன் மகன் இரண்டாம் இராசேந்திரனும் பின்னர் இவன் இளவல் இராசமகேந்திரன் கி.பி.1069-ஆம் ஆண்டு வரையில் அரசாண்டார்கள். இம்மன்னன் ஆட்சியோடு தமிழகச் சோழ அரசு மரபு இறுதியடைந்தது.

## முதலாம் குலோத்துங்கன்

இவன் கி.பி. 1090-ஆம் ஆண்டிலும் 1110-ஆம் ஆண்டிலும் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து வெற்றிகண்டான். இப்போர்களில் இவன் கண்ட வெற்றியைப் புலவர் செயங்கொண்டார் தாம் இயற்றிய கலிங்கத்துப்பரணியில் புகழ்ந்து பாராட்டியுள்ளார். இம் மன்னனும் இவன் படைத்தலைவர்களாகிய கருணாகரத்தொண்டைமானும் பெரும்படைத் தலைவனாகிய நரலோகவீரனும் காஞ்சிபுரம் வரதராசர் கோயில் மண்டபம், நந்தவனம் முதலியவற்றை அமைத்தலில் பெரும் பங்கேற்றார்கள். இக்குலோத்துங்கன் தமது 40-ஆம் ஆட்சியாண்டில் தம் தேவியர் திரிபுவனமுடையாள், சோழகுலவல்லி ஆகிய இருவருடன் காஞ்சிபுரம் உலகளந்தபெருமாள் கோயிலில் வழிபாடாற்றி அக்கோயிலுக்கு நன்கொடை அளித்ததாக அக்கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. மேலும், காஞ்சிபுரத்திற்கு அடுத்துத் திருப்புலிவனம் கோயிலிலும் சென்னைப் பல்லாவரத்திற்கு அருகிலுள்ள திருசூலம் சிவன் கோயிலிலும் திருவள்ளூர் வட்டத்து நரசிங்கபுரம் இலட்சுமி நரசிம்மசுவாமி கோயிலிலும் இம்மன்னன் காலத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

## விக்கிரமசோழன்

முதலாம் குலோத்துங்கனுக்குப் பின் அரசேற்ற அவன் மகன் விக்கிரமசோழன் (1118-1135) 8 முதல் 17-ஆம் ஆட்சியாண்டுகள் வரையிலுள்ள கல்வெட்டுகள் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலிலும் திருவாலங்காட்டு வடவாரணேசுவரர் கோயிலிலும் திருவள்ளூர்வட்டத்துத் திருப்பாச்சூர் சிவன் கோயிலிலும் காணப்படுகின்றன.

## இரண்டாம் குலோத்துங்கன்

விக்கிரமசோழனுக்குப் பின்னர்ப் பட்டம் எய்திய அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன் (1133-1150) காலத்துக் கல்வெட்டு ஒன்று காஞ்சிபுரம் வரதராசர் கோயிலின் தென்புறத்துச்சுவரில் காணப்படுகிறது. மேலும், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலிலும் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருமாகறல் சிவன்

கோயிலிலும் அச்சிறுபாக்கம் திருவலிதாயம் முதலிய கோயில்களிலும் இம்மன்னன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இம்மன்னன் ஆதரவில் சேக்கிழார் பெரியபுராணம் இயற்றி அதனைத் தில்லைச் சிற்றம்பலவனார் கோயிலில் அரங்கேற்றினார்.

## இரண்டாம் இராசராசனும் இரண்டாம் இராசாதிராசனும்

இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பின்னர் அரசாண்ட இரண்டாம் இராசராசன் (1150_1163) 3_ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டும் 4_ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலிலும் திருவேற்காடு ஆதிபுரீசுவரர் கோயிலிலும் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலிலும் செய்யூர் கந்தசாமி கோயிலிலும் காணப்படுகின்றன. இவன் காலத்தில் சோழப் பேரரசைப் பாராட்டி இராசராசன் உலாவையும் தக்கயாகப்பரணியையும் பெரும்புலவர் ஒட்டக்கூத்தர் இயற்றினார்.

இரண்டாம் இராசராசனுக்குப் பின்னர் அரசேற்ற இரண்டாம் இராசாதிராசன் (1163_1178) 14_ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வரதராசர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்திற்குத் தெற்கே உத்திரமேரூர் சாலையிலுள்ள ஆர்ப்பாக்கம் திருவாலீசுவரர் கோயிலிலும் திருவள்ளூர் வட்டத்து இலம்பையங்கோட்டூர் கோயிலிலும் இம்மன்னன் காலத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

## மூன்றாம் குலோத்துங்கன்

இம்மன்னன் திருவொற்றியூர்க்கோயில் பங்குனி உத்திர விழாவிற்கு வந்திருந்ததாகத் திருவொற்றியூர்க் கல்வெட்டு தெரிவிக்கிறது.

இவன் கி.பி. 1178 முதல் 1218_ஆம் ஆண்டு வரை ஆட்சிபுரிந்தான். காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் குலோத்துங்கனின் 3_ஆம் ஆட்சியாண்டு முதல் 37_ஆம் ஆட்சியாண்டு வரையுள்ள கல்வெட்டுகளும் உத்திரமேரூர் சுந்தர வரதப்பெருமாள் கோயிலில் இம்மன்னன் 38_ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும் பொன்னேரி வட்டத்துத் திருப்பாலைவனத்துச் சிவன்கோயிலில் 15, 37_ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகளும் திருவொற்றியூர் ஆதிபுரிசுவரர் கோயிலில் 11, 26, 35, 38_ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகளும் திருப்பாச்சூர் சிவன் கோயிலில் 29_ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. திருமயிலைக்கபாலீச்சுரர் திருக்கோயிலின் 33_ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது. 22_ம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் காணப்படுகிறது. இம்மன்னன் திருவொற்றியூர் இராசராசன் மண்டபத்திலிருந்துகொண்டு அக்கோயில் ஆனித் திருவிழாவில் பங்கேற்றதாகக் கல்வெட்டுச்செய்தி கூறுகிறது.

## மூன்றாம் இராசராசனும் மூன்றாம் இராசேந்திரனும்

மூன்றாம் இராசராசன் காலத்தில் இம்மன்னன் காலத்துக் கல்வெட்டு திருமழிசையில் திருமழிசை ஆழ்வார் கோயிலிலும் திருமாகறல் வீற்றிருந்த பெருமாள் கோயிலிலும் காணப்படுகிறது. காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் ஐம்பது கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் பெரும்பான்மையின ஒய்சால மன்னர் முதலியோர்களால் பொறிக்கப்பட்டவை. இம்மன்னனை எதிர்த்துப் போர் தொடங்கிய கோப்பெருஞ்சிங்கன், இம்மன்னனை வென்று இவனைக் கைது செய்து கடத்திச் சென்றான். ஒய்சால மன்னர் தலையீட்டில் இராசராசன் தன் நாட்டிற்குத் திரும்பினான். இவனுக்குப் பின் அரசேற்ற மூன்றாம் இராசேந்திரனை கண்ணனூர்ப் போரில் இரண்டாம் சுந்தரராச பாண்டியன் வென்றான்; இராசேந்திரனும் இறந்தான். இம்மன்னனுடன் சோழப் பேரரசு இறுதியடைந்தது. மூன்றாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டு திருப்பெரும்புதூர்த் திருமழிசைப்பெருமாள் கோயிலில் காணப்படுகிறது. இம்மன்னன் காலத்தில் ஒய்சாலர் முதலியோர் செல்வாக்குப் பெருகிற்று. சோழர் ஆட்சி தளர்வுற்றது.

### ஒய்சாலர்கள்

மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பின்னர் தொண்டை நாட்டில் சோழப் பேரரசு பெயரளவில் மட்டுமே செயற்பட்டது. கி.பி. 1226 முதல் கி.பி. 1240_ஆம் ஆண்டு வரையில் ஒய்சால வீரநரசிம்மனும் வீரசோமேசுவரனும் காஞ்சிப் பகுதியைக் கைக்கொண்டு அரசு புரிந்து வந்தார்கள். 1231_ஆம் ஆண்டில் ஒய்சாலப் படைவீரன் கோப்பய்ய தண்டநாயகன் தமிழ்நாட்டில் புகுந்து மூன்றாம் இராசராசனைக் கோப்பெருஞ்சிங்கன் பிடியிலிருந்து விடுவித்துச் சோழநாட்டில் ஆட்சிபுரியுமாறு உதவினான். இவன் ஓர் ஊரையும் வரதராசர் கோயிலுக்கு நன்கொடை அளித்தான். கி.பி. 1234_ஆம் ஆண்டில் வீரநரசிம்மன் வரதராசர் கோயிலுக்கு நன்கொடை அளித்த செய்தியைக் கல்வெட்டு கூறுகிறது. இம்மன்னன் காலத்துக் கல்வெட்டு திருக்கச்சூர் ஆலக்கோயிலிலும் காணப்படுகிறது.

### தெலுங்குச் சோழர்கள்

கரிகாற் சோழன் பரம்பரையில் தோன்றியவராகக் கொண்டாடக் கூடிய நெல்லூர்ப்பகுதித் தெலுங்குச் சோழர்கள் விக்கிரமசோழன் காலத்திலே குறுநில மன்னர்களாக ஆட்சிபுரிந்து வந்தார்கள். வலுவிழந்த நிலையில் ஆட்சிபுரிந்த மூன்றாம் இராசராசன் காலத்திலும் மூன்றாம் இராசேந்திரன் காலத்திலும் இவர்கள் தன்னுரிமை பெற்றார்கள். இம்முறையில் இவர்கள் சோழச் சிற்றரசர்களாக மேலோங்கினார்கள். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் மூவர். திருக்காளத்திதேவர் என்கிற விசயகண்டகோபாலர் என்கிற திக்கர் (1223_1250) இவன் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலுக்குச் சில கிராமங்களையும் நிலங்களையும் அளித்ததாகவும் இவன் மனைவி இலட்சுமிதேவி இக்கோயிலுக்கு நன்கொடை அளித்ததாகவும் கோயில் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவன் பெயரில் இருபத்தைந்து கல்வெட்டுகள் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் காணப்படுகின்றன.

இவனிடம் முதன்மை அலுவலராக இருந்த நல்ல சித்தராசன் பெயரில் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் ஒரு கல்வெட்டும் திருப்புட்குழி விசயராகவப்பெருமாள் கோயிலில் ஒரு கல்வெட்டும் உள்ளன. இவன் கல்வெட்டு காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலிலும் உள்ளது. இரண்டாம் மன்மசித்தா விசயகண்டகோபாலன் (1250_1291) பெயரில் 20 கல்வெட்டுகள் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் உள்ளன. மூன்றாம் வீரகண்ட கோபாலன் கி.பி. 1291_ஆம் ஆண்டுக் கல்வெட்டு திருப்புட்குழி விசயராகவப்பெருமாள் கோயிலிலும் இலம்பையங்கோட்டூர்க் கோயிலிலும் காணப்படுகின்றன. காஞ்சிபுரம் வரதர் கோயிலில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது.

## பாண்டியர்கள்

சடாவர்ம சுந்தரபாண்டியன், பாண்டி நாட்டை விரிவாக்க முற்பட்டு மூன்றாம் இராசேந்திரனையும் ஒய்சால மன்னர் சோமேசுவரனையும் காடவர்மன் கோப்பெருஞ்சிங்கனையும் தெலுங்குச்சோழர் விசயகண்ட கோபாலனையும் காகத்திய மன்னர் கணபதியையும் வென்று காஞ்சியில் வீராபிடேகம் செய்துகொண்டான். இம்மன்னன் 5, 15_ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் 1256, 1266 ஆண்டுகளுக்கு உரியன. இவை காஞ்சி வரதராசர் கோயிலில் காணப்படுகின்றன. இவன் கல்வெட்டுகள் திருப்புட்குழி பெருமாள் கோயிலிலும் காணப்படுகின்றன. இவன் புகழைக் கூறும் ஒரு பாடலும் இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. திருமாகறல் இலம்பையங்கோட்டூர், அச்சிறுபாக்கம், அரசர் கோயில், திருமயிலைக் கபாலீச்சுரம் ஆகிய தலங்களிலுள்ள சிவன் கோயில்களில் இவன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இப்பாண்டியன் தொண்டைநாட்டில் முழுவெற்றி கொண்டபோதிலும் உள்ளூர்ப்படை வீரர்கள் ஆங்காங்கு அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

## முசுலிம் முதல் படையெடுப்பு

பாண்டியர் ஆட்சி தொண்டை மண்டலத்தில் நீண்டகாலம் நிலைக்கவில்லை. சுந்தர பாண்டியன் காலத்திற்குப் பின்னர்க் குலசேகரபாண்டியன் கி.பி. 1308_ஆம் ஆண்டில் இறந்தான். அவன் புதல்வர்கள் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் ஆகிய இருவருக்குமிடையே போராட்டம் நிகழ்ந்தது. வீரபாண்டியனிடம் தோல்வியுற்ற சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனாகிய மாலிக்காபூரின் உதவியை நாடினான். இவ்வகையில் ஊக்கம்பெற்ற மாலிக்காபூர் மதுரை மீது கி.பி. 1310_ஆம் ஆண்டில் படையெடுத்தான். மதுரையில் முசுலிம் ஆட்சி ஏறத்தாழ 50 ஆண்டுகள் நிலவிற்று. இவ்வாறு தென்னிந்தியாவில் குழப்பம் நேரிட்டது,

## சேரமன்னன்

சேரமன்னன் இரவிவர்மன் குலசேகரன் (கி.பி.1275_1290) கேரளநாட்டினையும் பாண்டிய நாட்டினையும் வென்றான் எனவும் வேகவதி ஆற்றின் கரையில் கி.பி. 1342_ஆம் ஆண்டில் வேகவதிநாதன் என்று பெயர் சூடிக்கொண்டான் எனவும்

கூறும் கல்வெட்டு வரதராசர் கோயிலில் காணப்படுகிறது. இவன் தன்னைச் சேரபாண்டியன் எனக் கூறிக் கொண்டான்.

## இரண்டாம் முசுலிம் படையெடுப்பு

கி. பி 1327-ஆம் ஆண்டில் இரண்டாம் முசுலிம் படையெடுப்பு நேர்ந்தது. முகமது பின் துக்ளக் படையினர் ஒய்சாலர் தலைநகராகவிருந்த துவாரசமுத்திரத்தைக் கைப்பற்றிப் பின் தெற்குநோக்கிச் சென்று கொண்டிருந்தபோது ஒய்சால மன்னன் மூன்றாம் பெல்லா, இப்படையை வன்மையாக எதிர்த்தான். அப்போது சில நாள்கள் காஞ்சியில் தங்கினான். காஞ்சி வரதராசர் கோயிலுக்கு ஓர் அறக்கட்டளை ஏற்பாடு செய்தான். இறுதியில் முசுலிம் படை தீவிரமாகத் தாக்கியதின் விளைவாக அதனோடு போரிட இயலாது தோல்வியுற்றான்.

## விசயநகர மன்னர்கள் - சங்கம பரம்பரையினர்

அக்காலத்தில் (கி.பி. 1352) தொண்டை மண்டலத்தின் எல்லையில் அமைந்த உதயகிரியை ஆண்டுவந்தவர் முதலாம் கம்பண்ணாவின் மகன் சாயண்ண உடையார் ஆவார். இக்காலத்தில் விசயநகர ஆட்சி விரிவாக்கம் பெற்றது. மன்னன் புக்காவின் மகன் குமார கம்பண்ணா அக்காலத்தில் தொண்டைநாட்டில் ஆதிக்கம் செலுத்திவந்த சம்புவராயரை வென்றான். தெற்கே மதுரைக்குச் சென்று மதுரை சுல்தானை அடக்கினான். பாதுகாப்பின் பொருட்டு வேறிடத்திற்கு அகற்றப்பட்ட திருவரங்கநாதர் திருவுருவம் மீண்டும் அங்கு நிலைப்படுத்த ஏற்பாடு செய்தான். கம்பண்ணாவின் படைத்தலைவன் மங்குவின் செயற்பாடு காஞ்சிபுரம் வரதராசர் கோயில் கல்வெட்டிலும் காஞ்சிபுரம் கயிலாச நாதர் கோயில் கல்வெட்டிலும் காணப்படுகிறது. அதுவரையில் தடைப்படுத்தப்பட்டிருந்த அக்கோயில் வழிபாடு மீண்டும் நடைபெற அவன் செய்த ஏற்பாட்டை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவன் காலத்து கி.பி. 1307-ஆம் ஆண்டுக் கல்வெட்டு காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் காணப்படுகிறது. இவன் கல்வெட்டு அச்சிறுபாக்கம் ஆட்சிலிங்கேசுவரர் கோயிலிலும் காணப்படுகிறது. கி.பி. 1374-ஆம் ஆண்டில் கம்பண்ணா இறந்தான். இதன்பின் இவன் தந்தை புக்கா ஆட்சியேற்று கி.பி. 1377-ஆம் ஆண்டு வரை அரசாண்டான். இவன் பெயரில் அச்சிறுபாக்கம் ஆட்சிநாதர் கோயிலில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. புக்காவிற்குப் பின்னர் அவன் புதல்வன் இரண்டாம் ஹரிஹரன் (1377-1404) அரசுபுரிந்த காலத்திலும் அப்பகுதிக்கு முதலாம் இராசராசன் காலத்தில் இடப்பட்ட செயங்கொண்ட 'சோழமண்டலம் என்னும் பெயரே தொடர்ந்து இருந்து வந்தது என்பதையும் இம்மன்னன் ஒரு கிராமத்தை வைணவக்கோயிலுக்கு அளித்ததையும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கி.பி.1404-ஆம் ஆண்டில் ஹரிஹரன் இறந்தபின்னர் அவன் புதல்வர்கள் இரண்டாம் புக்கா, விருப்பாட்சர், முதலாம் தேவராயர் ஆகியோர் ஆண்டார்கள். விருப்பாட்சர் கல்வெட்டு திருக்கச்சூர் ஆலக்கோயிலில் காணப்படுகிறது. இதன்பின்னர் இரண்டாம் தேவராயர் (கி.பி.1422-1446) தனது ஆட்சியைத் தென்னிந்தியா முழுவதிலும் நிலைநாட்டினான். இரண்டாம் தேவராயருக்குப் பின்னர் இரண்டாம்

விசயராயரும் (1446_47) அவனுக்குப் பின்னர் மல்லிகாவும் அரசாண்டார்கள். இக்காலத்தில் பாமினிப் படையும் ஓரிஸ்ஸா மன்னன் படையும் விசயநகரைத் தாக்கி உதயகிரி, சந்திரகிரி முதலிய நகரங்களைக் கைப்பற்றிய போதிலும் பின்னர் அவற்றிலிருந்து பின்வாங்கினார்கள். மல்லிகார்ச்சுனர் கி.பி. 1465 முதல் 1485_ஆம் ஆண்டு வரை அரசாண்டார். படைத்தலைவன் சாளுவநரசிம்மன் உதவிகொண்டு விருப்பாட்சன், பாமினி சுல்தான் மகமத்ஷா படையெடுப்பை எதிர்த்து வெற்றி பெற்றான். விருபாட்சா ஆட்சி கி.பி.1485_ஆம் ஆண்டில் இறுதியடைந்தது. அரசேற்ற அவன் முதல் மகனை, அவன் தம்பி கொன்றான். இத்தகைய அரசியல் குழப்பத்தில் சாளுவநரசிம்மன் கி.பி.1496_ஆம் ஆண்டில் விசயநகர ஆட்சியைக் கைப்பற்றினான். இது முதல் சாளுவமன்னர் மரபு தொடங்கிற்று.

## விசயநகர சாளுவப் பரம்பரை மன்னர்கள்

சாளுவ நரசிம்மன் தமிழகத்தைத் திறம்படத் தன் கைக்குள் வைத்திருந்தான். காஞ்சியில் பல பணிகளை இவன் மேற்கொண்டான். இவனிடமிருந்து பல உதவிகளைச் சந்தாடை இராமசாமி அய்யர் பெற்றுக் காஞ்சி முதலிய கோயில் பணிகளைப் புரிந்தார். கி.பி. 1491_ஆம் ஆண்டில் சாளுவ நரசிம்மன் இறந்தான். இவன் மைந்தன் இம்மடி நரசிம்மன் பதவியேற்றான். இவன் கி.பி.1505_ஆம் ஆண்டில் கொலையுண்டான். இக்காலத்தில் படைத்தலைவனாக இருந்த நரசநாயக்கர் ஆட்சியைக் கைப்பற்றினான். இக்காலத்திலிருந்து துளுவப் பரம்பரை தொடங்கிற்று.

## விசயநகர்த் துளுவப் பரம்பரை மன்னர்கள்

நரசநாயக்கன் இறந்த பின்னர் அவன் மகன் வீரநரசிம்மன் கி.பி. 1505 முதல் 1509_ஆம் ஆண்டு வரை அரசாண்டான். இவன் காலத்து 1509_ஆம் ஆண்டுக் கல்வெட்டு காஞ்சி வரதராசர் கோயிலில் காணப்படுகிறது. இவனுக்குப் பின்னர் இவன் உடன்பிறந்தவனாகிய கிருட்டிண தேவராயர் பட்டம் எய்தினான். இம்மன்னன் காலத்தில் விசயநகர ஆட்சி தென்னிந்தியா முழுதும் விரிவடைந்தது. இம்மன்னன் காலத்திய 16 கல்வெட்டுகள் காஞ்சி வரதராசர் கோயிலில் காணப்படுகின்றன. இம்மன்னன் கல்வெட்டு அச்சிறுபாக்கம் ஆட்சிநாதர் கோயிலிலும் காணப்படுகிறது. தம் தந்தை சாளுவ நரச நாயக்கர் பெயராலும் தாயார் நாகலாதேவி பெயராலும் அறக்கட்டளை நிறுவினான்.

கிருட்டிணதேவராயருக்குப் பின்னர் அச்சுதராயர் கி.பி. 1529_ஆம் ஆண்டில் அரசேற்றான். காஞ்சிபுரம் வரதராசர் கோயிலுக்கும் ஏகாம்பரநாதர் கோயிலுக்கும் நன்கொடைகள் அளித்தான். தான் அளித்த அரசுக்கொடைகள் தொடர்பாகக் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்கும் வரதராசர் கோயிலுக்கும் இடையே இருந்த தகராறுகளைத் தீர்த்தான். இவன் பெயரில் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் 23 கல்வெட்டுகள் உள்ளன. இவன் தென்னாட்டுக் கோயில்கள் பலவற்றிற்கும் சென்று திருப்பணிகள் செய்தான்.

கி.பி. 1516_ஆம் ஆண்டில் மயிலாப்பூர் போர்ச்சுகீசியர்கள் வசமாயிற்று.

அப்போது மயிலைக் கபாலீசுவரர் கோயில் தகர்க்கப்பட்டது. அச்சுதராயருக்குப் பின் அவர் மகன் முதலாம் வெங்கட்டா கி.பி. 1541-ஆம் ஆண்டில் அரசேற்றான். இவன் சில மாதங்களுக்குள் கொலையுண்டான். இவனுக்குப் பின்னர் கி.பி. 1542-ஆம் ஆண்டு வரை சதாசிவர் அரசாண்டான். இக்காலத்தில் காஞ்சி வரதராசர் கோயில் பல நன்மைகள் அடைந்தது. திருவிழாக்கள் நடத்தவும் நந்தவனங்கள் வைக்கவும் பல வசதிகள் கிடைத்தன. இவர் காலத்திய கல்வெட்டுகள் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலிலும் காஞ்சிபுரம் திருமேற்றளி ஈசுவரர் கோயிலிலும் வானவன் மாதேவீச்சுரக் கோயிலிலும் திருமழிசை ஆழ்வார் கோயிலிலும் காஞ்சி காமாட்சியம்மன் கோயிலிலும் காணப்படுகின்றன.

தக்காணச் சுல்தான்கள் படையெடுத்து கி.பி. 1565-ஆம் ஆண்டில் தளிக்கோட்டையில் விசயநகர மன்னரைத் தோல்வியுறச் செய்தார்கள். சதாசிவன் அமைச்சர் இராமராவ் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டான். இவன் உடன்பிறந்தான் திருமலா தப்பியோடினான்; சதாசிவர் கைது செய்யப்பட்டான்.

தளிக்கோட்டைப் போருக்குப் பின்னரும் விசயநகர மன்னர் ஆட்சி நீடித்தது. இவ்வாட்சியை நிலைப்படுத்த திருமலா முயன்றான். கி.பி.1567-ஆம் ஆண்டில் பெனுகொண்டா தலைநகராயிற்று. மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர்த் திருமலாவின் மகன், சதாசிவத்தைக் கொன்றான். அப்போது திருமலா விசயநகர ஆட்சியைக் கைப்பற்றினான்.

## விசய நகர அரவீடு பரம்பரை

அரவீடு பரம்பரையில் முதல் மன்னன் திருமலா, விசயநகர ஆட்சியை மூன்று பிரிவுகளாகப் பிரித்தான். தெலுங்குப் பகுதிக்கு உதயகிரியில் முதல் மகன் சீரங்காவையும் கன்னடப் பகுதிக்கு சீரங்கப்பட்டனத்தில் இரண்டாம் மகன் இரண்டாம் இராமராவையும் தமிழ்ப் பகுதிக்குச் சந்திரகிரியில் கடைசி மகன் வெங்கடபதியையும் ஆளுநர்களாக நியமித்தான். இதன்பின்னர்த் திருமலா இறந்தான். கி.பி.1572-ஆம் ஆண்டில் இவன் முதல் மகன் சீரங்கா மன்னர் பதவியேற்று கி.பி.1572 முதல் 1585-ஆம் ஆண்டு வரையில் அரசாண்டான். இவன் காலத்து ஐந்து கல்வெட்டுகளை வரதராசர் கோயிலில் காணலாம். இக்காலத்தில் பெனுகொண்டாவுக்கு வடபகுதியைப் பீசப்பூர் சுல்தான் கைக்கொண்டான். குண்டூர், கடப்பை, கர்நூல், பெல்லாரி, நெல்லூர்ப் பகுதிகளைக் கோல்கொண்டா சுல்தான் கைப்பற்றினான். இச்சூழ்நிலையில் முதலாம் சீரங்கா கி.பி.1585-ஆம் ஆண்டில் இறந்தான். இதன்பின்னர் இவன் தம்பி இரண்டாம் வெங்கடா பட்டம் எய்தினான். இவன் கி.பி. 1586-1614-ஆம் ஆண்டு வரையில் திறம்படச் சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். இவன் தக்காண முசுலிம் படையைத் தாக்கி உதயகிரி முதலிய பகுதிகளை மீட்டான். இவன் காலத்துக் கல்வெட்டுகள் காஞ்சி வரதராசர் கோயிலில் காணப்படுகின்றன. இவன் பெயரில் திருமழிசை, திருமழிசையாழ்வார் கோயிலில் கல்வெட்டு காணப்படுகிறது. வெங்கடா புதல்வன் நாமதேவன் அரசாண்டான். அதன்பின்னர் மூன்றாம் வெங்கட்டா கி.பி. 1630 - 1642-ஆம் ஆண்டு வரை அரசாண்டான். விசயநகர ஆட்சியிலிருந்து பிரிந்து மைசூர்

ராசஉடையார் தனிஆட்சியைச் சீரங்கப்பட்டினத்தில் நிறுவினான். மதுரை நாயக்கர், தஞ்சாவூர், செஞ்சி ஆகியவை பெயரளவில் மட்டுமே விசயநகராட்சியில் அடங்கியிருந்தன. விசயநகராட்சியில் அடங்கியிருந்த வெங்கட்டா, தன் உறவினர் சீரங்காவைச் சந்திரகிரி ஆளுநராக்கினர். வெங்கட்டா வேலூரில் தங்கினார்.

காஞ்சி, பூந்தமல்லி, செங்கற்பட்டு, சென்னை, வந்தவாசி ஆகியவை மூன்றாம் வெங்கட்டா வசமிருந்தன. இரண்டாம் வெங்கட்டாவின் திறமைமிக்க படைத்தலைவன் சென்னா. இவன் காளத்தி வேலுகோட்டிக் குடும்பத்தைச் சேர்ந்தவன். இவன் பிள்ளைகள் தாமர் வெங்கடா, தார்மார்ல அய்யப்பர்; இவர்கள் மூன்றாம் வெங்கட்டாவின் ஆட்சியில் முறையே வந்தவாசியிலும் பூந்தமல்லியிலும் அலுவல் புரிந்து வந்தார்கள். இக்காலத்தில் இவ்விருவரும் தற்போதுள்ள சென்னை அரசுக்கோட்டை இடத்தை கி. பி. 1639-ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அளித்தார்கள். இதற்காக ஆங்கிலேயர் இவ்விருவருக்கும் நன்றி தெரிவித்தனர். இக்கோட்டையைச் சென்னாவின் புதல்வர்கள் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு விற்றதால் இதன் அடிப்படையில் சென்னாவின் பெயரில் சென்னை என்னும் பெயர் வழக்கில் வந்துள்ளது.

மூன்றாம் வெங்கட்டா கி. பி. 1642-ஆம் ஆண்டில் இறந்தான். சீரங்கா அரசேற்றான். கோல்கொண்டாப் படையுடன் பிஜப்பூர் படையும் சேர்ந்துகொண்டது. கி. பி. 1645-ஆம் ஆண்டில் பிஜப்பூர் கோல்கொண்டாப் படைகள் வேலூரை முற்றுகையிட்டன. இதனைச் சீரங்கா தடுத்து நிறுத்தி பழவேற்காட்டை நோக்கிக் கோல்கொண்டா படைகள் சென்றன. சீரங்காவில் படைகள் தோல்வி அடைந்தன. கோல்கொண்டா படைகள் கி. பி. 1661-1664 ஆண்டுகளில் படிப்படியாகச் சீரங்காவின் வசமிருந்த பகுதிகளைக் கைப்பற்றின. இவ்வாறு 1672-ஆம் ஆண்டில் கோல்கொண்டா ஆட்சி தொண்டை மண்டலத்தில் நிலைப்படுத்தப்பட்டன. கிழக்கிந்திய கம்பெனி பெற்றிருந்த உரிமைகளைத் தான் அக்கம்பெனிக்கு அளிப்பதாகக் கோல்கொண்டா சுல்தான் தெரிவித்தான். சுல்தானிடம் மாதண்ணா, அக்கண்ணா என்னும் பிராமண அமைச்சர்கள் இருந்தார்கள். மாதண்ணா தன் உறவினரான பொடலலிங்கப்பாவை வரிவசூல் செய்ய நியமித்தான்.

கி. பி. 1672-ஆம் ஆண்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே நிகழ்ந்த போரில் பிரஞ்சுநாட்டுச் சேனையின் ஒரு பகுதி தற்போதுள்ள கபாலீசுவரர் கோயிலில் தங்கியதாக ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். கி. பி. 1674-ஆம் ஆண்டில் அப்துல்லா குடுப்ஷாவிற்குப் பின்னர் அவன் மருமகன் அப்துல்ஹாசர் குடுப் கோல்கொண்டா நவாப் ஆனான். அவன் பீஜப்பூர் சுல்தான் வசத்திலிருந்த செஞ்சியைக் கைப்பற்றி வேலூருக்குச் சென்றபோது வேலூரும் சிவாஜி வசமாயிற்று.

முகலாயர் படையெடுப்புக்குஅஞ்சி வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்ட வரதராஜர் திருவுருவமும் ஏகாம்பரநாதர் திருவுருவமும் காமாட்சியம்மன் திருவுருவமும் திரும்பிக் கொண்டுவரப்பட்டன.

இதனையடுத்து மராட்டியப்படை சென்னை நோக்கிச் சென்ற போது சிவாஜி சென்னையில் காளிகாம்பாள் கோயிலில் வழிபாடாற்றியதாக எச். டி லவ் என்போர், தாம் இயற்றிய சென்னை நகர வரலாற்றில் கூறியுள்ளார். இதன்பின்னர் சிவாஜி மைசூரை நோக்கிச் சென்றபோது இறந்ததால் அதனுடன் சிவாஜியின் வாழ்க்கை இறுதியடைந்தது.

முகலாயர் ஆட்சிக்குட்பட்ட படைத்தலைவர் ஒருவர் சிலகாலம் செஞ்சியில் தங்கிப் பின்னர் ஆர்க்காட்டில் நவாப் ஆக வாழ்ந்தார். இவருக்குப் பின் பதவியேற்றவரிடமிருந்து ஆங்கிலேயர் இந்நிலப்பகுதியைக் கைக்கொண்டார்கள்.

# நித்திய பூசைகள்

பூசை என்னும் சொல் பூஜா என்னும் வடசொல்லின் திரிபு எனச் சிலர் கொள்கிறார்கள். ஆனால், மலராகிய பூ இட்டு வழிபடுவது பூசை என்பதாக அறிஞர் சிலர் எடுத்துக்காட்டியுள்ளனர். பூசைகள், (1) நித்திய பூசைகள் (2) நைமித்திய பூசைகள் (3) காமிகப் பூசைகள் என்னும் மூன்று பிரிவுகளில் வகுக்கப்பட்டுள்ளன.

கோயில்களில் நாள்தோறும் ஓர் ஒழுங்குமுறையில் செய்யப்படுவது நித்திய பூசை. காரணம் கொண்டு செய்யப்படுவது நைமித்திய பூசை. இதைச் சிறப்புப்பூசை எனலாம். ஒரு வாரத்தின் திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை என்ற ஒரு குறிப்பிட்ட நாளிலும் இரு வாரங்களுக்கு ஒரு முறையும் (பிரதோட விழா போன்று) கிருத்திகை போன்று திங்களுக்கு ஒரு முறையும் சிவராத்திரி போன்று ஆண்டுக்கொருமுறை செய்யப்படும் பூசையும் மாதப்பிறப்பு, நடராசர் அபிடேகங்கள், ஆடிப்பூரம், ஆவணிசதுர்த்தி, நவராத்திரி, கந்தர் திருக்கார்த்திகை, கிருத்திகை தீபம், கார்த்திகை சோமவாரங்கள், மார்கழித் திருவாதிரை, தை சங்கராந்தி, மாசி மகம், மகாமகம், கும்பாபிடேகம், பங்குனி உத்திரம் ஆகியவையும் நைமித்திய பூஜையில் அடங்கும். பலனை அவாவிச் செய்யப்படும் பூசை காமிகப் பூசை.

## நித்திய பூசைகள்

பெரும்பான்மைப் பெருங்கோயில்களில் ஆறு காலங்களில் பூசைகள் நிகழ்த்தப்படுகின்றன.

### 1. உஷத்கால பூசை

இது சூரிய உதயத்திற்கு மூன்றே முக்கால் நாழிகை (1 1/2 மணி நேரம்) க்கு

முன் தொடங்கி சூரிய உதயத்தில் முடியுமாறு செய்யப்பெறும் பூசை. இது செய்யப்படும் முறையாவது: பூசைசெய்யும் சிவாச்சாரியர் நீராடித் தம்முடைய நித்திய அனுட்டானத்தை முடித்துக்கொண்டு கையில் பூக்களை எடுத்துக்கொண்டு ஆலயத்தில் நுழைந்து சிவன் சந்நிதியில் இட்டு வணங்குவார். பின் அவர் சண்டி தீபம் என்று சொல்லப்படும் சத்த தூபத்துடன் வயிரவர் (சேத்திர பாலர்) ஆலயத்திற்குச் சென்று, இறைவனைப் பூசித்து, அவரிடமிருந்து ருத்ரா தண்டம் பெற்று, சத்தி ஆலயத்தில் உள்ள பள்ளியறைக்குச் (சயனாலயத்திற்குச்) செல்வார். அங்குப் பூக்கள் சாத்தி, தூபம், தீபம், நைவேத்தியம் முதலிய உபசாரங்களைச் செய்து, இறைவரைப் பாதுகையில் எழுந்தருளச் செய்வதற்காக அவரைச் சிவிகையில் ஏற்றி, இறைவர் கோயிலுக்குச் சென்று, வலம்வந்து, கருவறையில் உள்ள மூலலிங்கத்தில் இறைவரைச் சேர்ப்பர். பின் மூல இலிங்கத்திற்கு அபிடேகம், தீபாராதனை முதலியன செய்வார். உஷத் காலத்தில் வயிரவர், பள்ளியறை இறைவர் (மூலலிங்கம்), தேவி இவர்கள் பூசிக்கப்பெறுவர். உஷத் காலத்தில் கணபதி, முருகர், தட்சிணாமூர்த்தி, சூரியன் முதலானவர்களுக்கும் பரிவாரத் தேவதைகளுக்கும் பூசை இல்லை. உஷத் கால பூசையில் முக்கியமாக ஓதப்பெறும் மந்திரங்கள், ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான்(சிவன்) ஆகிய மூன்று மந்திரங்களும் ஆறு அங்க மந்திரங்களில் இருதயம், சிரசு, சிகை, கலசம் முதலிய ஐந்து மந்திரங்களும் கொண்ட எட்டு மந்திரங்களாம். இவை 'மந்திராஷ்ட புஷ்பம்' (எட்டு மந்திரமாகிய மலர்கள்) என்று சொல்லப்பெறும்.

உஷத் காலத்திற்குரிய நிவேதனப் பொருள்கள் பால், பழங்கள், தயிரன்னம், எலுமிச்சம் பழரசம் முதலியன (உஷத் காலப் பூசை முடியும் நேரம் சூரிய உதயத்திற்குச் சரியாக இருக்க வேண்டும்.)

### கால சந்திப்பூசை

சூரிய உதயம் முதல் ஏழரை நாழிகை (3 மணிநேரம்) கொண்ட நேரத்திற்குச் கால சந்தி என்று பெயர்.

கால சந்திப்பூசையில் முதலில் சூரிய பூசை செய்யப்படும். இங்குப் பூசிக்கப்பெறுபவர் சிவசூரியன் (சூரியனைத் தமது எட்டு வடிவங்களில் (மூர்த்தங்களில்) ஒன்றாகக் கொண்ட சிவபெருமான்.) பின்னர்ச் சூரியனது சண்டேசராகிய தேஜசச்சண்டேசர் பூசிக்கப்பெறுவர். இதனையடுத்துக கணேச பூசை எல்லா உபசாரங்களுடனும் விரிவாகச் செய்யப்பெறும். பின்னர்ச் சிவபூசை தொடங்கி, கணபதி, நந்தி, மகாகாளர் முதலிய எண்மரும் சரசுவதி, கங்கை, யமுனை முதலிய எண்மரும் ஆகிய பதினாறு வாயில் தெய்வங்களை எட்டுத் திக்குகளிலும் பூசித்து (துவாரபூசை) பின்னர்த் தெற்கு வாயிலில் உள்ள டுண்டி, டிண்டி, என்ற இரு துவார பாலகர்களையும் பூசித்து அதன் பின்னர் இடபதேவரைப் பூசித்து, சிவாசன பூசையை விரிவாகச் செய்து, சிவமூர்த்தியைப் பூசித்து, சிவபெருமானையும் ஐந்து ஆவரணங்களில் உள்ள பரிவார தெய்வங்களையும் விரிவாகப் பூசித்து, தீபம், தூபம், நைவேத்தியம் முதலிய உபசாரங்களைச் செய்து, நித்திய ஹோமம் (நித்திய அக்னி காரியம்) பலி சமர்ப்பித்தல் ஆகியவற்றைச் செய்து, சண்டேசுவர பூசை செய்து,

கால சந்திப்பூசை முடிக்கப் பெறும்.

### 3. உபசந்திப் பூசை

கால சந்திக்குப் பின் 3 3/4 நாழிகை நேரம் (சுமார் 9 மணி முதல் 10 1/2 மணி வரை) உபசந்திக் காலம் என்று சொல்லப்படும். இக்காலத்தில் போக சத்தி பூசிக்கப்பெறும். இறைவருக்கும் அம்பாளுக்கும் அலங்காரம் செய்து, இறைவருக்கு அன்னம், பழம், பானகம், தாம்பூலம் முதலியவை நிவேதனம் செய்து, பின்னர், தூபம், தீபம் முதலிய உபசாரங்கள் செய்யப்பெறும். பின்னர்க் கணபதி, அம்பாள், ஆறுமுகர் முதலிய அனைவருக்கும் நிவேதனம் செய்யப்பட்டு, ஏனைய உபசாரங்களும் செய்யப்பெறும்.

### 4. உச்சிக் காலப்பூசை

உச்சிக்காலம் என்பது உபசந்திக்குப் பின் உள்ள ஒரு யாமம் (7 1/2 நாழிகை) இது மாத்தியந்தின காலம் எனவும் மகாசந்தி எனவும் சொல்லப்படும். இப்பூசையில் ஸ்நபனம் (கலச நீர்) பஞ்ச கவ்வியம், பஞ்சாமிர்தம் முதலியவற்றை முறைப்படி செய்து துவார பூசைகளைச் செய்து, பின் வாஸ்து பிரமதேவரைப் பூசித்து, இறைவருக்கு விரிவான பூசை செய்து, ஆலாகனம் செய்து, ஸ்நபனத்தால் அபிடேகம் செய்வித்து (ஆவரண பூசை) நைவேத்தியம், தாம்பூலம் முதலிய உபசாரங்களைச் செய்து லோகசத்தி, அம்பாள் ஆகியோரைப் பூசித்து, ஓமம் செய்து, பலி சமர்ப்பிக்கப்படும். உச்சிக்காலத்தில் பரிவார தேவர்களுக்குப் பூசை இல்லை.

### 5. பிரதோஷக் காலப்பூசை

பிரதோஷ காலம் என்பது சூரியன் மறைவிற்கு முன் உள்ள 33/4 நாழிகை (மாலை ஏறத்தாழ 4 1/2 மணிமுதல் 6 மணி வரையுள்ள நேரம்). இதில் நடராசர், சிவலிங்கம், பரிபாலகர், அம்பிகை ஆகியோர் நைவேத்திய தூப தீபங்களுடன் பூசிக்கப்பெறுவர்.

### 6. சாயுங்காலப் பூசை

பிரதோடகாலம் முடிந்து 2 3/4 நாழிகை சாயுங் காலம் எனப்படும். இது சாயரட்சை என்றும் சொல்லப்படும். சாயுங்காலப் பூசையில் கணபதி, நடராசர், சிவலிங்கம், அம்மை ஆகியோருக்கு விரிவான பூசை செய்யப்படும். சிவலிங்கப்பெருமானுக்கு அபிடேகம் செய்து நைவேத்தியம் சமர்ப்பித்து, பதினாறு உபசாரங்களும் செய்யப்படும். இது சோடசோபசாரம் என்று சொல்லப்பெறும். பதினாறு உபசாரங்களாவன:

### பதினாறு வகைப் பூசைகள்

1. ஆவாகனம், 2. ஸ்தாபனம், 3. பாத்தியம்(திருவடி நீர்), 4. ஆசமனம் (உண்

நீர்), 5. அர்ச்சிவம் (குடி நீர்), 6. அபிடேகம் (கலச நீராட்டு), 7. ஆடை, சந்தனம் முதலிய வாசனைப் பொருள்களைச் சாத்துதல், 8. புட்பம் சாத்துதல், மலர் மாலைகள் அணிவித்தல், 9. தூபம், தீபம் ஆகியவை காட்டுதல், 10. நைவேத்தியம், 11. பலி, 12. ஹோமம், 13. நித்தியோத்சவம். 14. வாத்தியங்கள், 15. நடனம், 16. உத்வாசனம். இம்முறை காரணாகமப்படி வருவன. வீராகமம், வாதுளாகமம் ஆகியவை வேறு பதினாறு உபசாரங்களைக் கூறுகின்றன.

மேலே கூறப்பட்ட உபசாரங்களில் ஒன்பதாவதாகவுள்ள தீப உபசாரம் பதினாறு வகைகளில் விரிவாகச் செய்யப்படும். அவையாவன:

1. புட்ப தீபம், 2. புருட மிருக தீபம், 3. நாக தீபம், 4. கச தீபம், 5. வியாக்கிர (புலி) தீபம், 6. அம்ச (அன்ன) தீபம், 7. குதிரை தீபம், 8. சிம்ம தீபம், 9. சூல தீபம், 10. துவச (கொடி) தீபம், 11. விருடப (இடப) தீபம், 12. பிதமரா(வண்டு) தீபம், 13. குக்குட (கோழி ) தீபம், 14. கூர்ம (ஆமை) தீபம், 15. ஸ்ருக் தீபம், 16. சத்தி தீபம்.

இந்தப் பதினாறு உபசாரங்களையும் செய்து, பிறகு 5 தட்டுகளில் தீபம் (பஞ்சப் பிரம பூசை), பூர்ண கும்ப தீபம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து, சாமரை, குடை, ஓலை விசிறி முதலிய உபசாரங்களும் செய்யப்படும். ஆனால், திருக்கோயில்களில் இப்போது வழக்கமாகச் செய்யப்படும் பதினாறு உபசாரங்களாவன:

1. புட்ப தீபம், 2. நாக தீபம், 3. விருடப (இடப) தீபம், 4. விருட்ச (மரம்) தீபம், 5. மேரு (அடுக்கு) தீபம், 6. புருடமிருக தீபம், 7. கும்ப தீபம், 8. ஆராத்திரகம் (பஞ்ச தட்டு), 9. நட்சத்திர தீபம், 10. கர்ப்பூர தீபம், 11. பஸ்ம (திருநீறு) உபசாரம், 12. தர்ப்பணம், 13. குடை, 14. கொடி, 15. சாமரம், 16. விசிறி.

- பரார்த்த நித்திய பூஜாவிதி.

தீபத்தை சுவாமிக்கு நேரே உயர்த்தி இடப்புறக் கண்ணுக்கு நேரிலும் பின்னர் வலக்கண் நெற்றி ஆகிய இடங்களுக்கும் காலிலிருந்து தலைவரையிலும் மூன்று முறை சுற்றிக்காட்டவேண்டும். முதலில் சுற்றிக்காட்டுவது உலக நன்மைக்காகவும் இரண்டாவதாகச் சுற்றிக் காட்டுவது அந்த அந்தப் பகுதி மக்களின் நன்மைக்காகவும் மூன்றாவதாகச் சுற்றிக் காட்டுவது உயிர்கள் ஞானத்தைப் பெறுவதற்காகவும் என்று குறிப்பிடுவர்.

இந்த உபசாரங்கள் அதன் அதனுக்குரிய மந்திரங்களை ஓதிச் செய்யப்படுவன. பஞ்ச தட்டுத் தீபங்கள் சமர்ப்பிக்கும்போது பஞ்சப்பிரம மந்திரங்கள் ஓதப் பெறும்.

அலங்கார தீபங்களில்

11 அடுக்குத் தீபமாயின் அதனை 11 உருத்திரர்கள் வடிவமாகவும்

9 " " நவசத்திகள் "

7 அடுக்குத் தீபமாயின் அதனை 7 மாத்ருகா வடிவமாகவும்

5 " " பஞ்ச பிரம "

3 " " திரி மூர்த்தி "

1 " " சிவவடிவமாகவும்

நினைந்து பூசித்து வணங்குதல் வேண்டும்.

- காரணாகமம்.

ஒவ்வொரு திருவுருவத்தையும் ஒரு தெய்வமாக (அதி தெய்வமாக) நினைந்து பூசித்து உபசாரங்களைச் செய்ய வேண்டும் என வசன ரத்னாவளி என்ற நூல் கூறுகிறது. தீபங்களுக்கு அதிதெய்வங்களான:

| | |
|---|---|
| நாக தீபம் | - கேது |
| இடப தீபம் | - தருமதேவதை |
| மிருக தீபம் | - திருமால் |
| சூல தீபம் | - காளி |
| ஆலம் தீபம் | - அரி |
| கச தீபம் | - கணபதி |
| வியாக்கிர தீபம் | - துர்க்கை |
| சிம்ம தீபம் | - தேவி |
| துவச தீபம் | - சிவபெருமான் |
| மயூர தீபம் | - முருகன் |
| பூர்ண கும்பம் | - சிவன் |
| 5 தட்டுகள் | - பஞ்சப்பிரம மந்திரங்கள் |
| 27 நட்சத்திரங்கள் தீபம் | - 27 நட்சத்திர தேவதைகள் |
| மேரு தீபம் | - 12 சூரியர்கள் |

| | |
|---|---|
| மேலும் விபூதியில் | - சிவபெருமானை நினைந்து ராசு அளிக்க வேண்டும் |
| கண்ணாடியில் | - சூரியன் |
| குடையில் | - சந்திரன் |
| சாமரத்தில் | - மகாலட்சுமி |
| தூபத்தின் கற்பூர ஆரத்தியில் | - அக்கினி தேவன் |

ஆகியோரைப் பூசித்து இறைவனுக்கு உபசாரம் செய்ய வேண்டும். இதன்பிறகு வாத்தியங்களில் சங்கு, தாளம், மிருதங்கம், வீணை, குழல் ஆகியவற்றின் இசைகள், நர்த்தனம் ஆகியவை சமர்ப்பிக்கப்பெறும். பின்னர்க் கற்பூர ஆரத்தியும் செய்யப்பெறும். பின்னர் ஆசிர்வாதம் கூறப்படும். அதன்பின்னர்ச் சோமாசுகந்தர், நடராசர், தட்சிணாமூர்த்தி, ஆறுமுகர் 63 நாயன்மார்கள், அம்பாள் முதலியோர் பூசிக்கப்பெறுவர்.

## 7. அர்த்த யாம பூசை

அர்த்த யாம பூசைக்குரிய காலம் சாயுங்காலம் முடிந்த பின் 3 3/4 நாழிகை கொண்ட நேரம். பூசைகளில் சூரிய உதயத்திற்கு முன் செய்யப்படும் உஷத்கால பூசை, 6 கால பூசைகளிற் சேராது. ஏனைய ஆறு பூசைகளே ஆறுகால பூசைகள் எனச் சொல்லப்படுகின்றன.

அர்த்தயாம பூசையில் கலச நீர், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம் ஆகியவற்றை முறைப்படிச் செய்து, அவற்றாலும் பால், சர்க்கரை, தேன், இளநீர், சந்தனம் முதலியவற்றாலும் அபிடேகம் செய்து நைவேத்தியம், தூபம் தீபம் முதலிய உபசாரங்கள் சிவலிங்கப்பிரானுக்கும் அம்பாளுக்கும் செய்யப்பெறும்.

பின்னர் இறைவனைப் பள்ளியறைக்கு எழுந்தருளச் செய்யும் பொருட்டு அவரைப் பாதுகையில் பாவித்து ஊஞ்சலில் வீற்றிருக்கச் செய்து, ஆசனம், மூர்த்தி, மூலமந்திரங்கள், பஞ்சப்பிரம மந்திரங்கள், அங்க மந்திரங்கள் ஆகியவற்றால் பூசித்து, உபசாரங்களைச்செய்து, சிவிகையில் ஏற்றி, கொடி, குடை சாமரம், விசிறி, தூபம், தீபம் ஆகிய உபசாரங்களுடன் வேத பாராயணம், பண்ணிசை, வாத்தியங்கள் முதலியன முழங்கப் பள்ளியறைக்கு எடுத்துச் சென்று, சிவிகையினின்றும் இறக்கி, பள்ளியறையில் மஞ்சத்தின் மேல் தேவிக்கு வலப்பாகமாக எழுந்தருளச் செய்து, தேவியையும் சிவபெருமானையும் பூசித்து, பஞ்சப் பிரம மந்திரங்களாலும் ஆசனம், மூர்த்தி, மூல மந்திரங்களாலும் அர்ச்சனை செய்து, தேவிக்கு அப்பம், நெய் சேர்ந்த பால், அன்னம் முதலியவற்றை நிவேதனம் செய்து, தேங்காய், பழம், ஏலம், கிராம்பு, பச்சைக்கருப்பூரம், சாதிக்காய் என்பனவற்றுடன் கூடிய பூர்ண தாம்பூலத்தையும் நிவேதனம் செய்து, திரையிட்டு, வெளியே வந்து

வாயிலின் இரண்டு பக்கங்களிலும் உருத்திரக் கணிகைகளைக் கொண்டு பள்ளியறை பாடப் பெறும். பின்னர் சேத்திர பாலகருக்குப் பூசையை விரிவாகச் செய்து, அவரது சந்நிதியில் உருத்திராதண்டத்தை வைத்துப் பூசித்த பின் அர்த்தயாம பூசை முடிவுறும்.

- பரார்த்த நித்திய பூஜாவிதி

## நாட்டியம்

ஆடற்கலை 64 நான்கு கலைகளுள் ஒன்று. ஆடற்கலையில் ஒரு நிலையைக் குறிப்பாக உணர்த்தும் தன்மைக்குச் சரணம் என்று பெயர். பதஞ்சலியின் நாட்டிய சாத்திரத்துள் 108 கரணங்கள் குறிக்கப்பட்டுள்ளன. சிதம்பரம நடராசர், காஞ்சி ஏகாம்பரர், வரதர் கோயில்களின் பெருவாயிலில் இந்தக் கரணங்கள் செதுக்கப்பட்டுள்ளன. விசய நகரப் பேரரசர் காலத்திலேயே நாட்டியக்கலை தலைசிறந்து விளங்கியதால் அத்தகைய சிற்பங்கள் அவர்கள் கட்டிய கோயில் கோபுரங்களில் அமைந்தன. திருமால் கோயில்களில் மூலவர் உற்சவ மூர்த்தியாக நாட்டியக் கோலத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருப்பதில்லை. ஆனால், எல்லாக்கோயில்களிலும் கண்ணன், காளிங்கன் முதுகில் நின்றாடும் கூத்துக் காட்சி அலங்கரிக்கப்படுகிறது.

# திருவிழாக்களின் தத்துவங்கள்

உத்சவம் என்ற வடமொழிச் சொல்லுக்கு இருவிதமாகப் பொருள் காண்பர்.

1 உத் -மேலான
சவம் - ஐந்தொழில். சிவபெருமான் படைத்தல் (சிருஷ்டி) காத்தல் (திதி), அழித்தல் (சங்காரம்), ம்றைத்தல் (திரோதானம்), அருளல் (அனுக்கிரகம்) ஆகிய ஐந்து தொழில்களையும் செய்து உயிர்களின் பாச நீக்கம் பொருட்டுச் செய்யப்பெறுவது உத்சவம்.

2 உத் - ஞானம்
சவம் - மோட்சம்

திருவிழாக்களால் உயிர்கள் சிவஞானத்தைப்பெற்று, முத்திப் பேறு அடைகின்றன என்ற குறிப்பு இதில் காணப்பெறும்.

திருவிழாக்கள் பலகோயில்களில் பலவகையாக நடத்தப்பெறுகின்றன.

இதற்குக்காரணம் கோயில்களில் பின்பற்றப்படும் ஆகம வேதங்களால் பெரும்பாலும் கோயில்கள் காரணாகமம், காமிகாகமம் ஆகிய இரு ஆகமங்களைப் பின்பற்றுவதேயாகும்.

## முற்கிரியைகள்

உத்சவம் தொடங்குவதற்கு முந்திய நாள் கிராம சாந்தியும் வாஸ்து சாந்தியும் செய்யப்படும். கிராம சாந்தி என்பது ஊரில் நன்மை உண்டாவதற்கு வயிரவ மூர்த்திக்கு முதலில் பூசை செய்வதாகும். சாந்தியில் தர்ப்பை, வைக்கோல் முதலியவற்றால் செய்யப்பெற்ற வாஸ்து தேவனின் படிவத்தைச் சிவாக்னியுடன் சேர்த்து வீதியில் இழுத்துத் திருக்கோயில் வீதிகள் சுத்தி செய்யப்பெறும்

பின்னர் முளைப்பாலிகைகளுக்குத் தூயமண்எடுத்தல், (மிருத்சங்கரணம்) அதில் நவதானியங்களை இட்டு முளைகள் தோன்றுமாறு செய்தல் (அங்குரார்ப்பணம்) காப்பு _ கட்டுதல் (ரட்சா பந்தனம் ஆகிய கிரியைகள் செய்யப்பெறும்.

**மிருத் சங்கரணம்:** இதில் நதி தீர்த்தத்திலாவது, தீர்த்தக்குளத்திலாவது, பூந்தோட்டத்திலாவது,வேறு சுத்தமான இடங்களிலாவது விநாயகப் பெருமானைப் பூசித்து,எல்லாத் தடைகளையும் போக்குமாறு துதித்து வணங்கி உரியகிரியைகளால் பூதேவியையும் வணங்கி முளை வளர்க்கும் பொருட்டு மண் எடுத்து, யாக சாலைக்குப் பலி வாத்தியங்களுடன் கொண்டு போகப்படும்.

உத்சவம் என்ற சொல்லைச் சிறப்பு எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்,

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

(திருக்குறள் 18; வான்சிறப்பு. பா. 8) சிறப்பு என்பதற்கு விழா எனவும் பூசனைக்கு நித்திய நைமித்திய பூசைகள் எனவும் நித்தியத்தில் குறைகள் ஏற்படின் அவை நீங்கச் செய்வது நைமித்தியம் எனவும் உரை காண்கிறார் பரிமேலழகர்.

**அங்குரார்ப்பணம்:** இஃது எல்லா நற்(சுப) செயல்களிலும் முதற்கண் மங்களமான முளையை உண்டாகும்படிச் செய்து, வளரச் செய்வது. இச்செயலில் ஒரு மேடையின் நடுவில் ஒரு கும்பம் வைத்து, அதில் சந்திரனைப் பூசித்து, அக்கும்பத்தினைச் சுற்றியுள்ள 12 பாலிகைகளில் கொண்டு வந்த மண்ணை நிரப்பி அவற்றில் 12 சூரியர்கள் பூசிக்கப்பெறுவர். வைகர்த்தர், விவசுதர், ஆதித்தர், சூரியர், அம்புமாரி, திவாகரர், மார்த்தண்டர், பாசுகரர், இரவி, லோகப்பிரகாசர், லோக சாட்சி, திரிவிக்கிரமர் ஆகியோர் பன்னிரண்டு சூரியர்களாவர். பின்னர் ஒரு தூயபாத்திரத்தில் கடுகு, பயிறு, எள், உளுந்து, நெல், கொள்ளு, மொச்சை என்னும் ஏழு தானியங்களைச் சிவ பீசங்களாகப் பாவித்து, அர்ச்சித்து, பால் சேர்த்துப் பாலிகைகளில் ஆதாரசத்தியைப் பூசித்து, அவற்றைப் பாலிகைகளில் இட்டுச் சந்திர

கும்ப நீரால் நனைப்பர். பின்னர் நாள்தோறும் நீர்விட்டு நனைத்து வந்தால் தானியங்கள் முளைவிட்டு, முளை நன்றாக வளரும். முளைகள் முளைத்து நன்றாக இருப்பின் எல்லா நன்மைகளும் உண்டாகும். முளைகள் குறுகினவாய், அல்லது புகைநிறமாய் இருந்தால் உரிய சாந்தியைச் செய்து விழாவைத் தொடங்க வேண்டும். அங்குரார்ப்பணம் செய்யாது தொடங்கும் எந்தக் காரியமும் நல்ல பலனைத் தராது என்பர்.

## ரட்சாபந்தனம்

இது நாடு நன்மைகள் அடையவும் நாட்டின் தீமைகள் நீங்கவும் செய்யப்படுவது. காப்புக்கயிற்றில் ஆதாரசக்தி முதல் குண்டலினி சத்தி (சுத்தமாயை) வரை அர்ச்சித்து, உரிய மந்திரங்களால் சிவனைப் பூசித்துத் திருவிழாக்கள் குறிக்கும் ஐந்தொழிலையும் செய்யும் பாவனையாக உற்சவ மூர்த்திகளுக்குக் காப்புக்கட்டும்போது கலசமந்திரம் (ஆறு அங்க மந்திரங்களில் ஒன்று) ஓதி, காப்பாகத் திருநீறு அக்கயிற்றின் மேல் இடப்பெறும்.

## கொடிரிடப பூசை

கொடியேற்றத்திற்கு முந்திய நாளில் தூய வெள்ளைக் கொடித் துணியில் வரையப்பெற்ற இடபத் தேவருக்குச் சிறப்பான பூசைகள் செய்யப்படும். இதில் முக்கியமாகக் கண்திறத்தல் (நேத்திரான்மீயாசம்), நீரில் வசித்தல் (ஜலாதிவாசம்) உயிர் ஊட்டல் (சீவந்நியாசம்) என்ற மூன்று கிரியைகள் செய்யப்படும். இடபதேவரின் இரு கண்கள் சூரியனும் சந்திரனுமாவார். வரைந்த இடபதேவரின் கண்களில் தேனையும் நெய்யையும் குழைத்து உரிய மந்திரங்களைச் சொல்லிப் பூசுதல் கண்திறத்தல் ஆகும். கொடித்துணியில் வரையப்பட்ட இடபதேவரை நேராக நீரில் வைக்க முடியாது; ஆதலால் மந்திரிக்கப்பட்ட நீரையும் பஞ்சக்கவ்வியத்தையம் அதன் மேல்சிறிது தெளித்து ஒரு கண்ணாடியில் இடபதேவரின் உருவம் இருப்பதாகச் செய்து அவ்வுருவத்தின் மேல் மந்திர நீரையும் பஞ்சகவ்வியத்தையும் மெதுவாக ஊற்றுதல் சலாதிவாசம் ஆகும். சீவந்நியாசம் என்பது எல்லாவற்றிலும் முக்கியமான கிரியை. இதில் கொடித்துணி, கும்பம், அக்கினி ஆகிய மூன்றிலும் தனித்தனியே இடப தேவர் பூசிக்கப்பெறுவர். இப்பூசைகளில் 36 தத்துவங்களாகிய ஆசனம், தத்துவ அதிபதிகள், அதிட்டதேவதைகளான பிரம்மா, விட்டுணு, உருத்திரன் பரிவார தேவதைகளான (வித்தியேசுவரர்) எண்மர் ஆகியவர்கள் பூசிக்கப்பெறுவர். கொடித்துணி, கும்பம், அக்கினி ஆகிய மூன்றிலும் தனித்தனியே பூசிக்கப்பெற்ற இடபதேவர் சக்திகள் ஒன்று சேர்க்கப்படும். இக்கிரியைகள் ‘அதிவாசக்கிரியைகள்’ என்று சொல்லப்படும்.

## முதல்நாள் விழா

முதல் நாளன்று காலையில் கொடியேற்றம்(துவஜாரோகணம்) செய்யப்படும். இக்கிரியையில் கொடியிலும் நடுக்கும்பத்திலும் சுற்றியுள்ள எட்டுக் கும்பங்களிலும் அக்கினியிலும் இடப தேவருக்கு மீண்டும் பூசை செய்யப்படும். பின்னர்க்

கொடிமரத்தில் சதாசிவரை ஆவாகனம் செய்து, கொடிமரப் பூசை செய்யப்படும். ஆவாகனம் செய்வதற்கு முன் எல்லாத் தேவர்களும் அழைக்கப்படுவர். பின்னர் மங்கள வாத்தியங்கள் முழங்க, சிவாச்சாரியர் இடப மூல மந்திரத்தைச் சொல்லி (இடப மந்திரம்- ஓம் ஹாம் வீருஷ பாய நம: என்பது) கொடி உயரத்தில் உள்ள பலகை வரை ஏற்றப்பட்டு, அங்கு உறுதியாகக் கட்டப்படும். கொடியேற்றப் பயன்படுத்திய தர்ப்பைக் கயிறு கொடி மரத்தில் வலமாகச் சுற்றிக் கட்டப்படும். கொடிமரத்தின் அடிப்பகுதியில் இடபதேவர் (நடு) கும்பநீர் தெளிக்கப்பட்டுப் பின்னர்ச் சுற்றிலும் உள்ள எட்டு வித்தியேசுவரர் கும்ப நீரால் கொடிமரத்தின் அடியிலுள்ள தாமரை ஆசனத்தின் எட்டு தளங்களிலும் தெளிக்கப்படும். பின்னர் வாசனைப் பொருள்கள், நைவேத்தியம் முதலியன கொடுக்கக் கொடியேற்றம் நிறைவு பெறும்.

உற்சவத்தின் பத்து நாள்களிலும் இடபதேவர் பூசையும் கொடிமரப் பூசையும் செய்ய வேண்டும் என்பது விதி.

கொடிமரத்தின் அதிதேவதை சிவபெருமான். கொடிமரமே அமைப்பில் சிவலிங்கத்திற்குரிய அமைப்புகள் எல்லாவற்றையும் கொண்டு சிவலிங்கத் திருமேனியை ஒத்திருப்பது. எனவே கொடிமரம் சதாசிவரையும் அவருடைய ஐந்தொழில்களையும் குறிப்பதாக உள்ளது. கொடித்துணியில் எழுதப்பெற்ற இடபதேவர் உயிரை (ஆன்மாவை) உணர்த்துவது. தர்ப்பைக் கயிறு பாசமாகிய சுத்தமாயையை உணர்த்துவது. கொடிமரத்தில் இடப தேவர் ஏறுவது உயிர் குண்டலினி சத்தியாகிய சுத்தமாயையைத் துணைகொண்டு ஏனைய ஆதாரங்கள் வழியே முறையாக மேலே ஏறுவதைக் குறிப்பது. மேலே உச்சியில் உயிர் சிவத்துடன் சேர்ந்து பேரானந்த நிலையில் நிற்பதனை உணர்த்துவது கொடிமரத்தின் உச்சியில் இடபதேவர் திகழ்வது.

திருவிழா நடைபெறும் எல்லா நாள்களிலும், யாகசாலையில் யாகம் நடக்கும். சிவபெருமான் பல்வேறு வாகனங்களில் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் காலையிலும் உலாப் போந்தருள்வார். அவருடன் அம்பாள், கணேசர், சுப்பிரமணியர், சண்டேசுவரர் ஆகிய நால்வரும் உலா வருவர். இந்த ஐவரும் பஞ்ச மூர்த்திகள் என்று சொல்லப்பெறுவர். கோயில்களுக்கு நேரில்வந்து வழிபாடாற்றி நலம்பெற இயலாதவர்களுக்கும் கோயிலுக்கு வழிபாடாற்ற ஆற்றலும் வசதியும் இருந்தும் கோயிலுக்கு வரத் தயங்குகிறவர்களுக்கும் அருள்பாலிக்கும் நோக்குடன் இறைவன் பல்வேறு வாகனங்களில் உலா வருகிறார். முதல் நாள் விழா முதற்கொண்டு பத்தாம் நாள் விழா வரை பயன்படுத்தப்பெறும் வாகனங்கள், விழாவின் பயன் ஆகியவற்றைப் பின்வரும் அட்டவணையிற் காணலாம்.

| நாள் | வாகனம் | விழாவின் தத்துவம் | விழாவின்பயன் |
|---|---|---|---|
| | காலை இரவு | | |
| முதல்நாள் | மர அடிசேவை | மாயை வித்துப்போல, மரம், கிளைகள், இலைகள், மலர்கள், காய்கள், கனிகள் ஆகியவற்றிற்குக் காரணமாக இருப்பதை உணர்த்தி, பல்வேறு உலகுகள் உயிர்களுக்கு உடல்கள், கருவிகள், நுகர்ச்சிப் பொருள்கள் ஆகியவற்றை மாயையிலிருந்; தோற்றுவிக்குட படைத்தல் தொழிலை உணர்த்துவது. | உயிர் 24 ஆன்ம தத்துவங்களை விட்டு நீங்குதல் அதாவது பிரகிருதி மாயையை விட்டு நீங்குதல். இதைப் பிரகிருதி நடனம் என்பர். இந்நடனத் தால் தூல சூக்கும உறுப்புகள் நீங்கும். |
| இரண்டாம் நாள் | காலை—சூரிய பிரபை, மாலை சந்திரப்பிரபை | இறைவர் காணும் உயிர்களுக்கு வழி காட்டுபவர் என்பதைக் குறிப்பது. அஃதாவது இறைவர் உயிர்களுக்குப் பேரொளியாய் நின்று பேரறிவைத் (ஞானத்தை) தருவதை உணர்த்துவது. | ஞான்மே கன்மங்களைப் போக்குவது. இந்த விழாவின் பயன் கன்ம மல நீக்கம். பிறவித் துன்பங்களிலிருந்து காப்பதாயின் இது காத்தல் தொழிலைக் குறிப்பது இது வினை நீக்க நடனம். |
| மூன்றாம் நாள் | அதிகார நந்தி பூதவாகனம் | அதிகார நந்தி அருள்வரம் கொண்டவர். ஆதலின் அவர் சங்கார (அழிக்கச்செய்யும்) மூர்த்தியாவார். | இவ்விழா சங்காரத்தைக் குறிப்பது. இறைவர் படி முறையாக மண் முதலிய ஐந்து அண்டங்களில் |

| | | |
|---|---|---|
| | பூதவாகனம் 5 பூத அண்டங்கள் (மண், நீர், அனல், காற்று, ஆகாயம்) ஐந்து ஆகிய அண்டங்களையும் அழிக்கும் அயன், மால், உருத்திரர், மகேசன், சதாசிவன் ஆகிய ஐந்து காரணேசுவரரையும் குறிப்பது. | உள்ள உலகுகளில் உயிரை இருத்தி இறுதியில் பாச நீக்கம் செய்பவர் என்பதனை உணர்த்துவது. இவ்விழா உயிரானது பாசநீக்கத்திற்குத் துணைசெய்வது. |
| 4_ஆம் நாள் _ புருஷா மிருகம், ஐந்தலை நாகம் அல்லது கயிலாய வாகனம். | புருஷாமிருகம், மனிதர், விலங்கு ஆகியவற்றைப் பாசத்திற் செலுத்தும் மறைத்தற் சத்தியை குறிக்கும். ஐந்தலைநாகம் 5 சுத்த மாயா தத்துவ உலகுடன் உயிர்கள் ஆகியவற்றை இயக்குபவர் சிவபெருமானே என்பதை உணர்த்துவதாக இருப்பது இந்த விழா. கயிலாய விமானத்தின் அடியில் இராவணன் இருப்பது போல் அமைக்கப்பட்டிருக்கும். இஃது உயிர்களது ஆணவ மல நீக்கத்தைக் குறிப்பது. | இவ்விழாவின் பயன் மறைப்புச் சத்தியான (திரோதானசத்தி) உயிர்கள் பக்குவப்படுத்தப் பெற்று அவை மும்மல நீக்கமும் பெறும். |
| 5_ஆம் நாள் _ காலை; இலிங்காகாரப் பிரபை, இடபவாகனம் (மாலை) | இலிங்காகாரப் பிரபை இறைவரது சர்வ வியாபகத்தைக் (எல்லா அண்டங்களிலும் நிறைந்து அவற்றையும் கடந்து நிற்கும் பரிபூரண வியாபகத்தைக்) | இவ்விழா உயிர்கள் பேரறிவு பெற்றுப் பெரிய வியாபகத்தை அடைந்து நிற்பதற்குத் துணை செய்வது. அஃதாவது உயிர்கள் தமது பசுபோதம் ஒழிந்து |

| | | |
|---|---|---|
| | குறிப்பது. இடப வாகனம் இறைவனது பேரறிவு உயிர்களின் சிற்றறிவுக்கு மேம்பட்டு விளங்குவது என்பதை உணர்த்துவது. | சிவபோதம் பெற்று விளங்கத்துணை செய்வது. |
| 6–ஆம் நாள் – காலை; பல்லக்கு, மாலை; யானை வாகனம். | பல்லக்கு மறைத்தல் சத்தியையும் யானை வாகனம் பதஞானத்தையும் உணர்த்தி நிற்பன. | உயிர் மறைத்தல் சத்தியின் தொழிற்பாட்டில் பக்குவம் அடைந்து பரஞானம் பெற்று விளங்க இவ்விழா துணை செய்வதாக உள்ளது. |
| 7–ஆம் நாள் – காலை; திருத்தேர். (சில கோயில்களில் ஒன்பதாம் நாள் தேர்விழா கொண்டாடப்பெறும்) | சிவபெருமான் முப்புரங்களையும் அழிக்கச் சென்ற போது தேவர்கள் எல்லாரும் தேரின் பல்வேறு உறுப்பு களாகவும் வில், அம்புகளாகவும் அமையத் தேரில் ஊர்ந்து சென்றார். ஆனால் அத்தேவர்களின் துணையின்றிப் புன்முறுவ லால் முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கினார் என்பது வரலாறு. இவ்வரலாற்றால் சிவபெருமான் எல்லா உயிர்களிலும் நின்று அவர்களைத் தொழிற் படுத்துபவர். ஆயினும், அவர்களுக்கு வேறாக அப்பாற்பட்டு நிற்பவர் என்பது உணரப்பெறும். | உயிர்களைப் பிணித்து நிற்கும் மும்மலங்களின் (ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றின்) காரியங்களே முப்புரங்கள் என்பர் திருமூல தேவநாயனார். எனவே முப்புரங்களை அழித்தல் என்பது உயிர்களின் மும்மலங்களையும் போக்குவ தன்றி வேறன்று. தேர் விழா உயிர்களது மும்மல நாசத் திற்குத் துணைபுரிவது. |

| | | |
|---|---|---|
| 8-ஆம் நாள் - மாலை: குதிரை வாகனம் | இறைவர்க்கு வேதமே குதிரையாக அமைவது. வேதத்தைத் தோற்றுவித்து அதன் உட்பொருளாய் வேதத்திற்கு அப்பாற்பட்டு விளங்குபவர். | வேதங்களால் பெறப்படும் ஞானம் அபர ஞானம் (கீழான ஞானம்) என்று சொல்லப்படும். சிவ பெருமான் திரு அருளாகிய சிவ ஞானத்தாலே அறியப் பெறுபவர்; சிவஞானம் பர ஞானம் எனப்படும். பரஞானத்தைப் பெறத் துணை செய்வது குதிரை வாகனவிழா. |
| 9-ஆம் நாள் இரவு: பிட்சாடன கோலத்தில் உலா வருதல். | சிவபெருமான் பிட்சாடனர் கோலத்தில் தாருகாவன முனி பத்தினிகள் முன் கையில் கபாலம் கொண்டு பிச்சை ஏற்றுச் சென்று முனிபத்தினிகளுக்கும் முனிவர்களுக்கும் சிவஞானம் அருளிச்செய்தார். | பிச்சை ஏற்றல் என்பது உயிர்களது சிற்றறிவாகிய ஆன்ம அறிவைத் (சீவ போதத்தை) தாம் ஏற்றுக் கொண்டு அவர்களுக்குச் சிவஞானத்தை (சிவ போதத்தை) அருள்வதைக் குறிப்பது. உயிர்களது சிற்றறிவு நீங்கவும் பேரறிவாகிய சிவஞானம் பெறவும் துணைசெய்வது இப்பிட்சாடன மூர்த்தி விழா. |
| 10-ஆம் நாள் காலை : திருநடனப் பாவனை; திருக்கல்யாணம். | சிவபெருமான் பல்வேறு காலங்களில் பாண்டரங்கம், | சிவபெருமான் நடனம் செய்தது உயிர்களின் பாசங்களை |

| | |
|---|---|
| கொடுகொட்டி சந்தியா, சண்டம் போன்ற பல நடனங்களும் ஆடினார் என்பதனை உணர்த்துவது நடன பாவனையோடு உலாவரச்செய்யும் காட்சி. இறைவர் தமது திரு அருளாகிய சத்தியுடன் நின்று இம்மை மறுமை இன்பங்களைத் தருவார் என்பதனை உணர்த்துவது திருக்கல்யாணம். | நீக்குதற்கும் அவ்வுயிர்களுக்குப் பேரின்ப முத்தி (சிவப்பேறு) அருள்வதற்குமேயாம். எனவே பாச நீக்கமும் சிவப்பேறும் பெறத் துணை செய்வது இந்தத் திருவிழா. சிவ பெருமான் உயிர்களுக்கு இவ்வுலக இன்பங்களைத்தந்து அவ்வுயிர்களைப் பாசத்திற் செலுத்துவதாம். அவ்வாறு செலுத்திப் பாச நீக்கம் செய்து பின்னர்ப் பேரின்ப முத்தியை உயிர்களுக்கு அருள்பவர் ஆதலின், திருக்கலியாண விழாவும் பாச நீக்கம், சிவப்பேறு ஆகிய இரண்டையும் பெறத் துணை செய்வது. |

இவ்விழாக்களுக்குப் பின், கொடி இறக்கப்பட்டு உற்சவம் முடிவுறும்.

## வாகனங்கள்

வாகனங்கள் பொதுவாக மரத்தினால் செய்யப்படுகின்றன. முருங்கை, அத்தி, இலுப்பை, மா, விலங்கம் போன்றவை வாகனம் செய்ய சிறந்த மரங்களாம். பீடம் (அடிப்பலகைக் கால்கள்) தேக்கு, இலுப்பை மரங்களால் செய்யப்படுகின்றன. இம்

மரங்கள் தண்ணீர் பட்டால் எளிதில் வலுவிழக்காமலும் தூக்குவதற்கு எளிதாகவும் இருக்கும். முதல் முறையில் உருவத்தைச் செதுக்கிக் கொண்டு அதன் மீது புளியங்கொட்டை, மரத்தூள் போன்றவற்றினால் ஆன மரக்கூழைத் தடவிச் சந்து தெரியாமல் மூடி அழகுபடுத்தி அதன்மீது பலவகை வண்ணங்களைத் தீட்டி அழகுபடுத்துவர். வாகனங்களின் முதுகுப்புறத்தில் இறைவன் எழுந்தருள ஒரு பீடம் இருக்கும். மரங்கள் வாகனமானால் அதன் அடியில் இறைவன் இருக்கவும் பீடம் இருக்கும்.

சில வாகனங்கள் சிறந்த முறையில் செய்யப்பட்ட பித்தளைத் தகட்டில் நகாசு வேலை செய்யப்பட்டு மூடப்பட்டிருக்கும். இவை உற்சவத்திற்கு முன் தேய்த்து மெருகிட்டால் பளபளப்புடன் விளங்கும். வெள்ளித் தகட்டால் வாகனங்களுக்குக் கவசமிட்டு வெள்ளி வாகனங்கள், செய்யப்படுவதும் உண்டு. சில சமயம் செப்பினால் செய்து வெள்ளி அல்லது தங்க முலாம் பூசுதலும் உண்டு. தங்கத்தகட்டில் நகாசு வேலை செய்து வாகனங்களை மூடுவதும் உண்டு. இவை தங்க வாகனம் எனப்படும். இவை அளவில் சிறியவையாக இருக்கும்.

# வைணவக் கோயில்களில் பூசைகளும் திருவிழாக்களும்

வைணவக் கோயில்களில் பூசைகளும் திருவிழாக்களும் வைகானசம் பாஞ்சராத்திரம் ஆகிய இவ்விரு ஆகமங்களுக்கேற்ப நடைபெறுகின்றன.

கோயிலிலுள்ள திருவுருவங்களில் திருமால் அவதாரம் கொள்கிறார் என்னும் கோட்பாட்டில் ஒழுங்காக நாள்பூசைகளும் குறிப்பிட்ட நாள்களில் சிறப்புப் பூசைகளும் நடைபெறுகின்றன.

நாள்பூசைகளுள் முதல் பூசை காலையிலும் இரண்டாம் பூசை நண்பகலிலும் மூன்றாம் பூசை மாலையில் சூரியன் மறைவிற்கு முன்னும் நான்காம் பூசை இரவு எட்டுமணிக்கும் கடைசிப்பூசை இரவு 9 மணிக்கும் நடைபெறுகின்றன. இப்பூசைகளுள் மிக முக்கியம் வாய்ந்தது காலைப் பூசையாகும். இக்காலைப் பூசையில் ஆறு அங்கங்கள் உள்ளன. இவற்றுள் முதலாவதாகவுள்ளது "மந்தராசனம்". இஃது இறைவனை வரவழைப்பதாகும். "ஸ்நாக ஆசனம்" இதில் தெய்வத் திருவுருவத்திற்குத் திருமஞ்சனம் செய்யப்படுகிறது. இது புனித நீராட்டாகும். மூன்றாவதாக "அலங்காராசனம்". இதில் திருவுருவத்திற்கு உடை, அணிகலன்

ஆகியவற்றால் திருவுருவம் அலங்காரம் செய்யப்படுகிறது. நான்காம் ஆசனம் "போசாசனம்". இதில் தெய்வத்திற்கு அன்னம் படைக்கப்படுகிறது. ஐந்தாவதாகவுள்ளது "மந்திரப்புஷ்பாசனம்". இதில் இறைவனுக்குப் பூக்களால் அருச்சனை செய்யப்படுகிறது. இஃது ஏறத்தாழப் பதினைந்து நிமிடநேரம் நிகழ்த்தப் பெறுகிறது. அப்போது துளசி வழங்கப்பெறுகிறது.

அடுத்து மிக முக்கியமானது, பலர் ஒன்று கூடி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களைப் பாடுவதாகும். இது பூசை முழுவதும் நிறைவுபெறும் வரையில் நிகழும். குறிப்பிட்ட நேரங்களில் தெய்வத்திற்குத் தீர்த்தமும் பிரசாதமும் படைத்தல் பூசையின் முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும். இவை உதய காலமாகிய காலையிலும் உச்சிக்காலமாகிய நண்பகலிலும் இரவு நேரமாகிய அர்த்த சாமத்திலும் படைக்கப்பெறுகின்றன. இவை அமுது, பிரசாதம், தளிகை என்னும் பெயர்களில் குறிப்பிடப்படும். மாதப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி ஆகியவை போன்ற நாள்களில் உற்சவமூர்த்தி, வடமொழிச் சுலோகங்களும் தமிழ்ப் பிரபந்தங்களும் பாடப்பெறும் முறையில் இசைக்கருவிகள் முழங்க உலாவருவார்.

## திருவிழாக்கள்

ஆண்டுதோறும் நடத்தப்பெறும் உற்சவங்களில் மக்கள் திரளாகக் கலந்துகொண்டு வழிபாடாற்றுவது, அவர்களது சமய உணர்வைக் காட்டுகிறது. உற்சவத் திருமேனி ஆடை அணிகலன்களால் அழகிய முறையில் அலங்காரம் செய்யப்பெற்று, சத்திரம் என்னும் பெரிய குடை, வெண்சாமரம் ஆகியவற்றுடன் குதிரை, யானை, சிங்கம், அன்னம் முதலிய வாகனங்களில் அமர்த்தப்பெற்று நகரின் முக்கியமான வீதிகளில் உலாவரும்போது பலர் ஆங்காங்கே வழிபட்டு மகிழ்வர். முன்புறம் புனிதக்கொடி உயரத்தில் விளங்க, அதன்பின் இசைக்கருவிகள் முழங்கும். அடுத்து, இசைக் குழுவினர் ஒருமிக்க இசை பாடிச் செல்வர். இவர்கள் பிரபந்தங்களைப் பாடிச் செல்வர். தெய்வத்திருவுருவத்திற்குப் பின்புறம் வேதபாராயணக் குழுவினர் வேதம் ஓதிக்கொண்டு வருவார்கள்.

மாதந்தோறும் குறிப்பிட்ட நாள்களில் குறிப்பிட்ட உற்சவங்கள் நடைபெறும். சித்திரை மாதப்பிறப்பு நாளிலும் சித்திரைப் பௌர்ணமி நாளிலும் உற்சவம் நடைபெறும். வைகாசி மாதத்தில் பிரமோற்சவத்தின் பத்துநாள்களிலும் பலவகை வாகனங்களில் உற்சவர் உலாவருவார். ஆனி மாதத்தில் கோடை உற்சவமும் ஆடிமாதத்தில் ஆடிப்பூர உற்சவமும் ஆவணி மாதத்தில் பவித்திரோற்சவமும் புரட்டாசியில் நவராத்திரி விழா பத்துநாள்களும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகைத் தீபவிழாவும் மார்கழியில் வைகுண்ட ஏகாதசியை உள்ளிட்ட அத்தியாயன உற்சவமும் தை மாதத்தில் பரிவேட்டை உற்சவமும் பங்குனி மாதம் உத்திரத் திருவிழா உற்சவமும் நடைபெறுகின்றன. சில கோயில்களில் இவ்விழாக்கள் முன்பின்னாக நடைபெறும்.

இத்திருவிழாக்கள் அந்த அந்தத் தலத்திற்கு ஏற்றவாறு பருவகாலங்களைக் கணக்கிட்டு நடத்தப்பெறும். எடுத்துக்காட்டாக வேளாண்மையில் ஈடுபடுவோர்

பங்குகொள்ள இயலுமாறு அவர்களது ஓய்வுக் காலமாகிய வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடத்தப்பெறுகிறது. குளங்களில் நீர் நிறைந்திருக்கும் மாதத்தில் தெப்போற்சவம் நிகழும்.

## விழாக்களின் தத்துவங்களும் பலவகை விழாக்களும்

கோயில்களுக்கு நேரில் வந்து வழிபாடாற்றி நலம்பெற இயலாதவர்களுக்கும் கோயிலுக்கு வந்து வழிபாடாற்ற ஆற்றலும் வசதியும் இருந்தும் கோயிலுக்கு வரத் தயங்குகிறவர்களுக்கும் அருள்பாலிக்கும் நோக்குடன் இறைவன் பொருத்தமான வாகனங்களில் உலா வருகிறார். இவ்வாகனங்கள் குணங்களையும் குறிக்கின்றன. அன்னம், மயில் போன்றவை சத்துவகுணத்தைக் குறிக்கின்றன. யானை, குதிரை முதலிய வாகனங்கள் இராசச குணத்தையும் பூதம் போன்றவை தாமத குணத்தையும் இடப வாகனம் போன்றவை ஞானத்தையும் குறிப்பிடுகின்றன.

கொடியேற்றிய நாள் முதல் பத்து நாள்கள் நிகழும் திருவிழாக்கள் தனித்தனித் தத்துவங்களை உணர்த்துகின்றன. முதலில் கொடியேற்று விழா, மும்மலங்களிலே மூழ்கிக் கிடக்கும் உயிர் அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ள அருளை நாடுவதைக் குறிக்கிறது. பஞ்சாட்சரத்தினால் வீடுபேற்றை அடைவிப்பதைக் காட்டுவது கொடியேற்று விழா.

ஒரு நாள் சிதம்பரத்துத் திருவிழாவின்போது கொடியேற்ற அங்கிருந்தவர் முயன்றபோது கொடி ஏறவில்லை. அப்போது உமாபதி சிவம் வருவார் எனில் கொடி ஏறும் என்னும் வாக்கு வானிலிருந்து வெளிவந்தது. இந்நிலையில் உமாபதி சிவம் கொடியேற்றத்திற்காகக் கொடிக்கவி பாடினார். இதற்கேற்பக் கொடி ஏறிற்று. கொடி பஞ்சாட்சரத்தைக் காட்டுகிறது என்பதை,

"அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து - நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி"

என்னும் இப்பாடல் தெரிவிக்கிறது.

"கொடியேற்றிய முதல்நாள் விழா தூல உடம்பை நீக்குவதற்காகவும் இரண்டாம் நாள் விழா தத்துவமயமான உடம்பு நீங்கும் பொருட்டும் மூன்றாம்

நாள் விழா மூவினை, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று முதலியன நீங்குவதற்கும் நான்காம் நாள் விழா நாற்கரணம் நால்வகைத் தோற்றம் நீங்கவும் ஐந்தாம் நாள் விழா ஐம்பொறிகள், ஐந்தவத்தை, ஐந்து மலங்கள் நீங்கவும் ஆறாம் நாள் விழா உட்பகை ஆறும் கலைகள் ஆறும் கன்மகுலம் ஆறும் பதமுத்தி ஆறும் நீங்கவும் ஏழாம்நாள் விழா எழுவகைப்பிறப்பும் எழுவகைத் தத்துவங்களாகிய மலகுணமேழும் நீங்குதற்பொருட்டும் எட்டாம் நாள் விழா எண்குணங்கள் விளங்கவும் ஒன்பதாம் நாள் விழா மூவடிவும் முக்கிருத்தியும் மூவிடத்து உறைதலிலை என்றற் பொருட்டும் பத்தாம் நாள் விழா சிந்தையும் மொழியும் செல்லா நிலைத்தாய் அந்தமில் இன்பத்தழிவில் வீடான பரமானந்தக் கடலில் அழுந்துதற்பொருட்டும் செய்யப்படுவன" என மகோற்சவ விளக்க நூல் தனித்தனியாக விளக்கிக் காட்டியுள்ளது.

சில மாவட்டங்களின் பெருவிழாக்களில் பயன்படுத்தப் பெறும் வாகனங் களைப் பொறுத்தவரையில் ஒழுங்குமுறை கையாளப்படுகின்றது. சிவன் கோயில்களில் பத்து நாள் விழா கொடியேற்றத்துடன் நிகழ்த்தப்பெறுகிறது. முதல் நாள் இரவு சிங்கவாகனம், இரண்டாம் நாள் காலையில் சூரியபிரபை, இரவு சந்திரபிரபை, மூன்றாம் நாள் காலை அதிகார நந்தி, இரவு பூதன் பூதகி, நான்காம் நாள் காலையில் அன்னம், இரவு நாக வாகனம், ஐந்தாம் நாள் காலை யாளி வாகனம், இரவு இடப வாகனம், ஆறாம் நாள் காலையில் (விலங்கின் ஒரு பகுதி உடலும் மாந்தரின் ஒரு பகுதி உடலும் கொண்ட புருஷாமிருகம்; இரவு யானை வாகனம், ஏழாம் நாள் தேர்; எட்டாம் நாள் காலை விமானம்; இரவு குதிரை, ஒன்பதாம் நாள் காலை விமானம்; இரவு இராவணேசுவரன் வாகனம்; பத்தாம் நாள் இரவு கொடியிறக்கமும் இரவு இடபவாகனக் காட்சியும் நடைபெறும். சில இடங்களில் காலையில் புறப்பாடும் வாகனங்களும் மாறி மாறியும் இருந்தாலும் இரவு உற்சவங்கள் மேற்குறித்த வாகனங்களோடேயே நடைபெறும்.

சிவன் கோயில்களில் சோமாசுகந்த மூர்த்தியே பெரும்பாலும் உற்சவ மூர்த்தியாக இருப்பதால் பஞ்ச மூர்த்திகள் எனப்படும் விநாயகர், முருகன், சிவபெருமான், அம்பிகை, சண்டேசுவரர் ஆகிய ஐவர் உடன் எழுந்தருள்வர். காலப்போக்கில் சோமாசுகந்தர் அம்பிகை மட்டும் எழுந்தருள்வதும் உண்டு. அவ்வாறு எழுந்தருளும்போது துணை வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சிவபெருமான் அதிகார நந்தியில் வரும்போது அம்பிகை காமதேனுவிலோ, கந்தர்வ கன்னியிலோ, முருகன் ரிஷியிலோ வருவர். இறைவன் பூதத்தின் மீதும் இறைவி பூதகி மீதும் முருகன் தாரகாசூர வாகனத்திலும் வருவர். இறைவி கிளி, பத்மம் போன்ற வாகனங்களிலும் வருவர்.

முருகன் திருக்கோயில்களில் பொது வாகனங்கள் தவிர ஆட்டுக்கடா, ஐராவதம், மயில், புலி போன்ற வாகனங்களும் உள்ளன. திருமால் கோயில்களில் கருடன், அனுமான் போன்றவை சிறப்பு வாகனங்களாகும். புன்னை விருட்சம், பல்லக்கு போன்ற வாகனங்களும் உள்ளன. சிறு தெய்வம் சக்திக் கோயில்களில் சிங்கம் தலைசிறந்த வாகனமாகவுள்ளது. தலபுராணங்களையொட்டித் தலவிருட்சங்களையும் வாகனமாக வடித்து அவற்றினடியில் இறைவனை

எழுந்தருள்வித்து உலா செய்வித்தல் மரபு. திருக்கழுக்குன்றத்தில் கதலி விருட்சம் என்னும் வாழைமர வாகனமும், காஞ்சிபுரத்தில் வெள்ளி மாவடி சேவையும் பல இடங்களில் கற்பக விருட்சமும் மயிலையில் புன்னை விருட்சமும் திருவிடந்தை முதலிய வைணவத் தலங்களில் புன்னை விருட்சங்களும் முருகன் கோயில்களில் கடம்ப விருட்சமும் வாகனங்களாக விளங்குகின்றன. விநாயகர் கோயில்களில் பெருச்சாளி வாகனம் சிறப்பிடம் பெற்றுள்ளது.

விமானங்களில் வெள்ளியாலான விமானம் கபாலீசுவரர் கோயிலில் உள்ளது. ஏறத்தாழ 130 பொம்மைகளைக் (முனிவர்கள், காமதேனு, கந்தருவர்) கொண்ட இந்திர விமானம் திருவான்மியூர் கோயிலில் உள்ளது. இது மரச்செதுக்கு வேலையிலுள்ள உயர்ந்த கலைப்படைப்பாகும். இது மேலும் அயல்நாட்டுக் கண்ணாடிச் சரங்கள் இரச குண்டுகள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மரங்களில் செய்து அதன் மீது தங்க வண்ண ரேக்குகளால் வனையப்பட்டுள்ளது. இதிலுள்ள பிரமதேவர், மூன்று குதிரைகள், எட்டுத்திக்குப் பாலகர்கள் ஆகியோர் வடிவங்கள் சிறந்தவை ஆகும்.

மயிலைக் கபாலீசுவரர் கோயிலில் வெள்ளி இடபம், வெள்ளி அதிகார நந்தி ஆகிய வாகனங்களும் தங்கமுலாம் பூசப்பெற்ற இடபம் போன்றவையும் சைதாப்பேட்டை செங்குந்த கோட்ட முருகன் கோயிலில் வெள்ளி மயில், கந்த கோட்டத்தில் தங்கமுலாம்பூசிய தங்கவாகனங்களும் கருமாரியம்மன் கோயிலில் வெள்ளிச் சிங்கம் வாகனமும் முண்ட கண்ணியம்மன் கோயிலில் வெள்ளிச் சிங்க வாகனமும் பார்த்தசாரதி கோயிலில் வெள்ளி, தங்கமுலாம் பூசப்பட்ட கருட வாகனங்களும் சிறந்தவையாகும். திருவிடந்தைக் கோயிலில் யானைத் தந்தத்தினால் நுண்மையாகச் செதுக்கப்பட்ட அநேக பொம்மைகளையுடைய பல்லக்கு உள்ளது.

இதைத்தவிர கோயிலில் சிறு வாகனங்களும் உள்ளன. பிரதோட காலங்களில் உலாவரச் சிறு இடபவாகனங்களும் நவராத்திரி போன்ற நாட்களில் அலங்கரிக்கச் சிறு குதிரை, யானை, அன்னம் போன்றவையும் இருக்கின்றன. கபாலீசுவரர் கோயில் வெள்ளி எலி வாகனம் சிறப்புடையது.

வாகனத்தில் தலை, கால்கள், வால் போன்றவற்றை இணைக்கும் முறையை அல்லு பிடித்தல் என்பர். துண்டுத் துணிகளையொட்டி, மாவு, லப்பம் போன்றவற்றைப் பூசி இணைப்புத் தெரியாமல் மூடிச் சமப்படுத்துவர். அத்தி, இலுப்பை மரங்களில் செதுக்கி அதன்மீது தங்க ரேக்கு எனப்படும் ரேக்கு சரிகைத் தாளை ஒட்டித் தங்கப்பால் வண்ணத்தைப் பூசி மெருகுக் கல்லால் தேய்த்து ரேக்கு விளிம்பு தெரியாமல் பளபளப்பாக்கி வைப்பர். இது முறையாகப் பராமரிக்கப்பட்டால் 2 ஆண்டுகள் வரை நிறம் மங்கிவிடாமல் இருக்கும். இவை தங்கப்பால் வாகனங்கள் எனப்படும்.

சில வாகனங்கள் சிறந்த முறையில் செய்யப்பட்ட பித்தளைத் தகட்டில் நகாசு வேலை செய்யப்பட்டு மூடப்பட்டிருக்கும். இவை உற்சவத்திற்கு முன் தேய்த்து மெருகிட்டால் பளபளப்புடன் விளங்கும். வெள்ளித் தகட்டால் வாகனங்களுக்குக்

கவசமிட்டு வெள்ளி வாகனம் செய்யப்படுகிறது. சில சமயம் செம்பினால் செய்து வெள்ளி அல்லது தங்க முலாம் பூசுதலும் உண்டு.

தங்கத்தகட்டில் நகாசு வேலை செய்து வாகனங்களை மூடுவதும் உண்டு. இவை தங்க வாகனம் எனப்படும். அவை அளவில் சிறியவையாக இருக்கும்.

வைணவ மரபில் சுவாமியைத் தோளில் தூக்கி வரப் பயன்படும் படிச்சட்டத்தைத் "தோளுக்கினியான்" என்ற உயர்திணைப் பெயரில் குறிப்பர். எடுக்க உபயோகிக்கும் தண்டுகளைத் 'திருஆழ்வான் தண்டு' என்பர். சைவக் கோயில்களில் பிரம்ம தண்டு என்பர். இத்தண்டுகள் ஆலமர விழுதில் செய்யப்பட்டு வேப்பெண்ணையில் ஊறவைக்கப்பட்டுப் பூண்கட்டி நடுவில் இரும்புச் சட்டங்களால் இணைக்கப்படும். இவை பல காலம் பளுவைத் தாங்கும் தன்மையும் எளிதில் உடையாமல் வளைந்து கொடுக்குந் தன்மையும் உடையவை. பீடங்களில் அழகுடன் எட்டு யானைகள், மலைகள், நாகங்கள் தேவதைகள் ஆகியவற்றைச் செதுக்கி வைப்பர். வாகனத்தைத் தூக்கிச் செல்லும் போது ஒலிக்கச் சிறுமணிகள் சதங்கைகள் கோர்த்து வைப்பர். அவை எடுத்துச் செல்வோர் செய்யும் அசைவுகளால் இனிய நாதம் எழுப்பும்.

## 2. சிறப்பு விழாக்கள்

ஆகம விதிகளுக்கேற்பப் பெருவிழாக்களுள் உயர்விழாவான அதிகார நந்திசேவை மிகச் சிறப்பாகத் திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் கோயிலில் மூன்றாம் நாள் காலையிலும் கபாலீசுவரர் கோயிலில் மூன்றாம் நாள் காலையிலும் அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் கோயிலில் மூன்றாம் நாள் காலையிலும் நடைபெறுகின்றன. இடபவாகனக் காட்சி மேற்கண்ட மூன்று கோயில்களிலும் நடைபெறுகின்றன. ஐந்தாம் நாள் இரவு, திருமணக்காட்சியும் நடைபெறுகிறது. கபாலீசுவரர் கோயிலில் வெள்ளி இடபவாகனக் காட்சி மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

கபாலீசுவரர் கோயில் அறுபத்துமூவர் விழா தமிழ்நாடு அளவில் மிகச் சிறப்பானது ஆகும். இவ்விழாவில் திருமயிலையிலுள்ள திருவள்ளுவர் திருவுருவமும் அறுபத்து மூவர் திருவுருவங்களோடு வீதி உலா வருகிறது. பாடியிலுள்ள இடபவாகனமே உயர்ந்ததாகும். இவ்விழா இப்போது சாதாரணமாக நடைபெறுகிறது.

**கருடசேவை:** மாநில அளவில் பெரியவை காஞ்சி கருடசேவையும் திருத்தேருமாகும். எண்ணற்ற பசனைக் கூட்டத்தார் இவ்விழாவில் கலந்து கொள்கிறார்கள். ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொள்ளும் ஊர்வலத்தை உடையது இவ்விழாவாகும்.

மதுராந்தகம் தேர்விழாவும் மிகப்புகழ் பெற்றதாகும்.

**மயானக் கொள்ளை:** பழந்தமிழர் காளி வழிபாட்டின் இயல்பில் தோன்றிய அங்காள பரமேசுவரி மயானக்கொள்ளை உற்சவம் கூவத்தூரில் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. "குந்தினாளாம் கூவத்தூர்" என்றபடி உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் அங்காள பரமேசுவரி மயானக் கொள்ளைக்குப் புறப்பட்டு அங்குக் கொள்ளையிட்டு மயான வீரனைச் சிதைத்து விட்டு வருவது பெரிய விழாவாகும்.

**புட்பக்காவடிப் பெருவிழா:** திருத்தணிகை முருகப்பெருமானுக்குப் பூக்காவடி எடுக்கும் வழக்கம் இருந்துவருகின்றது. ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் காவடிகளில் பூக்களைக் கொண்டுவந்து செலுத்தும் வழக்கம் ஆடி மாதம் ஐந்தாம் நாளில் நடைபெறுகிறது. இது மாவட்ட அளவிலான விழாவாகும்.

**மகாகந்தர்சட்டி விழா:** மயிலைச் சிங்கார வேலர் சந்நிதி, காஞ்சி குமரகோட்டம், திருப்போரூர் கந்தகோட்டம் ஆகிய இடங்களில் கொடியேற்றப்பட்டு விழாக்கள் இறுதியில் சூரனை வெல்லும் காட்சி நடைபெறும். திருப்போரூரில் மூங்கிலால் செய்யப்பட்டுத் துணிகளால் அலங்கரிக்கப்பட்ட ஏறத்தாழ மூன்று மீட்டர் உயரமுடைய சூரன் உருவங்களில் ஆண்கள் புகுந்துகொண்டு தாளத்திற்கேற்ப நடம்புரிதல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

**திருவோணதீபங்கள்:** மலை வையாவூர் வெங்கடாசலபதி கோயிலிலும் கூவத்தூர் ஆதிகேசவப் பெருமாள் கோயிலிலும் திருவோண நாட்களில் அபிடேக ஆராதனையும் தீபம் ஏற்றி வழிபடுதலும் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றன.

**இலட்ச தீபங்கள்:** 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை இலட்ச தீபம் மிகச்சிறப்பாக மயிலைக் கபாலீசுவரர் கோயிலிலும் திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் கோயிலிலும் நடைபெறுகின்றன. குறிப்பாகத் திருக்கழுக்குன்றத்தில் சிவலிங்க தீபம், இடபதீபம், பதும தீபம் முதலியவையும் மலையையும் கோபுரங்களையும் மின்விளக்காலும் கணக்கற்ற அகல் விலக்குகளாலும் அலங்கரித்துப் பஞ்சமூர்த்திகள் எழுந்தருள்வதும் மிக அழகியதாகும்.

**சங்கு உற்பத்தி:** 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருக்கழுக்குன்றம் சங்குத் தீர்த்தத்தில் சங்கு உற்பத்தியாகும். அந்நாள் விழாவாகப் பெரிய அளவில் நடைபெறும். இவ்வாறு எடுக்கப்பட்ட சங்குகள் ஒரே அறையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அன்பர்கள் விரும்பினால் அவற்றைக் காணலாம்.

**நவராத்திரி விழா:** மயிலைக் கற்பகாம்பாள் சந்நிதியில் ஒன்பது நாட்களும் விதவிதமான அலங்காரங்களுடன் அன்னை கொலு வீற்றிருக்கிறார். இது கலைவிழாவாகச் செங்கற்பட்டிலும் மயிலை முண்டகக் கண்ணியம்மன் கோயிலிலும் நடைபெறுகிறது. காஞ்சி காமாட்சியம்மன் கோயிலிலும் வரதராசர் கோயிலிலும் இந்நாட்கள் சிறப்பாக விளங்குகின்றன.

நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை அனந்த சரக தீர்த்தத்தில் அமிழ்ந்திருக்கும் காஞ்சி வரதராசப் பெருமாளை வெளியே எடுத்து 43 நாட்கள் மண்டல காலப்

பூசை செய்வித்து மீண்டும் அவரை நீரினுள் இடுகின்ற விழா தமிழ்நாடு தழுவிய பெருவிழாவாகும்.

**ஆடல் விழா:** ஐந்து சபைகளில் ஒன்றான திருவாலங்காடு இரத்தின சபேசருக்குத் திருவாதிரைப் பெருவிழா நடைபெறும். தியாகராசர் வீற்றிருக்கும் திருவொற்றியூர், திருக்கச்சூர், திருவான்மியூர் முதலிய இடங்களில் நடன உற்சவம் நடைபெறும். மாலைகள் ஆடாமல் கட்டாத தண்டில் எட்டி நின்றாடும் மூர்த்தி என்றவாறு கண்ணைக் கவரும் நடனநிகழ்ச்சி நடைபெறும். திருவான்மியூர்த் தியாகருக்கு ஆடும் தியாகர் என்னும் பெயரும் திருவொற்றியூர்த் தியாகருக்கு அசையும் தியாகர் என்னும் பெயரும் திருவான்மியூர் நடனம் சுழன்றாடும் நடனம் என்றும் திருவொற்றியூர் நடனம் குதித்துக் குதித்துக் கோழி செல்வது போல் செல்வதனால் குக்குட நடனம் என்றும் வழங்கப்பெறுகின்றன. திருவாதிரையன்று ஊஞ்சலில் வீற்றிருக்கும் அம்பிகைக்குத் திருவான்மியூர்த் தியாகர் 18 தாண்டவங்களை ஆடிக் காட்டுவதும் பங்குனி உத்திர நாளில் வால்மீகி முனிவருக்கு 18 நடனங்களை ஆடிக்காட்டுவதும் பேரழகுக் காட்சியாகும்.

**சடல், உரல், வண்டி இழுத்தல்:** நூற்றுக்கணக்கான வேல்களைக் குறுக்கும் நெடுக்குமாக உடலெங்கும் ஊசிகளைப்போல் பாய்ச்சிக் கொள்ளுதல், உரலுக்கு இருபுறமும் அச்சிட்டு அதனை முதுகில் ஒரு கொக்கி மாட்டி இழுத்தல், முதுகிலும் தோளிலும் கனத்த இரும்புக் கொக்கிகளை மாட்டி அதில் சிறுதேரைப் பொருத்தி இழுத்தல் ஆகியவை கிராமப்பகுதிகளில் பக்தியின் உச்சநிலையைக் காட்டுகின்றன. கொக்கிகளைக் கையிலும் காலிலும் குத்தி அந்தரத்தில் தொங்கவிடும் பிரார்த்தனைக் காட்சிகளும் நடைபெறும். அழிஞ்சூர் எட்டியம்மன் விழா, எலப்பாக்கம் பாலமுருகன் ஆலச்சித்திரைக் கிருத்திகை விழா, பெருங்கருணை பங்குனி உத்திர விழா ஆகிய நாட்களில் இத்தகைய வீரக்காணிக்கை விழாக்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

**ஆற்றுவிழா:** பெருநகர்க் கிராமத்தில் செய்யாற்றில் பதினான்கு ஊர்களின் சுவாமிகள் கலந்து கொண்டு பதினான்கு இடபவாகனங்களில் எழுந்தருளிக் காட்சியளிக்கின்றனர். பெருநகர் பிரம்மபுரீசுவரர் எழுந்தருளியதும் நிலவு உச்சிக்கு வரும்போது தீபாராதனை தைப்பூச விழாவில் நடைபெறும்.

பாலியாறு என்கிற சுவம் ஆற்றில் திருவேற்காடு இறைவன் சித்திரைப் பௌர்ணமியன்று காட்சியளிக்கும் திருவூறல் விழாவும் அகத்தியருக்குத் திருமணக்கோலக் காட்சியளிக்கும் விழாவும் நடைபெறுகின்றன.

மாசி மகத்தில் பெரும்பேறு முருகன், ஆற்றுக்குச் சென்று இரவில் எடையாளம் என்னும் கிராமத்தில் சந்தித்துச் செல்லும் விழாவும் சிறப்பானதாகும்.

**கடலாட்டு விழா:** மாசியில் வரும் மக நட்சத்திரத்தில் பல்வேறு ஊர்களிலிருந்து வரும் மூர்த்திகள் மாமல்லபுரத்தில் நிகழ்த்தும் கடலாடல் விழா சிறப்புடையதாகும். மாமல்லபுரம் தலசயனப்பெருமாள் கருடவாகனத்தில் கடலாடச்

சென்று தீர்த்தம் கண்டருளும்போது ஏராளமான மக்கள் கலந்து கொண்டு கடலாடி மகிழ்வர்.

**குளத்தில்:-** மயிலைக்கபாலீசுவரர் கோயில் குளத்தில் கபாலீசுவரர், சிங்காரவேலவர் ஆகியோர்க்கும் திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதிப் பெருமாளுக்கும் திருவான்மியூரில் மருந்தீசுவரருக்கும் ஆண்டுதோறும் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது. சென்னை கந்தசாமி கோயிலிலும் ஆடிக்கிருத்திகையை முன்னிட்டுத் திருத்தணிகை முருகன் மூன்று நாள்கள் (மலை இறங்கிவந்து) தெப்பத்திருவிழாவும் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரர் கோயிலில் தெப்பத்திருவிழாவும் நடைபெறுகின்றன.

பிறவிக்கடலை நீந்தும் தோணிக்கு மீகாமனாகவும் அத்தோணியை உடையவனாகவும் எம்பெருமானை இவ்விழா சித்தரிக்கின்றது.

**கிணற்றில்:-** கரையிலிருந்து அடி வரை கைப்பிடிச் சுவருடன் கூடிய படிக்கட்டுகள் இருக்கும் கிணறுகளுக்கு நடைபாவும் கிணறுகள் என்பது பெயராகும். இதனுள் இறங்கிக் களிக்கும் விழா நடைபாவு உற்சவம் என்னும் பெயரில் அழைக்கப்படுகிறது. அத்தி வரதர், அப்துல்லாபுரம் என்னும் ஊருக்குச் சென்று நடைபாவு உற்சவம் கொண்டருள்கிறார்.

**சந்திப்பு உற்சவங்கள்:-** அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் மலைவலம் செல்லும்போது அவரைப் பெரும்பேறு முருகன் எதிர்கொண்டழைத்துச் சென்று தான்தோன்றீசுவரர் கோயிலில் அகத்தியருக்குத் திருமணக்கோலக் காட்சி அளிக்கும் விழா சிறப்புற அமைகிறது. ஆட்சீசுவரர், உமை ஆகியோர் இடபவாகனங்களிலும் முருகப்பெருமான் மயில் வாகனத்திலும் சோமாசுகந்தர் வடிவில் காட்சி கொடுக்கின்றனர்.

ஆயர்பாடி அரிகிருட்டின பெருமாளும் கும்மங்கலம் அகத்தீசப்பெருமானும் அகத்தியர் பரத்வாஜர் ஆசிரமத்தில் சந்தித்துக்குக் கொள்ளும் சைவ வைணவ ஒற்றுமை விழா சிறப்பானது ஆகும். அப்போது திருமால் கருட வாகனத்திலும் முருகன் மயில் வாகனத்திலும் கணபதி பெருச்சாளி வாகனத்திலும் சிவன், உமையம்மை, சண்டேசுவரர் ஆகியோர் இடப வாகனங்களிலும் தோன்றும் காட்சி விவரிக்க ஒண்ணாச்சிறப்புடையதாகும் ஆகும்.

**அசுரர் தீமை அழிப்பு உற்சவங்கள்:-** சூரனாதியரை வெல்லும் விழாக்களைப் போலவே மலையன், காடன் என்கிற அசுரர்களை இறையனார் வேலூர் முருகன் அழிக்கின்ற மரபு உற்சவமும் அதனை அடுத்து முருகன் கடம்பவன நாதரை வழிபடுமுகத்தான் அக்கோயிலுக்கு எழுந்தருளுதலும் பெருவிழாக்களாகும்.

**சிறப்பு வாகனங்கள்:-** தலவிருட்சங்கள் என்னும்போது அவற்றினடியில் இறைவன் வீற்றிருப்பது போன்று அலங்கரிக்கப்பட்டு உலாக்கொண்டு செல்லும் வழக்கம் உள்ளது. காஞ்சி ஏகாம்பரநாதரை மாமரத்தடியிலும் திருவிடந்தைப்

பெருமானைப் புன்னை விருட்சத்திலும் திருவாரூர்ப் பெருமானை திருவொற்றியூர் மகிழமரத்தடியிலும் திருக்கழுக்குன்ற மகாதேவரை வாழை மரத்தடியிலும் எழுந்தருளுவித்து உலாவிற்கு எடுத்துச் செல்கிறார்கள்.

சென்னை காளிகாம்பாளுக்குரிய கிண்ணித்தேர், மதுராந்தகம் கோதண்ட ராமருக்குரிய பெரியபெருமாள் தேர், தியாகர்களுக்குரிய ஆடும் சட்டங்கள், காஞ்சிபுரம் காமாட்சியம்மன் தங்கத்தேர், சென்னைக் கந்தசாமிக் கோயில் தங்கத்தேர் ஆகியவை தனித்தன்மை வாய்ந்தவை.

## வேண்டுதல்கள்

"இறைவன் இன்னது எனக்கு அருள்புரிந்தால் யான் இன்னது அவருக்குத் தருவேன்" என்பது வேண்டுதலாகும். சங்கஇலக்கியங்களில் தலைவியின் துயரை மாற்ற "வேலாட்டம் புரிந்திடுவானுக்கு ஆட்டுப் பலியிடல்" சுட்டப்படுகிறது.

மிகப்பெரிய கூட்டமாகக் கூடி வேண்டுதல் விழாவாக நடைபெறுவது திருத்தணி திருமுருகனுக்கு மலர்க்காவடி செலுத்தும் விழாவாகும். ஏறத்தாழ ஆறு இலட்சம் பேர்கள் ஆடிக்கிருத்திகை நாளில் மலர்க்காவடி செலுத்துகின்றனர். பால்காவடி பழக்காவடி முதலியன திருப்போரூர், பெரும்பேர், வடபழனி முதலிய முருகன் தலங்களில் நடைபெறுகின்றன.

உடற்பிணி நீங்கும் பொருட்டு, மண்டைவிளக்கு எடுப்பது நிகழ்கிறது. இது புதிய மண்சட்டியில் அரிசி மாவு, தேங்காய், பழம், வெற்றிலை, சிறுநெய்விளக்கு ஆகியவற்றை வைத்து அதனைத் தலையில் வைத்துக்கொண்டு கோயிலைச் சுற்றி வருவதாகும். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் மாவடியில் மாலை சாத்துதல், திருவேற்காடு வேதபுரீசுவரர் கோயிலில் அபிடேகம் செய்தல் முதலியன நடைபெறுகின்றன. மாங்காடு காமாட்சியம்மன் கோயிலில் எலுமிச்சம் பழங்களை வைத்து 7, 9, 12 வாரங்கள் வழிபடுவது வழக்கம். காஞ்சி குமரகோட்ட முருகன் கோயிலை 108 முறை சுற்றி வரின் வேண்டியயாவும் அளிக்கும் என்பது நம்பிக்கையாகும். அம்மை நோய் நீங்கப்பெற்றவர் வேண்டுதலினால் ஆடையின்றி வேப்பந்தழைகளை உடலில் சுற்றிக்கொண்டு வலம்வருதல் மரபு.

வேண்டியது அளிக்குமாறு பிரார்த்தனை செய்துகொண்டு எல்லாத்துர்க்கை சந்நிதிகளிலும், எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து அதன் தோலை அகலாகக் கொண்டு தீபம் ஏற்றப்படுகிறது. சகல ரோக நிவாரணத்திற்கும் தொல்லையான நவக்கோள் காலத்திற்கும் திருப்போரூர் சக்கரதாபனத்திற்குப் பூர்வ அபிடேகம் செய்வது மரபு.

அம்மை நோய்கண்டதால் கண்பார்வை நீங்கப்பெற்றுள்ளவர்கள் மீண்டும்

கண்பார்வைபெற மயிலை முண்டகக்கண்ணியம்மன் கோயிலை அங்கப்பிரதட்சணம் செய்தல், ஈரச்சேலையுடன் வலம்வருதல் ஆகிய நேர்த்திக்கடன்களைச் செய்கின்றனர். கோவளம், பெரும்பேறு, கயப்பாக்கம் போன்ற சில ஊர்களில் தீ மிதித்தல் நடைபெறுகிறது. ஆடி, தை மாத வெள்ளிக்கிழமைகளில் எல்லாச் சிறு தெய்வங்களின் கோயில்களிலும் பொங்கல் எள்ளுமாவு போன்றவை வைத்துப் படைப்பது வழக்கம்.

பச்சையம்மன் கோயில்களிலும் குல தெய்வக்கோயில்களிலும் காதணி அணிவித்தல், மொட்டை அடித்தல் போன்ற பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. திருவேற்காடு, பெரும்பேறு முதலிய இடங்களில் குழந்தை வேண்டுவோர் தொட்டில் கட்டுதல் மரபு. சில இடங்களில் ஆடி மாதங்களில் அம்மனுக்கு வளையல் செலுத்தப்படும். திருத்தணி, மேல் மருவத்தூர்க் கோயிலில் பாதயாத்திரை, திருமுடி செலுத்துதல், அங்கப்பிரதட்சணம், போன்ற வேண்டுதல்கள் செலுத்தப்படுகின்றன. பெரும்பேர் கண்டிகையில் வீரபத்திரசுவாமிக்கு வெற்றிலைப்படல் சாத்தும் உற்சவம் வேண்டுதலாகும். பிள்ளைவரம் வேண்டிக் காஞ்சிபுரம் சின்னம்பேடு, திருத்தணிமுதலான இடங்களில் நாகப்பிரதிட்டைகள் வைக்கப்பெறும்.

# நிருவாகம்

தமிழ்நாட்டில் முன்பிருந்த இந்து சமய அறநிலையச் சட்டங்கள் தொகுத்துத் திருத்தப்பட்டு 1959 ஆம் ஆண்டில் 22-ஆவது கட்டமாக சீரமைக்கப்பட்டன. அவை 1960-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளன. தமிழ்நாட்டிள்ள இந்துசமயப் பொதுக் கோயில்களெல்லாம் இந்தச் சட்டத்தின் ஆட்சிக்கு உட்படுகின்றன. ஒவ்வொரு கோயிலின் மரபு, அதில் வழக்கமாக நடைபெற்றுவரும் வழிபாட்டுமுறை, சடங்குமுறை ஆகியவற்றிற்கிணங்க கோயில்களின் நிருவாகம் நடைபெறுவதற்காக இச்சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றப்பெற்றுள்ளன. இச்சட்டத்திற்கேற்பத் திருக்கோயில்களுக்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்கள் செயலாளர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். சில கோயில்கள், பரம்பரை உரிமை பெற்றுள்ளவர்களின் நிருவாகத்தின் கீழ் இருந்து வருகின்றன.

## 1. கோயில் இடங்களில் ஆக்கிரமிப்புகள்

கோயில் இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருப்பதாகத் தெளிவாகத் தெரியுமிடத்து அத்தகைய ஆக்கிரமிப்புகள் உள்ளன என்னும் பொதுக்குறிப்பு கோயிற்களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தங்கள் ஊர்க்கோயில் இடங்களில் செய்யப்படும் ஆக்கிரமிப்புகளைத் தெளிவாகக் கண்டறிந்து காலம் தாழ்த்தாது

அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காக அக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் ஒருவர் அக்கோயிலின் பரப்பு நிலஅளவை செய்து அக்கோயிலின் எல்லைகள் இவை என்பதைக் குறிப்பிடும் ஓர் ஆணையை மாவட்ட வருவாய்த்துறை அலுவலரிடமிருந்து பெற்றார். இத்தகையதொரு நடவடிக்கை பிற இடங்களிலும் மேற்கொள்ளப்படுமானால் கோயிலின் இடங்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும்.

## பூசைகள்

வருமானமில்லாத காரணமாகப் பூசைகள் நடைபெறாத கோயில்களும் உள்ளன. இத்தகைய கோயில்களில் தீபம் மட்டும் இடப்படுகிறது; சிறப்பு நாட்களில் மட்டும் பூசைகள் செய்யப்படுகின்றன.

## வருமானம்

கிடைக்கப்பெற்ற அளவில் கோயில்களின் வருமான விவரங்கள் கோயிற்களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. வருமான விவரங்களைத் தெரிவிக்கப் பலகோயில்கள் விரும்பவில்லை. குடிவாரச் சட்டங்களின்படி, கோயில்களுள் 25 விழுக்காடு குத்தகை பெற உரிமை பெற்றுள்ளன. இந்த அளவு வருமானமும் கிடைக்காமை காரணமாக, கோயில்கள் சில நீதிமன்றங்களில் வழக்குகள் தொடர்ந்துள்ளன. இத்தகைய சூழ்நிலைகளுக்கு விதிவிலக்காக திருவிற்கோலம் (கூவம்) கோயிலின் நிலைமை உள்ளது. இக்கோயிலின் குத்தகை நெல்பகுதி முழுதும் அவ்வூர்க் குடிகள் கோயிலுக்குச் செலுத்துகிறார்கள். இதைத்தவிர, குத்தகை முறையில் நிலங்களை உழுது பயிரிடுவோர்களும் ஓரளவு நெல்லைக் கோயிலுக்கு அளிக்கிறார்கள். இக்கோயிலில் பூசைகள், திருவிழாக்கள் முட்டின்றி நடைபெறுகின்றன.

## தீர்த்தங்கள்

சில கோயில்களின் தீர்த்தங்கள் தூய்மை கெட்ட நிலையிலுள்ளன. இவற்றிற்குத் திருப்பணி தேவை என்பது கோயிற்களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

---

1. காஞ்சிபுரத்திற்குத் தெற்கே உள்ள திருப்புலிவனம் வியாக்கிரபாதர் கோயில்.

# கோயில்களால் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் ஏற்பட்ட நன்மைகள்

தமிழகக் கோயில்கள் இறை வழிபாட்டு மையங்களாக மட்டும் அல்லாமல், தமிழர் சமுதாயத்தின் நல்வாழ்வில் நாட்டங்கொண்ட மையங்களாகவும் விளங்கி வருகின்றன. கி. பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 6-ஆம் நூற்றாண்டு வரையில் களப்பிரர் ஆட்சியில் மண்டிக் கிடந்த இருள் நீங்கப் பகலோன் தோன்றியது போன்று கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள இடைப்பட்ட காலத்தில் சைவ சமய ஆச்சாரியர்களும் வைணவ சமய ஆழ்வார்களும் தொடங்கிய இவ்வியக்கத்தின் விளைவாக சைவ சமயத்திற்கும் வைணவ சமயத்திற்கும் மறுமலர்ச்சி தோன்றிற்று. அக்காலத்தில் அவர்கள் திருக்கோயில்கள் பலவற்றில் வழிபாடாற்றித் திருப்பதிகங்கள் பல பாடியருளியதால், முன்னமேயிருந்த கோயில்கள் விளக்கம் பெற்றன; புதிய கோயில்கள் எழுந்தன. இவ்வாறு வளர்ந்த கோயில்கள் சைவத்தையும் வைணவத்தையும் போற்றிப் பாதுகாத்து வளர்த்தன.

திருக்கோயில்கள் கல்வியின் நிலைக்களங்களாக விளங்கின. இவற்றில் பள்ளிகளும் கல்லூரிகளும் நிறுவப்பட்டன. இந்நிலையங்களை நடத்தும் ஆசிரியர்களுக்கும் அங்குப் பயிலும் மாணவர்களுக்கும் தேவைப்பட்ட வசதிகள் செய்யப்பட்டன. இசைக்கும் ஏனைய நுண்கலைகளுக்கும் கோயில்கள் மையங்களாக இருந்து வந்தன. இசையும் கூத்தும் தெய்வத்தின் பேராற்றலை விளக்கும் அருங்கலைகளாக வளர்ந்தன.

கட்டடக் கலையையும் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றின் நுட்பங்களையும் விளக்கும் பெருநிலையங்களாகக் கோயில்கள் இருந்துவந்தன. நாட்டில் விளங்கிய நுண்மாண்கலைச் சிற்பிகளும் புகழ்மிக்க ஓவியர்களும் மக்களின் உள்ளங்களுக்கு உவகை ஊட்டும் சிற்பங்களையும் ஓவியங்களையும் வடித்துதவியுள்ளனர். கோயில்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் வரலாற்றிற்கு உறுதுணையாக அமைந்தன.

திருக்கோயில்கள் பல்லோர்க்கும் வேலைவாய்ப்பளிக்கும் கேந்திரங்களாக பயன் படுகின்றன. ஏழை, எளியோர்களுக்கும் உடல்உறுப்புக் குறைந்தவர்களுக்கும் உணவு அளிக்கும் இல்லங்களாகவும் கோயில்கள் திகழ்ந்து வருகின்றன. நில உடைமையாளர் என்ற முறையில் கோயில்கள் நிலத்தை உழுதுபயிரிடுவோர்க்குத் தம் நிலங்களை ஒப்புவித்து அவர்கள் வாழ வழிவகை செய்துள்ளனர். அவ்வப்பகுதிகளில் வாழும் மக்கள் அறஉணர்வோடு நல்வாழ்வு வாழ்வதற்காக

திருக்கோயில்களில் ஆன்றோர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. இத்தகைய அரிய பணிகளைத் திருக்கோயில்கள் புரிந்து வந்ததற்கு ஓர் எடுத்துக்காட்டாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருமுக்கூடலில் இயங்கிவந்த அறக்கட்டளை ஒன்றைக் குறிப்பிடலாம். பாலாறு, சேயாறு, வேகவதி ஆகிய மூன்று ஆறுகளும் கூடும் இனிய இயற்கைச் சூழ்நிலையில் வாலாசாபாத்து இருப்புப்பாதை நிலையத்திற்கு அருகிலுள்ள பழைய சீவரம் ஊரை அடுத்த திருமுக்கூடல் வேங்கடேசப் பெருமாள் கோயிலில் வீரராசேந்திரன் காலத்தில் இவ்வறக்கட்டளை நிறுவப்பட்டது. இதில் மூன்று நன்கொடைகள் அடங்கியிருந்தன. இதன் வருமானம் 3, 243 கல நெல்லும், 216 1/2 காசுப்பொன்னும் ஆகும். இவ்வருமானம் இக்கோயிலின் பூசைகள் செய்வதற்கன்றி வேதம், ஆகமம் முதலியவை கற்பிப்பதற்காகவும் நோய்களைக் கண்டுபிடித்து, அவற்றைப் போக்குவதற்காகவும் மருத்துவ வசதிகளுக்கு வகை செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டது.

முற்காலத்தில் கோயில்கள் புரிந்து வந்த பணிகளுள் கல்வியையும் மருத்துவத்தையும் முறையே தற்காலத்தில் அரசுக் கல்வித்துறையும் மக்கள் நல்வாழ்வுத் துறையும் ஏற்றுக்கொண்டுள்ளன. எனினும் இந்து சமய அறநிலையத் துறையும் இத்தகைய பணிகளைக் கோயில்களின் மூலம் புரிந்துவருகின்றது. இதில் செங்கற்பட்டு மாவட்டத்தையும் சென்னை மாநகரத்தையும் பொறுத்தவரையில் சில கோயில்களைக் குறிப்பிடலாம். சென்னைக் கொத்தவால் சாவடியில் உள்ள கன்னிகா பரமேசுவரி கோயில் கீழ்க்காணும் அறங்களை மேற்கொண்டுள்ளது. 1000 பேர்கள் தங்கக் கூடிய திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. ஏழை நடுத்தர மக்கள் இதனை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாணவ மாணவியர் ஆகியோர்களுக்குத் தனித்தனியாகத் தொடக்கப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளும் நடத்தப்பெறுகின்றன. ஏறத்தாழ 2000 மாணவ மாணவியர் இவற்றில் கல்வி கற்கின்றனர். இவர்களுக்குக் குறைந்த கட்டண முறையில் உணவு விடுதிகளும் இயங்கிவருகின்றன. நாள்தோறும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இலவச உணவு அளிக்கப்படுகிறது. பொதுமக்கள் நலனுக்காக ஓமியோபதி மருத்துவ மனை ஒன்றும் முதியோர்கள் நலனுக்காக முதியோர் இல்லம் ஒன்றும் இயங்கிவருகின்றன. இக்கோயிலின் வருமானத்தில் 60 விழுக்காடு கொத்தவால் சாவடி துப்புரவு வரியாகச் செலுத்தப்படுகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாகம் செய்யும் திருத்தணிகை சுப்பிரமணியசுவாமி கோயிலும் பொதுமக்கள் நலனுக்காகச் சித்த மருத்துவமனைகளையும் ஆதரவற்ற குழந்தைகளின் நலனுக்காக அன்பு இல்லங்களையும் நடத்தி வருகின்றது. சுருங்கக் கூறுமிடத்துப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரிகள் தாம் இயற்றிய ‘ சோழர் ’ என்ற நூலில் குறிப்பிட்டவாறு மக்கள் அறவுணர்வோடு வாழ்வதற்குரிய வழி வகைகள் பலவற்றையும் கருணையோடு புரிந்துவந்த தென்னாட்டில் இடைக்காலத்தில் அமைந்த கோயில்கள் மனித இனத்தின் வரலாற்றில் ஒப்புயர்வற்று விளங்குகின்றன.

# இணைப்பு-1

## தலைமைத் திருவுருவங்களும் அடுத்த நிலைத்திருவுருவங்களும்

கோயில்களில் வணங்கப்படும் தேவதைகளைத் தனித்தலைமைபெறும் கடவுள் என்றும் இணைக்கடவுள் என்றும் இணைக்கடவுளர், உதவிக்கடவுள் என்றும் பிரிக்கலாம். தலைமைப் பெருங்கடவுளர் ஆகமங்களில் சுதந்தரதேவதை எனப்பெறுபவராவர். இத்திருவுருவங்களை நிலைப்படுத்தி இவர்களுக்குக் கருவறை, விமானம், பிராகாரம், பலிபீடம், கொடிமரம், கோபுரம் ஆகியவை அமைக்கப்பெறுகின்றன. துணைக்கடவுளருக்கு அவ்வாறில்லை. அவர்களுக்கு பிராகாரங்களுடன் கூடிய தனி உட்கோவில் அமையலாம். இணைக்கடவுள் ஒரே மூர்த்தியின் இணையான அவதார வடிவமாகும். உதவிக்கடவுள் ஏவல் புரியும் இயல்புடையவர்.

திருமால் தனித்த கோயிலில் சுதந்தர தேவதையாவார். அதேபோல் துணைக் கடவுளாகவரும் சீதேவித் தாயார் திருமால் பக்கத்தில் இருக்கும்போது இரண்டு கரங்களோடும் தனிக்கோயிலில் இருக்கும் போது நான்கு கரங்களோடும் காட்டப்படுவர். இதே போன்று சிவலிங்கத்தின் அருகில் இருக்கும்போது சக்தியம்மன், சோமாசுகந்தர், அம்மன், சிவகாமி, மோகினி, சுந்தராம்பிகை ஆகியோர் துணைக் கடவுளர்; இவர்கள் இரு கரங்களுடன் இருப்பார்கள். சக்தி தனியாக இருக்கும் கோயிலிலே, நான்கு கரங்களுடன் இருக்கும். சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் பார்வதி, திருமகள் போன்றோர் துணைக்கடவுளரே ஆவர். ஏவல் செய் கடவுளரான நவவீரர், அதிகாரநந்தி ஆகியோர் வணங்கும் நிலையிலிருத்தல் மரபாகும். ஒரே கடவுளரின் வடிவக் கூறுகளான (சிவனின்) சந்திரசேகரர், சோமாசுகந்தர், நடராசர் போன்றவர் இணைத் திருவுருவங்களாவர். திருமாலின் அவதாரமான இராமன், கண்ணன், அரங்கநாதர் போன்றவர்கள் இணைக்கடவுளராகத் தலைமைக் கடவுளைச் சுற்றி உரிய இடங்களில் இருப்பார்கள். அதே போல் சுதந்தர தேவதையராக இருப்பினும் வயிரவர், முருகன் விநாயகர்போன்றவரைச் சிவன் கோயில்களில் வைப்பதும் ஆகம மரபுகளாகும்.

சில விலங்குகளையும் துணைப்பொருளாகப் படைப்பது மரபு. கங்காளர் பிட்சாடனரைப் படைக்கும்போது மான் வடிவம் துணைப் பொருளாகவும் கசேந்திரரை வடிக்கும்போது யானை துணைப்பொருளாகவும் காட்டப்படும். முனி உருவங்கள், கந்தர்வ வடிவங்கள் துணையாயும் வரும். நடராசர் அடிக்கீழ் பதஞ்சலி வியாக்கிரபாதர் இருப்பர். சுக்கிரவார அம்மனுக்குச் சேடியர் வீரர் முனிவருக்கு இருபுறமும் சாமரக்கன்னியர், பிட்சாடனருக்குக் குண்டோதரன் ஆகியோர் துணை வடிவங்களாவர்.

# இணைப்பு-2

## "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"

சிவபூசையில் அகத்தே உடலில் வழிபாடும் புறத்தே சிவலிங்கத்தின் வழிபாடும் செய்யப்படுவதுண்டு. அகத்தே சிவபூசை செய்வதற்கு எவ்வாறு மனித உடல் சிறந்ததொரு ஆலயமாகத் திகழ்கின்றது என்பதனைத் திருமூலதேவர் தமது ஏழாவது திருமந்திரத்தில் சிவபூசை என்ற பகுதியின் முதற்பாடலில் உணர்த்துகிறார்.

'உள்ளம் பெருங்கோயில் ; ஊன் உடம்பு ஆலயம்;
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்;
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்;
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணி விளக்கே.

இதன்பொருள்:

### 1 உள்ளப் பெருங்கோயில்

உள்ளம்-இருதயம்; இதயதாமரை; பெருங்கோயில்; பெருமை- மிகப்பெரிதாய் இருக்கும் தன்மை. இது வடமொழியில் பிரமம் என்று சொல்லப்படும். பெருமை என்ற சொல் இங்கு மண் அண்ட அதிதெய்வமாகிய பிரம்மாவைக் குறிக்கும்.

அகத்தே செய்யும் சிவபூசையில் இதயமாகிய ஆதாரத்தை (அநாகதம்), இதயதாமரையாகப் பாவித்து, அதன்மேல் பிரமன் (அயன்) பூசிக்கப் பெறுவர். பிரமன் பூசிக்கப் பெறும் இந்த ஆதாரம் 'பெருங்கோயில்' ஆயிற்று.

### 2 ஊன் உடம்பு ஆலயம்

ஊன்உடம்பு- மனித உடம்பு; இதில் இருதயம் (அநாகதம்) , கண்டம் (விசுத்தி), உள்நாக்கு, புருவநடு, (ஆக்ஞை) , உச்சித்துளை (பிரமரந்திரம்) ஆகிய ஐந்து ஆதாரங்களில் முறையே அயன், மால், உருத்திரர், மகேசன், சதாசிவன் ஆகிய ஐவரும் பூசிக்கப்பெறுவர் என்று சித்தாந்தச் சூறாவளி கூறுகிறது. இவர்கள் முறையே மண், நீர், அனல், காற்று, ஆகாயம் ஆகிய அண்டங்களில் ஐந்தொழில்களையும் செய்யும் தெய்வங்கள். இந்த ஐந்து ஆதாரங்களில் அயன் முதலியோர் படிமுறையாக வழிபடப்பெற்று அந்தந்த ஆதாரங்களில் அயன் முதலியவரோடு உயிர் ஒடுங்கி நின்று, இறுதியில் உச்சித்துளையில் உள்ள சதாசிவத்தோடு ஒடுங்குவதால் மனித உடல் ஓர் ஆலயம் ஆகிறது. (ஆ-பசு, லயம்-ஒடுக்கம்)

### 3 வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாசல்

வள்ளல் பிரான் : - வேண்டியவர்க்கு வேண்டியதை அருளும் கருணை வள்ளலாகிய சிவபெருமான.

வாய்_வாய்மை; மெய்ப்பொருள்; இங்கு மெய்ப்பொருளாகிய சிவபிரானை அடைதற்குத் துணை செய்யும் மந்திரங்களாகிய ஐம்பெரு மந்திரங்களை (பஞ்சப்பிரம மந்திரங்கள்) உணர்த்தியது. இவை அயன், மால் முதலிய ஐவர் பூசைக்குரியன. கோ_பேரரசனான சிவபெருமான்; புரம்_இடம்; சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடம்; சிவலோகம். வாய் கோபுர வாசல் _மந்திரங்கள் சிவலோகத்தை அடைதற்கு ஒரு வாயிலாகத் (வாசலாகத்) திகழ்வது.

## 4. தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்

சீவன்_உயிர், பசுப் பாசத்தினின்றும் நீங்கி, தூய்மை பெற்ற உயிரை (சுத்தான்மாவை)க் குறித்தது.

அகப்பூசையில் இதயம் முதலிய ஐந்து ஆதாரங்களில் அயன் முதலிய தெய்வங்களைப் பூசித்து உச்சித்துளைக்குச் சென்ற உயிர், அங்கு ஆயிர இதழ்தாமரை (சகஸ்ரநாமம்) யினின்றும் சொரியும் அமுதத் தாரைகளில் மூழ்கி, தூய்மை பெற்று நிற்கும். இந்தத் தூய உயிரே மீண்டும் இதயத்திற்கு வந்து அங்கே இலிங்கமாக (ஆன்மலிங்கமாக) நிற்க, அதில் சிவபெருமான் பூசிக்கப்பெறுவர்.

## 5. கள்ளப்புலன் ஐந்தும காளா மணிவிளக்கே

புலன்_இன்பதுன்பங்களை நுகர்வதற்குத் துணை செய்வன மெய், வாய, கண், மூக்கு, செவி ஆகிய கருவிகள்.

கள்ளபபுலன் _ இவை மறைந்து நின்று தொழிற்படுவன ஆதலின், கள்ளப்புலன்கள் ஆயின. இங்கு இப்புலன்களின் அதிபதிகளாகிய அயன் முதலிய ஐவரை உணர்த்தியது.

காளம் _ கருமை ; இங்கு இருளைக் குறித்து, அக இருளாகிய ஆணவ மலத்தை உணர்த்தியது.

காளா _ ஆணவ மலம் அற்ற, ஆணவ மலத்தைப் போக்க வல்ல.

மணிவிளக்கு _ அழகிய விளக்கு அயன் முதலிய தெய்வங்கள் ஆணவ இருளைப் போக்கும், விளக்குகளாக விளங்குபவர்கள். சிவபெருமான் பெரொளியாக நிற்க, இவர்கள் சிற்றொளி கொண்ட விளக்குகளாகத் திகழ்பவர்கள்.

இவ்வாறு அகப்பூசை முறையையும் அதன் பயனையும் திருமூலர் இப்பாடலிலன் மூலம் விளக்குகிறார்.

## வைணவ சமயக் கோட்பாடுகள்

இறைவனைத் திருக்கோயிலில் வழிபடுதலின் சிறப்பை வைணவக்கோயில்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

பட்டர்பிரான் திருவாக்கின்படி 1. பரப்பிரமம் (மிக்க இறை நிலை) 2. ஆத்மா (மெய்யான உயிர்நிலை) 3. உபாயம் (தக்கநெறி) 4. தடையாகத் தொக்கி நிற்கும் விரோதி (ஊழ்வினை) 5. முக்தி (வாழ்வு) ஆகிய இவ்வைந்தும் அர்த்தபஞ்சகம் ஆகும். பரம், வியூகம், விபவம்,அந்தர்யாமி, அர்ச்சை ஆகியவை பரப்பிரம்மத்தில் அடங்குகின்றன. இவற்றுள் பரமபதத்தில் நித்திய முக்தர்களுக்கு அருள்புரிவதற்காக, இறைவன் வீற்றிருக்கும் நிலையே பரத்துவ நிலையாகும். வியூகமாவது சிருட்டி, திதி, சம்மாரம் ஆகியவற்றிற்காகவும் அன்பர்களைப் பாதுகாத்தல் அவர்களுக்கு அருள்புரிதல் ஆகியவற்றிற்காகவும் சங்கர்ஷண ப்ரத்யும்ந, அநிருத்த ஆகியோர் நிலையில் அருள்புரிவதைக் காட்டுகிறது. மூன்றாவதாகிய 'விபவம்' இராமர் கிருட்டினர் ஆகியோர் போன்ற அவதாரங்களில் இறைவன் நிற்கும் நிலையாகும். நான்காவதாகவுள்ள 'அந்தர்யாமி' என்பது அண்டசராசரங்களிலும் எல்லா உயிர்களிலும் எள்ளுக்குள் எண்ணெய் போன்று உயிருக்குயிராய் இறைவன் நிற்கும் நிலையாகும். ஐந்தாவதாகவுள்ள' அர்ச்சையாவது' இந்நிலவுலகினில் திருவரங்கம் முதல் வைகுந்தம் வரையிலுமுள்ள திருப்பதிகள் நூற்றெட்டிலும் பிற தலங்களிலுமுள்ள திருக்கோயில்களின் திருவுருவங்களிலும் இறைவன் என்றும் அமர்ந்து அருள்புரியும் நிலையாகும். இந்த அர்ச்சாவதார நிலை நம்முடைய கண்களுக்குத் தோன்றுவதற்குரிய எளிமையைக்கொண்டு நம்முடைய வேண்டுகோளை நிறைவேற்ற வல்லது. இம்முறை வைணவர் கோயில்களில் விளங்குகிறது.

இவ்வாறு பர, வியூக, விபவ, அந்தர்யாமியாகிய நான்கு நிலைகளிலும் அன்பர்கள் வணங்கிக் கொண்டாடப் பெற்று வருகின்ற நம்பெருமான் 'அர்ச்சாவதாரம்' என்ற திருமேனி கொண்டு அடியார்களின் வேண்டுகோளை ஆராய்ந்தருளவே வாகனங்களில் அமர்ந்து திருவீதிகளில் உலாவருகிறார். இது திருவிழாவாகும்.

வைணவத்தில் இலக்குமி முதன்மையான பங்கேற்கிறார். இலக்குமி புருஷாகரமாக அடியவருக்கும் இறைவனுக்கும் இடையே ஓர் இணைப்புச் சக்தியாக உள்ளார். பாவம் புரிந்தவருக்கும் அருள்புரியுமாறு இத்தேவி நம்பெருமானிடம் பரிந்துரை செய்கிறார். இத்தேவியும் நாராயணனும் எல்லாப் பொறுப்புகளையும் வகிக்கின்றார்கள் என்பதை ஸ்ரீ வைஷ்ணவம் தெரிவிக்கிறது. தேவி அடியவருக்கும் இறைவனுக்கும் இணைப்புச் சக்தியாக இருப்பது மட்டுமன்றி ஓர் ஆசிரியராகவும் விளங்குகிறார். பஞ்சராத்திரி புனித உபதேசங்களைத் தேவிக்கு இறைவர் உபதேசம் செய்தார் என்பதும் தேவி தமது முறையில் விசுவசேனருக்கு அவற்றை உபதேசம் செய்ய, விசுவசேனரும் அவற்றை நம்மாழ்வாருக்கு உபதேசம் செய்தார் என்பதும் வைணவ சமய மரபாகும்.

வைணவ ஆகமங்கள் இரண்டு வகையின: 1. வைகானசம் 2. பஞ்சராத்திரம். இறைவன் திருவுருவ வழிபாட்டையும் அவருடைய அவதாரங்களையும் திருவுருவங்களின் இறைவன் இருக்கிறார் என்ற நம்பிக்கையையும் துணிவுடன் பஞ்சராத்திரம் வலியுறுத்திக் கூறுகிறது. பஞ்சராத்திர ஆகமங்களும் மிக பண்டைக் காலத்தியவை என்பதும் கோயில் வழிபாட்டுக்குப் பஞ்சராத்திர ஆகமங்கள் அடிப்படை என்பதும் அம்முறையின் கோட்பாடுகளாகும். பஞ்சராத்திர ஆகமங்கள்

கோயிற் சடங்குகளையும் அவற்றை அடியவர்கள் புரிவதால் கிடைக்கக் கூடிய பல்வேறு நன்மைகளையும் எடுத்துரைக்கின்றன.

இராமானுசர் விசிட்டாத்வைதத்தை வகுத்தார். 'விசிட்டாத்வைதம்' என்னும் சொற்றொடர் சிறந்த வைணவம் என்னும் பொருள் தருகிறது. இச்சிறப்புக்கு வழி வகுத்தவர் இராமானுசர். 'நாராயணர் ஒப்பற்ற தலைவர்' என்பதும் அவருக்கு ஞானம், பலம், ஐசுவரியம், வீரியம், சக்தி, ஒளி ஆகியவை போன்ற மங்கலகரமான தன்மைகள் உள்ளன என்பதும் நாராயணரிடம் சரணாகதி அடைபவருக்கு அவர் எல்லாப் பேறுகளையும் அளிக்கிறார் என்பதும் வேதாந்த கொள்கையின்படி கடவுள் நிர்க்குணர் (உருவம் அற்றவர்) என்பது போன்ற அத்வைத கொள்கைகளை மறுக்கும் வகையில், இந்நிலவுலகினருக்கு அருள்புரிய அவருக்குக் குணவடிவு தேவை என்பதையும் வலியுறுத்தினார்.

இராமானுசருக்குப் பின்னர் 12, 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் பிரபந்தப்பிரிவு (தென்கலையார்), ஸ்ரீபாஷ்யப் பிரிவு (வடகலையார்) என இரு பிரிவுகள் தோன்றின.

இறைவனிடம் சரணாகதி அடைவதை இரு பிரிவினரும் ஒப்புக்கொண்ட போதிலும் முக்திநிலையை அடைவதற்குத்தன் முயற்சி தேவையெனவும் தாயை இறுகக் கட்டிக்கொள்ளும் அதன் குட்டிக்குரங்கைப் போன்று பற்றிக் கொள்ள வேண்டுமெனவும் வடகலையார் கூறுகிறார். ஆனால், தென்கலையாரோ கடவுளின் அருள் தானே வெளிப்படுகிறது எனவும் பூனை எவ்வாறு தன் குட்டியைத் தன் வாயால் கவ்விக்கொண்டு அதனைப் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்கிறதோ அவ்வாறே சரண்புகுந்த அடியார்களை இறைவன் காப்பாற்றுகிறார் எனவும் தெளிவாகக் கூறுகின்றனர்.

மற்றொரு முக்கியமான கருத்து வேறுபாடு இலக்குமியைப் பற்றியதாகும். இலக்குமி இறைவனிடமிருந்து பிரிக்கப்படாத நிலையில் இறைவனைப் போன்றே அருள் பாலிக்கும் ஆற்றல் உடையவர் என வடகலையார் கூறுகின்றனர். தென்கலையாரோ, இலக்குமி இறைவனுக்குப் பணிபுரிபவர்களில் முதல்வராவார் என்றும் அடியவருக்கும் இறைவனுக்கும் இடைநிலையில் நின்று அடியவர்க்கு இறைவன் அருள் புரியுமாறு இறைவனிடம் பரிந்துரை செய்கிறார் என்றும் கருத்து உரைக்கிறார்கள். அடியவர்கள் எல்லாரும் மதிப்புப் பெறத்தக்கவர்கள் எனினும் அவர்கள் தங்கள் பிறப்பின் அடிப்படையில் வழிபாடு ஆற்ற வேண்டுமென வடகலையார் கூறுகின்றனர். தென்கலையாரோ அடியவர்கள் எல்லாரும் பிறப்பின் அடிப்படையில் அல்லாமல் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அவர்கள் உண்மை அடியவராக இருப்பின், அவர்கள் நன்கு மதிக்கப்படுவதற்குரியவர் எனக் கூறுகின்றனர். இந்தப் பிரிவின் தலைவர்கள் தமிழ்நாட்டு ஆழ்வார்களுக்குச் சிறப்பிடம் தந்தார்கள்.

## சைவ சமயத் தோத்திரங்களும் வைணவப் பிரபந்தங்களும்

### சைவ சமயத் தோத்திரங்கள்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு; அவையாவன:

1. திருஞானசம்பந்தர் பாடியருளியவை - முதல் மூன்று திருமுறைகள்
2. திருநாவுக்கரசர் பாடியருளியவை - அடுத்த மூன்று திருமுறைகள்
3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளியவை - 7-ஆம் திருமுறை
4. மாணிக்கவாசகர் பாடியருளியவை - 8-ஆம் திருமுறை (திருக்கோவையாரும் திருவாசகமும்)
5. சேந்தனர் முதலியோர் பாடியருளியவை - 9-ஆம் திருமுறை (திருப்பல்லாண்டு, திருவிசைப்பா முதலியவை)
6. திருமூலர் பாடியருளியவை - 10-ஆம் திருமுறை (திருமந்திரம்)
7. திருவாலவாயுடையார் காரைக்காலம்மையார் முதலியோர் பாடியருளியவை - 11-ஆம் திருமுறை
8. சேக்கிழார் பாடியருளிய பெரியபுராணம் - 12-ஆம் திருமுறை

சைவத் திருமுறைகளில் எட்டாம் திருமுறையில் அடங்கிய திருவாசகத்திற்கும் திருக்கோவையார்க்கும் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்திற்கும் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்திற்கும் உரைகள் இயற்றப்பட்டன.

## நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள்

### பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய பாடல்கள்

| | | |
|---|---|---|
| 1. | பொய்கை ஆழ்வார் | 100 |
| 2 | பூதத்தாழ்வார் | 100 |
| 3. | பேயாழ்வார் | 100 |
| 4. | திருமழிசையாழ்வார் (திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்) | 216 |
| 5. | நம்மாழ்வார் (திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி) | 1359 |
| 6. | மதுரகவியாழ்வார் (கண்ணிநுண் சிறுதாம்பு) | 11 |
| 7. | குலசேகராழ்வார் திருமொழி | 105 |

| | | |
|---|---|---|
| 8. | பெரியாழ்வார் திருமொழி | 473 |
| 9. | ஆண்டாள் (திருப்பாவை, நாச்சியார் திருமொழி) | 173 |
| 10. | தொண்டரடிப் பொடியாழ்வார் | 55 |
| 11. | திருப்பாணாழ்வார் (அமலனாதிபிரான்) | 10 |
| 12. | திருமங்கையாழ்வார் (பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல்) | 1137 |
| | | 3839 |

சிறிய திருமடலின் கண்ணிகளையும் பெரிய திருமடலின் கண்ணிகளையும் கூடுதல் எண்ணிக்கையில் கணக்கிட்டு மொத்தம் நாலாயிரம் பாடல்கள் என்பதால் இவற்றிற்கு இவ்வாறு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் பெயர் அமைந்தது என்பர்.

## இசைக்கருவிகள்

தமிழர் தம் வாழ்க்கையோடு இசை ஒன்றி விளங்குகிறது. இறைவன் "ஏழிசையாய், ஏழிசைப் பயனாய், பண்ணின் இசையாய்" விளங்குகிறார் எனச் சைவத்திருமுறைகள் எடுத்தியம்புகின்றன. இசை, கண்டத்தாலும் கருவியாலும் எழுப்புதற்குரியது. கண்டத்தால் எழுப்பப்படும் இசைப்பாடலுக்கு இசைக்கருவி துணைபுரிகிறது. இசைக்கருவிகள் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி என்னும் மூவகைகளில் பிரித்தறியப்படுகின்றன. இவற்றோடு வாத்தியங்களும் வாசிக்கப்படுகின்றன.

திருக்கோயில்களில் திருப்பதிகங்களைப் பாடுவதற்குத் தாளம் அளிக்கப்பட்டதைக் கோயில் கல்வெட்டுகள் பல குறிப்பிடுகின்றன. தஞ்சாவூர்ப் பெரியகோயிலில் திருப்பதிகம் பாட உடுக்கையும் தாளமும் பயன்படுத்தப்பட்டன என்பதைக் கல்வெட்டு கூறுகிறது. சீர்காழிக்கு மேற்கே உள்ள கோலக்காவில் திருஞானசம்பந்தருக்கு இறைவன் தாளம் அளித்தார்; அத்தாளத்திற்கு அம்பிகை

ஓசை தந்தார். ஆதலால், இத்தலத்து அம்பிகைக்கு ஓசை கொடுத்த நாயகி என்பது பெயராகும்.

திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் மனைவியார் மதங்கசூளாமணியாரும் திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களை யாழிலிசைத்துப் பாடினார்கள் என்பது வரலாற்றுச் செய்தியாகும். சிவபெருமான் திருமால் ஆகியோர் திருவுருங்கள் வீதியுலா வரும்போது பல வகை வாத்தியங்கள் வாசிக்கப்பட்டன என்பதைக் கல்வெட்டு கூறுகிறது. திருவொற்றியூர்க் கோயிலில் தாளம் வாசிக்க ஊதிகள் நியமிக்கப்பட்டார்கள் என்பதைக் கல்வெட்டு கூறுகிறது. சேகிண்டிகையும் வாசிக்கப்பட்டது. உடுக்கை, மணி, வீணை, சென்டை, காளம் ஆகியவை வாசிக்கப்பட்டன என்பதைக் கல்வெட்டுகளாலும் சிற்பங்களாலும் அறிந்துகொள்கிறோம்.

சிவபெருமான் நடனமாடும் கோலத்தில் ஆடவல்லான் நிலையில் இருக்கிறார். அப்போது அவர் உடுக்கையை வலக்கையில் ஏந்தியுள்ளார். இதைத் துடி எனவும் தமருகம் எனவும் குறிப்பிடுவார்கள். உடுக்கையிலிருந்து வெளிவரும் ஒலியில் அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்துமே இறைவனிடமிருந்து தோன்றுகின்றன. இது படைத்தலைக் குறிக்கிறது. சிவபெருமான் நடராசர் வடிவிலிருக்கும்போது அவர்தம் காலடியில் பிறை, குடமுழா முதலிய வாத்தியங்கள் காட்டப்படுகின்றன. "பறை கொட்ட நட்டிருள் ஆடுவார்" என்கிறார் சுந்தரர். சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தின்போது, நந்தி குடமுழா வாசித்தார் எனத் திருப்பதிகங்கள் கூறுகின்றன. குடமுழாவைப் பஞ்சமுகவாத்தியம் என்பர். குடமுழா பல்லவர் காலத்தில் செங்குத்தாக நின்ற நிலையில் காணப்படுகிறது. ஐந்து முகக் குடமுழாவை 12, 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் காண்கிறோம். செப்புத் திருமேனியில் விளங்கும் நடராசர் காலடியில் நந்தி குடமுழா வாசிப்பதைத் திருவாலங்காடு கோயிலில் காணலாம். வாத்தியம் சென்னை அருங்காட்சியகத்திலுள்ளது. ஐந்து முகங்களும் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தத்புருடம், ஈசானம் என்பனவான ஐந்து முகங்களைக் குறிக்கின்றன. இவை படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் இறைவன் அருள்கிறார் என்பதை விளக்குவதாகக் கொள்கிறோம்.

**வீணை**

தும்புரு, சுகர் முதலிய முனிவர்கள் இசையோடு சாமவேதத்தை வீணையில் வாசிக்கத் தங்களுக்கு அருளுமாறு தட்சிணாமூர்த்தியை வேண்டினார்கள். அப்போது சிவபெருமானும் வீணாதரதட்சிணாமூர்த்தியாக இருந்து வீணை வாசித்தார். காஞ்சிபுரம் கயிலாயநாதர் கோயிலில் பார்வதி தேவி வீணையைக் கொண்ட நிலையை ஒரு சிற்பம் காட்டுகிறது.

**காளம்**

இது நீண்ட குழல் போன்றதும் ஒரு முனை, வாய் அகன்றும் இருக்கும்.

இறைவன் வீதி உலாவரும்போது இறைவன் வருவதை உணர்த்த இஃது ஊதப்படுகிறது. காளங்களை வெள்ளியாலும் தங்கத்தாலும் மன்னர்கள் செய்து வழங்கினார்கள் என்பதைக் கல்வெட்டு கூறுகிறது. கோயிலில் பலி நிகழ்ச்சியின்போது காளங்கள் ஊதப்படுவனவாயின. காளம் அளிக்கப்பட்டதைத் திருவொற்றியூர்க் கல்வெட்டு தெரிவிக்கிறது.

## சங்கு

கோயில் வழிபாட்டில் சங்கு வாத்தியமும் இடம்பெற்றிருக்கிறது. "ஆடும் பறை சங்கொலியோ" எனக் குறிப்பிட்டுள்ளார் திருஞானசம்பந்தர்.

## சேகண்டிகை

இஃது உலோகத்தால் செய்யப்பட்டது. பலி நிகழ்ச்சியின்போது சேகண்டி வாசிக்கப்படும்.

## மணி

கோயில் வழிபாட்டில் இதனை முக்கியமாகப் பயன்படுத்துவது வழக்கம். இதுவே கண்டாமணி, கொத்துமணி, கைமணி என்று பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பூசையின்போதும் மணி அடிக்கப்படுகிறது.

## செண்டை

இது தோற்கருவி. கூம்பிய வடிவமானது. ஒரு நீளமுள்ள இரு முகங்களும் தோலால் போர்த்தப்பட்டிருக்கிறது.

## திருப்பறை

கோயில்களில் விழாக்கள் நடக்கவிருப்பதை அறிவிக்கத் திருப்பறை அடிக்கப்பெறுகிறது. பல்லவமன்னன் மகேந்திரவர்மன் தன்னை "சங்கீதன ஜாதி" எனக் குறிப்பிட்டுக் கொண்டான். சிறுபறை பிற்காலத்துப் பிரபந்தமாகிய பிள்ளைத் தமிழில் ஆண்பாலுக்குரியது எனக் காட்டப்படுகிறது. பெரும்பறை ஆடல் மகளிர் ஆடும்போது அடிக்கப்படும் பறையாகும். கிண்ணப்பறை வீரர்கள் போர் புரியும்போது போர்க்களத்தில் முழக்கப்படுவது. முரசு அரசர்க்குரியது.

யாழுக்குச் சிறப்பளிக்கப்பட்டது. "திருநீலகண்ட யாழ்ப்பாணரோடும் மதங்க சூளாமணியாரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம்வந்து, தெய்வ இசையினால் அன்பர் உளத்தினை உருக்கிய முத்தமிழ் விரகரால் பாராட்டப்பட்டது" என விபுலானந்த அடிகள் தாம் இயற்றிய யாழ் நூலில் குறிப்பிட்டுள்ளார்.